தேவ ஞானம்

THE WISDOM OF GOD

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

தேவ ஞானம்

THE WISDOM OF GOD



"மனுஷனுடைய ஞானம் அவன் முகத்தைப் பிரகாசிக்கப்ப பண்ணும், அவன் முகத்தின் மூர்க்கம் மாறும்" பிரசங்கி 8:1

© Bro.S. Chelladurai

முதற்பதிப்பு : நவம்பர் 2000
இரண்டாம் பதிப்பு : ஏப்ரல் 2014
பிரதிகள் : 1000

தொடர்பு முகவரி :

Bro.S. Chelladurai
Rehoboth Faith Prayer House,
Manarkadu, Melapattam Po.,
Tirunelveli District.
TamilNadu State : 627 351.
Tel. : 0462 - 2950570.

பொருளடக்கம்

அத்தியாயம்	பொருள்	பக்கம்
1.	தேவ ஞானம்	1
2.	தேவ ஞானம் நமக்கு ஏன் அவசியம்	15
3.	நம்மை தேவ ஞானத்திற்கு நேராய் நடத்தக் கூடிய காரியங்கள்	50
4.	தேவ ஞானத்தைப் பெறும் விதங்கள்	58
5.	நமது சரீர அவயவங்களும் - தேவ ஞானமும	67
6.	ஞானவான்களிடத்தில் காணப்பட வேண்டிய சில முக்கியமானக் காரியங்கள்	83
7.	நமது குடும்பமும் தேவ ஞானமும்	104
8.	தேவ ஞானத்தைப் பெறுவதினால் நாம் பெறும் சிறப்பானக் காரியங்கள்	176
9.	தேவ ஞானத்திற்கு மாறானக் காரியங்கள்	177
10.	இந்த உலகில் மனிதராய்ப் பிறந்த எல்லாரும் செய்ய வேண்டிய பத்துக் காரியங்கள்	186
11.	மனித வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக் கொள்ள எட்டுக் காரியங்கள்	187

தேவ ஞானம்

ஞானம் : தமிழில் ஞானம் என்ற வார்த்தைக்கு ஆங்கில வேத புத்தகத்தில் Wisdom என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் ஒரு காரியத்தைச் செய்யும்பொழுது அதை மற்றவர்கள் செய்வதுபோல் செய்யாது, அதை மிகவும் விசேஷித்த முறையில் செய்து முடிக்கும் திறமைக்கு ஞானம் என்றும் கூறலாம்.

ஞானத்தை A) மனுஷ ஞானம் B) தேவ ஞானம் என்று இருவகையாகப் பிரித்துக் கூறலாம். இவைகளைக் குறித்து விபரமாக அறிந்துகொள்ளப் பார்ப்போம்.

A. மனுஷ ஞானம்

மனுஷ ஞானம் என்பது உலக ஞானம் (Wisdom of the world) பிரபஞ்சத்தின் ஞானம், சுய ஞானம், சாதுர்ய ஞானம், லௌஹீக ஞானம், மாமிசத்திற்கேற்ற ஞானம் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. இன்று பெரும்பாலுமான உலக மனிதர்கள் இந்த உலக ஞானத்தைப் பெற்றவர்களாய் பலக்காரியங்களை மிகவும் திறமையாகச் செய்கிறார்கள். உதாரணமாக பணம் சம்பாதிப்பதில் வட்டிக்குக் கொடுப்பது, வியாபாரத்தில் கலப்படம் செய்வது, கள்ளத்தராசு, இவ்விதமாக தாங்கள் செயல்படும் எல்லாக் காரியங்களிலும் தங்கள் செயல்பாடுகளின் மூலம் தங்கள் ஞானத்தை வெளிப்படுத்துகிறவர் களாயிருக்கிறார்கள். இதுபோல் சிலர் தங்கள் ஞானத்தின் மூலம் விஞ்ஞானம், அரசியல் போன்ற காரியங்களில் மிகவும் சிறந்தவர்களாக விளங்குகிறார்கள். இந்த மனித ஞானம் அல்லது உலக ஞானம் எத்தன்மையுடையது என்றும் அதினால் நமக்கு ஏற்படக்கூடிய நஷ்டங்கள் என்ன என்பது பற்றியும் இந்தப் புத்தகத்தின் இறுதி அத்தியாயத்தில் எழுதப் பார்க்கிறேன்.

B. தேவ ஞானம்

மனுஷ ஞானத்தைப்போல தேவ ஞானம் என்பதும் மெய் ஞானம் (Sound Wisdom), பரத்திலிருந்து வருகிற ஞானம் (the wisdom that is from above) என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. மனித ஞானத்தைப் பெற்றவர்கள் விசேஷித்த முறையில் செயல்படுவது போல் தேவ ஞானத்தைப் பெற்றவர்களும் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக தங்கள் வாழ்க்கையில் காணப்படக்கூடிய எல்லா விதமான தீமையானக் காரியங்களையும் விட்டு விலகித் தங்களைக் காத்துக்கொண்டு தங்கள் வாழ்நாள் முழுவதும் தேவ நாம மகிமைக்கென்று மட்டும் வாழ்கிறவர்களாக இருப்பார்கள். இந்த தேவ ஞானத்தையும் 1) தேவ ஞானம் 2) விசேஷித்த ஞானம் அல்லது ஞானமாகிய வரம் என்று இரு வகையாகப் பிரிக்கலாம்.

இந்த உலகில் மனிதராய் பிறந்த எல்லாரும் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு தங்கள் வாழ்க்கையில் தீமையாகத் தோன்றுகிற எல்லாக் காரியங்களிலிருந்தும் விலகி ஜீவிக்கவும் அதுபோலவே தங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் கடமைகளை விசேஷித்த முறையில் மிகவும்

சிறப்பாகச் செய்து முடிக்கவும் மேற்கூறப்பட்டுள்ள தேவ ஞானம், தேவ ஞானமாகிய வரம் ஆகிய இரண்டும் நமக்கு மிகவும் அவசியமாயுள்ளது என்பதை நாம் சரியாக அறிந்து கொள்ள வேண்டும்.

1. தேவ ஞானம்

தேவ ஞானம் என்றால் என்ன ?

a] கர்த்தருக்குப் பயப்படுவதே தேவ ஞானம்

" ஆண்டவருக்குப் பயப்படுவதே தேவ ஞானம் " யோபு 28:28

முதலாவது தேவ ஞானம் என்றால் கர்த்தருக்குப் பயப்படுவதே தேவ ஞானம் என்று மேற்கூறப்பட்டுள்ள வசனத்தின்மூலம் அறியலாம். கர்த்தருக்குப் பயப்படுவது என்றால் தீமையை வெறுப்பதும், அதை விட்டு விலகுவதும் என்ற *நீதி.8:13, 16:6* -ல் கூறப்பட்டுள்ளது. ஆம், நம் வாழ்க்கையில் தீமையாகத் தோன்றுகிற எல்லாக் காரியங்களையும் வெறுப்பதும், அவைகளை விட்டு விலகுவதும்தான் கர்த்தருக்குப் பயப்படுதலும். இந்தக் கர்த்தருக்குப் பயப்படும் பயமே நமக்கு தேவ ஞானமும் ஆகும் என்பதை நாம் எல்லாரும் தெளிவாக அறிய வேண்டும்.

b) கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்வதே நமக்கு தேவ ஞானம் ஆகும்

'' நீங்கள் கைக்கொள்ளும் பொருட்டு, என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன். ஆகையால் அவைகளைக் கைக் கொண்டு நடவுங்கள் ஜனங்களின் கண்களுக்கு முன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்.'' உபா.4:5,6

கர்த்தரின் கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்வது தான் நமக்கு ஞானம் ஆகும். அதாவது கர்த்தருக்குப் பயப்படுதலாகிய ஞானம் இருந்தால் தான் நாம் கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்ளும் ஞானத்தையும் உடையவர்களாய் ஆக முடியும். இன்று அநேகர் தேவனின் கட்டளைகளை விட்டு விட்டு மனித உபதேசங்களை கைக்கொள்கிறார்களே. இப்படிப்பட்டவர்களை எப்படி தேவ ஞானத்தைப் பெற்றவர்கள் என்று கூற முடியும்.

கர்த்தரின் கட்டளைகளை அல்லது வேத வசனங்களை கைக்கொள்வதின் மூலம் கர்த்தருக்குப் பயப்படுதலாகிய ஞானத்தையும், கர்த்தரால் கொடுக்கப்படும் விசேஷித்த ஞானம் அல்லது ஞானமாகிய வரத்தையும் நாம் தொடர்ந்து காத்துக்கொள்ள முடியும். ஆகவே நாம் வேத வசனங்களை வாசிப்பது, தியானிப்பது, அவைகளைக் கைக்கொள்வது என்பது எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். மேற்கூறப்பட்டுள்ள காரியங்களில் இருந்து கர்த்தருக்குப் பயப்படுவதும், கர்த்தரின் கட்டளைகளை கைக்கொண்டு நடப்பதும் நமக்கு தேவ ஞானமாகும்.

2. விசேஷித்த ஞானம் அல்லது ஞானமாகிய வரம்

" ஞானிகளுக்கு ஞானத்தையும்........கொடுக்கிறவர்" தானி.2:21

" ஞான வரங்களையும் விரும்புங்கள்" I கொரி.14:1

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் ஞானிகளுக்கு ஞானத்தைக் கொடுக்கிறவர் என்பது ஒரு மனிதன் கர்த்தருக்குப் பயப்படுதலாகிய ஞானத்தையுடையவனாக இவ்விதம் ஞானியாக ஆகும்பொழுது கர்த்தர் இந்த மனிதனுக்கு ஒரு குறிப்பிட்ட காரியத்தை விசேஷித்த முறையில் செய்து முடிக்கும் திறமையாகிய ஞானத்தை அவனுக்குக் கொடுக்கிறார். இந்த விசேஷித்த திறமையாகிய ஞானமானது ஒவ்வொரு மனிதனும் செய்யும் பல தரப்பட்ட வேலைகளின் தேவைக்கேற்ப அமைவதாகவுமுள்ளது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இந்த ஞானத்தை விசேஷத்த ஞானம் (*தானி.5:14*) என்றும், ஞான வரம் (*I கொரி.14:1*) என்றும் வேத புத்தகத்தில் கூறப்பட்டுள்ளதை நாம் அறியலாம்.

இதற்கு உதாரணமாக பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்குவதற்கு பெசலெயேலுக்கும், அவனுக்கு உதவியாகிய இருந்தவர்களுமாகிய ஞான இருதயமுள்ள யாவருடைய இருதயத்திலும் தேவன் ஞானத்தை அருளினார் என்றும் காண்கிறோம். (*யாத்.31:6* - ஐப் பார்க்கவும்). அது போலவே தானியேலும் மறை பொருள்களை வெளிப்படுத்துவதற்கேற்ற தேவ ஞானத்தைப் பெற்றிருந்தான். (*தானி.5:11,14* -ஐப் பார்க்கவும்) அது போலவே யோசேப்பும் இந்த விசேஷித்த ஞானத்தைப் பெற்றிருந்து, எகிப்தில் செழிப்பான நாட்களில் கிடைத்த தானியங்களை பாதுகாப்பாக சேமித்து வைத்து, கொடிய பஞ்ச நாட்கள் வந்தபோது அந்தத் தானியங்களை ஞானமாய் ஜனங்களுக்கு பங்கிட்டு இவ்விதமாக விசேஷித்த முறையில் செயல்பட்டான். (*ஆதி.41:33,39, அப்.7:10,சங்.105:21* பார்க்கவும்)

இவ்விதமாகவே யோசுவா, தாவீது, சாலமோன் போன்றவர்களும் தேவ ஞானத்தைப்பெற்று அவர்கள் காலங்களில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டார்கள் என்பதை நாம் அறியலாம். அது போலவே நம்மில் எல்லாருமே அலுவலகங்களில் வேலை செய்கிறவர்களாயிருந்தாலும் சரி, தொழில் செய்கிறவர்களாயிருந்தாலும் சரி, தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்களாயிருந்தாலும் சரி. நம்மில் ஒவ்வொரு வருக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலாகிய ஞானமும், நாம் செய்கிற எல்லாக் காரியங்களையும் விசேஷித்த முறையில் செய்து முடிக்க தேவ ஞானமாகிய வரமும் நமக்கு மிகவும் அவசியமாகவுள்ளது. அது போலவே நமது குடும்பங்களை நடத்துவதற்கும், நமது பிள்ளைகளை சரியான முறையில் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு வளர்ப்பதற்கும் பெற்றோர்களுக்கு இந்த இரண்டுவித ஞானமும் மிகவும் அவசியமாகவுள்ளது.

ஒரு மனிதனிடத்தில் தெய்வ பயமாகிய ஞானம் காணப்படும் பொழுது தான் செய்கிற எல்லாக் காரியங்களிலும் தீமையானக் காரியங்கள்

காணப்படாதபடி தன்னைக் காத்துக் கொள்வான். அது போலவே ஒருவனிடம் ஞானமாகிய வரம் காணப்படும்பொழுது நிச்சயமாகவே அவன் தான் செய்கிறதான அந்தக் குறிப்பிட்ட காரியத்தை மிகவும் சிறப்பாக தேவன் விரும்பும் வண்ணமாக மிகவும் சிறப்பாக செய்து முடிப்பான். இன்று நாம் எவ்விதம் செயல்படுகிறோம் ?

B. தேவ ஞானம்

தேவ ஞானம், ஞானமாகிய வரம் ஆகிய இரண்டுவித ஞானத்தையும் சேர்த்து வேத புத்தகத்தில் தேவ ஞானம் என்று பொதுமறையில் கூறப்பட்டிருப் பதையும் நாம் அறிய வேண்டும். இந்தப் பகுதியில் இந்த தேவ ஞானத்தைக் குறித்த சில முக்கியமானக் காரியங்களை வேத வசனங்களின் உதவியோடு அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1. தேவ ஞானம் எத்தன்மையுடையது ?

நாம் பெறுகிறதான தேவ ஞானம் எத்தன்மையுடையது

a) தேவனுடைய ஞானம் ஆராய முடியாத அளவுக்கு அது வான பரியந்தம் உயர்ந்தும் பாதாளத்திலும் ஆழமானது

"தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து,....அறியக் கூடுமோ? அது வானபரியந்தம் உயர்ந்தது...அது பாதாளத்திலும் ஆழமானது." (யோபு 11:7;8 ;ரோமர் 11:33)

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நாகமாத்தியனாகிய சோப்பார் யோபுவிடம் தேவனுடைய ஞானத்தை உம்மால் ஆராய்ந்து அறியக்கூடுமோ? என்று கேட்கிறான். ஆம் தேவனுடைய ஞானத்தை மனித ஞானத்தால் ஆராய முடியாது. தேவன் தமது ஒரு வார்த்தையினால் சிருஷ்டித்த உலகத்தை மனிதன் தனது ஞானத்தால் இன்றளவும் ஆராய்ந்து கொண்டு தான் இருக்கிறான். அவனால் தேவன் சிருஷ்டித்தவைகளில் எதையும் முழுமையாக அறிந்துகொள்ள முடியவில்லை. தேவ ஞானத்தின் உயரம், ஆழம் இவைகளை மனிதன் தன் ஞானத்தால் ஒரு போதும் அறிந்து கொள்ள முடியாது.

b) தேவனுடைய பைத்தியம் என்பது மனுஷனுடைய ஞானத்திலும் அதிக.ஞானமாயிருக்கிறது

"தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷனுடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது" I கொரி.1:25

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தேவனுடைய பைத்தியம் என்று கூறப்படுவது உலக மனுஷன் தேவக்காரியங்களை பைத்தியமாக எண்ணுவதாகும். தேவன் ஊழியம் மூலமாக தேவக்காரியங்களை மனிதருக்கு பிரசங்கிப்பது உலக மனிதர் பார்வையில் பைத்தியமாகத் தோன்றுகிறது. இவ்விதம் மனிதருக்கு பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று என்று *1 கொரி.1:21*-ல்

கூறப்பட்டுள்ளது. ஆகவே மனிதன் பார்வையில் பைத்தியமாகத் தோன்றுகிற சாதாரண பிரசங்கமானது மனித ஞானத்தை விட அதிகமாக தேவனின் ஞானத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

c) ஞானம் நீதியுள்ளது

"ஞானமானது அதன் பிள்ளைகளெல்லாராலும் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும்" லூக்.7:35, மத்.11:19.

தேவ ஞானத்தை உலக ஜனங்கள் பைத்தியம் என்று எண்ணும்பொழுது தேவ ஞானத்தை ஏற்றுக் கொள்ளுகிறவர்களாகிய அதின் பிள்ளைகளால் தேவ ஞானமானது நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும் என்று ஆண்டவராகிய இயேசு தம்மைச் சூழ நின்ற ஜனங்களிடம் கூறினார். இன்றும் ஞானமாகிய இயேசுவை ஏற்றுக்கொள்ள மனமற்றவர்கள் அவரின் உபதேசம் பைத்தியமானது என்று எண்ணும்பொழுது, சிலர் கர்த்தராகிய இயேசுவை தங்கள் இரட்சகராக தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு அவரின் உபதேசம் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்கிறவர்களாயிருக்கிறார்கள். உங்கள் நிலை என்ன?

d) பரத்திலிருந்து வருகிற ஞானம்

"பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயுமிருக்கிறது" யாக்.3:17.

நாம் பெற்றுக்கொள்கிற தேவ ஞானமானது பரலோகத்தில் வாசஞ் செய்யும் தேவனிடமிருந்து வருகிற ஞானமாகவுமுள்ளது. இந்த பரத்திலிருந்து வரும் ஞானமானது கீழ்க்கண்ட விசேஷித்த தன்மையையுடையதாயிருக்கிறது.

(i) தேவ ஞானம் சுத்தமுள்ளது

இந்த சுத்தமுள்ளது என்ற வார்த்தைக்கு ஆங்கில வேத புத்தகத்தில் (Pure)என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் கலப்பில்லாதது என்பதாகும். அதாவது இந்தப் பரத்திலிருந்து வரும் ஞானத்தில் பாவத்தின் தன்மைகள் சிறிதளவும் கலப்பாக சேராத மிகவும் சுத்தமான ஞானம் என்பதாகும்.

(ii) சமாதானமும் சாந்தமும் இணக்கமுள்ளதாகவும், இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்தது

இந்தப் பரத்திலிருந்து வரும் ஞானத்தை ஒரு மனிதன் பெறும்பொழுது அந்த மனிதனில் காணப்படும் தவறான சுபாவங்கள் மாறி மேற்கூறப்பட்டுள்ள நல்ல சுபாவங்களைப் பெறுகின்றான். அது மட்டுமல்லாது அவன் பெறும் ஞானத்தின் மூலமாக தன் வாழ்க்கையில் சமாதானத்தையும் பெற்றுக் கொள்கிறான்.

e) மெய் ஞானம்

"நீதிமான்களுக்கென்று மெய் ஞானத்தை வைத்து வைத்திருக்கிறார்" நீதி.2:7.

தமிழ் வேத புத்தகத்தில் மெய் ஞானம் என்று கூறப்பட்டிருப்பது ஆங்கில வேத புத்தகத்தில் (Sound Wisdom) என்று கூறப்பட்டுள்ளது.

இந்த சவுண்ட் - Sound என்ற வார்த்தையின் பொருள் பத்திரமான, பயமற்ற, சுகமான என்பதாகும். அப்படியென்றால் நாம் பெறும் தேவ ஞானமானது பயமற்றது, பத்திரமானது, சுகமானது என்பதாகும். இந்த ஞானம் நம் நன்மைக்கு ஏதுவாக இருக்குமேயொழிய தீமைக்கு ஏதுவாக இருக்காது என்பதை அறிய வேண்டும்.

f) தேவ ஞானம் நம்மை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்த வல்லது

"உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்" IIதீமோ.3:15.

நாம் பெறும் தேவ ஞானமானது நாம் இரட்சிக்கப்பட ஏற்றதாயிருக்கிறது. அப்படியென்றால் இந்த தேவ ஞானமானது நம்மை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்துகிறது என்பதை நாம் அறிய வேண்டும். உலக ஞானத்தைப் பெற்ற இந்த உலகின் ஜனங்கள். அவர்கள் எவ்வளவு தான் சிறந்த ஞானவான்களாக இருந்தாலும் இந்த இரட்சிப்பின் வழியை அறியாதவர்களாக அழிவை நோக்கியே சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டும். அவர்கள் பெற்ற உலக ஞானம் அவர்களை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்த ஏற்றதல்ல என்பதை நாம் சரியாக அறிந்து கொள்ள வேண்டும்.

g) தேவ ஞானமானது ஞானியை அதிக பெலவானாக்கும்

"நகரத்திலுள்ள பத்து அதிபதிகளைப் பார்க்கிலும், ஞானம் ஞானியை அதிக பெலவானாக்கும்" பிரசங்கி 7:19,

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஞானமானது ஞானத்தைப்பெற்ற ஒரு மனிதனை நன்கு கற்று தேர்ச்சியடைந்து ஆட்சியில் உள்ள பத்து அதிபதிகளைப் பார்க்கிலும் அதிகம் பெலவானாக்கும். இது எவ்விதம் சாத்தியமாகும் என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

மிகவும் பலவானான ஒரு வாலிபன் ஒரு ஞானியான வயதான மனிதனிடம் ஐயா, நீங்கள் ஒரு சிறந்த ஞானியாச்சுதே. உங்கள் ஞானத்தைக்கொண்டு என்னோடு சண்டை போட முடியுமா ? என்று கேட்டான். அதற்கு அந்த வயது சென்ற ஞானியான மனிதன் ஓ ! உன்னிடம் சண்டை போட என்னால் முடியும். ஆனால் நாம் சண்டை போடுவதற்கு வேண்டிய ஆயுதத்தை நான் தான் தெரிந்தெடுப்பேன் என்று கூறினார். இந்த பலவானான வாலிபனும் இந்த நிபந்தனைக்கு சம்மதித்தான்.

ஒரு குறிப்பிட்ட நாளில் அநேகர் முன்னிலையில் இருவரும் சண்டையிட கூடி வந்தனர். இந்த வயதான ஞானியின் கையிலுள்ள ஒரு தட்டில் லட்டுகள் வைக்கப்பட்டிருந்தது. இந்த ஞானியான மனிதன் பலவானான வாலிபனைப் பார்த்து : வாலிபனே ! நாம் சண்டை போடுவதற்கென்று நான் தெரிந்து கொண்ட ஆயுதம் இந்த லட்டுகள் தான். இவைகளை உன் வாயில் வைத்தவுடனேயே நீ சாகும்படியான கொடிய விஷம் இந்த லட்டுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. இதோ இவைகளை நீ சாப்பிடு என்றார். உடனே அந்த பலவானான வாலிபன் ஐயா, நான் தோற்று விட்டேன் என்று ஒத்துக்கொள்கிறேன். ஞானத்தைப் பெற்ற நீங்கள் தான் என்னைவிட சிறந்த பலசாலி என்று ஒத்துக்கொள்ளுகிறேன் என்று கூறினான்.

மேற்கூறப்பட்டுள்ள உதாரணத்திலிருந்து ஒரு மனிதனின் பெலத்தை விட ஞானம் தான் அவனை அதிகம் பெலவானாக்குகிறது என்பதை நாம் நன்கு அறிந்து கொள்ளலாம்.

h) ஞானம் கேடகம்

"ஞானம் கேடகம்" பிரசங்கி 7:12

ஞானமானது நம்மை பாதுகாக்கக்கூடிய ஆயுதமாக (கேடகமாக - Defensive Weapon) நமக்கு பயன்படக்கூடியது. நாம் பெறும் ஞானத்தினால் நமக்கு நேரிடும் எல்லாவித ஆபத்துக்களிலும் நம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

i) ஞானம் பொக்கிஷம்

"அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது." கொலோ.2:3

உலக ஜனங்கள் உலகப்பிரகாரமான ஐஸ்வரியத்தைத் தான் பொக்கிஷமாக எண்ணிப் பாதுகாக்கின்றனர். ஆனால் தேவ ஜனங்களாகிய நமக்கு தேவ ஞானம் தான் பொக்கிஷம் என்று அறிந்து அதைப் பெற்றுக்கொண்டு அதை மிகவும் கருத்தாகப் பாதுகாக்க வேண்டும். இந்த தேவ ஞானமாகிய பொக்கிஷம் கிறிஸ்துவுக்குள்ளாகவுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால் இந்த ஞானமாகிய பொக்கிஷத்தைப் பெற நாமும் கிறிஸ்துவுக்குள்ளாகும் அனுபவத்திற்குள் வர வேண்டும். அதற்கு நாம் நமது பாவ ஜீவியத்தை விட்டு மனந்திரும்பி....... *ரோமர்.6:3*-ல் கூறப்பட்டுள்ளதுபோல் கிறிஸ்துவுக்குள்ளாகும் ஞானஸ்நானத்தை எடுப்பது மிகவும் அவசியமாகும். செய்வோமா ?

j) ஞானம் இரகசியம்

"உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம்" I கொரி.2:7

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் இரண்டு காரியங்கள் கூறப்பட்டுள்ளது. முதலாவது உலகத் தோற்றத்திற்கு முன்பே தேவன் நமது மகிமைக்காகவே இந்த ஞானத்தை உண்டாக்கி வைத்திருக்கிறார்.

இரண்டாவது இந்த ஞானம் இரகசியம் என்று கூறப்பட்டுள்ளது. இந்த இரகசியம் என்ற வார்த்தைக்கு ஆங்கில வேத புத்தகத்தில் (Mystery) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் அறிவுக்கு எட்டாதது அல்லது புரிந்து கொள்ள முடியாதது என்பதாகும். ஆம் நாம் பெறும் இந்த தேவ ஞானமானது உலக ஜனங்களின் அறிவுக்கு முடியாததாயிருக்கிறது. ஆகையினால்தான் இந்த உலகின் ஜனங்கள் இந்த தேவ ஞானத்தைப்பெற முடியாதவர்களாயிருக்கிறார்கள். அதினால் இவர்கள் தேவக் காரியங்களுக்கு அந்நியராக இருக்கிறார்கள்.

k) ஞானத்தின் ஊற்று

"ஞானத்தின் ஊற்று பாய்கிற ஆற்றைப் போலிருக்கும்" நீதி.18:4

எவ்விதம் ஊற்றிலிருந்து சுரக்கும் தண்ணீர் சிறிதளவாக இருந்தாலும் பின்னர் அது ஆறாக மாறி, அது அதிகமான இடங்களைச் செழிப்பாக்குவது போல் ஞானத்தினால் உண்டாகும் செயல்பாடுகளும் சிறிதளவாக இருந்தாலும் பெரிய ஆசீர்வாதங்களை ஏற்படுத்தும் என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

l) ஞானம் - ஜீவ விருட்சம்

"அது (ஞானம்) தன்னை அடைந்தவர்களுக்கு ஜீவ விருட்சம்" நீதி.3:18, பிரசங்கி 7:12

எவ்விதம் ஜீவ விருட்சத்தின் கனியானது மனிதனுக்கு ஜீவனைக் (சாகாமையைக்) கொடுப்பதைப்போல நாம் தேவ ஞானத்தைப் பெறும் பொழுது அது நம்மை ஜீவனைப் (ஆத்துமா சாகாமல் இருப்பது) பெறுவதற்கு ஏதுவாக நம்மை நடத்துவதாகவுள்ளது என்பதை நாம் எல்லாரும் நன்கு அறிய வேண்டும்.இன்று அநேகர் இந்த தேவ ஞானம் அற்றவர்களாக நித்திய அழிவுக்கு நேராக தீவிரித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்பொழுது மிகவும் துக்கமாகவுள்ளது.

m) ஞானம் முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்

"மனுஷனுடைய ஞானம் அவன் முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அவன் முகத்தின் மூர்க்கம் மாறும்." பிர.8:1

ஞானத்தைப் பெற்றவனின் முகம் பிரகாசிக்கிறது என்றால் அவனில் காணப்படும் தவறான சுபாவங்களாகிய கோபம், மூர்க்கம் போன்றவைகளை மாற்றி தெய்வீகக் காரியங்களை அவனில் உண்டாக்குவதினால் அவனின் கடினமான முகத்தோற்றம் மாறி பிரகாசமாகிறது என்பதை நாம் அறிய வேண்டும்.

n) ஞானம் விலையேறப்பட்டது

"முத்துக்களைப் பார்க்கிலும் அது (ஞானம்) விலையேறப் பெற்றது" நீதி.3:14, யோபு 28:15-18

முத்துக்கள் மனிதனுக்கு அலங்காரப் பொருளாக பயன்படுகிறது. இது மற்றப் பொருள்களைவிட விலையேறப் பெற்றதாகவுள்ளது. இந்த முத்துக்கள் மனிதனுக்கு அலங்காரப் பொருளாகப் பயன்படுகிறதே ஒழிய மற்ற எதற்கும்

பயன்படுவதில்லை. ஆனால் நாம் பெறும் தேவ ஞானமானது நமது வாழ்க்கையையே மாற்றியமைக்கப் பயன்படுவதாகவுள்ளது. இந்த தேவ ஞானத்தை நாம் எந்த விலை கொடுத்தும் வாங்க முடியாத அளவுக்கு அது விசேஷித்த தன்மையுடையது. ஆனால் இன்றைய மனிதன் சாதாரண அழகு சாதனமாகப் பயன்படும் முத்தை விரும்புகிறான். ஆனால் எந்த விலையும் கொடுத்து வாங்க முடியாத அளவுக்கு விலையேறப்பெற்றதாகவுள்ள தேவ ஞானத்தைப் பெற்றுக் கொள்ள மனமற்றவனாக இருக்கிறான். என்ன பரிதாபம் பாருங்கள் !

மேற்கூறப்பட்டுள்ள காரியங்களிலிருந்து நாம் பெறும் தேவ ஞானமானது எவ்வளவு சிறப்புத்தன்மையுடையது என்று நாம் நன்கு அறிந்து கொள்ளலாம்.

2. ஞானத்தின் முக்கியத்துவம்

இந்தப் பகுதியில் நாம் பெறும் தேவ ஞானத்தின் முக்கியத்துவம் என்ன என்று சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

a) பொன் முத்துக்களைவிட ஞானமே நல்லது

"பசும்பொன்னைப் பார்க்கிலும் ஞானத்தையும் அங்கீகரித்துக் கொள்ளுங்கள், முத்துக்களைப் பார்க்கிலும் ஞானமே நல்லது; இச்சிக்கப் படத்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல" நீதி.8:10,11,19 ;16:16; 23:23; 4:5,7;8:10.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து நாம் அறிவது யாதெனில் உலகப் பிரகாரமான பொருள் முத்துக்களைவிட ஞானம்தான் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆகவே நாம் ஞானத்தை நாடி அதைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இந்த உலகத்தில் நாம் இச்சிக்கிற (பிரியம் வைக்கிற) எந்தப் பொருளும் தேவ ஞானத்திற்கு ஈடாகாது என்பதை நாம் அறிய வேண்டும்.

b) சுதந்தரத்தோடு ஞானம் நல்லது

"சுதந்தரத்தோடு ஞானம் நல்லது" பிர.7:11

நமது பெற்றோர்கள் நமக்கு வைத்துபோகும் ஆஸ்தியாகிய சுதந்தரத்தோடு நாம் ஞானத்தைப் பெற்றுக்கொள்வது நல்லது. ஏனெனில் நாம் பெறும் ஞானத்தினால் நமது சுதந்தரமாகிய ஆஸ்தியை நாம் காத்துக்கொள்ள முடியும். இன்று அநேகர் ஞானம் அற்றவர்களாக தாங்கள் பெற்ற சுதந்தரத்தை அழித்துப்போட்டு, பின்னர் ஐயோ ! எங்கள் சுதந்தரம் அழிந்து போயிற்றே என்று புலம்புகிறார்கள். என்ன பிரயோஜனம் ? தங்கள் பெற்றோர் வைத்துப்போன சுதந்தரம் தங்களிடம் இருக்கும்பொழுதே ஞானமாகச் செயல்பட்டு தாங்கள் பெற்ற சுதந்தரத்தைக் காத்துக்கொள்ளப் பார்க்க வேண்டும்.

c) பெலத்தை விட, யுத்த ஆயுதங்களைவிட ஞானமே முக்கியம்

"பலவான்களுடைய பட்டணத்தின் மதிலை ஞானமுள்ளவன் ஏறிப்பிடித்து, அவர்கள் நம்பின அரணை இடித்துப்போடுவான்." நீதி.21:22 "ஒரு சிறிய பட்டணம் இருந்தது, அதிலே இருந்த குடிகள்

கொஞ்ச மனிதர் ;அதற்கு விரோதமாய் ஒரு பெரிய ராஜா வந்து, அதை வளைந்து கொண்டு, அதற்கு எதிராகப் பெரிய கொத்தளங்களைக் கட்டினான். அதிலே ஞான முள்ள ஒரு ஏழை மனிதன் இருந்தான்.அவன் தன் ஞானத்தினாலே அந்தப் பட்டணத்தை விடுவித்தான் ...ஆகையால் ஏழையின் ஞானம் அசட்டை பண்ணப்பட்டு, அவன் வார்த்தைகள் கேட்கப்படாமற்போனாலும், பெலத்தைப் பார்க்கிலும் ஞானமே உத்தமம் என்றேன்" பிரசங்கி 9:14-16

"யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும் ஞானமே நலம்" பிரசங்கி 9:18

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் எவ்விதம் ஞானமானது பெலத்தைவிட, யுத்த ஆயுதங்களைவிட முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறப்பட்டுள்ளது. பலவான்கள் அநேகர். குடியிருக்கும் ஒரு பட்டினத்தின் மதிலை ஞானமுள்ள ஒரு மனிதன் ஏறிப்பிடித்து, அவர்கள் நம்பியிருக்கும் அரணை இடித்து விடுவான் என்று காண்கிறோம். இன்று அநேகர் ஞானமற்றவர்களாக இருந்து கொண்டு தங்கள் மனித பெலத்தை நம்பியிருப்ப தினால் தங்கள் வாழ்க்கையில் பல தோல்விகளைச் சந்திக்கின்றனர். ஆனால் அவர்கள் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக எல்லாக் காரியங்களிலுமே செயல்பட்டால் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் நிச்சயம் ஜெயம் பெறலாம்.

அது போலவே இரண்டாவது வசனத்திலும் எவ்விதம் கொஞ்ச ஜனங்கள் உள்ள ஒரு சிறிய பட்டணத்தை ஒரு பெரிய ராஜா பிடித்துக்கொள்ள முயற்சி செய்த பொழுது அந்தப் பட்டணத்தில் குடியிருந்த ஏழையும் ஞானியுமான ஒரு மனிதன் தன் ஞானத்தினால் விடுவிக்கிறான் என்று காண்கிறோம். இதிலிருந்து நாம் அறிவது யாதெனில் மூன்றாம் வசனத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் அந்தப் பெரிய ராஜா நம்பியிருந்த யுத்த ஆயுதங்களைவிட அந்த ஏழை மனிதனின் ஞானம் தான் மிகவும் முக்கியமானது என்று நாம் எல்லாரும் அறிந்து கொள்ள முடியும்.

d) அரசாட்சி செய்கிற மூடனான அரசனைவிட ஞானமுள்ள இளைஞனே சிறப்பானவன்

"ஆலோசனையைக் கேளாத கிழவனும் மூடனுமாகிய ராஜாவைப் பார்க்கிலும், ஏழையும் ஞானியுமாகிய இளைஞனே வாசி" பிரசங்கி .4:13

அரசாட்சி செய்கிற ஒரு ராஜா் மூடனும், ஆலோசனையைக் கேளாத வனுமாக இருந்து அவன் வயது சென்ற கிழவனாக இருந்தாலும், அவனைவிட ஞானத்தைப்பெற்ற இளைஞனே வாசி என்று காண்கிறோம். ஏனெனில் அந்த ஞானியான இளைஞன் இந்த மூடனான ராஜாவை எளிதில் ஜெயம் கொள்ள முடியும். அதுமட்டுமல்லாது அந்த ஞானியான இளைஞனின் செயல்பாடுகள் இந்த மூடனான ராஜாவின் செயல்பாடுகளைவிட சிறப்பானதாகவே இருக்கும்.

e) மதியீனத்தைவிட ஞானமே நல்லது

"இருளைப்பார்க்கிலும் வெளிச்சம் எவ்வளவு உத்தமமோ, அவ்வளவாய் மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமமென்று கண்டேன்." பிரசங்கி 2:13

பொதுவாக மனிதன் இருளைவிட வெளிச்சத்தையே விரும்புகிறான். வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார் என்றும் ஆதி.1:3-ல் கூறப்பட்டுள்ளது. ஆனால் இன்றும் மனிதரில் அநேகர் தங்கள் பாவத்தில் ஜீவிப்பதையே விரும்புகிறபடியால் அவர்கள் ஒளியைவிட இருளையே அதிகம் விரும்புகிறார்கள். அதுபோலவே மதியீனத்தைவிட ஞானமானது உத்தமமாகவுள்ளது. ஆனால் இன்றைய மனிதர்களில் அநேகர் மதியீனத்தையே விரும்புகிறவர்களாக இருக்கிறார்கள். இது மிகவும் துக்கமான ஒரு காரியமாகும். ஆகவே மனிதரின் மதியீனத்தின் தன்மை என்ன என்று அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

"மனுஷனுடைய மதியீனம் அவன் வழியைத் தாறுமாறாக்கும்." நீதி.19:3 "செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப் போகப் பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர் பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்" பிரசங்கி.10:1

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் மனிதனின் மதியீனமானது அவன் வழியை தாறுமாறாக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதில் தாறுமாறு என்ற வார்த்தைக்கு ஆங்கில வேத புத்தகத்தில் (Pervert) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் நல்ல வழியிலிருந்து தவறான வழியில் திருப்புவது என்பதாகும். அதுபோலவே இரண்டாம் வசனத்திலும் செத்த ஈக்கள் பரிமளதைலத்தை நாறி கெட்டுப்போகப் பண்ணுவதுபோல் மனிதனின் மதியீனமானது அவன் எவ்வளவுதான் ஞானத்தில் பேர் பெற்றவனாக இருந்தாலும் அது அவனைக் கெடுத்துவிடும்.

ஆகவே நாம் நமது மதியீனத்தினால் சரியான வழியை விட்டு தவறான வழியில் செல்லாதபடியிருக்க அல்லது நமது மதியீனத்தினால் நமது ஜீவியம் கெடாமலிருக்க நாம் மதியீனத்தை விட்டுவிட்டு ஞானத்தைப் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

3. நாம் பெறும் ஞானம் எப்படிப்பட்ட ஞானமாயிருக்கவேண்டும்? அல்லது நாம் எப்படிப்பட்ட ஞானிகளாயிருக்க வேண்டும்?

நாம் எப்படிப்பட்ட ஞானத்தைப் பெற்றவர்களாயிருக்க வேண்டும் என்பதை இந்தப் பகுதியில் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

a) நாம் பெறும் ஞானம் நம்மை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தக்கூடியதாக இருக்கவேண்டும்

"உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்" (II தீமோ.3:15)

நாம் கற்றுக்கொள்கிறதான வேத வசனமானது நம்மை இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கேற்ற ஞானத்தைத் தரக்கூடியது. நாம் ஞானமற்ற வர்களாக வேத புத்தகத்தை வாசித்தால் அது நமக்கு எந்த வகையிலும்

பயனுடையதாயிராது. உதாரணமாக, மகாத்மா காந்தி, டாக்டர் ராதா கிருஷ்ணன் போன்றவர்கள் வேத புத்தகத்தை நன்கு கற்றவர்கள்தான். ஆனாலும் அவர்கள் வேதப்புத்தகத்தை அதிகமாகப் படித்தாலும் கூட அவர்களில் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை. அவர்கள் வேதபுத்தகத்தை வெறும் பொது அறிவுக்காகக் கற்றார்களேயொழிய வேத வசனத்திற்குக் கீழ்ப் படியவேண்டும் என்ற எண்ணத்துடன் தேவ ஞானத்தைப் பெற்றுக்கொள்ள வாஞ்சையுடையவர்களாய் வேத புத்தகத்தைக் கற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் உலகப்பிரகாரமாக ஞானிகளாக இருந்தாலும் இரட்சிப்புக்கேற்ற ஞானமற்றவர்களாக வேத புத்தகத்தைப் படித்ததினால் அவர்களால் தேவனுடைய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

அதுபோலவே இன்றையக் கிறிஸ்தவர்களிலும் அநேகர் வேத புத்தகத்தை வெறுமனே வாசிப்பதினால் அவர்களால் இரட்சிப்புக்கேற்ற தேவ ஞானத்தை பெற்றுக்கொள்ள முடியாதபடி வெறுமனே வாசிக்கிறவர்களாக இருக்கிறார்கள். அதினால் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எவ்வித நன்மையும் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாயிருக்கிறார்கள். ஆகவே இந்த இரட்சிப்புக் கேற்ற ஞானமுள்ளவர்களாக்கத்தக்க வேத வசனங்களை, அவைகளுக்குக் கீழ்ப்படியும் மனதோடு வாசித்து, வாசித்து, வேத வசனங்களுக்கு ஏற்றவாறு நமது ஜீவியத்தை அமைத்துக்கொள்ள அவைகளுக்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும். செய்வோமா ?

b) நாம் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்க வேண்டும்

"நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்" ரோமர் 16:19.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நாம் தேவ ஞானத்தைப் பெற்ற ஞானிகள் என்றால் நாம் நன்மையான காரியங்கள் செய்வதற்கு ஞானிகளாகவும் அதே நேரத்தில் தீமையானக் காரியங்களுக்கு பேதைகளுமாய் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இன்று பெரும் பாலானக் கிறிஸ்தவர்கள் மற்றவர்களுக்கு நன்மை செய்ய மனமற்ற வர்களாகவும், தீமையானக் காரியங்கள் செய்வதில் துணிவு கொண்டவர் களாகவும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை தேவ ஞானத்தைப் பெற்ற தேவ ஜனங்கள் என்று கூற முடியுமா? நம் வாழ்க்கையில் நன்மை செய்ய நாட்டம் உடையவர்களாயிருக்க வேண்டும். செய்வோமா?

c) மற்றவர்கள் எதிர்த்து நிற்கக்கூடாத அளவுக்கு நாம் ஞானமுடையவர்களாக இருக்க வேண்டும்

"அவன் (ஸ்தேவான்) பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற்போயிற்று " அப்.6:10

"உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்." லூக்.21:15.

கர்த்தரின் ஊழியக்காரனாகிய ஸ்தேவான் பேசியபொழுது அவன் கொண்டிருந்த ஞானத்தையும், அவன் பெற்றிருந்த ஆவியையும் அவர்களால் எதிர்த்து நிற்கக் கூடாமற்போயிற்று. அப்படியென்றால் அந்த அளவுக்கு ஸ்தேவான் மிகவும் விசேஷித்த தேவ ஞானத்தையும், தேவ ஆவியையும் பெற்றவனாக இருந்தான்.

இன்று உலக ஜனங்கள் சத்தியத்திற்கு மாறாக நம்மிடம் எதிர்த்துப் பேசும்பொழுது நாம் அவர்களுக்குப் பயந்து, ஒன்றும் பேசாமல் இருந்து விடுகிறோம். ஆண்டவராகிய இயேசுவும் தமது சீஷர்களுக்கு ஒருவரும் எதிர்பேசவும், எதிர்த்து நிற்கவும் கூடாத வாக்கையும், ஞானத்தையும், தேவ வல்லமையையும் தேவனிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டு ஸ்தேவானைப்போல் தேவ வல்லமையோடு பயமில்லாமல், தைரியமாக எதிர்த்து நின்று செயல் படலாமே. செய்வோமா? தேவன் பட்சபாதமாகவுள்ள வரல்ல. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவர் இன்றும் நமக்கு ஞானத்தையும், வல்லமையையும் கொடுக்க வல்லவராக இருக்கிறார்.

4. தேவ தூதரும் - ஞானமும்

"தேசத்தில் நடக்கிறதையெல்லாம் அறிய, என் ஆண்டவனுடைய ஞானம் தேவதூதனுடைய ஞானத்தைப்போல் இருக்கிறது என்றாள்" II சாமு 14:20.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தெக்கோவா ஊரிலுள்ள ஒரு ஸ்திரீ தாவீது ராஜாவின் வசனத்தை தேவ தூதரின் ஞானத்தோடு ஒப்பிட்டுச் சொல்வதைப் பார்க்கிறோம். இதிலிருந்து தேவ தூதர்களும் விசேஷித்த ஞானத்தையுடையவர்களாய் தேவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து செயல்பட்டார்கள் என்று அறிந்து கொள்ளலாம்.

தாவீது ராஜாவும் இந்த விசேஷித்த ஞானத்தையுடையவனாய் தன் ராஜ்யத்திலுள்ள எல்லா ஜனங்களின் செயல்பாடுகளையும் யூகித்து அறிந்து கொள்ளக் கூடியவனாய் இருந்தான். நாமும் இவ்விதம் தேவனின் விசேஷித்த ஞானத்தைப் பெற்றவர்களாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமைகளை தேவ நாமம் மகிமைப்படும்படியாக விசேஷித்தப் பிரகாரம் செய்து முடிப்போம் என்றால் எவ்வளவு நன்றாய் இருக்கும். முயற்சி செய்வோமா ?

5. ஞானம் என்ற வார்த்தையோடு சேர்ந்துவரும் வார்த்தைகள்

i) ஞான ஆலோசனை - யோபு 37:12

ii) ஞான மார்க்கம் - நீதி.4:11

iii) ஞான நன்மைகள் - I கொரி.9:11

iv) ஞான பானம் - I கொரி. 10:34

v) ஞான போஜனம் - I கொரி. 10:3,4

vi) ஞானக் கன்மலை - I கொரி. 10:4

vii) ஞான வரம் - I கொரி. 14:1

viii) ஞான அர்த்தம் - கலா.4:24

ix) ஞானப்பால் - பேதுரு 2:3

மேற்கூறப்பட்டுள்ள வார்த்தைகளுக்கு முன் ஞானம் என்ற வார்த்தையும் சேர்த்து வருவதைக் காணலாம். இந்த வார்த்தைகள் தேவனுடைய ஞானத்தை விளங்கச் செய்கிறதான விசேஷித்தக் கருத்துடைய வார்த்தைகளாக இருப்பதினால் தான் ஞானம் என்ற வார்த்தை இந்த வார்த்தைகளுக்குமுன் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது என்பதை நாம் அறிய வேண்டும்.

6. மகா ஞானமுள்ளவைகள்

"பூமியில் சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு. அவையாவன : அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடைக் காலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பும், சத்துவமற்ற ஜெந்துவாயிருந்தும், தங்கள் வீட்டைக் கன்மலையிலே தோண்டி வைக்கிற குழிமுசல்களும், ராஜா இல்லாதிருந்தும், பவுஞ்சு பவுஞ்சாய்ப் புறப்படுகிற வெட்டுக்கிளிகளும், தன் கைகளினால் வலையைப் பின்னி, அரசர் அரமனைகளிலிருக்கிற சிலந்திப் பூச்சியுமே" நீதி. 30:24-28

வேத புத்தகத்தில் மகா ஞானமுள்ளவைகள் நான்கு ஜெந்துகளைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அவைகளைப்பற்றி அற்பமானவைகள், சத்துவமற்ற வைகள், ராஜா இல்லாதவைகள் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் அவைகளின் செயல் திறமையினால் அவைகள் மகா ஞானமுள்ளவைகள் என்று கூறப்பட்டுள்ளது. நாமும் சத்துவமற்றவர்களாயிருந்தாலும், நம்மை வழிநடத்த சரியான தலைவர்கள் இல்லாவிட்டாலும் நாமும் கர்த்தருக்காக வைராக்கியமாக, விடாப்பிடியாக, எந்த இடர்களைப் பற்றியும் எண்ணாது, எந்த பிரதிபலனையும் எதிர்பாராது தொடர்ந்து செயல்படுவோம் என்றால் நாமும் கர்த்தர் முன்னிலையில் மகா ஞானமுள்ளவர்களாகக் காணப்படுவோம். முயற்சி செய்வோமா ?

தேவ ஞானம் நமக்கு ஏன் அவசியம் ?

இந்த அத்தியாயத்திலே தேவ ஞானம் நமக்கு ஏன் அவசியம் ? என்று அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

A. ஒரு காரியத்தைச் செவ்வையாகச் செய்ய ஞானம் நமக்கு அவசியம்

"இருப்பு ஆயுதம் மழுங்கலாயிருக்க, அதை ஒருவன் தீட்டாமற் போனால், அதிக பலத்தைப் பிரயோகம் பண்ண வேண்டியதாகும் ; ஆகையால் ஒரு காரியத்தைச் செவ்வையாகச் செய்வதற்கு ஞானமே பிரதானம்" பிர.10:10

நாம் வேலை செய்வதற்கு உபயோகப்படுத்தும் அரிவாள் போன்ற இரும்பு ஆயுதங்களை நாம் தீட்டாமல் பயன்படுத்தினால், அதை பயன்படுத்தும்பொழுது நாம் நமது பலத்தை அதிகம் உபயோகிக்க வேண்டியதாயிருக்கும். அது போலவே நமது வாழ்க்கையிலும் நாம் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் அதை தேவ ஞானத்தோடு செய்ய வேண்டும். அப்படியென்றால் முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் கர்த்தருக்குப் பயப்படுதலாகிய தேவ ஞானம் நம்மில் காணப்படவேண்டும். கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்றால் நாம் செய்கிற ஒவ்வொருக் காரியத்திலும் தீமையாகத் தோன்றுகிற எல்லாக் காரியங்களையும் வெறுத்து, அவைகளை விட்டு விலக வேண்டும் என்று *நீதி.8:13, 16:6* -ல் கூறப்பட்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

உலக ஜனங்கள் உலக ஞானம் உடையவர்களாக எல்லாக் காரியங்களையும் மிகவும் திறமையாகச் செய்கிறார்கள். உதாரணமாக உலக மனிதன் ஒருவன் வியாபாரம் செய்கிறான் என்றால் அவன் உலக ஞானம் உடையவனாய் மிகக் குறுகிய காலத்தில் அதிக இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கலப்படம், கள்ளத்தராசு, ஏமாற்றுதல் போன்ற காரியங்களைச்செய்து, அவர்கள் எப்படியாவது அதிக லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்படுகிறார்கள். ஆனால் தேவ ஞானத்தையுடைய ஒரு மனிதன் கர்த்தருக்குப் பயப்படுகிற வனாகத் தான் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உண்மையோடும், நேர்மையோடும் நடந்து கொள்ளுகிறான். அது போலவே அவன் நோக்கம் எல்லாம், தான் செய்யும் தொழிலின்மூலம் தேவ நாமம் மகிமைப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு செயல்படுவான்.

அது போலவே ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிற உலக ஞானத்தை யுடைய உலக மனிதன் ஒருவன் எவ்விதம் மற்றவர்களைக் கெடுத்து துரிதமாக பதவி உயர்வு பெறலாம், அல்லது எவ்விதம் அலுவலகப் பொருட்களைத் திருடுவது அல்லது எவ்விதம் உண்மையாய் வேலை செய்யும் ஒரு மனிதனுக்கு விரோதமாக மேல் அதிகாரிகளிடம் அவனைப் பற்றி கோள் சொல்லி அவனுக்கு அவப்பெயர் உண்டாக்கலாம். எவ்விதம் தர்ணா

போன்றவைகள் நடத்தி அலுவலகத்தை செயலிழக்கச்செய்யலாம் என்று இவ்விதமான தவறானக் காரியங்ககளில் மிகவும் ஞானமாக செயல்படுவான்.

ஆனால் தேவ ஞானத்தையுடைய ஒரு மனிதன் கர்த்தருக்குப் பயப்படுகிறவனாகத் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலையில் உண்மையோடும், உத்தமத்தோடும் செயல்பட்டு, தனது செயல்பாடுகளின் மூலம் தேவ நாமம் மகிமைப்பட வேண்டும் என்று செயல்படுவான். நாம் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நமது தேவனின் நாமம் மகிமைப்பட வேண்டும் என்று *I பேதுரு 4:11-* ல் கூறப்பட்டுள்ளது. அது போலவே ஞானமாகிய வரத்தைப்பெற்று கொடுக்கப்பட்ட வேலையைச் சிறப்பாகச் செய்து முடிக்க நாம் எவ்விதம் செயல்படுகிறோம்.

இங்கு நாம் அறிந்துகொள்ள வேண்டிய மிக முக்கியமான காரியம் யாதெனில், எவ்விதம் ஒரு காரியத்தைச் செய்வதற்கு கர்த்தருக்குப் பயப்படு தலாகிய ஞானம் அவசியமோ, அது போலவே அந்தக் காரியத்தை மிகவும் சிறப்பாக அல்லது செவ்வையாகச் செய்து முடிக்க நமக்கு விசேஷித்த ஞானம் அல்லது ஞானமாகிய வரம் நமக்கு மிகவும் அவசியமாகவுள்ளது என்பதை நாம் அறிய வேண்டும். கர்த்தரிடம் கேட்டு இந்த ஞானத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்வோமா ?

B. நாம் அனுபவிக்கத் தக்கது இன்னது என்று அறிய நமக்கு ஞானம் வேண்டும்

"வானத்தின்கீழ் மனுபுத்திரர் உயிரோடிருக்கும் நாளளவும் பெற்று அநுபவிக்கத்தக்கது இன்னதென்று அறியும் பொருட்டு, என் இருதயத்தை ஞானத்தால் தேற்றிக்கொண்டிருக்கும்போதே...." பிரசங்கி 2:3

இந்த உலகின் ஜனங்கள் இந்த உலகில் உள்ள எல்லாப்பொருட்களும் தாங்கள் அனுபவிப்பதற்காகவே உள்ளது என்று எண்ணுகின்றனர். ஆனால் தேவ ஜனங்கள் தேவ ஞானத்தோடு (கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு) இந்தப் பொருள் நமது விசுவாச வாழ்க்கைக்கு தகுதியாயிருக்குமோ என்று எண்ணி உபயோகிக்க ஆரம்பிக்கின்றனர்.

உதாரணமாக நாம் உண்கிறதான ஆகாரப்பொருட்கள் தேவனுடைய ஆலயமாயகிய நமது சரீரத்திற்கு நன்மையானதும், ஏற்றதுமானதாக இருக்குமா? அல்லது நாம் உண்கிறதான ஆகாரப்பொருள் தேவனுடைய ஆலயமாகிய நமத சரீரத்தைக் கெடுக்குமா? என்று அறிந்து அந்தப்பொருளை உண்ண வேண்டியது மிகவும் அவசியமாகவுள்ளது. இது குறித்து கீழ்க்கண்ட வேத வசனத்தைக் கவனிப்பது நல்லது.

"எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகார முண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்" I கொரி.6:12

"தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சை ரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன்

இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்." தானி.1:8.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்திலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியது யாதெனில் நமக்கு எல்லாவற்றையும் அநுபவிக்க அதிகாரம் உண்டு என்றாலும் அவைகள் நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் நமக்கு தகுதியாயிருக்குமோ என்றும் ஒரு குறிப்பிட்ட காரியத்துக்கு அடிமைப் படுத்தாதபடி நம்மைக் காத்துக் கொள்வதும் மிகவும் அவசியமாகவுள்ளது.

அதுபோலவே வஸ்திரம் உடுத்துவது, அலங்கரிப்பது போன்றக் காரியங் களில், நாம் ஞானம் உடையவர்களாய் கீழ்க்கண்ட வேத வசனங்களுக்கு ஏற்றவாறு நம்மைக் காத்துக்கொள்வது நமக்கு மிகவும் நன்மையாக இருக்கும்.

"மயிரைப்பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது." I பேதுரு 3:3,4 ; I தீமோ.2:9.

தேவ ஜனங்களாகிய நாம் உலக ஜனங்களைப்போல உண்பதிலும், உடுத்துவதிலும் மட்டும் நமது முழுக் கவனத்தையும் செலுத்துகிறவர்களாக இருக்கக்கூடாது. இது குறித்து நமக்கு எச்சரிப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் கீழ்க்கண்ட வேத வசனங்களை நாம் கவனித்து செயல்படுவது மிகவும் நன்மையாயிருக்கும்.

"மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்." மத்.4:4, உபா.8:3.

"தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும், சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது."ரோமர் 14:17.

"ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளெல் லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக் கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியை யும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்." மத் .6:31,32,33.

"உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்." லூக்.21:34.

"மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்." I கொரி.9:27

"ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள்

என்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாரதனைக்காரர் ஆனதுபோல நீங்களும் ஆகாதிருங்கள்." I கொரி.10:7.

கிருபையாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த நாட்களில் தேவ ஜனங்களாகிய நாம் உலகத்தாரைப்போல் இராது நாம் அனுபவிக்கத்தக்கது அல்லது நமக்குத் தகுதியானவைகள் எவைகள் என்று அறிந்த கொள்ளத்தக்க ஞானத்தைப் பெற்றவர்களாக நடந்த கொள்வது நல்லது. நாம் உண்பதும், உடுத்துவதும், அணியும் ஆபரணங்களும் நமது பரிசுத்த வாழ்க்கைக்கு தகுதியாயிருக்குமோ அல்லது தடைகளாயிருக்குமோ என்று எண்ணிப்பார்த்து தேவ ஆலோசனையைக் கேட்டு செயல்பட்டால் நன்றாயிருக்கும்.

C. தங்கள் முடிவைக்குறித்து சிந்திக்க ஞானமடைய வேண்டும்

"அவர்கள் ஞானமடைந்து, இதை உணர்ந்து, தங்கள் முடிவைச் சிந்தித்துக் கொண்டால் நலமாயிருக்கும் என்றார்" உபா.32:29.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் மூன்றுக் காரியங்கள் கூறப்பட்டுள்ளது. 1) ஞானமடைவது 2) உணர்ந்து கொள்வது 3) முடிவை சிந்திப்பது. ஜனங்கள் ஞானமடைந்தால்தான் தேவக் காரியங்களை உணர்ந்து கொள்ள முடியும். அதோடு தங்கள் முடிவைப்பற்றி சிந்திக்கவும் முடியும்.

மேற்கூறப்பட்டுள்ள வசனம் கொடுக்கப்பட்டுள்ள உபாகமம் புஸ்தகத்தின் முப்பத்திரண்டாம் அதிகாரம் ஒரு விசேஷித்த பாகமாகும். இந்த அதிகாரம் தேவ ஜனங்களை எச்சரிக்கும் பாடலாக தேவனால் கொடுக்கப் பட்டுள்ளது. இப்பாடலின் சுருக்கம் யாதெனில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனால் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்திற்குள் பிரவேசித்து, அதின் நன்மைகளைப் புசித்து செழித்திருக்கும்பொழுது அவர்கள் கர்த்தரை மறந்து விக்கிரகங்களை சேவிக்க ஆரம்பித்தால் அவர்களுக்கு தேவ தண்டனை நிச்சயமாகக் கிடைக்கும் என்று அவர்களுக்கு எச்சரிப்பாகக் கூறப்பட்டுள்ளது.

அன்றைய இஸ்ரவேல் ஜனங்கள் ஞானமற்றவர்களாக தேவனால் கொடுக்கப்பட்ட எச்சரிப்பை மறந்து, விக்கிரகங்களை சேவித்து பல தேவ தண்டனைகளைப் பெற்று பலக் கஷ்டங்களை அநுபவித்தனர். தேவன் கொடுத்த எச்சரிப்பின் பாடலின் ஒரு பாகமாக மேற்கூறப்பட்டுள்ள வசனம் அமைந்துள்ளது. அதாவது ஜனங்கள் தேவ ஞானத்தைப்பெற்று தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் எச்சரிப்பின் வார்த்தைகளை உணர்ந்து தங்களுடைய முடிவைப்பற்றி சிந்தித்து தங்களுக்கு வரும் அழிவிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பது தான் அதின் பொருளாகும்.

ஜனங்கள் தங்கள் முடிவைப்பற்றி சிந்திக்கவேண்டும் என்பது, தாங்கள் எவ்விதம் ஜீவித்தால் தங்கள் முடிவு எப்படியிருக்கும் என்பதை அறிந்து, அதற்கு ஏற்றவாறு தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான். ஜனங்கள் தங்கள் முடிவைப்பற்றி சிந்திக்கும்பொழுது அவர்கள் மூன்றுக் காரியங்களை அறிந்து இருக்க வேண்டும். அதாவது 1) மனிதனின் நிலையற்ற நிலை 2) ஒரு காரியத்தின துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது

3) வெவ்வேறு மனிதர்களின் முடிவு. இந்த மூன்றுக் காரியங்களைப் பற்றி சிறிது விபரமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1. மனிதனின் நிலையற்ற நிலை

மனிதராகிய நமது முடிவு எப்பொழுது இருக்கும் என்று நமக்குத் தெரியாது. சிலர் தாங்கள் இந்த உலகில் நிரந்தரமாக ஜீவிக்கப்போவதுபோல் எத்தனையோ காரியங்களைத் திட்டம் பண்ணுகின்றனர். ஆனால் அவர்களுக்கு திடீரென்று மரணம் வந்து அவர்கள் திட்டங்கள் எல்லாம் அவமாய்ப் போகச் செய்கிறது. நமது திட்டங்கள் குறித்து நாம் கீழ்க்கண்டவாறு கூற வேண்டும் என்று வேத வசனம் நமக்குப் போதிக்கிறது.

"நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒரு வருஷம் தங்கி, வியாபாரஞ்செய்து சம்பாத்தியம் பண்ணுவோ மென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது ? கொஞ்சக்காலம் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே. ஆதலால் ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்ன தைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும்." யாக்.4:13-15.

சிலர் தாங்கள் நிரந்தரமாக இந்த உலகில் தங்கப்போவதுபோல் தங்களுக்கு ஆஸ்தியை சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். இது குறித்து வேதம் நம்மை எச்சரிக்கிறது.

"ஞானிகளும் மரித்து, அஞ்ஞானிகளும் நிர்மூடரும் ஏகமாய் அழிந்து, தங்கள் ஆஸ்தியை மற்றவர்களுக்கு வைத்துப்போகிறதைக் காண்கிறான். தங்கள் வீடுகள் நித்தியகாலமாகவும், தங்கள் வாசஸ்தலங்கள் தலைமுறை தலைமுறையாகவும் இருக்குமென்பது அவர்கள் உள்ளத்தின் அபிப்ராயம் ;அவர்கள் தங்கள் நாமங்களை தங்கள நிலங்களுக்குத் தரிக்கிறார்கள். " சங்கீதம் 49:10,11 "வேஷமாகவே மனுஷன் திரிகிறான் ; விருதாகவே சஞ்சலப்படுகிறான் ;ஆஸ்தியை சேர்க்கிறான் ;யார் அதை வாரிக்கொள்ளுவான் என்று அறியான்" சங்கீதம் 49:6.

"அநியாயாய் ஐசுவரியத்தை சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங்காத்தும், குஞ்சு பொரிக்காமற்போகிற கவுதாரிக்குச் சமானமாயிருக்கிறான். அவன் தன் பாதி வயதிலே அதைவிட்டு, தன் முடிவிலே மூடனாயிருப்பான்" எரேமியா 17:11.

லூக்கா 12:15-21 வரை உள்ள வசனங்களில் ஆண்டவராகிய இயேசு ஒரு உவமையைச் சொன்னார். ஒரு ஐசுவரியவானுக்கு அவன் நிலங்களில் நிறைய தானியம் விளைந்தது. அவன் தனக்கு விளைந்த தானியங்களை பெரியக் களஞ்சியங்களில் சேர்த்து வைத்து தன் ஆத்துமாவை நோக்கி, ஆத்துமாவே ! நீ இளைப்பாறி புசித்து, பூரிப்பாயிரு என்று சொல்வேன் என்று தன்னில் சிந்தனை பண்ணினான். ஆனால் தேவனோ அவனை நோக்கி மதிகேடனே! இந்த இராத்திரியிலே உன் ஆத்துமா உன்னிடம் இருந்து

எடுத்துக்கொள்ளப்படும். அப்பொழுது நீ சேர்த்தவைகள் யாருடையதாகும் என்று கேட்டார். ஐசுவரியம் நமக்கு அவசியம் தான். ஆனால் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கும் விக்கிரகமாக இருக்கக்கூடாது. ஆகவே தான் ஐசுவரியம் குறித்து மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

மனிதனின் நிலையற்ற நிலையை விளக்கும் சில வேத வசனங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன் :

"நாம் மரிப்பது நிச்சயம், திரும்பச் சேர்க்கக்கூடாதபடிக்கு தரையிலே சுவறுகிற தண்ணீரைப்போல் இருக்கிறோம்" II சாமு.14:14. " கர்த்தாவே நான் எவ்வளவு நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்கு தெரிவியும். இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர் ;என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாதது போலிருக்கிறது ;எந்த மனுஷனும் மாயையே" சங்கீதம் 39:4,5 "மனுஷன் மாயைக்கு ஒப்பாயிருக்கிறான் ; அவன் நாட்கள் கடந்து போகிற நிழலுக்குச் சமானம்" சங்கீதம் 144:4, பிரசங்கி6:12."என் ஜீவன் எவ்வளவு நிலையற்றது என்பதை நினைத்தருளும்" சங்கீதம் 89:47, யோபு 8:9, சங்கீதம் 102:11, I நாளா.29:15. "அவர்களை வெள்ளம்போல வாரிக்கொண்டு போகிறீர் ;நித்திரைக்கு ஒத்திருக்கிறார்கள் ;காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்;எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது ; ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களை கழித்துப்போட்டோம். எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே ; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்து போகிறோம்" சங்.90:5,9,10.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து மனிதனின் நிலையற்ற நிலையை நாம் நன்கு அறிந்து கொள்ள முடியும். நமக்குக் கிருபையாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த நாட்களில் நாம் நமது நிலையற்ற நிலையை உணர்ந்து, நமது முடிவு நாம் எதிர்பாராத நேரத்தில் இருக்குமென்பதை உணர்ந்து, நம்மை நமது மரணத்திற்கு அல்லது கர்த்தரின் வருகைக்கு ஆயத்தப்படுத்திக் கொள்வோம் என்றால் நாம் பாக்கியவான்களாயிருப்போம்.

2. முடிவைக்குறித்து கவனமாக இருக்கவேண்டும்

"ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது" பிரசங்கி 7:8.

இந்தக் காரியம் விசுவாசிகளாகிய தேவ ஜனங்களின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட ஒரு காரியமாகும். ஏனெனில், நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகும் பொழுது, அதாவது நாம் மனந்திரும்பி கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் எடுக்கும் பொழுது, நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் துவக்கம் ஆரம்பமாகிறது. இதுவல்லாது நாம் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறப்பதினாலோ, காணிக்கைகள் கொடுப்பதினாலோ நாம் இந்த கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்க்கைக்குள் வருவதில்லை. இவ்விதம் நாம் மனந்திரும்பி, ஞானஸ்நானம்

எடுத்து நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் துவக்கத்திற்குள் வரும்பொழுது நாம் பலவித அனுபவங்களைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது. இன்றைய நாட்களில் கிறிஸ்தவ வாழ்க்கையின் துவக்கத்திற்குள் வருகிற அநேகர் தங்கள் வாழ்க்கையில் சரியான முடிவைக் காணாது இடையிலேயே தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை நஷ்டப்படுத்தி விடுகின்றனர். இதனால் கிறிஸ்துவுக்குள் ஆரம்பமான அவர்களின் புதிய வாழ்க்கையானது அவர்களுக்குப் பயனற்றதாகி விடுகிறது.

நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் முடிவு சரியாக இருக்கவேண்டும் என்றால், நாம் நமது இடைப்பட்டக் காலத்தில் எப்படி வாழ்கின்றோம் என்பது மிகவும் முக்கியமானதாகும். இந்த இடைப்பட்டக் காலத்தில் நாம் எப்படி மிகவும் வாழ்கின்றோமோ அதற்கு ஏற்றபடிதான் நமது முடிவும் இருக்கும். இந்த இடைப்பட்டக்காலத்தில் நமது கிறிஸ்தவ வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய அநேகக் காரியங்கள் உண்டு. வேத புத்தகத்தின் உதவியோடு நமது விசுவாச வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய காரியங்கள் எவைகள் என்று அறிந்து அவைகளினின்று நமது ஜீவிதத்தைக் காத்துக் கொள்வது மிகவும் நல்லதாயிருக்கும்.

"மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிற வருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" எபி.12:1.

மேற்கூறப்பட்டுள்ள வேத வசனத்தில் கிறிஸ்தவ வாழ்க்கையானது ஓட்டப் பந்தயத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. நாம் மனந்திரும்பியவர்களாய் விசுவாசத்தோடு ஆண்டவராகிய இயேசுவை நம் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளும் பொழுது *யோவான் 1:12*-ல் கூறப்பட்டுள்ளதுபோல் நாம் அவருடைய பிள்ளைகளாகிறோம். அதுபோலவே நாம் தேவனை விசுவாசித்து ஞானஸ்நானம் எடுக்கிறோம். (*அப்.8:36,37,38* வசனங்களைப் பார்க்கவும்) அதுபோலவே நாம் விசுவாசத்தின் மூலம் பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம். (*கலா.3:14,யோவான் 7:39*). இவ்விதம் நமது கிறிஸ்தவ வாழ்க்கை என்பது விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு வாழ்க்கையாகவுள்ளது. இந்த விசுவாச வாழ்க்கையை நம்மில் விசுவாசத்தை துவக்கிய இயேசுவே நாம் தொடர்ந்து இந்த ஓட்டத்தை ஓடவும், அதை ஓடி முடிக்கவும் வேண்டியக் கிருபைகளையும் கொடுக்கிறார் என்பதை மறக்கக் கூடாது.

முன் கூறப்பட்டுள்ள *எபி.12:1*ல் நாம் எவ்விதம் நமது கிறிஸ்தவ வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டும் என்பது பற்றி ஆறு காரியங்கள் கூறப்பட்டுள்ளது. அவைகள் a) மேகம் போன்ற திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து நிற்கிறார்கள். b) நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் விட்டுவிட வேண்டியக் காரியங்கள் c) நம்மில் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரும் இயேசுவே. d) நாம் இயேசுவை மட்டும் நோக்க வேண்டும் e) நமக்கு நியமித்திருக்கிற ஓட்டம் f) பொறுமையோடு ஓடுவது. இவைகளை சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

a) மேகம் போன்ற திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்

நாம் விசுவாசித்து ஏற்றுக் கொண்டிருக்கிற கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம்தான் முதல் ஆள் என்று எண்ணக்கூடாது. மேகம் போன்ற எண்ணிக்கைக்கு அடங்காத திரளான ஜனங்கள் இந்த கிறிஸ்தவ வாழ்க்கையை தங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டு அதில் இறுதிவரை நிலைத்திருந்து எல்லா பாடுகளையும், உபத்திரவங்களையும் சகித்து, கடந்து சென்றிருக்கிறார்கள் என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

b) நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் விட்டுவிட வேண்டியக் காரியங்கள்

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நாம் விட்டுவிட வேண்டிய இரண்டுக் காரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. 1) பாரமானக் காரியங்கள் (Weight) 2) நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவம்.

1) பாரமானக் காரியங்கள்

நாம் ஓட்டத்தில் ஓடுகிறவர்கள் என்றால் கனமான பாரத்தை நம் தலைமீது வைத்துக்கொண்டு ஓடமாட்டோம். அது போலவே நமது விசுவாச ஓட்டத்தில் ஓடும்பொழுது நமக்குப் பாரமாக உள்ளக் காரியங்கள் எவை என்றும், நம்மை பாரமடையச்செய்யும் காரியங்கள் எவை என்றும் அறிந்து அவைகளை விட்டுவிடுவது நமக்கு நன்மையாக இருக்கும்.

நமக்குப் பாரமானக் காரியங்கள்

"என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப் பெருகிற்று. அவைகள் பாரச் சுமையைப்போல என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று" சங்.38:4, ஏசா.1:4",

நம்மை பாரமடையச்செய்யும் காரியங்கள்

"உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும்,...எச்சரிக்கையாயிருங்கள்" லூக்.21:34.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்திலிருந்து நாம் அறிந்து கொள்வது யாதெனில் நம்மில் காணப்படும் அக்கிரமம் அல்லது பாவமானக் காரியங்கள் நமக்கு மிகவும் பாரமாக இருந்து நமது விசுவாச ஓட்டத்தில் நாம் ஓடமுடியாதபடி நம்மை தடைசெய்யும் ஒன்றாக இருக்கிறது. அதுபோலவே நம்மில் காணப்படும் மாமிசப்பெருந்தீனி சுபாவங்களும், வெறித்தன்மைகள், லவுகீக கவலைகள் அதாவது உலகப்பிரகாரமானக் காரியங்களைக் குறித்த வீணானக் கவலைகளும் நமது சரீரத்தைப் பாரமடையச் செய்து, நமது விசுவாச ஓட்டத்தை ஓடமுடியாதபடிச் செய்துவிடுகிறது. ஆகவே நமக்குப் பாரமாகவுள்ள இந்த அக்கிரமங்கள் அல்லது பாவங்களாலானக் காரியங்கள், நம்மை பாரமடையச்செய்கிற மாமிச பெருந்தீனி சுபாவங்கள், வெறித்திருக்கும் தன்மைகள், லவுகீக கவலைகள் ஆகியவைகள் நம்மைவிட்டு முழுவதுமாக அகற்ற வேண்டும்.

2) நம்மைச் சுற்றி நிற்கிற பாவம்

நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவம் என்பது நம்மைச் சுற்றிக்கொள்கிற அல்லது நம்மை சூழ்ந்து கொள்கிற பாவம் என்றப் பொருளில் ஆங்கில வேதப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. எவ்விதம் பாம்பு சில நேரம் மனிதனின் சரீரத்தைச் சுற்றிக்கொள்ளும் என்றால் அது எவ்விதம் அந்த மனிதனின் சரீரத்தை மிகவும் இறுக்கி இறுதியில் அது அவனை மரிக்கும்படிச்செய்து விடுகிறதோ, அதுபோலவே நம்மில் காணப்படும் பாவமானது நமது சரீரத்தை பெலனிழக்கச் செய்து முடிவில் நமக்கு மரணத்தைக்கொண்டு வருகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே நம்மில் காணப்படும் பாவமானது சிறிய பாவமானாலும், பெரிய பாவமானாலும் அது நமக்கு மரணத்தை உண்டு பண்ணும் என்பதை நாம் உணர்ந்து அதைத் துவக்கத்திலேயே விட்டுவிடுவது நல்லது.

c) விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரும் இயேசுவே

இது குறித்து முன்பே எழுதியுள்ளேன். நமது விசுவாச வாழ்க்கையை அல்லது விசுவாச ஓட்டத்தை நமது பெலன்கொண்டு, நமது ஞானம் கொண்டு நம்மால் ஓடமுடியாது. கர்த்தராகிய இயேசுவே இந்த விசுவாச ஓட்டத்தைச் சரியாக ஓடி முடிக்க நமக்கு தமது கிருபையை அளிக்கவேண்டும். நமது விசுவாச வாழ்க்கையில் இந்த விசுவாச ஓட்டத்தைத் துவக்குகிறவரும் இயேசுவே, தொடர்ந்து அந்த ஓட்டத்தை ஓடச் செய்கிறவரும் அவரே. இந்த விசுவாச ஓட்டத்தை சரியாக ஓடி ஜெயமாக முடிக்கச் செய்கிறவரும் அவர்தான் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும்.

d) நாம் இயேசுவை மட்டும் நோக்க வேண்டும்

ஓட்டக்களத்தில் ஓடுகிற மனிதன் இலக்கை (finishing point) ஐ மட்டும் நோக்கி ஓட வேண்டும். அதுவல்லாது சுற்றியுள்ள மனிதரையோ, வேறு எந்த ஒரு காரியத்தையோ அவன் பார்க்கவே கூடாது. அதுபோலவே விசுவாச ஓட்டத்தில் ஓடுகிற நாமும் நமது இலக்காகிய இயேசுவை மட்டும் நோக்கி ஓடவேண்டுமேயொழிய, மற்ற எந்த ஒரு மனிதனையோ, சபைகளையோ, வேறு எந்த ஓர காரியத்தையுமோ நாம் நோக்கவே கூடாது அப்படி நாம் நோக்குவோம் (பார்ப்போம்) என்றால் நமது விசுவாச ஓட்டம் தோல்வியில் முடிந்துவிடும். இது குறித்து நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

e) நமக்கு நியமித்திருக்கிற ஓட்டம்

ஓட்டப் பந்தயத்தில் ஓடுகிறவர்கள் அவர்களுக்கு நியமித்திருக்கிற குறிப்பிட்ட தடம் (Track) வழியாகத் தான் ஓட வேண்டும். அப்படி அவர்கள் அந்தக் குறிப்பிட்ட தடம் (Track) வழியாக ஓடவில்லையென்றால் அவர்கள் பந்தயத்தை இழந்தவர்களாக (Disqualified) ஆகிவிடுவார்கள். அதுபோலவே தேவ ஜனங்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் தேவன் ஒரு குறிப்பிட்ட ஓட்டத்தை நியமித்திருக்கிறார். தேவன் நமக்கென்று நியமித்திருக்கும் ஓட்டத்தில் நாம்தான் ஓட வேண்டும். அதாவது நம் ஒவ்வொருவரையும் குறித்து தேவ நோக்கம் அல்லது தேவ சித்தம் என்று ஒன்று உண்டு. அந்த தேவநோக்கத்தை அல்லது தேவ சித்தத்தை நாம் பூரணமாக நிறைவேற்ற

வேண்டும். அப்படியென்றால் *ரோமர் 12:2* -ல் கூறப்பட்டுள்ளதுபோல் நாம் தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக நமது மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக வேண்டும் என்பது நம்மில் ஒரு ஜீவிய மாற்றம் ஏற்படவேண்டும் என்பதாகும். நம்மில் ஒரு சரியான ஜீவிய மாற்றம் ஏற்பட்டு நம்மைக்குறித்து சரியான தேவசித்தத்தை அல்லது தேவ நோக்கத்தை அறிந்து அந்த தேவசித்தம் அல்லது தேவநோக்கம் நம்மில் நிறைவேற நாம் ஒவ்வொருவரும் நாளும் பிரயாசப்பட வேண்டும்.அதற்காக ஜெபிக்க வேண்டும்.

f) பொறுமையோடு ஓடுவது

நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறதான இந்த விசுவாச ஓட்டத்தை நாம் ஜெயமாக முடிக்கவேண்டும் என்றால் நமக்கு பொறுமை அவசியம் ஆகும். நமக்கு பொறுமை ஏன் அவசியம், அதை எவ்விதம் பெறுவது என்பதை நாம் அறிந்து கொள்வது நமக்கு நன்மையாக இருக்கும்.

1) பொறுமை நமக்கு ஏன் அவசியம்?

"வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" எபி. 10:36 "நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது" யாக்.1:4.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் நாம் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மோட்ச ராஜ்யத்தைப்பெற நாம் தகுதியுள்ளவர்களாகும்படிக்கும், கர்த்தர் வருகையில் அவர் சந்நிதியில் நாம் பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் காணப்படவும் நமக்கு பொறுமை மிகவும் அவசியமாகவுள்ளது.

2) இந்த பொறுமையை நாம் எவ்விதம் பெறுவது ?

a] வேத வசனத்தின்மூலம் பொறுமையைப் பெறுகிறோம்

"வேத வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" ரோமர் 15:4.

வேத வசனங்களைத் தொடர்ந்து படிக்க படிக்க ஆதி தேவ மனிதர்களின் வாழ்க்கையில் காணப்பட்ட பொறுமையின் சுபாவம் நமது வாழ்க்கையிலும் உருவாக ஆரம்பிக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும்.

b) தேவ வல்லமையினால் நாம் பொறுமையைப் பெறுகிறோம்

"சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்." கொலோ.1:11.

தேவ வல்லமையால் நாம் பலப்படுத்தப்படும்பொழுது நம்மில் பொறுமை உருவாகிறது. பலசாலியாக உள்ள ஒரு மனிதன் பொறுமையாக செயல்படுவான். அதுபோலவே நாமும் தேவ வல்லமையினால் பெலன் கொள்ளும்பொழுது பொறுமையோடு செயல்பட முடியும்.

c) காணாததை நம்புவதின்மூலம் பொறுமையைப் பெறுகிறோம்

"நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்." ரோமர் 8:25.

நாம் பெறப்போகிற பரலோகத்தின் பாக்கியமான அனுபவங்களைக் குறித்த உறுதியான நம்பிக்கை நமக்கு இருக்குமானால், அதைப் பெறுவதற்கு பொறுமையோடு காத்திருப்போம்.

d) உபத்திரவத்தின் மூலம் பொறுமையைப் பெறுகிறோம்

''உபத்திரவம் பொறுமையையும்...உண்டாக்குகிறது'' ரோமர் 5:3.

நமது வாழ்க்கையில் நமக்குப் பலவிதமான உபத்திரவங்கள் வரும்பொழுது நாம் அவைகளை முறுமுறுப்பில்லாமல் சகிப்பதின்மூலம் பொறுமையைப் பெற்றுக் கொள்கிறோம்.

e) சோதனைகளின் மூலம் பொறுமையைப் பெறுகிறோம்

"நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும்..." யாக்.1:2,3.

நாம் பலவிதமான சோதனைகளில் அகப்படும்பொழுது நமது விசுவாசமானது பரீட்சை செய்யப்பட்டு (Tried) நாம் பொறுமையைப் பெறுகிறோம்.

நமது விசுவாச ஓட்டத்தைப் பாதிக்கக்கூடிய இரண்டு முக்கியமான காரியங்களையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1) பின்வாங்குவது

பின்வாங்குவது என்றால் ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிற ஒரு மனிதன் பாதிதூரம் ஓடிவிட்டு பின் நமக்கு இந்த ஓட்டம் வேண்டாம் என்று சொல்லி பின்னுக்கு வந்துவிடும் அனுபவத்தைத்தான் பின்வாங்குவது என்று கூறப் பட்டுள்ளது. இவ்விதம் கிறிஸ்தவ வாழ்க்கையிலும் துவக்கத்தில் கொஞ்ச காலம் விசுவாச வாழ்க்கை வாழ்ந்துவிட்டு பின் தங்கள் வாழ்க்கையில் கஷ்டங்களும், சோதனைகளும் வந்தவுடன் ஐயோ இந்தக் கிறிஸ்தவ வாழ்க்கை அல்லது விசுவாச வாழ்க்கை நமக்கு வேண்டவே வேண்டாம் என்று தங்கள் பழைய ஜீவிய முறைக்கே சென்றுவிடுகின்றனர். இதன் காரணம் என்ன என்று கீழ்க்கண்ட வேத வசனம் நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

"கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும்போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்; ஆகிலும்

தங்களுக்குள்ளே வேர் கொள்ளாதபடியினாலே கொஞ்சக்கால மாத்திரம் விசுவாசித்து, சோதனை காலத்தில் பின்வாங்கிப்போகிறார்கள்." லூக்.8:13.

மேற்கூறப்பட்டுள்ள வசனமானது விதைக்கிறவனின் உவமையில் கூறப்பட்டுள்ள வசனமாகும். விதைக்கிறவன் உவமையில் வேத வசனமாகிய விதையானது விதைக்கப்படுகிறது (பிரசங்கிக்கப்படுகிறது) எவ்விதம் விதையானது விதைக்கப்படும்பொழுது பலவிதமான இடங்களில் அந்த விதைகள் விழுகிறதோ அதுபோலவே வசனத்தைக் கேட்கிறவர்களும் பலவிதமான நிலையில் உள்ளவர்களாக இருப்பார்கள். மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கற்பாறையான இடம் என்பது வசனத்தைக் கேட்கிறவர்களின் இருதயம் கற்பாறையைப்போல் கடினப்பட்டதாக இருப்பதைக் குறிப்பதாக வுள்ளது. எவ்விதம் இருதயம் கடினப்படும் நிலைக்கு வருகிறது என்பதை கீழ்க்கண்ட வேத வசனம் தெளிவுபடுத்துகிறது.

"உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, ...புத்தி சொல்லுங்கள்" எபி.3:13.

இன்று அநேகர் தொடர்ந்து பாவஜீவியத்திலே நிலைத்திருப்பதால் அவர்களால் பாவமானக் காரியங்களை பாவம் என்று உணர முடியாதபடி பாவம் அவர்களை வஞ்சித்து விடுகிறது. இதினால் அவர்கள் இருதயமும் கடினப்பட்டு கற்பாறையைப்போல் ஆகிவிடுகிறது. இவ்வித மனிதர்களிடம் சிகரெட் - பீடிகுடிப்பது பாவம், சினிமா பார்ப்பது பாவம், சாராயம் குடிப்பது பாவம் என்றால் அவர்கள் அதுவெல்லாம் பாவமல்ல என்பார்கள். இவ்வித ஜனங்களின் இருதயம் கடினப்பட்ட நிலையில் இருப்பதால், இவர்களுக்கு சிறிது கஷ்டங்கள் சோதனைகள் வந்துவிட்டால், ஐயோ இந்த கிறிஸ்தவ வாழ்க்கை நமக்கு வேண்டவே வேண்டாம் என்று சொல்லி தாங்கள் ஏற்றுக்கொண்ட விசுவாச வாழ்க்கையிலிருந்து பின்வாங்கிப் போய்விடுகிறார்கள்.

பின்வாங்குவதினால் ஏற்படும் நஷ்டம்

நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஓட்டத்திலிருந்து நாம் பின்வாங்குகிறோம் என்றால் அதினால் நமக்கு ஏற்படும் நஷ்டம் என்ன என்பதையும் நாம் அறிந்திருக்கவேண்டும். பின்வாங்கிப் போகிறவர்களுக்கு ஏற்படும் நஷ்டம் என்ன என்று கீழ்க்கண்ட வேத வசனம் நன்கு விளக்கும்.

"அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" எபி.4:1.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் இளைப்பாறுதலில் பிரவேசிப்பது என்பது மோட்சத்தில் பிரவேசிப்பது என்பதாகும். நாம் மோட்சத்தில் பிரவேசிப்பதற்குரிய வாக்குத்தத்தங்களைப் பெற்றவர்களாயிருந்தாலும் நாம் அதை அடையாமல் பின்வாங்கிப் போகக்கூடாது. ஆம் நமது விசுவாச ஓட்டத்தில் பின்வாங்கினோம் என்றால் நமக்கு இலக்காகவுள்ள மோட்சத்தில் பிரவேசிக்கமுடியாதபடி ஆகிவிடும் என்பதை நாம் நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும்.

2) விழுந்து போவது

விழுந்து போவது என்றால் என்ன?

விழுந்து போவது என்றால் ஓட்டக்களத்தில் ஓடுகிற ஒரு மனிதன் ஓடிக்கொண்டிருக்கும்பொழுது திடீரென்று கால் இடறியோ அல்லது வேறு ஏதாவது சரீர பெலஹீனத்தினாலோ விழுந்து விடலாம். இவ்விதம் விழுந்து போகின்ற ஒரு மனிதன் இங்கும் இல்லாமல், அங்கும் இல்லாமல் இடையில் தவிக்கிறவனாக இருப்பான். கிறிஸ்தவ வாழ்க்கையிலும் இவ்விதம் விசுவாச ஓட்டத்தை துவங்கிவிட்டு இடையில் விழுந்துபோன நிலையில் தவிக்கின்ற அனுபவம் தான் விழுவது ஆகும். நமது ஆவிக்குரிய ஜீவியத்திலும் தங்கள் விசுவாச ஓட்டத்தை உற்சாகத்தோடு துவங்கியவர்களும் தங்கள் விசுவாச ஜீவியத்தில் இடையில் விழுந்துபோன நிலைக்கு வரலாம். நாம் நமது விசுவாச ஓட்டத்தில் விழுவதற்கு ஏதுவானக் காரியங்கள் எவை என்று அறிந்து அவ்விதக் காரியங்கள் நம்மில் காணப்படாதபடி நம்மைக் காத்துக்கொள்ள நாம் அறிந்திருக்க வேண்டும். மனிதர் விழுவதற்கு ஏதுவானக் காரியங்கள் எவைகள் என்று அறிந்து கொள்ளப்பார்ப்போம்.

a) கீழ்ப்படியாமையினால் விழுந்து போவது

"ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, ... ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம்" எபி.4:11.

நாம் விசுவாச ஜீவியத்திற்குள்ளாக வரும்பொழுது தேவன் நமக்குப் படிப் படியாக ஒவ்வொரு காரியங்களாக கற்றுக்கொடுக்கிறார். நாம் எந்த அளவுக்கு கர்த்தரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறோமோ அந்த அளவுக்கு தேவனும் பலப்புதியக் காரியங்களை நமக்குக் கற்றுக்கொடுப்பார். ஆனால் நாம் கீழ்ப்படி யாமையை வெளிப்படுத்துவோம் என்றால் தேவன் நம்மூலம் செயல்படாமல் நம்மை நம் இஷ்டத்திற்கு விட்டுவிடுவார். இதினால் நாம் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமுடியாதபடி ஆகிவிடும். ஆகவே நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

b) மனமேட்டிமையினால் விழுந்துபோவது

"விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" நீதி.16:18.

நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் விசுவாசத்தினின்று விழுந்து போவதற்கு மனமேட்டிமையும் ஒரு காரணமாக அமையலாம். மேட்டிமை, பெருமை, அகந்தை போன்ற வார்த்தைகள் ஒரே பொருளையுடைய வார்த்தைகளாகும். மேட்டிமை, பெருமை இவைகள் உண்டாவதற்குரியக் காரணங்களைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

மேட்டிமை, பெருமை உண்டாவதற்கான காரணங்கள்

1) **செல்வம் பெருகுவதினால், வாழ்க்கையில் திருப்தியடைவதினால் மேட்டிமை உண்டாகிறது**

"உன் ஆடுமாடுகள் திரட்சியாகி, உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும்போதும், உன்

இருதயம் மேட்டிமையடையாமலும்,....உபா.8:13,14 எசே.28:5,3,31:10 சங்.49:6 ஓசியா13:6.

2) விரும்புவதைப் பெறுவதினால் பெருமை உண்டாகிறது

"துன்மார்க்கன் தன் உள்ளம் இச்சித்ததைப் பெற்றதினால் பெருமை பாராட்டி,..." சங்.10:3.

3) சுகவாழ்வினால் பெருமை உண்டாகிறது

"மரணபரியந்தம் அவர்களுக்கு (துன்மார்க்கருக்கு) இடுக்கண்களில்லை ;அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது. நரர் படும் வருத்தத்தில் அகப்படார்கள் ;மனுஷர் அடையும் உபாதியை அடையார்கள். ஆகையால் பெருமை சரப்பணியைப்போல் அவர்களைச் சுற்றிக் கொள்ளும்." சங்.73:4,5,6 I யோவான்2:16.

4) அழகினால் மேட்டிமை கொள்வது

"உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று" எசே.28:17.

5) தவறான தீர்க்கதரிசனங்களினால் பெருமை கொள்வது

"உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள் ; அவர்கள் உங்களை வீண்பெருமை கொள்ளும்படி செய்கிறார்கள் ...." எரே.23:16.

6) தீமை செய்வதில் பெருமைப்படுவது

"பலவானே, பொல்லாப்பில் (தீமை செய்வதில்) ஏன் பெருமை கொள்ளுகிறாய்?"சங்.52:1.

7) வருங்காலத்தைக் குறித்து பெருமை பாராட்டுவது

"நாளையத் தினத்தைக் குறித்துப் பெருமை பாராட்டாதே ; ...நீதி.27:1.

8) விக்கிரகங்களைப் பற்றிப் பெருமை பாராட்டுவது

"விக்கிரகங்களைப் பற்றிப் பெருமை பாராட்டுகிற யாவரும் வெட்கப் பட்டுப் போவார்களாக ;.." சங்.97:7.

மேற்கூறப்பட்டுள்ள மேட்டிமை, பெருமை போன்றக் காரியங்கள் நமது மேலான ஆவிக்குரிய வாழ்க்கையிலிருந்து நம்மை விழும்படிச்செய்கிறது. நமது ஆவிக்குரிய ஓட்டத்தை நஷ்டப்படுத்தி, நாம் மோட்சபாக்கியத்தை அடைய முடியாதபடிச் செய்து விடும். ஆகவே மேற்கூறப்பட்டுள்ள தவறானக் காரியங்கள் நம்மில் காணப்படாதபடி நம்மைக் காத்துக்கொள்வது மிகவும் நன்மையாயிருக்கும்.

c) ஐசுவரியத்தை நம்புவதினால் விழுந்து போவது

"தன் ஐசுவரியத்தை நம்புகிறவன் விழுவான்" நீதி.11:28.

இந்த உலகில் நமது வாழ்க்கையை நன்கு அமைத்துக்கொள்ள நமக்கு ஐசுவரியம் தேவைப்படுகிறது. ஆனால் நாம் இந்த ஐசுவரியத்தின் மீது முழு

நம்பிக்கையும் வைத்து, அதையே எண்ணி செயல்படுகிறவர்களாயிருந்தால் நாம் நமது ஆவிக்குரிய ஓட்டத்திலிருந்து விழும்படியான நிலை ஏற்படும். ஆகவே இந்த உலகின் ஐசுவரியம் எத்தன்மையுடையது என்றும், இந்த ஐசுவரியத்தைக் குறித்து வேத புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் எச்சரிப்புகள் என்ன என்பது பற்றியும் சிறிது விபரமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1) ஐசுவரியம் எத்தன்மையுடையது ?

a) ஐசுவரியத்தின் மயக்கமானது நம்மை கனி கொடாதபடி நெருக்கிப் போடுகிறது

"முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால்,....பலனற்றுப் போவான்" *மத்.13:22.*

b) பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது

"பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது ;சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்" *I தீமோ.6:10.*

c) ஐசுவரியம் நிலையற்றது

"நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும்,...." *I தீமோ.6:17.*

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து நாம் அறிந்து கொள்வது யாதெனில், ஐசுவரியமானது நிலையற்றதும், நமது வாழ்க்கையில் காணப்படும் எல்லாத் தீமைகளுக்கும் வேராகவும், நம்மை கிறிஸ்தவ வாழ்க்கையில் பலன் கொடுக்கமுடியாதபடி நெருக்கிப் போடுவதாகவும் உள்ளது என்று அறிகிறோம்.

2) தவறாக ஐசுவரியத்தைச் சேர்க்கிறவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள் ?

இன்று அநேகர் ஐசுவரியத்தை சேர்க்க வேண்டும் என்று பல தவறான முறைகளை கையாள்கிறார்கள். தவறான முறையில் ஐசுவரியத்தை சேர்க்கிறவர்கள் பல சாபத்திற்குள்ளாகிறார்கள் என்பதை அறியாதிருக் கிறார்கள். ஆகவே இவ்விதம் குறுக்கு வழியில் துரிதமாக பணம் சேர்க்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

a) அநியாயமாய் ஐசுவரியத்தைச் சேர்க்கிறவன் முடிவில் மூடனாயிருப்பான்

"அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங்காத்தும், குஞ்சு பொரிக்காமற்போகிற கவுதாரிக்குச் சமானமா

யிருக்கிறான் ; அவன் தன் பாதி வயதிலே அதை விட்டு, தன் முடிவிலே மூடனாயிருப்பான்" எரே.17:11 .

b) பொருளாசைக்காரர் விக்கிரக ஆராதனைக்காரர்களாக எண்ணப் படுகிறார்கள்

"விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்திரமடை வதில்லை" எபே.5:5

c) பாவம் செய்கிறவர்கள் ஐசுவரியத்தை மற்றவர்களுக்காகவே சேர்த்து வைக்கிறார்கள்

"பாவம் செய்கிறவனுக்கோ தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய் வைத்துவிட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்துக் குவித்து வைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார் ;...... "பிரசங்கி.2:26.

d) ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் இச்சைகளிலும் விழுகிறார்கள்

"ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்" I தீமோ.6:9.

e) ஐசுவரியவான்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதானக் காரியமாகவுள்ளது

"ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதா யிருக்கும்"...மத்.19:24.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து நாம் அறிய வேண்டியது யாதெனில் பொருளாசையுடையவர்களாய் தவறான முறையில் ஐசுவரியத் தைச் சேர்க்கிறவர்கள் விக்கிரக ஆராதனைக்காரரும், மூடருமாயிருந்து மனிதரை அழிக்கக்கூடிய பலவிதமான இச்சைகளில் விழுகிறவர்களு மாயிருந்து, தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கத் தகுதியற்றவர்களாகி விடுகிறார்கள் என்று நாம் அறியலாம். இந்நாட்களில் நாம் பொருளாசையைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

iii) ஐசுவரியம் குறித்து நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் எச்சரிப்புகள்

a) நம் இருதயத்தை ஐசுவரியத்தின்மேல் வைக்கக்கூடாது

"ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்" சங்.62:10.

b) ஐசுவரியம் நமக்கு ஜீவன் ஆவதில்லை

"பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் ; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்." லூக்.12:15.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் சங்கீதக்காரனாகிய தாவீது ராஜா ஒரு மனுஷனுக்கு ஐசுவரியம் பெருகினாலும் அவன் தன் இருதயத்தை அதின்மேல் வைக்கக்கூடாது என்று எச்சரிக்கிறார். ஏனெனில் ஒரு மனிதன் தன் இருதயத்தை ஐசுவரியத்தின்மீது வைத்தால் அது அவனுக்கு விக்கிரகமாக ஆகி அவனுக்கும், தேவனுக்குமிடையே தடுப்புச் சுவராகி, தேவனிடத்திலிருந்து அவனை முழுவதுமாக பிரித்து விடும். அது போலவே இரண்டாம் வசனத்திலும் ஒரு மனிதனின் ஐசுவரியம் அவனுக்கு ஜீவன் அல்ல என்று ஆண்டவராகிய இயேசு கூறுகிறார். இதன் பொருள் நமது ஐசுவரியமானது நமது ஆத்துமாவை ஜீவனுள்ளதாக பிழைக்கச்செய்யாது என்பதாகும். இந்தக் காரியங்களை நாம் சரியாக அறிந்து கொண்டு நமது ஐசுவரியம் குறித்து நாம் எச்சரிப்போடு நடந்து கொள்வது நமக்கு நன்மையாயிருக்கும்.

iv) ஐசுவரியம் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஆலோசனைகள்

a) போதுமென்கிற மனதோடு கூடிய தேவபக்தியே ஆதாயம்

"போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்." I தீமோ.6:6,7,8.

b) ஐசுவரியவான்களிடத்தில் காணப்பட வேண்டியக் காரியங்கள்

"இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாகக் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு" I தீமோ.6:17,18,19.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து நாம் அறிந்து கொள்வது யாதெனில் நாம் நமக்குரியவைகள் போதுமென்றிருந்து, நிலையற்ற ஐசுவரியத்தின்மீது நம்பிக்கை வையாமல் ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை

வைத்து, மற்றவர்களுக்கு நன்மை செய்து, தாராளமாய்க் கொடுக்கிறவர் களாயும் இருக்கும்படி கட்டளையிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. செயல்படுவோமா?

c) மாறுபாடான இருவழியில் செல்வதினால் விழுந்துபோவது

"மாறுபாடான இருவழியில் நடக்கிறவனோ அவற்றில் ஒன்றிலே விழுவான்"நீதி.28:18.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் மாறுபாடான என்ற வார்த்தைக்கு ஆங்கில வேத புத்தகத்தில் Perverse என்ற வார்த்தை பயன்படுத்தப பட்டுள்ளது. இதன் பொருள் தவறானக் காரியங்களில் பிடிவாதம் கொளவது என்று கூறப்பட்டுள்ளது. இன்று அநேகர் தேவக் காரியங்கள் குறித்து தவறானக் கருத்துக்கள் உடையவர்களாய் செயல்படுகிறார்கள். இவர்கள் தங்கள் ஆவிக்குரிய ஓட்டத்தில் விழுந்து போவார்கள் என்பது நிச்சயம்.

நாம் எந்த வழியைத் தெரிந்து கொண்டு அதில் செல்லவேண்டும் என்று கீழ்க்கண்ட வேத வசனம் மிகத் தெளிவாகக் கூறுகிறது.

"வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்...." எரே.6:16.

ஆதித் திருச்சபையில் கைக்கொண்ட பூர்வ பாதையானது,

i) மனிதன் தங்கள் பாவ ஜீவியத்தை விட்டு தேவனிடமாக தங்கள் மனதைத் திருப்புவது

ii) தங்கள் பாவம் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் எடுப்பது

iii)பரலோக ராஜ்யத்தை சுதந்தரிப்பதற்குத் தகுதியுள்ளவர்களாகும் படிக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவதும் ஆகும்.

ஆனால் இன்று மனிதர்கள் இந்த உபதேசத்தை விட்டுவிட்டு தங்கள் தவறான உபதேசங்களில் மிகவும் பிடிவாதம் காட்டுகிறார்கள். ஆகவே நாம் உபதேசம் குறித்து மிகவும் விழிப்புடையவர்களாயிருப்பது மிகவும் அவசியமாகவுள்ளது.

நாம் நமது விசுவாச ஓட்டத்திலிருந்து விழுந்து போவதற்கு ஏதுவான மேற்கூறப்பட்டுள்ள நான்குக் காரியங்களாகிய கீழ்ப்படியாமை, மன மேட்டிமை, ஐசுவரியத்தை நம்புவது, மாறுபாடான இருவழியில் செல்வது ஆகியவைகள் விசுவாசிகளின் ஜீவியத்தில் சிறிதளவும் காணப்படாதபடி தங்களைக் காத்துக்கொள்வது மிகவும் அவசியமாகும்.

i) விழாதபடி எச்சரிக்கையாயிருப்பது

"தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கை யாயிருக்கக்கடவன்" I கொரி.10:12.

ii) ஜாக்கிரதையாயிருப்பது

"சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள் ; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை" I பேதுரு 1:10.

iii) இன்னநிலையில் இருந்து விழுந்தோம் என்று அறிந்து மனந்திரும்புவது

"நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக...." வெளி.2:5.

இன்று அநேகர் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையைப் பற்றி விழிப்புடையவர்களாய் இல்லாததினால் வெகு எளிதாக விழுந்து விடுகிறார்கள். நாம் நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் விழாதபடியிருக்க வேண்டும் என்றால் நமது ஜீவியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நம்முடைய அழைப்பும் தெரிந்த கொள்ளுதலும் நமது மரணத்தில் அல்லது கர்த்தரின் வருகையில் (எது முன்பு சம்பவிக்குமோ அப்பொழுது) உறுதியாக்கப்படும். ஆகவே அதுவரையில் நாம் ஜாக்கிரதையாயிருப்பது மிகவும் அவசியமாகவுள்ளது.

சிலநேரம் நாம் நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் விழுந்து போனாலும் நாம் என்ன நிலையில் இருந்து விழுந்தோம் என்று அறிந்து மனந்திரும்பி, நாம் விழுவதற்கு முன்பு எவ்விதம் நின்று கிரியை செய்தோம் அன்று அறிந்து அவ்வாறே செயல்பட முயற்சிக்க வேண்டும்.

3. வெவ்வேறு மனிதர்களின் முடிவு

"நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு ; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்" சங்கீதம் 37:37.

"அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்கள் ; அறுப்புண்டு போவதே துன்மார்க்கரின் முடிவு" சங்கீதம் 37:38.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இரண்டுவித மனிதர்களின் முடிவு பற்றி கூறப்பட்டுள்ளது. முதல்வித மனிதர்கள் உத்தமர்கள், செம்மை யானவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஆங்கில வேத புத்தகத்தில் உத்தமன் என்ற வார்த்தைக்கு (Perfect man - பூரணமானவன்) என்றும் செம்மை யானவன் என்ற வார்த்தைக்கு(Upright man - நேர்மையானவன்) என்றும் கூறப்பட்டுளள்ளது. ஆம் மனிதர் தங்கள் காரியங்களில் பூரணராகவும், நேர்மையானவர்களுமாக வாழ்கிறவர்களின் முடிவானது முழுவதும் சமாதானமானதாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

அதுபோலவே அப்போஸ்தலனாகிய பவுலும் தனது வாழ்க்கையில் ஓட்டத்தை முடிப்பது பற்றிக் கூறும்பொழுது, *"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்*

பட்டிருக்கிறது" II தீமோ.4:7,8 என்று கூறுகிறார். அது போலவே சங்கீதக் காரனாகிய ஆசாபும் தனது முடிவைப்பற்றிக் கூறும்பொழுது, *"உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" சங்.73:24* என்று கூறுகிறார். நாம் நமது முடிவைக்குறித்து எப்பொழுதும் சிந்திக்கிறோமா? நமது முடிவும் மேற்கூறப் பட்டுள்ளதுபோல இருக்குமென்றால் நாம் எவ்வளவு பாக்கியவான் களாயிருப்போம். சிந்தித்து செயல்படுவோம்.

இதற்கு எதிர்மாறாக அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்கள் என்றும், தெய்வபயம் இல்லாத, தேவன் இல்லையென்று சொல்கிறதான துன்மார்க்கர் அறுப்புண்டு போவதுதான் அவர்கள் முடிவாக இருக்கும் என்றும் *சங்.37:38* -ல்கூறப்பட்டுள்ளது. சாலமோன் ராஜாவும் துன்மார்க்கருக்கு நல்லமுடிவு இல்லையென்று *நீதி.24:20*-ல் கூறியுள்ளார். சங்கீதக்கார னாகிய ஆசாபும் துன்மார்க்கரின் முடிவைப்பற்றிக் கூறும்பொழுது அவர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு பாழாய்ப்போகிறார்கள். பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள் என்று *சங்.73:19*-ல் கூறுகிறார். தெய்வ பயம் இல்லாத, தேவன் இல்லையென்று சொல்கிறதான துன்மார்க்கரான ஜனங்கள் துணிந்து தீமையானக் காரியங்களைச் செய்கிறபடியால் அவர்களின் முடிவு பயங்கர மாயிருக்கும். அவர்கள் அழிவுக்குத் தப்பவே முடியாது.

இந்தக் கடைசி நாட்களில் மனிதரில் யாரும் தங்கள் முடிவு பற்றி சிந்திப்ப தில்லை. துணிந்து எல்லாவித தீமையானக் காரியங்களையும் செய்கிறார்கள். தேவ ஜனங்களாகிய நாம் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாய் நமது முடிவு எப்படியிருக்கவேண்டும் என்று அறிந்து அதற்கு ஏற்றபடி நமது ஜீவியத்தைக் காத்துக்கொள்வோம் என்றால் நாம் பாக்கியவான்களாய் இருப்போம். செயல்படுவோமா?

D. ஆட்சி செய்ய ஞானம் தேவை

"உங்களுக்கு அதிபதிகளை ஏற்படுத்தும்பொருட்டு, உங்கள் கோத்திரங்களில் ஞானமும், விவேகமும் அறிவும் உள்ளவர்கள் என்று பேர் பெற்ற மனிதரைத் தெரிந்து கொள்ளுங்கள் என்று சொன்னேன்.... ஆகையால் நான் ஞானமும், அறிவுமுள்ள மனிதராகிய உங்கள் கோத்திரங்களின் வம்சபதிகளைத் தெரிந்து கொண்டு, அவர்கள் உங்களுக்குத் தலைவராயிருக்கும்படி.....ஏற்படுத்தி வைத்தேன்" உபா.1:13,15.

"ஆகையால் விவேகமும் ஞானமுள்ள ஒரு மனுஷனைத் தேடி, அவனை எகிப்து தேசத்துக்கு அதிகாரியாகப் பார்வோன் ஏற்படுத்துவாராக... அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி: தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ என்றான்.பின்பு, பார்வோன் யோசேப்பை நோக்கி : தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும்

ஞானமுள்ளவன் வேறொருவனும் இல்லை" ஆதி.41:33,38,39.

இன்று ஜனங்களை அரசாட்சி செய்ய மனித ஞானமும், விவேகமுடைய மனிதர்களை தலைவர்களாக ஏற்படுத்துகிறார்கள். இவர்கள் தங்கள் ஆட்சியில் உள்ள ஜனங்களுக்கு தீமையல்லாது நன்மை செய்ய அறியாதவர் களாயிருக்கிறார்கள். ஆனால் ஆதி நாட்களில் தேசத்தை பரிபாலனம் செய்ய தேவ ஆவியையும், தேவ ஞானத்தையும், விவேகத்தையும் பெற்ற மனிதர்களை ஆட்சி செய்ய தலைவர்களாக ஏற்படுத்தினார்கள். இவர்கள் தேவ ஆவியினாலே தேவனின் வெளிப்படுத்துதல்களைப் பெற்று தங்கள் தேசத்துக்கு வரப்போகும் அழிவிலிருந்து தங்கள் தேசத்தை எவ்விதம் காப்பது என்பதை அறிந்து செயல்பட்டார்கள்.

இவ்விதம் ஏற்படுத்தப்பட்ட ஆட்சித்தலைவர்கள் தங்கள் ஆட்சியில் நடக்கும் எல்லாக் காரியங்களையும் நன்கு அறிந்தவர்களாய் இருந்தார்கள். தேசத்தில் நடக்கிறதையெல்லாம் அறிய என் ஆண்டவனுடைய ஞானம், தேவ தூதனுடைய ஞானத்தைப்போல் இருக்கிறது என்று *II சாமு.14:20*-ல் தெக்கோவா ஊரின் புத்தியுள்ள ஸ்திரீ தாவீது ராஜாவைப் பற்றிக் கூறினாள். இன்று நமது ஆட்சித் தலைவர்கள் தங்கள் தேசத்தில் நடக்கும் எல்லா காரியங்களையும் அறிந்து கொள்ளும் தேவ ஆவியும், தேவ ஞானமும் உடையவர்களாய் இருந்தால் இன்று நமது சமுதாயங்களில் நடக்கும் ஜாதிக்கலவரங்கள் மற்றும் தீமையானக் காரியங்கள் யாவும் இல்லாமல் போய்விடுமே!

அன்று சாலமோன் ராஜா கர்த்தரை நோக்கி உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை, தீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும் (*I இராஜா.3:9*) என்று ஜெபித்தான். தேவன் அவனுக்கு ஞானத்தையும், உணர்வையும், ஐசுவரியத்தையும், மகிமையையும் கொடுத்தார். அவன் நியாயம் விசாரிக்கும் விதத்திலிருந்து சாலமோனுக்கு நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளிய ஞானம் உண்டென்று கண்டு அவனுக்குப் பயந்திருந்தார்கள். *(I இராஜா 3:28*) என்று கூறப் பட்டுள்ளது.

இன்று நமது ஆட்சித்தலைவர்கள் பற்றி நமது ஜனங்கள் சொல்வது என்ன ? லஞ்சம் கொடுத்து அதின்மூலம் எதையும் செய்துவிடலாம் என்று தானே சொல்கிறார்கள். நமது ஆட்சித்தலைவர்கள் லஞ்சத்தினால் விலைக்கு வாங்கக்கூடிய அளவுக்கு அவர்கள் மிகவும் கீழ்த்தரமானவர்களாகத் தானே இருக்கிறார்கள். நமது ஆட்சித்தலைவர்களைக் குறித்ததான பயம் பொது ஜனங்களில் யாருக்காவது இருக்கிறதா? சிறிதளவும் இல்லையே ! நமது ஆட்சித்தலைவர்களைக் குறித்து மக்கள் எல்லாருமே மிகவும் கேவலமாகத் தானே எண்ணுகிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள் ! இன்றைய ஆட்சித் தலைவர்கள் பரிதானப்பிரியரும், தீமை செய்ய துணிகரம் கொண்டவர் களும், தெய்வ பயம் என்பது சிறிதளவும் இல்லாதவர்களுமாகத்தானே இருக்கிறார்கள். நமது தலைவர்களும் தேவ ஞானத்தையுடையவர்களாக, தெய்வ பயத்தோடு இருந்து, ஜனங்களுக்கு நன்மை செய்கிறவர்களாயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

E. ஆலயங்கட்ட தேவ ஞானம் வேண்டும்

"உங்களில் ஞான இருதயமுள்ள அனைவரும் வந்து கர்த்தர் கட்டளையிட்டவைகளையெல்லாம் செய்வார்களாக" யாத்.35:10.

ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்குவதற்கு ஞான இருதயம் உடையவர்கள் மட்டும்தான் அழைக்கப்பட்டனர். ஏனெனில் ஞானத்தை யுடையவர்கள்தான் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை யுடையவர்களாக கர்த்தர் காண்பித்த மாதிரியின்படியே சிறிதளவும் வித்தியாசம் இல்லாதபடி ஆசரிப்புக்கூடாரத்தை உண்டாக்க முடியும். மற்றபடி மனித ஞானத்தோடு செயல்படுகிறவர்களாக இருந்தால் தங்கள் இஷ்டம்போல் தேவன் காட்டிய மாதிரியின்படியல்லாது தங்கள் சொந்த யுக்தியின்படியே ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்கியிருந்திருப்பார்கள்.

நம்முடைய சரீரம் தேவனுடைய ஆலயம் என்று *I கொரி.3:16, 6:19*-ல் கூறப்பட்டுள்ளது. நாம் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக நமது சரீரமாகிய ஆலயத்தைக் கட்ட அறிந்திருக்க வேண்டும். நாம் எவ்விதம் நமது ஜீவியமாகிய ஆலயத்தைக்கட்டுவது என்பது பற்றி வேத வசனத்தின் மூலம் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

ஒரு ஆலயம் சரியான முறையில் கட்டப்பட அதற்கு சரியான அஸ்திபாரம் வேண்டும். பின் அந்த அஸ்திபாரத்தின்மேல் தேவனுடைய ஆலயமாகிய நாம் கட்டப்பட வேண்டும். நமது ஜீவியமாகிய ஆலயம் கட்டப்பட நமக்கு அஸ்திபாரம் உள்ளக் காரியங்கள் எவை என்று பார்ப்போம்.

1. இயேசுவே அஸ்திபாரம்

"போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" I கொரி.3:11.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமது அஸ்திபாரமாகப் போடப்பட்டுள்ளார் என்று காண்கிறோம். அதாவது இயேசு கிறிஸ்துவின் உபதேசமானது நமக்கு அஸ்திபாரமாகவுள்ளது என்று அறியலாம். அவருடைய உபதேசத்தின்படிதான் நமது ஜீவியமாகிய ஆலயம் கட்டப்பட வேண்டும்.

2. அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளாகிய அஸ்திபாரம்

"அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள் ; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்" எபே.2:20.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நமது சரீரமாகிய தேவனுடைய ஆலயமானது அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் ஆகியோருடைய உபதேசமாகிய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டதாக இருக்க வேண்டும். நமது ஆண்டவராகிய இயேசு மூலைக்கல்லாயிருக்கிறார் என்ற ஊழியர்களின் உபதேசமானது, ஆண்டவராகிய இயேசுவின் உபதேசத்தின் அடிப்படையில்

இருக்க வேண்டும் என்பதாகும். இன்று அநேக தேவ ஊழியர்கள் தங்கள் சபையின் கொள்கைகளை உபதேசங்களாகப் போதிக்கிறார்களேயொழிய, கர்த்தராகிய இயேசுவின் உபதேசங்களை அல்ல.

இப்படிப்பட்ட தவறான உபதேசங்களின் அடிப்படையில் கட்டப்படுகிறவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறார்கள் என்று கீழ்க்கண்ட வேத வசனம் தெளிவுபடுத்துகிறது. *"நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்" மத்.7:26.* இவ்விதம் மணலாகிய மனித உபதேசத்தின்மீது கட்டப்படுகிறவர்கள் பெருமழை, பெரு வெள்ளமாகிய கஷ்டங்கள், உபத்திரவங்கள், போராட்டங்கள் வரும்பொழுது தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையிலிருந்து விழுந்துபோய் விடுகிறார்கள் என்று *மத்.7:27* -ல் கூறப்பட்டுள்ளது.

சரியான இயேசு கிறிஸ்துவின் உபதேச அடிப்படையில் போதிக்கிற தேவ ஊழியக்காரர்களின் உபதேசத்திற்கு ஏற்றவாறு தங்கள் கிறிஸ்தவ ஜீவியமாகிய ஆலயத்தைக் கட்டிக் கொள்கிறவர்கள், கற்பாறையின்மேல் ஆழமாய்த் தோண்டி, அஸ்திபாரம் போட்டு, வீடு கட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்று *லூக்.6:48, மத்.7:24* முதலிய வசனங்களில் கூறப்பட்டுள்ளது. இவ்விதமானவர்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் எவ்வளவுதான் கஷ்டங்கள், உபத்திரவங்கள், போராட்டங்கள், நிந்தைகள், அவமானங்கள் வந்தாலும் தாங்கள் ஏற்றுக்கொண்ட ஆவிக்குரிய வாழ்க்கையிலிருந்து சிறிதளவும் பின்வாங்காமல் கற்பாறைபோல் மிகவும் உறுதியாக நிற்பார்கள். எந்த ஒரு சூழ்நிலையிலும் பின்வாங்கவே மாட்டார்கள்.

நமது கிறிஸ்தவ ஜீவியம் எவ்விதம் அமைந்திருக்க வேண்டும் என்று கீழ்க்கண்ட வேத வசனம் நன்கு விளக்குகிறது.

"நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துஇயேசுவை ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து கொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக" கொலோ.2:6,7.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தின்படி நமது கிறிஸ்தவ ஜீவியம் எவ்விதம் அமைந்திருக்கவேண்டும் என்று சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

a) கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது

நமது கிறிஸ்தவ வாழ்க்கை என்பது நாம் ஆண்டவராகிய இயேசுவை நமது இரட்சகராகவும், ஆண்டவராகவும் நமது இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும்போது ஆரம்பமாகிறது. *யோவான் 1:12*-ல் கூறப்பட்டுள்ளதுபோல ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தின்மேல் விசுவாசமுடையவர்களாய் அவரை நம் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும் பொழுது நாம்

அவருடைய பிள்ளைகளாகும்படியான அதிகாரத்தை அவர் நமக்குக் கொடுக்கிறார். ஆண்டவராகிய இயேசு நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்று *யோவான் 8:12* -ல் கூறியுள்ளார். எவ்விதம் இருளை ஒரு இடத்தில் ஒளி வரும்பொழுது, அங்குள்ள இருள் தானாகவே மறைந்து விடுகிறதோ அதுபோலவே ஒளியாகிய இயேசு நமது இருதயத்திற்குள் வரும்பொழுது இருளாகிய பாவமானக் காரியங்கள் நம்மை விட்டு மறைந்து விடுகிறது. ஆண்டவராகிய இயேசுவை நாம் இருதயத்தில் ஏற்றுக்கொள்வது என்றால் என்ன? என்று சிறிது விளக்கமாக அறிந்த கொள்ளப் பார்ப்போம்.

i) ஏற்றுக்கொள்வதும் மனந்திரும்புவதும்

நாம் ஆண்டவராகிய இயேசுவை நம் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும் அனுபவத்தை நாம் மனந்திரும்பும் அனுபவத்தோடு சேர்த்துக்கூற வேண்டும். அதாவது நாம் நமது பாவ ஜீவியத்தை விட்டுவிட்டு தேவனிடமாக மனந்திரும்பி அவரை நம் இரட்சகராகவும், ஆண்டவராகவும் நம் இருதயத்தில் ஏற்றுக்கொள்வது மிகவும் அவசியமாகவுள்ளது.

ii) ஏற்றுக்கொள்வதும் – மறுபடியும் பிறப்பதும்

நாம் நம் பாவ ஜீவியத்தை விட்டு தேவனிடமாக மனந்திரும்பி அவரை விசுவாசத்தோடும் நம் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும் அனுபவத்தை மறுபடியும் பிறப்பது என்று கூறப்பட்டுள்ளது. (*யோ.3:3* பார்க்கவும்) மறுபடியும் பிறப்பது என்பது எவ்விதம் ஒரு குழந்தை தன் தாயின் வயிற்றிற்குள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை இருந்து பின் முற்றிலும் வேறுபட்ட சூழ்நிலைக்குள் வருவதை நாம் பிறப்பது என்று கூறுகிறோமோ அதுபோலவே பாவத்திற்குள்ளாக ஜீவிக்கிற ஒரு மனிதன் தன் பாவ ஜீவியத்தை விட்டு விட்டு தேவனிடமாக மனந்திரும்பி அவரை தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு இவ்விதம் ஒரு பாவமில்லாத பரிசுத்தமான வாழ்க்கை முறைக்குள் வரும் அனுபவத்தை ஆண்டவராகிய இயேசு மறுபடியும் பிறப்பது என்று *யோவான் 3:3* -ல் கூறியுள்ளார். இந்த மறுபடியும் பிறக்கும் அனுபவம் நாம் ஆண்டவராகிய இயேசுவை நமது இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும் பொழுது தான் நடைபெறுகிறது என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

iii) ஏற்றுக்கொள்வது – விடுதலை

ஆண்டவராகிய இயேசுவை நம் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும் பொழுது, அவர் நம் இருதயத்தில் வருகிறார். எவ்விதம் இருட்டான ஒரு இடத்தில் வெளிச்சம் வரும்பொழுது அவ்விடத்திலுள்ள இருள் தானாகவே மறைந்து விடுகிறதோ அதுபோலவே ஆண்டவராகிய இயேசு நமது இருதயத்தில் வரும்பொழுது, நம்மில் காணப்படும் பாவ சுபாவங்கள் நீங்கிவிடுகிறது. இவ்விதம் நாம் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து *யோவான் 8:36*-ல் கூறப்பட்டுள்ளதுபோல் ஆண்டவராகிய இயேசுவினால் விடுதலை பெறுகிறோம்.

இன்றைய கிறிஸ்தவர்களில் அநேகர் மேற்கூறப்பட்டுள்ளதுபோல் தங்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசுவை தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டவர்களாய், மறுபடியும் பிறப்பது, விடுதலை போன்ற அனுபவங்களையுடையவர்களாய் ஒரு உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கைக்குள் வருவதை விட்டுவிட்டு, தாங்கள் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்ததினால் தாங்களும் நூறு வருஷக் கிறிஸ்தவர்கள், இருநூறு வருஷக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லி பெருமைபட்டுக்கொள்கிறார்கள். இவ்விதம் தவறாக பெருமைப்படுவதினால் அவர்களுக்கு என்ன இலாபம் என்று அறியாதிருக்கிறார்கள். தங்கள் ஜீவியத்தில் மேற்கூறப்பட்டுள்ளதுபோல் மாற்றங்கள் இல்லாது அவர்கள் பரலோக ராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது என்று அவர்கள் அறியவேண்டும்.

ஆண்டவராகிய இயேசுவை தங்கள் இருதயத்தில்ஏற்றுக்கொள்வது மட்டுமல்லாது, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதும், காத்திருந்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதும் நம் ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியமாகவுள்ளது என்பதை நாம் அறிய வேண்டும்.

b) அவருக்குள் வேர் கொள்வது

எவ்விதம் ஒரு மரத்தின் வேர் பூமிக்குள் மறைந்திருந்து, மண்ணிற்குள் ஆழமாகச் சென்று பூமியின் சாரத்தை உறிஞ்சி, மரத்தின் மேல்பாகத்திற்கு அனுப்புவதினால் மரம் செழிப்பாக இருப்பதுபோல, வேதம் வாசிப்பது, ஜெபம் செய்வது, நம்முடைய எல்லாச் சூழ்நிலைகளிலும் கர்த்தரைத் துதிப்பதும், ஸ்தோத்தரிப்பதும் போன்றக் காரியங்கள் நம்மில் அதிகமாகக் காணப்படும் என்றால் இவைகளின்மூலம் நாம் கிறிஸ்துவுக்குள் ஆழமாக வேர்கொள்கிற வர்களாக நமது ஆவிக்குரிய வாழ்க்கையை செழிப்புடையதாய் ஆக்கிக்கொள்ள முடியும்.

c) இயேசுவின் மேல் கட்டப்படுவது

இயேசுவின்மேல் கட்டப்படுவது என்பது ஆண்டவராகிய இயேசுவின் உபதேசத்திற்கு ஏற்றவாறு நமது ஜீவியத்தை அமைத்துக்கொள்வது என்பதாகும். அப்படியென்றால் நாம் மனித உபதேசத்திற்கு இடங்கொடாமல் வேத வசனத்தின் அடிப்படையில் மட்டும் நமது கிறிஸ்தவ வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

d) அவருக்குள் நடப்பது

அவருக்குள் நடப்பது என்பது ஆண்டவராகிய இயேசுவை நமது தலைவராக்கிக் கொண்டு அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிப்பதாகும். இன்று தேவ ஜனங்களில் அநேகர் கர்த்தராகிய இயேசுவின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பதை விட்டு விட்டு தங்கள் இஷ்டம்போல் ஜீவிக்கிறார்கள். இது மிகவும் ஆபத்தானது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

e) விசுவாசத்தில் உறுதிப்படுவது

விசுவாசத்தில் உறுதிப்படுவது என்பது, நமக்கு உபத்திரவங்கள், பாடுகள். வேதனைகள், சோதனைகள் வரும்பொழுது நாம் கொண்டுள்ள விசுவாச நிலையிலிருந்து சிறிதளவும் பின்வாங்காமல் அதில் மிகவும் உறுதியாக இருப்பதைக் குறிக்கும். இன்று அநேகர் தங்கள் துவக்க நாட்களில் இவ்வித விசுவாச வாழ்க்கைக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். ஆனால் தங்கள் விசுவாச வாழ்க்கையில் கொஞ்சம் கஷ்டங்கள், சோதனைகள், பாடுகள் வந்தவுடன், உடனே ஐயோ ! இந்த விசுவாச வாழ்க்கை நமக்கு வேண்டாம் என்று தங்கள் விசுவாச வாழ்க்கையிலிருந்து பின்வாங்கி விடுகிறார்கள். இதினால் அவர்கள் ஆரம்பத்தில் கொண்டிருந்த விசுவாச வாழ்க்கையானது அவர்களுக்குப் பயனற்றதாகி விடுகிறது. ஆகவே நமக்கு வரும் கஷ்டங்கள், உபத்திரவங்கள் இவைகளில் நமது விசுவாச ஜீவியத்தில் உறுதியாக நிற்க அறிந்திருக்க வேண்டும்.

f) ஸ்தோத்திரத்தோடு அதில் (விசுவாசத்தில்) பெருகுவது

நமது விசுவாச ஜீவியத்தில் நாம் உறுதிப்படுவது மட்டும் அல்லாது நமக்கு வரும் உபத்திரவங்கள், பாடுகள்,சோதனைகளுக்காக நாம் கர்த்தரை ஸ்தோத்த ரிப்பதின்மூலம் நாம் நமது விசுவாச ஜீவியத்தில் பெருகும் அனுபவத்திற்குள் வருகிறோம். நமக்குக் கஷ்டங்களும், உபத்திரவங்களும் வரும்பொழுது நாம் அவைகளைக் குறித்து முறுமுறுக்காமல் இவ்வித அனுபவங்களைக் கர்த்தர் நமது வாழ்க்கையில் அனுமதிப்பதற்காக நாம் கர்த்தரை ஸ்தோத்தரிக்க வேண்டும். இன்று நமது கிறிஸ்தவ வாழ்க்கையானது ஏதோ பெயருக்காக கிறிஸ்தவர்களாக வாழ்வதுபோல் வாழ்கிறோமேயொழிய நமது விசுவாச ஜீவியத்தில் பெருகுகிறவர்களாக ஜீவிப்பதில்லை.

இந்தக் கடைசி நாட்களில் ஜீவிக்கிற நாம் கிறிஸ்தவ ஜீவியத்தில் மேற்கூறப் பட்டுள்ள அனுபவங்களையுடையவர்களாய் நமக்குக் கஷ்டங்கள், உபத்திரவங்கள், சோதனைகள் வரும்பொழுது பின்வாங்கிப் போகாதபடி அவ்வித அனுபவங்களுக் காகக் கர்த்தரை ஸ்தோத்தரித்து, இவ்விதமாக நமது விசுவாச வாழ்க்கையில் பெருகுகிற அனுபவத்திற்குள் வர அறிந்திருக்க வேண்டும். கர்த்தர் தாமே கிருபை செய்வாராக!

F. கர்த்தரை அறிய நமக்கு ஞானம் வேண்டும்

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டு மென்றும்,...."எபே.1:17.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நாம் தேவனை அறிந்துகொள்ள நமக்கு ஞானத்தையும், தெளிவையும் அளிக்கிற ஆவியாகிய பரிசுத்த ஆவியைத் தந்தருள வேண்டும் என்று கர்த்தருடைய ஊழியக்காரனாகிய அப்போஸ்தலனாகிய பவுல் தேவ ஜனங்களுக்காக தேவனை நோக்கி வேண்டிக்கொள்வதைப் பார்க்கிறோம்.

தேவனை அறிவது என்றால், தேவன் யார்? அவர் எத்தன்மையுடையவர்? அவர் என்ன செய்கிறார்? அவரை அறிந்து கொள்வதின் முக்கியத்துவம் என்ன? என்று அறிந்து, அதற்கு ஏற்றவாறு நமது ஜீவியத்தை அமைத்துக் கொள்வதாகும். மேற்கூறப்பட்டுள்ள வேத வசனங்களைக் கொண்டு சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

1. அவர் யார் என்று அறிவது

தேவன் யார் என்பதை கீழ்க்கண்ட வேத வசனங்கள் நமக்கு நன்கு விளக்கும்.

a) கர்த்தரே தேவன் வேறே தேவன் இல்லையென்று அறிவது

"கர்த்தரே தேவன்,அவரையல்லாமல் வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும்படிக்கு, இது உனக்குக் காட்டப்பட்டது"உபா.4:35,39 I இராஜா8:59, சங்கீதம் 100:31, யோவேல் 2:27.

b) தேவன் ஒருவரே மெய்யான தேவன் என்று அறிவது

"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும்....அறிவதே நித்திய ஜீவன்" யோவான் 17:3.

c) தேவன் ஆதிமுதல் இருக்கிறவர் என்று அறிவது

"பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதியிருக்கிறேன்...." I யோவான் 2:14.

d) தேவன் பெரியவர் என்றும் எல்லாத் தேவர்களுக்கும் மேலானவர் என்றும் அறிவது

"கர்த்தர் பெரியவர் என்றும், நம்முடைய ஆண்டவர் எல்லா தேவர்களுக்கும் மேலானவர் என்றும் நான் அறிவேன்" சங்.135:5, யாத்.18:11.

e) அவர் நமது தேவன் என்று அறிவது

"கர்த்தராகிய நான் உங்கள் தேவன் என்று நீங்கள் அறியும்படிக்கு ...."உபா.29:5.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து நாம் அறிவது யாதெனில், நாம் ஆராதிக்கிற தேவன் ஒருவரே தேவன் என்றும், அவர்தான் மெய்யான தேவன் என்றும், அவரே ஆதிமுதல் இருக்கிறவர் என்றும்,அவரே பெரியவர் என்றும், எல்லா தேவர்களுக்கும் மேலானவர் என்றும் நாம் அறிவது மட்டுமல்லாமல் அவரே நமது தேவன் என்றும் நாம் அறிய வேண்டும். இவ்விதம் நமது தேவனைப்பற்றி அறிந்து கொள்ள மெய்யாகவே நமக்கு தேவ ஞானம் மிகவும் அவசியம்.

2. அவர் எத்தன்மையுடையவர் என்று அறிவது

"உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில்

அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறை மட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் என்றும், தம்மைப் பகைக்கிறவர்களுக்கு பிரத்தியட்சமாய்ப் பதிலளித்து, அவர்களை அழிப்பார் என்றும், தம்மைப் பகைக்கிறவனுக்கு அவர் தாமதியாமல் பிரத்தியட்சமாய்ப் பதிலளிப்பார் என்றும் நீ அறியக்கடவாய்" உபா.7:9,10.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் யார் யார் கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொள்கிறார்களோ அவர்களுக்கு தமது உடன்படிக்கையையும் தயவையும் காக்கிறவர் என்றும், அதே நேரத்தில் அவரைப் பகைக்கிறவர்களுக்கு பிரத்தியட்சமாய்ப் பதிலளித்து அவர்களை அழிப்பார் என்றும் நாம் அறிய வேண்டும். இந்தக் காரியத்தை நாம் சரியாக அறிந்து கொள்வோம் என்றால் கர்த்தருக்குப் பயப்படும் பயம் நம்மில் தானாகவே உருவாகிவிடும். நாம் தேவனின் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களாகி விடுவோம்.

3. நாம் தேவனை சரியாக அறிந்துகொள்ளும் பொழுது நம்மில் ஏற்படும் மாறுதல்

"என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்" பிலி.3:8.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பு பட்டணத்தில் உள்ள சபையாருக்கு எழுதும்பொழுது தான் ஆண்டவராகிய இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எண்ணப்பட்ட எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணுவதாகக் கூறுகிறார். அதாவது ஆண்டவராகிய இயேசு யார்? அவர் எத்தன்மையுடையவர்? என்று அறிந்துகொள்ளுகின்ற அறிவின் மேன்மைக்காக தன் வாழ்க்கையில் மேன்மையாக எண்ணப்பட்ட எல்லாக் காரியங்களையும் கர்த்தருக்காக நஷ்டமென்று எண்ணி அவைகளையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு கர்த்தராகிய இயேசுவை முழுமையாக ஆதாயப்படுத்திக் கொண்டதாகக் கூறுகிறார்.

இன்று அநேகர் தங்கள் வாழ்க்கையில் கர்த்தராகிய இயேசுவை யார் என்றும், அவர் எத்தன்மையுடையவர் என்றும் நன்கு அறிந்துகொண்ட பின்பும், தங்களுக்கு மேன்மையாக உள்ள தங்களின் கல்விப் பெருமை, ஜாதிப்பெருமை, குலப்பெருமை, ஐசுவரியத்தின் பெருமை ஆகிய இவைகளை நஷ்டமென்று விட்டுவிட மனதில்லாததினால் அவர்களால் தேவனை முழுமையாக ஆதாயப்படுத்திக் கொள்ள முடியவில்லை. என்ன பரிதாபம் பாருங்கள் !

4. கர்த்தராகிய இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விடுகிறவர்கள் செய்யவேண்டியது

"அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாகிலும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்கு

தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் ; குப்பையுமாக எண்ணுகிறேன்" பிலி.3:10,11

நாம் நமது தேவனைப்பற்றி சரியாக அறிந்து கொள்ளும்பொழுது அவரை அறிகிற அறிவின் மேன்மைக்காக நமது வாழ்க்கையில் மேன்மையாகத் தோன்றுகிற எல்லாக் காரியங்களையும் விட்டுவிடுவது மட்டுமல்லாது, அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகும் அனுபவமாகிய ஞானஸ்நானத்தை எடுப்பதும், அவருடைய உயிர்த்தெழுதலில் பங்கு கொள்ள நாம் தகுதியுள்ளவர்களாகும்படிக்கு நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவதும் நமக்கு மிகவும் அவசியமாகவுள்ளது. இவ்விதம் கிறிஸ்துவோடு மரித்து, அவரோடு எழுந்திருக்கும் அனுபவத்தைக் குறிக்கும் சில வேத வசனங்களையும் நாம் அறிந்து கொள்வது நல்லது.

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" ரோமர் 6:3. "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்." ரோமர் 8:11.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ளது போல் நமது இரட்சகராகிய இயேசுவின் மரணத்திற்குள்ளாகும் அனுபவமாகிய ஞானஸ்நானத்தை எடுப்பதற்கும், அவருடைய உயிர்த்தெழுதலில் பங்குகொள்ள தகுதியுள்ளவர் களாகும்படிக்கு பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதற்கும் நமது வாழ்க்கையில் நமக்கு மேன்மையாக உள்ள எல்லாக் காரியங்களையும் நஷ்டமென்று விடவும் குப்பையாக அவைகளை எண்ணவும் வேண்டியதாகவுள்ளது.

G. கர்த்தரின் சித்தத்தை அறிகிற அறிவினால் நிரப்பப்பட நமக்கு ஞானம் வேண்டும்

"நீங்கள் எல்லா ஞானத்தோடும்,....அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்," கொலோ.1:9.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நாம் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் நமது வாழ்க்கையில் கர்த்தரின் சித்தம் என்ன என்பதை அறிந்து கொள்வதற்கான அறிவினால் நிரப்பப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால் நமது வாழ்க்கையில் கர்த்தரின் சித்தம் என்ன என்பதை அறிந்து கொள்ள நமக்கு தேவ ஞானம் மிகவும் அவசியம் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

தேவனுடைய சித்தம் என்றால் என்ன ? என்று நாம் கேட்கலாம். தேவ சித்தம் என்பது தேவன் நம்மைக் குறித்துக் கொண்டுள்ளதான திட்டம் (Plan) நோக்கம், விருப்பம் என்ன என்பதைக் குறிப்பதாகவுள்ளது. தமிழில் ஒரு பழமொழி உண்டு. அதாவது "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக,

மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்பதாகும். அதாவது இந்த உலகில் நாம் காண்கிறதான சூரியனோ, சந்திரனோ, நட்சத்திரமோ, சமுத்திரமோ, நதியோ மற்றும் பொன்னோ, வெள்ளியோ இவை யாவும் மனிதனின் உபயோகத்திற்கென்று மட்டும் தேவனால் உண்டாக்கப் பட்டுள்ளது. ஆனால் தேவன் மனிதனை விசேஷித்தபிரகாரமாக ஒரு தெளிவான திட்டத்தோடு மனிதனை சிருஷ்டித்துள்ளார்.

ஆகவே, தேவன் நமது வாழ்க்கையைக் குறித்துக் கொண்டுள்ளதான தேவ சித்தம் என்ன என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். இந்த உலகில் உள்ள எல்லா மனிதரையுங்குறித்து தேவன் ஒரு திட்டமும், தெளிவுமான சித்தம் உடையவராக இருக்கிறார் என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும். ஆகவே தேவன் நம்மைக் குறித்து கொண்டுள்ளதான தேவ சித்தம் என்ன என்பதை நாம் தெளிவாக அறிந்து செயல்படவேண்டும்.

இதற்கு முந்திய பாகத்தில் கர்த்தரை அறிகிற அறிவு என்றால் என்ன என்றும், கர்த்தர் யார் என்றும், அவர் எத்தன்மையுடையவர் என்றும் அறிந்து அவரின் மரணத்திற்குள்ளாகும் அனுபவமாகிய ஞானஸ்நானத்தை எடுப்பது எப்படியும் மரித்தோரிலிருந்து எழுந்திருப்பதற்குத் தகுதியுள்ளவனாக ஆகும்படிக்கு தன் வாழ்க்கையில் தனக்கு மேன்மையாகக் காணப்படும் எல்லாக் காரியங்களையும் நஷ்டமென்று விட்டுவிடுவதும், அவைகளைக் குப்பையுமாக எண்ணுவதாகவும் *பிலி.3:10*-ல் பவுல் அப்போஸ்தலன் தன் வாழ்க்கையைக் குறித்துக் கொண்டுள்ளதான தேவ சித்தம் என்ன என்பதை நாம் சரியாக அறிந்து, அதை நாம் பூரணமாக செய்து முடித்தவர்களாகக் காணப்பட முயற்சி செய்ய வேண்டும். நமது வாழ்க்கையில் தேவ சித்தத்தை அறிந்து கொள்ள, அதைச் செய்து முடித்தவர்களாகக் காணப்பட நாம் என்ன செய்ய வேண்டும்? என்று வேத வசனங்களின் மூலமாக சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

தேவ சித்தம் குறித்து நாம் செய்ய வேண்டியது

1. ஜெபிப்பது

"உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" மத்.6:10, லூக்.11:2.

"ஆண்டவரே நீர் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்" அப்.9:6.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் ஆண்டவராகிய இயேசு, *சீஷர்*களுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்தபொழுது, பரலோகத்தில் தேவ சித்தம் செய்யப்படுவதுபோல் பூமியிலேயும் தேவ சித்தம் செய்யப்பட வேண்டும் என்று ஜெபிக்க வேண்டும் என்று *சீஷர்*களுக்குக் கற்றுக் கொடுத்தார். இந்த பூமியில் தேவ சித்தம் செய்யப்படுவது என்பது இந்த உலகின் மனிதர் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் தேவ சித்தம் பூரணமாக செய்யப்படுவதைக் குறிப்பதாகவுள்ளது. இன்று எங்கு பார்த்தாலும்

கொலைகளும், கொள்ளைகளும், இன்னும் எல்லாவிதமான தீமையானக் காரியங்களும் தலைவிரித்தாடி ஜனங்களைக் கலக்கத்திற்குள்ளாக ஆக்குவதாக உள்ளதே ! இந்த நாட்களில் தேவ சித்தமா இந்த உலகில் செய்யப்படுகிறது. பிசாசின் சித்தம் அல்லவா இந்த உலகில் செய்யப்படுவதாகவுள்ளது.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இரண்டாவது வசனத்தில் சவுல் என்பவன் தேவனுக்கு விரோதமாக செயல்படுகிறவனாக தேவ ஜனங்களை துன்புறுத்தும் நோக்கத்தோடு தமஸ்கு என்ற பட்டணத்திற்குச் சென்று கொண்டிருந்தபொழுது, மத்தியான வேளையில் தேவனால் சந்திக்கப்பட்டவனாக, தன் பார்வையை இழந்து, தரையிலே விழுந்துகிடந்தபொழுது *கர்த்தராகிய இயேசுவே சவுலிடம் நேரிடையாக பேசுகிறவராக சவுலே, சவுலே நீ ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்? என்றார். அதற்கு சவுல் ஆண்டவரே நீர் யார்? என்று கேட்டபொழுது, அவர் மாறுத்தரமாக : நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே ! முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அப்.9:4,5.*

இதுவரை தேவ ஜனங்களை துன்புறுத்துவதுதான் தேவ சித்தம் என்று எண்ணி செயல்பட்ட சவுலிடம் ஆண்டவராகிய இயேசு நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்? என்று கேட்கிறார். இன்றும் அநேகர் கிறிஸ்தவர்கள் என்று பேர் வைத்துக்கொண்டு தங்கள் இஷ்டம்போல் பாவத்திற்குள்ளாக ஜீவித்துக்கொண்டு தேவனை உண்மையாய்ப் பின்பற்றுகிற ஜனங்களை மிகவும் கொடூரமாக துன்புறுத்கிறார்கள். இவர்களின் இந்த செய்கையானது தேவனையே துன்புறுத்துவதாக உள்ளது என்பதையும், இதுவே அவர்களுக்கு முள்ளில் உதைப்பதுபோல் தங்களுக்கே வேதனையை உண்டாக்கிக் கொள்வதாக அமையும் என்பதையும் அறியாமலிருக்கிறார்கள். ஆனால் இங்கு சவுல் தன் தவறை உணர்ந்து ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? என்று கேட்கிறான். இன்று நாமும் நம் வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் வேதனைகளுக்குக் காரணம் நாம் தேவனுக்கு சித்தமில்லா தவைகளை செய்வதினால்தான் என்பதை உணர்ந்து, நமது தவறான ஜீவிய முறைகளை விட்டுவிட்டு தேவனிடமாக திரும்பினவர்களாக தேவனே! என் வாழ்க்கையைக் குறித்ததான உமது சித்தம் என்ன என்று கேட்போமா? நிச்சயமாக தேவன் நம்மைக் குறித்ததான தமது சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துவார். நாம் சவுலைப்போல் உடனே கீழ்ப்படிய மனமுடைய வர்களாயிருக்க வேண்டும்.

2. தேவ சித்தத்தை அறிய நாம் செய்ய வேண்டியது

"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" ரோமர்.12:2.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தேவனின் பார்வையில் நன்மையும் பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறிய அதாவது எது தேவ சித்தம், எது தேவ சித்தம் அல்ல என்று சரியாக அறிந்து கொள்வதற்கு நமது மனம் மறுரூபமாக வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதில் மறுரூபமாவது என்பது நமது ஜீவிய மாற்றத்தைக் குறிப்பதாகும். ஆகவே நாம் பூரணமாக தேவ சித்தம் செய்ய வேண்டும் என்றால் நம்மில் ஒரு ஜீவிய மாற்றம் ஏற்படும்படியாக நமது மனது புதிதாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகவுள்ளது. அதாவது நமது பழைய எண்ணங்கள், சிந்தனைகள் எல்லாம் ஒழிந்து புதிய எண்ணங்கள் சிந்தனைகள் உருவாக வேண்டும்.

3. தேவ சித்தத்தை உணர்வது

"கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்" எபே.5:17.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தேவ சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆலோசனைக் கூறப்பட்டுள்ளது. உணர்வு என்பது நமது சரீரத்திற்கு உள்ளாக இருந்து வரவேண்டிய ஒரு காரியமாகும். செத்த ஒரு மனிதனில் எந்தவித உணர்ச்சியும் இருக்காது. அதுபோலவே பாவத்தில் மரித்த நிலையில் இருக்கும் ஒரு மனிதன் தேவ சித்தத்தை உணர்ந்து கொள்ள முடியாது. ஆனால் வேத வசனம் கூறுகிறபடி *"உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்" சங்கீதம் 119:130.* வேத வசனத்தை வாசித்து தியானிக்க ஆரம்பிக்கும் பொழுது அந்த வசனம் நம்மில் கிரியை செய்து நம்மை உணர்வடையச் செய்கிறது. நம் வாழ்க்கையில் நாம் வேத வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அவைகளை வாசித்து, தியானிக்க ஆரம்பிப்போமானால் அது நிச்சயமாகவே நம்மில் ஜீவிய மாற்றத்தை உண்டுபண்ணி நாம் தேவ சித்தத்தை உணரும்படிச் செய்யும்.

4. தேவனுக்கு சித்தமானவைகளில் தேறுவது

"நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும்...." கொலோ.4:12.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நாம் நமது வாழ்க்கையில் தேவனுக்கு சித்தமானக் காரியங்களைச் செய்வதில் நாம் தேறினவர்களாயிருக்க வேண்டும் என்று கூறப் பட்டுள்ளது. தமிழ் வேத புத்தகத்தில், தேறினவர்களாயிருக்க வேண்டும் என்பது ஆங்கில வேத புத்தகத்தில் பூரணமானவர்களாயிருக்க வேண்டும் (Perfect) என்று கூறப்பட்டுள்ளது. அதாவது நாம் தேவனுக்கு சித்தமானக் காரியங்களைச் செய்வதற்கு, தேவனுக்கு சித்தமானவைகள் எவைகள் என்று சரியாக அறிய நாம் அனுதினமும் ஜெபித்து, தேவனுக்குச் சித்தமானவைகளை மட்டும் செய்வதற்காக நமது ஜீவியத்தில் ஒரு மாற்றம் ஏற்படும்படியாக நமது மனது புதிதாவதும், நாம் தேவ சித்தத்தை சரியாக உணர்ந்து கொள்ள அதிகமாக வேத வசனங்களை வாசிப்பதும் நம்மில் காணப்படவேண்டும்.

இவ்விதமாக நாம் நமது வாழ்க்கையில் தேவ சித்தத்தை மட்டும் அனுதினமும் செய்கிறவர்களாக, அதில் படிப்படியாக தேறி தேவ சித்தத்தில் முற்றும் தேறின நிலைக்கு அல்லது தேவ சித்தம் செய்வதில் ஒரு பூரண நிலைக்கு வர நாம் பிரயாசப்பட வேண்டும். செய்வோமா ?

5.தேவனே தம்முடைய சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கைகளையும் நம்மில் உண்டாக்குகிறார்

"தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." பிலி.2:13.

நாம் பூரணமாக நம்மைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கும்பொழுது தேவன் தாமே நம்மில் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். நம் இஷ்டப்படி செயல்படுவதை நாம் விட்டுவிட்டு தேவ சித்தம் ஒன்றை மட்டும் செய்வதில் தேறினவர்களாக நாம் காணப்படும்பொழுது தேவனே நம்மில் தேவனைக் குறித்த காரியங்களில் நமக்கு விருப்பத்தை உண்டாக்கி, முழுவதுமாக அவ்விதம் செயல்படும்படியான செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறார். அப்படியென்றால் நமது வாழ்க்கையில் தேவ சித்தத்துக்கு மாறான எந்த ஒரு காரியமும் நம்மில் சிறிதளவும் காணப்படக்கூடாது. இவ்விதமான ஒரு பூரணமாய் அவரின் சித்தத்தை நம்மில் நடப்பிப்பதற்கு நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்வோமா ? தேவன் தாமே கிருபை செய்வாராக!

H. தேவனின் இருதயத்தை சந்தோஷப்படுத்த நமக்கு ஞானம் வேண்டும்

"என் மகனே, என்னை நிந்திக்கிறவனுக்கு நான் உத்தரவு கொடுக்கத்தக்கதாக, நீ ஞானவானாகி, என் இருதயத்தைச் சந்தோஷப்படுத்து" நீதி.27:11.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தை இரண்டு விதங்களில் விளக்கலாம். 1) பிள்ளைகளின் தவறான வாழ்க்கை முறைகளைப் பார்த்து மற்றவர்கள் பெற்றோரை நிந்திப்பது 2) கிறிஸ்தவர்களின் தவறான வாழ்க்கை முறையைப் பார்த்து உலக ஜனங்கள் தேவனுடைய நாமத்தை நிந்திப்பது. இவைகளைக் குறித்து சிறிது விளக்கமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1. பிள்ளைகளின் தவறான வாழ்க்கை முறையைப் பார்த்து மற்றவர்கள் பெற்றோர்களை நிந்திப்பது

பெரும்பாலுமான விசுவாசக் குடும்பங்களில் பெற்றோர்கள் கர்த்தருக்குள்ளாக, கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு ஜீவிக்கிறவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பிள்ளைகள் முற்றிலும் மாறாக தேவனுக்குப் பயப்படாதவர்களாக, தேவனுக்குப் பிரியமில்லாத வழியில் ஜீவிக்கிறவர்களாக இருக்கிறார்கள். இவர்களின் இந்த தவறான ஜீவிய முறைகளைப் பார்த்து, மற்றவர்கள் ஐயோ, இந்தப் பிள்ளைகளின் பெற்றோர்கள் எவ்வளவு நல்லவர்களாக ஜீவிக்கிறார்கள். ஆனால் இந்தப் பிள்ளைகள் சிறிதளவும்

தெய்வபயம் இல்லாத கொடிய துன்மார்க்கப் பிள்ளைகளாக ஜீவிக்கிறார்களே என்று நமது கிறிஸ்தவ வாழ்க்கை முறையைக் குறித்து நிந்திக்கிறவர்களாக இருக்கிறார்கள். இவ்விதம் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கை முறையைப் பற்றிப் பதில் சொல்ல முடியாதபடி திகைக்கின்றனர். ஆனால் இப்படிப்பட்ட பிள்ளைகள் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக, அதாவது தேவனுக்குப் பயந்து ஜீவிக்கிற நல்ல பிள்ளைகளாக மாறுவார்கள் என்றால் அது அவர்கள் பெற்றோர்களுக்கு எவ்வளவாக சந்தோஷத்தைக் கொடுப்பதாக இருக்கும்.

2. கிறிஸ்தவர்களின் தவறான வாழ்க்கை முறையைப் பார்த்து உலக ஜனங்கள் தேவனுடைய நாமத்தை நிந்திப்பது

இன்று விசுவாசிகளிலும் அநேகர், உலக ஜனங்களுக்கும் தங்களுக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லாதவர்களாக ஜீவிக்கிறவர்களாக இருக்கிறார்கள். முந்தைய நாட்களில் ஒருவர் ஞானஸ்நானம் எடுக்கவேண்டும் என்றால் அவர் அணிந்திருக்கும் நகைகளைக் கழற்றிவிட வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் இன்றைய நாட்களில் நகைகளைக் கழற்றாமலேயே ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். அதுபோலவே இன்றைய ஆவிக்குரிய சபைகளின் ஊழியர்கள் முதற்கொண்டு தங்கள் வீடுகளில் தொலைக்காட்சிக் கருவிகள் வைத்திருப்பதைக் காணலாம்.

பல வருஷங்களுக்கு முன்பு, இந்து மார்க்கத்தில் இருந்து கிறிஸ்தவனாக மாறி வியாபாரத்தொழில் செய்கிற ஒரு சகோதரர் என்னிடம், ஐயா நம் வீடுகளில் ரேடியோ வைப்பது நல்லதா ? என்று கேட்டார்கள். நான் அது தவறு என்றேன். அவர்கள் ஏன் என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் நீங்கள் உங்கள் வீட்டில் ரேடியோவை எவ்விதம் பயன்படுத்துகிறீர்கள்? என்று கேட்டேன். இந்த சகோதரன், தான் ரேடியோவின் மூலம் செய்திகள் மட்டும் கேட்பதாகச் சொன்னார்கள். நான் அவர்களிடம் நீங்கள் செய்தி கேட்டுவிட்டு கடைக்குப் போனபின் உங்கள் பிள்ளைகள் அதை எவ்விதம் பயன்படுத்து கிறார்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் என் பிள்ளைகள் சினிமாப் பாடல்கள் கேட்கிறார்கள் என்று கூறினார்கள். அப்பொழுது நான் அவர்களிடம் ஐயா, நீங்கள் உங்கள் பிள்ளைகள் தவறானக் காரியங்கள் செய்யக் காரணமா யிருக்கிறீர்கள் அல்லவா ? என்று கூறியபொழுது, அவர்கள் ஆம் என்றார்கள். இவ்விதமாகவே பெந்தேகோஸ்தே ஊழியர்கள், விசுவாசிகள் இவர்கள் குடும்பங்களிலும் தொலைக்காட்சிக்கருவிகள் தவறாக பயன்படுத்தப் படுவதை நாம் காண முடியும். இது குறித்து அநேகர் தெளிவற்றவர் களாயிருப்பது மிகவும் துக்கமாகவுள்ளது.

இஸ்ரவேலரைக் குறித்து பிலேயாம் என்ற தீர்க்கதரிசி கூறும்பொழுது, ***"அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள்." எண்.23:9*** என்று சொன்னான். ஆனால் இன்றைய விசுவாசிகள் உலக ஜனங்களைப்போல் மாறி வருவதினால் உலக ஜனங்கள் நம்முடைய வாழ்க்கை முறைமையைப் பார்த்து ***ரோமர்.2:24*** -ல் எழுதப்பட்டபடி நமது தேவனுடைய பரிசுத்த நாமத்தைத் தூஷிக்கிறார்கள்.

ஆகையினால்தான் தலைப்பு வசனத்தில் கூறியுள்ளபடி நமது வாழ்க்கையைப் பார்த்து உலக ஜனங்கள் அல்லது பிசாசு நமது தேவனை நிந்திப்பதாக இருப்பதினால், நாம் ஞானவான்களாக மாறி நம்முடைய ஜீவியத்தை முழுவதுமாக வேத வசனத்தின் அடிப்படையில் மட்டும் அமைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

நமது பிள்ளைகள் ஞானவான்களாக மாறி தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக தங்கள் வாழ்க்கையில் தீமையாகத் தோன்றுகிற எல்லாக் காரியங்களையும் விட்டு விலகி, தங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியங்களிலேயும் கீழ்ப்படிந்து நடந்தால், அது எவ்வளவாக அவர்களின் பெற்றோர் இருதயத்தை சந்தோஷப்படுத்தும். அது போலவே தேவ ஜனங்களாகிய நாமும் ஞானவான்களாக மாறி, நம் வாழ்க்கையில் தேவனுக்கு முழுவதுமாக பயப்படுகிறவர்களாக எல்லாவித தீமையானக் காரியங் களையும் விட்டு விலகி, வேத வசனத்தின் அடிப்படையில், தேவ ஆலோசனை யின்படி மாத்திரம் நாம் ஜீவிக்கிறவர்களாக இருந்தால் அது எவ்வளவாக தேவனுக்கு சந்தோஷத்தைக்கொடுப்பதாக இருக்கும். செயல்படுவோமா ?

இந்த அத்தியாயத்தில் தேவ ஞானம் நமக்கு ஏன் அவசியம் என்று எட்டுக் காரியங்களைக் குறிப்பிட்டுள்ளேன். அவைகளை நமது ஞாபகத்தில் சரியாக பதித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவைகளை மீண்டுமாக இங்கு சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். அவைகளை நமது இருதயத்தில் சரியாக பதித்துக்கொண்டு நமது வாழ்க்கையை அதற்கு ஏற்றவாறு அமைத்துக்கொள்வோம் என்றால் நமக்க ஆசீர்வாதமாக இருக்கும்.

தேவ ஞானம் நமக்கு ஏன் அவசியம்?

1. ஒரு காரியத்தை செவ்வையாகச் செய்ய நமக்கு ஞானம் வேண்டும்.
2. நாம் அனுபவிக்கத் தக்கது இன்னது என்று அறிய நமக்கு தேவ ஞானம் வேண்டும்.
3. நமது முடிவைப் பற்றி சிந்திக்க தேவ ஞானம் வேண்டும்.
4. ஆட்சி செய்ய தேவ ஞானம் வேண்டும்.
5. ஆலயங்கட்ட தேவ ஞானம் வேண்டும்.
6. கர்த்தரை அறிந்து கொள்ள நமக்கு தேவ ஞானம் வேண்டும்.
7. கர்த்தரின் சித்தத்தை அறிகிற அறிவினால் நிரப்பப்பட நமக்கு தேவ ஞானம் வேண்டும்.
8. தேவனின் இருதயத்தை சந்தோஷப்படுத்த நமக்கு தேவ ஞானம் வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள எட்டு முக்கியமானக் காரியங்களையும் நாம் சரியாகக் கற்றுக் கொண்டு, அதற்கு ஏற்றவாறு நமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் அது நமக்கு எவ்வளவு நன்மையாக இருக்கும். தேவன் தாமே கிருபை செய்வாராக!

நம்மை தேவ ஞானத்திற்கு நேராய் நடத்தக் கூடிய காரியங்கள்

இதற்கு முந்திய அத்தியாயத்தில் தேவ ஞானம் நமக்கு ஏன் அவசியம்? என்று பார்த்தோம். இந்த அத்தியாயத்தில் நம்மை தேவ ஞானத்திற்கு நேராய் நடத்தக்கூடியகாரியங்கள் எவைகள் என்றும், நம்மை தேவ ஞானத்திற்கு நேராய் நடத்தக்கூடியவர்கள் யார் யார் என்றும் இந்த அத்தியாயத்தில் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

A. தேவனும் - தேவ ஞானமும்

நமக்கு தேவ ஞானத்தைக் கொடுக்கக் கூடியவர்களில் பிதாவாகிய தேவனுக்கு முக்கிய பங்குண்டு. ஒருவர் நமக்கு ஞானத்தைக் கொடுக்க வேண்டும் என்றால் அவர் தன்னில் ஞானம் உடையவராய் இருக்கவேண்டும். அதுபோலவே ஒன்று (ஒரு பொருள்) நமக்கு ஞானத்தைக் கொடுக்க வேண்டும் என்றால் அது தன்னில் ஞானம் உடையவராய் இருக்க வேண்டும். ஆகவே தேவன் எப்படிப்பட்ட ஞானத்தையுடையவர் ? அவர் ஞானம் எத்தன்மையுடையது? அவர் தனது ஞானத்தினால் செய்தக் காரியங்கள் எவை? அவர் யாருடைய ஞானத்தைக் கொடுக்கிறார்? என்று இந்தப் பகுதியில் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1. தேவன் ஞானமுள்ளவர்

a) தேவன் ஒருவரே ஞானமுள்ளவர் - ***ரோமர் 16:27, யூதா 25, I தீமோ.1:17.***

b) தேவன் இருதயத்தில் ஞானமுள்ளவர் - ***யோபு 9:4.***

c) தேவன் பூரண ஞானமுள்ளவர் - ***யோபு 37:16.***

d) தேவனிடத்தில் ஞானம் உண்டு - ***யோபு 12:13,16.***

e) தேவதூதர்கள் பரலோகத்தில் தேவனின் ஞானத்தைச் சொல்லி அவரைத் துதிக்கிறார்கள் - ***வெளி.7:12***

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து தேவன் ஒருவரே பூரணமாக ஞானமுள்ளவர் என்று அறிந்து கொள்ளலாம். அவர் இருதயத்தில் ஞானமுள்ளவர் என்பது அவர் சிந்தனை, செயல்பாடுகள் எல்லாமே ஞானமுள்ளவையாக இருக்கும் என்பதைக் காட்டுவதாகவுள்ளது. அவரிடத்தில் ஞானம் உண்டு என்பது அவரிடத்தில் ஞானம் இருப்பதினால் அவர் மற்றவர்களுக்கு ஞானத்தைக் கொடுக்க முடிகிறது. ஒருவர் தன்னிடத்தில் இல்லாத ஒன்றை மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாது. அதுபோலவே' தேவனிடத்தில் ஞானம் இருப்பதினால்தான் அவர் மற்றவர்களுக்கு ஞானத்தைக் கொடுக்க முடிகிறது. அன்றியும் பரலோகத்தில் தேவதூதர்கள் தேவனுக்கு ஞானம் உண்டாவதாக என்று சொல்வது அவருடைய ஞானமான செயல்களினால் அவருக்கு மகிமை உண்டாவதாக என்பதாகும்.

2. தேவனின் ஞானம் எத்தன்மையுடையது ?

a) தேவனின் ஞானத்தை நாம் ஆராயமுடியாது - *யோபு 11:7.*

b) தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது - *ரோமர் 11:33.*

c) தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷனுடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது - *I கொரி.1:25.*

மேற்கூறப்பட்டுள்ளக் காரியங்களில் இருந்து நாம் அறிந்து கொள்வது யாதெனில் மனிதன் தன் அற்ப சொற்ப அறிவைக்கொண்டு தேவனின் மகிமையான ஞானத்தை ஆராய்ந்து அறிந்து கொள்ள முடியாது. அது அந்த அளவுக்கு ஆழமானது. அதுமட்டுமல்லாது மனிதனின் பார்வையில் பைத்தியமாகத் தோன்றுகிறதான தேவக் காரியங்கள் மனித ஞானத்தைக் காட்டிலும் அதிகம் ஞானமுள்ளதாயிருக்கிறது. இதிலிருந்து நமது தேவனின் ஞானமானது எவ்வளவு சிறப்புத்தன்மையுடையது என்பதை நாம் எளிதில் அறிந்துகொள்ள முடியும்.

3. தேவன் ஞானத்தினால் செய்த காரியங்கள்

தேவன் ஞானத்தினால் செய்த காரியங்கள் என்ன என்று இங்கு பார்ப்போம்.

a) தேவன் ஞானத்தினாலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்

"வானங்களை ஞானமாய் உண்டாக்கினவரைத் துதியுங்கள்" சங் 136:5.

"கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தி, புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார். அவருடைய ஞானத்தினாலே ஆழங்கள் பிரிந்தது,...." நீதி.3:19,20.

"கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது ! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர் ; "சங்.104:24.

b) தேவன் ஞானத்தினால் மேகங்களைத் தமது கட்டளையின்படி செயல்படச் செய்கிறார்

"அவர் நீர்த்துளிகளை மேகத்தில் ஏற்றி, மின்னலினால் மேகத்தைச் சிதறப் பண்ணுகிறார். அவர் அவைகளுக்குக் கட்டளையிடுகிறயாவையும், அவைகள் பூச்சக்கரத்தில் நடப்பிக்கும்படி, அவர் அவைகளைத் தம்முடைய ஞான ஆலோசனைகளின்படியே சுற்றித் திரியப் பண்ணுகிறார்." யோபு 37:11,12.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து தேவன் சிருஷ்டித்த வானத்தையும், பூமியையும் நாம் பார்க்கும்பொழுது அவைகள் எவ்வளவு விசேஷித்த பிரகாரம் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் எளிதில் அறிந்து கொள்ளலாம். தேவன் தமது அளவற்ற ஞானத்தினால் ஆறு நாளைக்குள்ளே உருவாக்கிப் படைத்த இந்த வானத்தையும், பூமியையும், அதிலுள்ள

யாவற்றையும் மனிதன் தன் சொற்ப அறிவினால் தன் வாழ்நாள் முழுவதும் ஆராய்ந்துப் பார்த்தாலும் அவனால் இன்னும் முழுமையாக அவைகளைப் பற்றி அறிந்த கொள்ள முடியவில்லை. எவ்வளவு ஆச்சரியமானக் காரியம் பாருங்கள் ! அதுமட்டுமல்லாது எவ்விதம் தமது அளவற்ற ஞானத்தினால் மேகத்தை செயல்படச்செய்கிறார். என்பதை நாம் பார்க்கும்பொழுது அது நமக்கு எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது.

4. தேவன் ஞானத்தைக் கொடுக்கிறார்

தேவன் யார் யாருக்கு ஞானத்தைக் கொடுக்கிறார் என்று பார்ப்போம்.

a) கர்த்தர் ஞானத்தைத் தருகிறார் - நீதி. 2:6, யாக்.1:5.

b) தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும்... அளிக்கிறார்."பிரசங்கி 2:26.

c) ஞானிகளுக்கு ஞானத்தையும்....கொடுக்கிறவர் - தானி.2:21.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து தேவன் ஞானத்தைக் கொடுக்கிறவர் என்றும், அவர் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிற வனுக்கும், ஞானிகளுக்கும் ஞானத்தைக் கொடுக்கிறவர் என்றும் அறியலாம்.

ஒரு சமயம் நாம் ஞானிகள் என்றாலே ஞானத்தைப் பெற்றவர்கள் என்றுதானே அர்த்தம். அப்படியென்றால் அவர்களுக்கு தேவன் ஏன் ஞானத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்கலாம். *யோபு 28:28* -ல் கூறியுள்ளபடி *கர்த்தருக்குப் பயப்படுதலின் மூலம் ஞானத்தைப் பெற்றவர்களாகிய ஞானிகளுக்கு தேவன் ஞானமாகிய வரத்தைக் கொடுக்கிறார் என்று அறிய வேண்டும். (I கொரி.12:8)*

B. கர்த்தராகிய இயேசுவும் - தேவ ஞானமும்

நமக்கு ஞானத்தைக் கொடுக்கக் கூடியவர்களில் நமது இரட்சகராகிய இயேசுவும் உண்டு என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசுவிற்கும் ஞானத்திற்கும் உள்ள சம்பந்தத்தைக் குறித்து சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

1. இயேசு சிறுபிள்ளையாய் இருந்தபோதே ஞானத்தினால் நிறைந்திருந்தார்

"பிள்ளை (இயேசு) வளர்ந்து, ...ஞானத்தினால் நிறைந்தது." லூக்.2:40

"இயேசுவானவர் ஞானத்திலும்,...அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்." லூக்.2:52.

2. ஞானத்தை அருளும் ஆவியாகிய பரிசுத்த ஆவி அவர்மேல் இருந்தார்

"ஞானத்தையும் உணர்வையும் அருளும்....ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். " ஏசா.11:2.

3. இயேசுவின் ஞானம் குறித்து அக்கால ஜனங்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்

"அவர்கள் ஆச்சரியப்பட்டு : இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது?"என்றார்கள் மத்.13:54, மாற்.6:2.

4. இயேசுவே நமது ஞானக் கன்மலை

"எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில் அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள் அந்தக் கன்மலை கிறிஸ்துவே" I கொரி.10:4.

5. அவருக்குள் ஞானம், அறிவு ஆகிய பொக்கிஷம் அடங்கியிருக்கிறது

"அவருக்குள் ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது"கொலோ.2:3.

6. இயேசுவே நமக்கு ஞானமாயிருக்கிறார்

"ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு கிறிஸ்து தேவபெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார்" I கொரி.1:24 .

"அவரே (கிறிஸ்துவே) தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்" I கொரி.1:31.

7. இயேசுவே ஞானத்தைக் கொடுப்பவர்

"உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்" லூக்.21:15.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து நாம் அறிந்துகொள்வது யாதெனில் ஆண்டவராகிய இயேசு சிறு பிள்ளையாயிருந்தபோதே தேவ ஞானத்தினால் நிறைந்தவராகவும், அதிலே நாளுக்கு நாள் விருத்தியடைகிறவராயும் இருந்தார். அதுமட்டுமல்லாது அவர்மேல் ஞானத்தை அருளும் ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர் இருந்தார். அவரின் ஞானத்தைக் குறித்து அவர் காலத்து ஜனங்கள் அவரின் செயல்பாடுகளைக் பார்த்து மிகவும் ஆச்சரியப்படக்கூடிய அளவுக்கு மிகுந்த ஞானத்தைப் பெற்றவராக இருந்தார். அவருக்குள் ஞானம், அறிவு போன்ற பொக்கிஷங்கள் அடங்கியிருக்கிறது என்றும், அவர் நமக்கு ஞானக்கன்மலை யாகவும், ஞானமாகவும் இருக்கிறார் என்று நாம் அறிந்து கொள்ளலாம்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் ஞானக்கன்மலையென்பது தேவன் இஸ்ரவேல் ஜனங்களின் வனாந்திர யாத்திரையில் அவர்களுக்குத் தாகம் தீர்க்க கன்மலையை அடித்து, அதிலிருந்து தண்ணீர் வரும்படிச் செய்ததுபோல, தேவனைக் குறித்த உண்மையான தாகமுடையவர்கள் தங்கள் தாகத்தைத்

தீர்த்துக்கொள்ளும்படியாக ஆண்டவராகிய இயேசுவின் சரீரம் கல்வாரி சிலுவையில் பிளக்கப்பட்டது என்பதையும் நாம் அறிய வேண்டும். நமக்கு விரோதமாக எழும்புகிறவர்கள் யாரும் எதிர்பேச, எதிர்நிற்க முடியாத அளவுக்கு அவர் நமக்கு வாக்கையும், ஞானத்தையும் கொடுப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். அவர் அருளும் ஞானத்தைப் பெற்றுக் கொள்ள நாம் வாஞ்சிப்போமா?

நாம் நீதிமொழிகளின் புத்தகத்தைக் குறிப்பாக அந்தப் புத்தகத்தின் எட்டாம் அதிகாரத்தை வாசிக்கும்பொழுது அங்கு கர்த்தராகிய இயேசுவுக்கு ஞானம் என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளதையும் நாம் அறியலாம்.

C. பரிசுத்த ஆவியும் - தேவ ஞானமும்

நமக்கு ஞானத்தைக் கொடுக்கக் கூடியவர்களில் பரிசுத்த ஆவியானவரும் ஒருவர் ஆவர். ஆகவே பரிசுத்த ஆவிக்கும், ஞானத்திற்கும் உரிய காரியங்கள் பற்றி கீழ்க்கண்ட வேத வசனங்கள் மூலம் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

1. இயேசு ஞானத்தைப் பெற்றது

"ஞானத்தையும் உணர்வையும் அருளும்..ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் (இயேசுவின்மேல்) தங்கியிருப்பார்" ஏசா.11:2.

2. பெசலெயேல் ஞானத்தைப் பெற்றது

"சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவ ஆவியினால் நிரப்பினேன்" யாத்.31:15.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து நாம் ஞானத்தைப் பெற பரிசுத்த ஆவியானவரும் அவசியம் தேவைப்படுகிறார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். அதுமட்டுமல்லாது *ஆதி.41:33,38* வசனங்களிலிருந்து யோசேப்பும் பரிசுத்த ஆவியின்மூலமாக தேவ ஞானத்தைப் பெற்றவனாகச் செயல்பட்டான் என்று அறிந்து கொள்ளலாம்.

நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமானக் காரியம் யாதெனில் பிதாவாகிய தேவன், கர்த்தராகிய இயேசு, பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் அருளும் ஞானம் என்பது ஞானமாகிய வரத்தைக் குறிப்ப தாகவுமுள்ளது. வரம் என்பது ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு அவனுக்குக் கொடுக்கப்படும் சில விசேஷித்த தாலந்துகளைக் குறிப்பதாகவுள்ளது என்று அறிய வேண்டும். உதாரணமாக மேற்கூறப்பட்ட வசனங்களில் பெசலெயேல் என்ற மனிதன் ஆசரிப்புக்கூடாரத்தை அதின் சரியான அளவின்படியும், தேவன் காட்டிய மாதிரியின்படியும் செய்து முடிக்க அவனுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட விசேஷித்த தாலந்தைத்தான் வேதம் ஞானம் என்று குறிப்பிடுகிறது.

D. வேதமும் - தேவ ஞானமும்

வேத புத்தகத்தின் மூலம் நாம் ஞானத்தைப் பெறுவது குறித்துக் கீழ்க்கண்ட வேத வசனங்களின் மூலம் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது மாயிருக்கிறது ; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது" சங்.19:7.

"இவைகளால் (நீதிமொழிகளால்- வேதத்தினால்) ஞானத்தையும் போதகத்தையும் அறிந்து...." நீதி.1:2.

"நீர் உம்முடைய கற்பனைகளைக் கொண்டு, என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர் ; ..."சங்.119:98.

"உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால் முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன்." சங்119:100.

"கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறு வயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்" II தீமோ.3:15.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து கர்த்தருடைய சாட்சியாகிய வேத வசனமானது ஒன்றையுமே அறிந்து கொள்ள முடியாத பேதையையும் ஞானியாக்குகிறது என்றும், தேவனுடைய நீதிமொழியாகிய வார்த்தைகளால் நாம் ஞானத்தைப் பெற முடியும் என்று அறிகிறோம். அதுமட்டுமல்லாது கர்த்தரின் கற்பனைகளின்மூலம் தேவன் நம்மை நமது சத்துருக்களை விட அதிக ஞானமுள்ள வர்களாக்குகிறார் என்றும், தேவனின் கட்டளைகளை கைக்கொள்ளுவதின்மூலம் நாம் நம்மைவிட வயதில் மூத்த பெரியோர்களை விட ஞானமுள்ளவர்களாக ஆகமுடியும் என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

இன்னுமொரு சிறப்பானக்காரியம் யாதெனில் இந்த வேத வசனத்தின்மூலம் தேவ ஞானமானது நம்மை இரட்சிப்புக்கு ஏதுவாக நடத்தக்கூடிய ஞானமாகவுள்ளது. அப்படியென்றால் நாம் வேத வசனங்களை சரியான முறையில் கற்றுக்கொள்ள ஆரம்பிக்கும்பொழுது அதின்மூலம் நாம் பெறும் தெய்வபயமானது நம்மைக் கிறிஸ்துவுக்குள்ளான இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தக்கூடியதாகவுள்ளது. இந்நாட்களில் இந்த உலகின் ஜனங்களின் வேதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை சரியாக கற்றுக்கொள்ள முயற்சிப்பார்கள் என்றால் எவ்வளவு நன்மையாக இருக்கும்.

E. தேவ ஊழியரும் - தேவ ஞானமும்

இந்தப் பகுதியில் தேவ ஊழியர்கள் தேவ ஞானத்தைப் பெறும் விதத்தையும், தாங்கள் பெற்ற தேவ ஞானத்தை எவ்விதம் பயன்படுத்துவது என்பதையும் சிறிது ஆராய்வோம்.

1. தேவன் தம்மை சேவிக்கிறவர்களுக்கு ஞானத்தைக் கொடுக்கிறார்

"இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார் ; ....."தானி.1:17.

2. கர்த்தராகிய இயேசு சீஷர்களுக்கு ஞானத்தைக் கொடுக்கிறார்

"உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்" லூக்.21:15

3. பரிசுத்த ஆவியானவர் ஊழியர்களுக்கு ஞானத்தைக் கொடுக்கிறார்

"எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும்...அளிக்கப்படுகிறது" I கொரி.12:8.

4. தேவ ஞானத்தைக் கொண்டு ஊழியர்கள் செயல்படுவது

"எனக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப் போல (Wise Master Builder - *ஞானமுள்ள சிற்பாசாரி) அஸ்திபாரம் போட்டேன்...." I கொரி.3:10.*

"நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்... ;" II பேதுரு 3:15.

"எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்"கொலோ.1:28.

"சகோதரரே நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிற வனாக வரவில்லை. இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப் பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியா திருக்கத் தீர்மானித்திருந்தேன். உங்கள் விசுவாசம் மனுஷனுடைய ஞானத்தில்ல, தேவனுடைய பெலத்தில் (Power - வல்லமை) நிற்கும்படிக்கு, என் பேச்சும், என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் (Power - வல்லமை) உறுதிப்படுத்தப்பட்ட தாயிருந்தது" I கொரி.2:1,2,4,5.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து பிதாவாகிய தேவன் குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன் எவ்விதம் ஊழியர்களுக்கு ஞானத்தைக் கொடுக்கிறார் என்று அறியலாம். பிதாவாகிய தேவன் ஊழியர்களுக்குக் கொடுக்கும் ஞானத்தினாலே அவர்கள் எந்தெந்த சந்தர்ப்பத்தில் எவ்விதம் செயல்பட வேண்டும் என்று அறிந்து கொள்கின்றனர். அதுபோலவே கர்த்தராகிய இயேசுவும் ஊழியர்களுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறவர்கள் எதிர்பேச முடியாத அளவுக்கு வாக்கையும், ஞானத்தையும் கொடுக்கிறார். அதுபோலவே ப்ரிசுத்த ஆவியானவரும் தேவ ஊழியர்களுக்கு தேவ ஞானத்தைப் போதிக்கும் வசனங்களைக் கொடுக்கிறார். இங்கு நாம் ஒரு

மேற்கூறப்பட்டுள்ள எல்லாக் காரியங்களையும் பெற்றவர்களாகவே செயல்பட வேண்டும். அது மட்டுமல்ல, ஊழியர்கள் முன்கூறப்பட்டுள்ளது போல் நல்லவர்ளாகவும், தெய்வபயம் உடையவர்களாயிருப்பது மிகவும் அவசியம்.

இவ்வித அனுபவங்களைப் பெற்ற தேவ ஊழியர்கள் தாங்கள் மனித ஞானத்தை எவ்விதத்திலும் பயன்படுத்தாதபடி தேவன் கொடுக்கும் ஞானமாகிய வரங்களோடு தேவக் காரியங்களைத் திட்டமாகப் போதித்து அவருடைய உபதேசமாகிய அஸ்திபாரத்தைப் போடவேண்டும். அதுவல்லாது மனித ஞானம், மனித யுக்திகளை பயன்படுத்தக்கூடாது. இன்றைய ஊழியர்கள் ஊழியத்தையா செய்கிறார்கள். தேவன் வல்லமையுள்ளவர், அற்புதங்களைச் செய்கிறவர், அதிசயங்கள் செய்கிறவர் என்று திரும்பத் திரும்பச் சொல்லி, ஜனங்களை எளிதில் கவரும் வண்ணமாக அல்லவா செயல்படுகிறார்கள். ஜனங்களை எச்சரிக்கும் வண்ணமாக மனந்திரும்புதல், ஞானஸ்நானம் எடுப்பது பற்றியோ, வரப்போகும் தேவனின் நியாயத்தீர்ப்பைக் குறித்தோ அவர்கள் எதுவும் சொல்வதில்லை.

மத்தேயு 7:21,22 -ம் வசனங்களில் கூறப்பட்டுள்ளதுபோல் கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா, உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா, உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா என்று ஊழியர்கள் சொல்லும் பொழுது, தேவன் அவர்களைப் பார்த்து நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச்செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று தேவன் அவர்களைப் பார்த்துச் சொல்வார் என்றால் அது எவ்வளவு பரிதாபமானதாக இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். இன்றைய ஊழியக்காரர்கள் தாங்கள் செல்ல விரும்புகிறதான விசாலமான வழியைவிட்டு, தேவன் காட்டும் இடுக்கமான வழியைத் தெரிந்து கொள்வார்கள் என்றால் எவ்வளவு பாக்கியவான்களாயிருப்பார்கள். ஊழியம் என்பது தேவன் அற்புதங்களைச் செய்கிறவர், அதிசயங்களைச் செய்கிறவர் என்று திரும்பத் திரும்பச்சொல்லி ஜனங்களை ஏமாற்றுவது அல்ல. *எசே.3:17,18* -ல் கூறியுள்ளபடி ஜனங்களுக்கு வரும் அழிவிலிருந்து அவர்களைக் காக்கும்படியாக அவர்களை எச்சரிப்பதாகும். இன்றைய தேவ ஊழியர்கள் தேவனின் விசேஷித்த ஞானத்தைப்பெற்று தேவனின் நாம மகிமைக்கென்று மட்டும் செயல்படுவது மிகவும் அவசியமாகவுள்ளது.

தேவ ஞானத்தைப் பெறும் விதங்கள்

ஞானம் என்றால் என்ன? அது எத்தன்மையுடையது? அதின் முக்கியத்துவம் என்ன? என்றும், இந்த தேவ ஞானம் நமக்கு ஏன் அவசியம்? என்றும், நமக்கு ஞானத்தைக் கொடுக்கக்கூடியவர்கள் யார் யார் என்றும், நமக்கு ஞானத்தைக் கொடுக்கக்கூடிய காரியங்கள் எவைகள் என்றும் இதற்கு முந்திய அத்தியாயங் களில் விளக்கமாகப் பார்த்தோம். இந்த அத்தியாயத்தில் நாம் எவ்விதம் ஞானத்தைப் பெறுவது அல்லது நாம் எவ்விதம் ஞானியாவது என்பது பற்றியும், நாம் பெற்றுக்கொள்ளும் தேவ ஞானம் குறித்து நாம் என்ன செய்யவேண்டும் என்றும் விபரமாக அறிந்து கொள்ளப்பார்ப்போம்.

A. ஞானத்தை எவ்விதம் பெறுவது?

ஞானத்தை எவ்விதம் பெறுவது? அல்லது ஞானத்தைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும்? என்று இந்தப் பகுதியில் சிறிது விபரமாக அறிந்து கொள்ளப பார்ப்போம்.

1. தேவனுக்கு பயப்படுவது மூலம் தேவ ஞானத்தைப் பெறுகிறோம்

a) *"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" நீதி.1:7, 9:10, சங்.111:10.*

b) *"கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்" நீதி.15:33.*

c) *"ஆண்டவருக்குப் பயப்படுதலே ஞானம்" யோபு 28:28.*

மேற்கூறப்பட்டுள்ள மூன்று வசனங்களிலிருந்து நாம் அறிவது யாதெனில் முதல் வசனத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் கர்த்தருக்குப் பயப்படுதல் மனித வாழ்க்கையில் ஞானத்தின் ஆரம்பமாக இருந்து, இந்த கர்த்தருக்குப் பயப்படுதலே படிப்படியாக நமக்கு ஞானத்தைப் போதிப்பதாக இருந்து, இறுதியில் மூன்றாவது வசனத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் முழுமையாக நம்மை ஞானவான்களாக ஆக்குவித்து நாம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் உடையவர்களாக நமது வாழ்க்கையில் காணப்படும் எல்லாவித தீமையானக் காரியங்களையும் வெறுத்து, அவைகளை விட்டு விலகும்பொழுது நம்மில் காணப்படும் கர்த்தருக்குப் பயப்படும் பயம் நமக்குப் பயப்படும் பயம் நமக்குப் படிப்படியாக ஞானத்தைப் போதித்து, நமது வாழ்க்கையை முழுவதும் சரியாக அமைத்துக்கொள்ள உதவுவதாக இருந்து, நம்மை முழுமையாக ஒரு ஞானமுள்ள மனிதனாக, மனுஷியாக மாற்றுகிறது. முயற்சி செய்வோமா?

2. தேவனிடம் கேட்பதின் மூலம் (ஜெபிப்பதின் மூலம்) ஞானத்தைப் பெறுகிறோம்

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாத வருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" யாக்.1:5."உமது ஜனங்களை நியாயம்

விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும் ;...."I இராஜா.3:9,II நாளா.1:10.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து நாம் ஞானத்தைக் கர்த்தரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த நாட்களில் தேவ ஜனங்கள் கர்த்தாவே நீர் விரும்புகிறவண்ணமாக நாங்கள் எங்கள் ஜீவியத்தை அமைத்துக்கொள்ள உமது ஞானத்தை எங்களுக்குத் தாரும் என்று ஜெபிக்க வேண்டிவர்களாயிருக்கிறோம். இன்று நாம் அநேகக் காரியங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டவரே பணம் தாரும், ஐசுவரியம் தாரும் என்றும் இன்னும் இவ்வித பலக்காரியங்களுக்காக ஜெபிக்கிறோமே. எப்பொழுதாவது தேவனே நீர் விரும்புகிற வண்ணமாக என் ஜீவியத்தை அமைத்துக்கொள்ள, எனக்குக் கொடுக்கப்பட்ட கடமையை சிறப்பாக செய்துமுடிக்க எனக்கு உம்முடைய ஞானத்தைத் தாரும் என்று ஜெபித்த துண்டா? நாம் ஒருபோதும் அவ்விதம் ஜெபிப்பதில்லையே. அப்படி யென்றால் நாம் நமது ஜீவியத்தைக்குறித்து அக்கறையற்றவர்களாக இருக்கிறோம் என்பதுதானே அர்த்தமாகிறது. ஒவ்வொரு நாளும் நாம் ஜெபிக்கும் பொழுது, எல்லாம்வல்ல தேவனே! என் ஜீவியத்தை நீர் விரும்புகிற வண்ணமாக அமைத்துக்கொள்ள, நீர் எனக்குக் கொடுக்கும் பணியை மிகவும் சிறப்பாக செய்து முடிக்க, எனக்கு உம்முடைய ஞானத்தைத் தாரும் என்று ஜெபிப்போமா? அவ்விதம் ஜெபித்து, தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக தேவன் விரும்புகிற வண்ணமாக நமது ஜீவியத்தை அமைத்துக்கொண்டு, தேவன் நமக்குக் கொடுக்கும் பணியை மிகவும் சிறப்பாகச் செய்துமுடித்து, இவ்விதம் தேவநாமம் மகிமைப்படும்படியாக நாம் ஜீவித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். முயற்சி செய்வோமா? தேவன் தாமே கிருபை செய்வாராக!

3. செவி கொடுத்து ஞானத்தைப்பெறுவது

"என் மகனே, நீ செவிகொடுத்து ஞானமடைந்து, உன் இருதயத்தை நல்வழியிலே நடத்து" நீதி. 23:19."நீங்கள் புத்தியை (instruction) *கேட்டு, ஞானமடையுங்கள் ;...." நீதி.8:33.*

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து நாம் அறிவது யாதெனில் நாம் தேவ ஆலோசனை அல்லது கட்டளைகளுக்குச் செவி கொடுத்து நாம் ஞானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். இன்று தேவன் தமது ஊழியர்கள் மூலமாக நமக்கு ஆலோசனைகள், கட்டளைகள் கொடுக்கும் பொழுது அநேகர் தேவ ஆலோசனைகள், கட்டளைகளுக்கு செவி கொடுக்க மனமற்றவர்களாக இருக்கிறார்கள். அதினால் அவர்கள் ஞானத்தை பெற முடியாதபடி ஆகி, ஞானமற்றவர்களாக செயல்பட்டு, தங்கள் வாழ்க்கையை முழுமையாக நஷ்டப்படுத்திக்கொள்கிறார்கள். மாறாக தேவ ஊழியர்கள், தேவனுடைய பிள்ளைகள் கூறும் ஆலோசனை, கட்டளைகளான காரியங்களுக்கு நாம் செவி கொடுத்து அதின்மூலம் நாம் தேவ ஞானத்தைப் பெற்று அதற்கு ஏற்றவாறு நமது ஜீவியத்தை சரியாக அமைத்துக்கொள்வோம் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

4. ஊழியர்களின் ஜெபத்தினால், கைகளை வைக்குதலினால் ஞானத்தைப்பெறுவது

"மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்" உபா.34:9.

கர்த்தரின் ஊழியக்காரனாகிய மோசே யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்து ஜெபித்ததின் மூலம் யோசுவா ஞானத்தின் ஆவியினால் நிரப்பப் பட்டான். அப்படியென்றால் மோசே அந்த அளவுக்கு தேவ சமூகத்தில் காத்திருந்து தேவ வல்லமையையும், வரங்களையும் பெற்றவனாக இருந்தான். அதின்மூலம் யோசுவா தேவனின் வரமாகிய ஞானத்தைப் பெற்றுக்கொள்ள உதவியாக இருந்தான். இன்றைய ஊழியர்களும் இவ்விதமாக தேவ சமூகத்தில் காத்திருந்து ஜெபித்து தேவ வல்லமையைப் பெற்று அதின்மூலம் தேவ ஆசீர்வாதமாகிய ஞான வரங்களைப் பெற்றுக்கொள்ள உதவியாக இருக்கவேண்டும்.

தேவன் ஆபிரகாமை அழைத்தபோது அவனுக்கு கீழ்க்கண்டவாறு வாக்குக்கொடுத்தார். ***"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் ; நீ ஆசீர்வாத மாயிருப்பாய்....ஆதி.12:23.***

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நீ ஆசீர்வாதமாயிருப்பாய் என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்குக் கொடுத்ததுபோல் இன்று நாமும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கப் பிரயாசப்பட வேண்டும். இன்று அநேக ஊழியர்களுக்கு அவர்கள் தனி வாழ்க்கையில் ஜெபம் என்பது அறவே கிடையாது. அப்படியென்றால் அவர்கள் எப்படி மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கமுடியும். இப்படிப்பட்ட தேவ வல்லமையைப் பெறாத தேவ ஊழியர்கள் கைகளை வைப்பதினால் யார் வரங்களைப் பெறமுடியும்? இன்று அநேக தேவ ஊழியர்கள் தேவன் அற்புதங்களைச் செய்கிறவர், அதிசயங்களைச் செய்கிறவர் என்று வெறுமனே சொல்லிக் கொண்டு அலைகிற டப்பாங்கூத்து ஊழியர்களாக அல்லவா இருக்கிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள் !

மோசேயைப்போல இரவு பகலாக தேவ சமூகத்தில் காத்திருந்து தேவ வல்லமையைப் பெற்றுக்கொண்டு, தாங்கள் பெற்ற தேவ வல்லமையினால் அநேகர் தேவ ஞானமாகிய வரங்களைப் பெற்று அவர்கள் வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக்கொள்ள உதவியாக இருப்பார்கள் என்றால் எவ்வளவு நன்மையாக இருக்கும். நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற என்னைவிட அதிகம் வயது குறைந்த ஒரு வாலிப சகோதரன் ஜெபித்து நான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள உதவியாக இருந்தார்கள். நாம் ஊழியக்காரராயினும், விசுவாசிகளாயினும் நாம் ஜெபித்து நம் மூலமாக மற்றவர்கள் தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நாம் ஏதுவாய் இருக்கவேண்டும். முயற்சி செய்வோமா?

5. எறும்பினிடத்தில் இருந்து ஞானத்தைக் கற்பது

"சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய் அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள்" நீதி. 6:6. "பூமியில் சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு. அவையாவன : அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடைக் காலத்தில் தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பும்,.." நீதி. 30:24,25.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் சோம்பேறியாய் இருக்கிற ஒரு மனிதன் எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து அதன்மூலம் ஞானத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதில் எறும்பின் வழி என்பது, எறும்பின் ஜீவிய முறையைக் குறிப்பதாகவுள்ளது. அப்படியென்றால் எறும்பின் ஜீவியத்தில் உள்ள சிறப்புத்தன்மை என்ன என்று கேட்கலாம். இந்த உலகின் எல்லா ஜீவராசிகளும் நடந்து, ஓடி, நீந்தி, ஊர்ந்து, பறந்து இவ்விதமாக செயல்படுகின்றன. பின்னர் அவைகள் ஒரு இடத்தில் அமர்ந்து அல்லது படுத்து ஓய்வு எடுப்பதையும் காணலாம். ஆனால் எறும்பு எப்பொழுதும் சுறுசுறுப்பாக ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு நகர்ந்து கொண்டேயிருப்பதைக் காணலாம். அப்படியென்றால் ஓய்வு எடுப்பதில்லை என்று அநுமானிக்கலாம். அதினால் தான் எறும்பைப்பற்றி மகா ஞானமுள்ளவைகள் என்று *நீதி. 30:24,25* வசனங்களில் கூறப்பட்டுள்ளது. நாமும் இந்த உலகத்தில் எறும்பைப்போல ஞானத்தைப்பெற்றவர்களாக எப்பொழுதும் சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

"சோம்பற்கையால் வேலை செய்கிறவன் ஏழையாவான் ; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்" நீதி.10:4.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் ஊழியத்தில் ஆனாலும் சரி, தனிப்பட்ட வாழ்க்கையில் ஆனாலும் சரி நாம் சோம்பற்கையால் வேலை செய்தால் தரித்திரர் ஆவோம். சுறுசுறுப்போடு செயல்படுவது நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் என்று நாம் அறியவேண்டும்.

நமது இரட்சகராகிய இயேசுவும் தாலந்துகள் குறித்துச் சொன்ன உவமையில் ஒரு தாலந்தை வாங்கின ஊழியக்காரனைப் பார்த்து அவன் எஜமான் பொல்லாதவனும், சோம்பலுமான ஊழியக்காரனே என்று அழைப்பதை *மத். 25:26*-ல் வாசிக்கலாம். அந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் பொல்லாதவன் என்ற வார்த்தையானது ஆங்கில வேத புத்தகத்தில் (wicked) என்ற வார்த்தையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் தெய்வபயம் இல்லாதவன் என்பதாகும். இந்த வசனத்தில் அந்த ஒரு தாலந்தை வாங்கிய ஒரு ஊழியக்காரன் தெய்வபயம் இல்லாதவனும், சோம்பலுமான ஊழியக்காரனுமாயிருந்ததினால், அவன் தன்னிடம் கொடுக்கப்பட்ட அந்த ஒரு தாலந்தை வாங்கி அப்படியே மண்ணிற்குள் புதைத்து வைத்துவிட்டான் என்பதாகும். அவனிடம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் காணப்பட்டிருக்கும் என்றால் நிச்சயம் அவன் தான் பெற்ற தாலந்தை சரியாகப் பயன்படுத்தி அதின்மூலம் லாபம் சம்பாதிக்க முயற்சி செய்திருப்பான். ஆனால் அவன் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாத

வனாயும், சோம்பலுமான ஊழியக்காரனுமாயிருந்தபடியினால் அவன் தான் பெற்ற தாலந்தை ஆதாயம் பண்ணும் வண்ணமாக அதை பயன்படுத்தாதபடி, அதை மண்ணில் புதைத்து வைத்து அதின்மூலம் தண்டனைக்கும் பாத்திரவானாக ஆகிவிட்டான்.

இன்றும் அநேக ஊழியக்காரர்கள் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாதவர் களாகவும், சோம்பல் உடையவர்களாகவும் சரியாக ஆத்தும ஆதாயம் செய்யாதபடி, தாங்கள் பெற்ற தாலந்துகளை தங்களுக்குள்ளேயே அடக்கி வைத்துக்கொள்கிறவர்களாக இருக்கிறார்கள். இதினால் தங்களுக்கு வரவிருக்கும் தேவ தண்டனையைப் பற்றி சிறிதும் சிந்தனையற்றவர்களாக இருக்கிறார்கள். கர்த்தர் கிருபையாகக் கொடுத்திருக்கும் இந்த நாட்களில் எல்லா தேவ ஊழியர்களும் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக எறும்பைப்போல் சுறுசுறுப்பு டையவர்களாய் தாங்கள் பெற்ற வரங்களைப் பயன்படுத்தி எப்படியாவது ஒரு கூட்டம் ஜனங்களை கர்த்தருக்காக ஆதாயம்பண்ணி அவர்களை நமது இரட்சகரின் வருகைக்கு என்று ஆயத்தப்படுத்துவார்கள் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

இன்று அநேக வரம் பெற்ற தேவ ஊழியர்கள் தாங்கள் பெற்ற வரங்களை தங்கள் சுய விளம்பரத்துக்காக பயன்படுத்துகிறார்கள். இது முற்றிலும் தவறானதாகும். இவர்கள் *மத்.7:22,23*-ன்படி தேவ தண்டனையைப் பெறுவார்கள். ஊழியர்கள் மட்டுமல்ல, விசுவாசிகளும் தங்கள் குடும்ப வாழ்க்கையிலும் மற்றும் எல்லாக் காரியங்களிலும் சுறுசுறுப்பாக செயல்பட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

6. கடிந்துகொள்ளுதலைக் கேட்பதின்மூலம் ஞானத்தைப் பெறலாம்

"கடிந்துகொள்ளுதலைக் கேட்கிறவனோ ஞானமடைவான்" நீதி.15:33. "ஜீவனுக்கேதுவான கடிந்துகொள்ளுதலை ஏற்றுக் கொள்ளும் காது ஞானிகளிடத்தே தங்கும்" நீதி.15:31. "பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்" நீதி.29:15.

மேற்கூறப்பட்டுள்ள மூன்று வசனங்களில் முதல் வசனத்தில் கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ளுகிற ஒரு மனிதன் ஞானமடைவான் என்றும், இரண்டாம் வசனத்தில் ஜீவனுக்கு ஏதுவானக் கடிந்துகொள்ளுதலை ஏற்றுக் கொள்ளும் காது ஞானிகளிடத்தே தங்கும் என்பதிலிருந்து ஒரு மனிதன் ஞான முடையவனாக இருப்பான் என்றால் அவன் ஜீவனுக்கு ஏதுவானக் கடிந்து கொள்ளுதலை ஏற்றுக் கொள்வான் என்றும் அறியலாம். ஜீவனுக்கு ஏதுவான கடிந்துகொள்ளுதல் என்று கூறும்பொழுது, ஜீவனுக்கு ஏதுவல்லாத கடிந்து கொள்ளுதலும் உண்டு என்று அறியலாம். இங்கு ஜீவனுக்கு ஏதுவான என்பது மோட்சத்திற்கு ஏதுவானது என்பதாகும்.

மேற்கூறப்பட்டதிலிருந்து நாம் அறிவது யாதெனில், மோட்சத்திற்கு ஏதுவான கடிந்துகொள்ளுதல், மோட்சத்திற்கு ஏதுவல்லாத கடிந்துகொள்ளுதல் என்ற இரண்டுவகை கடிந்துகொள்ளுதல்கள் உண்டு என்று நாம் அறியலாம்.

இன்று பெரும்பாலுமான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை உலகப்பிரகார மானக் காரியங்கள் குறித்து கடிந்துகொள்வதுண்டு. நீ பணம்

சம்பாதிக்கவில்லையே, வேலை செய்யவில்லையே, அதைச் செய்யவில்லையே என்று தங்கள் பிள்ளைகளை உலகக் காரியங்களுக்காக கடிந்து கொள்வார்கள். ஆனால் தங்கள் பிள்ளைகள் தேவனுக்குப் பயந்து, கர்த்தருக்குப் பிரியமானவர்களாக, சாட்சிகளாக ஜீவிக்க வேண்டும் என்பது குறித்தோ, மோட்சத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுள்ளவர்களாகும்படிக்கோ அவர்களை கடிந்து கொள்வது கிடையாது. ஆனால் தேவன் தமது ஜனங்களை ஜீவனுக்கு ஏதுவாக அல்லது மோட்சத்திற்கு ஏதுவாக கடிந்து கொள்கிறார் என்பதை நாம் அறிய வேண்டும். தேவ ஜனங்களாகிய பெற்றோர் தங்கள் பிள்ளைகளை தேவ ஞானத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக தங்கள் ஜீவியத்தை தேவனுக்குப் பிரியமானதாக இருக்கும்படியாக அவர்களைக் கடிந்து கொள்ள வேண்டும். முயற்சிப் போமானால் கர்த்தர் யாரை ஏன் கடிந்து கொள்கிறார்? என்று சிறிது விபரமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

a) கர்த்தர் யாரை கடிந்துகொள்கிறார்?

"நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்" வெளி.3:19.

தேவன் எல்லோரையும் கடிந்து கொள்வதில்லை. அவர் யாரை நேசிக்கிறாரோ அவர்களைத்தான் கடிந்துகொண்டு சிட்சிக்கிறார் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

b) கர்த்தர் ஏன் கடிந்துகொள்கிறார்?

"அக்கிரமத்தை விட்டுத் திரும்பும்படி அவர்கள் செவியைத் திறந்து கடிந்துகொள்கிறார்"யோபு 36:40.

தேவ ஜனங்கள் தங்கள் பாவமான ஜீவிய முறைகளை விட்டு தேவனிடமாகத் திரும்ப வேண்டும் என்றுதான் தேவன் கடிந்துகொள்கிறார் என்பதை நாம் மறக்கக்கூடாது.

கிருபையாக கொடுக்கப்பட்டிருக்கும் இந்த நாட்களில் தேவ ஜனங்கள் கர்த்தர் தாம் நேசிக்கிற தமது ஜனங்களை அவர்கள் தங்கள் பாவ ஜீவியத்தைவிட்டு தேவனிடமாக திரும்பவேண்டும் என்றுதான் தேவன் தங்களை கடிந்துகொண்டு சிட்சிக்கிறார் என்பதை அறிந்து அதின்மூலம் தேவ ஞானத்தைப் பெற்றுக் கொண்டவர்களாக கர்த்தருக்குப் பயந்து ஜீவிக்க அறிந்திருக்க வேண்டும்.

7. ஞானிகளோடு சஞ்சரிப்பதின்மூலம் ஞானத்தை பெற்றுக்கொள்ள முடியும்

"ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்" நீதி.13:20.

ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. *You tell me your friend and I will tell your character*.இதைத் தமிழில் சொன்னால் உன் நண்பன் யார் என்று சொல் ;நான் உன் குணாதிசயத்தைச் சொல்கிறேன் என்பதாகும். நாம் எவ்விதமான மனிதர்களோடு பழகுகிறோமோ அதற்கேற்றபடி நமது சுபாவமும் மாறும் என்பதை நாம் அறிய வேண்டும். இந்த நாட்களில் விசுவாசிகளிலும் அநேகர் இந்த உலகின் ஜனங்களாகிய குடிகாரர், விபசாரக்காரர், பொருளாசைக்காரர் போன்ற

மனிதர்களோடு ஐக்கியம் வைக்கிறவர்களாக இருந்து தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தைக் குறித்த விழிப்புடையவர்களாய் இராததினால் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தைக் கறைப்படுத்தி தங்களையே நஷ்டப்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் ஒரு மனிதன் தேவ ஞானத்தைப் பெற்ற ஞானவான்களாகிய தேவ ஞானிகளோடு ஐக்கியம் கொள்கிறவனாயிருந்தால் நிச்சயம் இவ்வித மனிதனும் தேவ ஞானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

5. நாம் புத்திமான்களாக ஜீவிப்பதின்மூலமும், புத்தியைக் கேட்பதின்மூலமும் நாம் ஞானவான்களாக ஆகலாம்

"புத்திமானுக்கோ ஞானம் உண்டு" நீதி.10:23, 14:33. "நீங்கள் புத்தியைக்கேட்டு ஞானமடையுங்கள்" நீதி.8:33.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் புத்திமானுக்கு ஞானம் உண்டு என்று கூறப்பட்டுள்ளது. யார் புத்திமான் என்று கேட்கலாம். புத்தியை உடையவன்தான் புத்திமான். புத்தி என்றால் பொல்லாப்பை விட்டு விலகுவது தான் புத்தி என்று யோபு 28:28 -ல் கூறப்பட்டுள்ளது. இங்கு பொல்லாப்பு என்ற வார்த்தை பாவம் என்ற கருத்திலேயே கூறப்பட்டுள்ளது. ஆகவே நமது ஜீவியத்தில் பொல்லாப்பான காரியங்களை விட்டு விலகுவதே நாம் பெற்றுக்கொள்ளும் புத்தி ஆகும்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இரண்டாவது வசனத்தில் புத்தியைக் கேட்டு ஞானமடையுங்கள் என்று கூறப்பட்டுள்ளது. இதில் புத்தி என்பது ஆலோசனை அல்லது கட்டளைகளைக் குறிக்கும். நாம் தேவ ஆலோசனைகள் அல்லது தேவ கட்டளைகளைக் கேட்டு அதின்படி செயல்படும்பொழுது நாம் ஞானமாக எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்கமுடியும்.

6. தாழ்ந்த சிந்தையிருப்பவர்களிடம் ஞானம் இருக்கும்

"தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் (Lowly) *ஞானம் உண்டு" நீதி.11:2.*

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தாழ்ந்த சிந்தை என்பது நம்மில் காணப்பட வேண்டிய தாழ்மையின் சுபாவத்தைக் குறிப்பதாகவுள்ளது. இன்றைய மனிதர்கள் பெரும்பாலும் மேட்டிமையான சுபாவமுடையவர்களாய் காணப்படுகிறார்கள். இவ்வித மனிதர்களிடத்தில் தேவ ஞானம் தங்கமுடியாது. தாழ்ந்த சிந்தையுள்ளவர்கள் அல்லது தாழ்மையாயிருப்பவர்களுக்குத்தான் ஞானம் உண்டு என்பதை நாம் அறிந்து நம்மில் மேட்டிமையான சுபாவம் காணப்படாதபடி நம்மைக் காத்துக்கொள்வது நமக்கு மிகவும் அவசியமாகவுள்ளது.

B. ஞானம் குறித்து நாம் செய்ய வேண்டியக் காரியங்கள்

இதுவரையில் ஞானத்தை எவ்விதம் பெறுவது என்று பார்த்தோம். ஞானம் குறித்து நாம் என்ன செய்ய வேண்டும்? என்று சிறிது விபரமாக அறிந்து கொள்ள பார்ப்போம்.

1. செவியை ஞானத்திற்கு சாய்த்து ஞானத்தை வா என்று கூப்பிடுவது

"என் மகனே, நீ உன் செவியை ஞானத்திற்குச் சாய்த்து,....ஞானத்தை வா என்று கூப்பிட்டு,...." நீதி.2:1-3.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஞானத்திற்கு செவியை சாய்ப்பது என்பது ஞானத்திற்கு நமது செவியை சாய்த்து ஞானம் என்ன சொல்கிறது என்று கேட்பதாகும். ஆம் ஞானமாகிய இயேசு என்ன சொல்கிறார் என்று நமது செவியைச் சாய்த்துக்கேட்டு ஞானமாகிய இயேசுவை வாரும் என்று கூப்பிட்டு அவரை நமது இருதயத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

2. ஞானத்தை சகோதரி என்று சொல்வது

"ஞானத்தை நோக்கி, நீ என் சகோதரி என்றும்....சொல்வாயாக" நீதி.7:5.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் சகோதரி என்பது நாம் விருப்பங்கொள்வது அல்லது பிரியப்படுவது என்பதைக் குறிப்பிடுவதாகும். ஆகவே நாம் ஞானத்தின்மீது நாம் மிகவும் அதிகமாய் பிரியம் கொள்ள அல்லது விருப்பம் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

3. ஞானத்தை வாங்குவது / சம்பாதிப்பது

"அப்படியே ஞானத்தையும் வாங்கு" நீதி. 23:23, 16:15,4:5,7.

ஒரு பொருளை நாம் வாங்கவேண்டும் என்றால் அதற்கான கிரயத்தை நாம் கொடுக்கவேண்டும். அதுபோலவே நாம் ஞானத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அதற்குக் கிரயமாக நம்மில் காணப்படும் மதியீனம், பேதமை, பைத்தியம் போன்ற எல்லாத் தவறான சுபாவங்களையும் நாம் கொடுத்துவிட வேண்டும். (விட்டுவிட வேண்டும்)

4. மெய் ஞானத்தைக் காத்துக்கொள்வது

"என் மகனே...மெய் ஞானத்தைக்...காத்துக்கொள்" நீதி. 3:21.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் மெய்ஞானம் என்பது சரியான தேவ ஞானம் என்பதைக் குறிக்கும். அதாவது உலக ஞானம் அல்லது சரீரப்பிரகாரமான ஞானம் என்றல்லாது சரியான தேவ ஞானத்தை நாம் காத்துக்கொள்ள வேண்டும் என்பதாகும். நாம் தேவ ஞானத்தைக் காத்துக்கொள்ள வேண்டும் என்றால் நாம் நம்மில் மதியீனமானக் காரியங்கள் காணப்படாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இதைக் கீழ்க்கண்ட வேத வசனம் நமக்கு நன்கு விளக்கும்.

"செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப் போகப் பண்ணும் ; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்" பிரசங்கி 10:1.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் எவ்விதம் செத்த ஈக்கள் நல்ல பரிமள தைலத்தை நாறி கெட்டுப்போகப்பண்ணுமோ அதுபோல மனிதனில் காணப்படும் மதியீனமானது அவனை முழுவதுமாகக் கெடுத்துவிடும். இந்த வசனத்திற்கு ஒரு நல்ல உதாரணமாக சாலமோன் ராஜாவின் வாழ்க்கை அமைந்திருப்பதை நாம் அறியக்கூடும். சாலமோன் ராஜா சிறந்த ஞானத்தைப் பெற்றவனாக இருந்தாலும் அவன் மதுபானம் அருந்துகிறவனாகவும், மதியீனத்தைப் பற்றிக்கொண்டு இருப்பவனாகவும் காணப்பட்டான் என்று *பிரசங்கி.2:3*-ல் கூறப்பட்டுள்ளது. அவனில் காணப்பட்ட மதியீனமானக்

காரியம் பற்றி *I இராஜா.11*-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. அவன் அநேகம் அந்நிய ஜாதிப் பெண்களை தனக்கு மனைவிகளாக்கிக் கொண்டான். அவர்கள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள் என்றும் *I இராஜா.11*-ம் அதிகாரத்தில் மூன்றாம், நான்காம் வசனங்களில் கூறப்பட்டுள்ளது.

சாலமோன் ராஜா சிறந்த ஞானியாக இருந்தாலும் அவனில் காணப்பட்ட மதியீனமானது அவன் தேவ ஆசீர்வாதங்களை இழக்கும்படிச் செய்தது. இது குறித்து நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

5. நாம் ஞானத்தைப் பெற்றவர்கள் என்று நமது நடக்கையினாலே காண்பிக்க வேண்டும்

"உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கை யினாலே காண்பிக்கக்கடவன்''யாக்.3:13.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தேவ ஞானத்தைப்பெற்ற ஒரு மனிதன் தன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை அதாவது தனது செயல்பாடு களை தனது நல்ல நடக்கையினாலே அதாவது தனது நல்ல ஜீவிய முறை யினாலே மற்றவர்களுக்கு தான் ஞானத்தைப் பெற்றவன் என்று காண்பிக்க வேண்டும். தேவ ஞானத்தைப் பெற்றவன் சாந்தகுணம் உடையவனாகக் காணப்படுவது மிகவும் அவசியமாகவுள்ளது என்று நாம் அறியலாம்.

6. ஆலோசனையைக் கேட்டு புத்திமதியை ஏற்றுக்கொள்ள வேண்டும்

''உன் அந்தியகாலத்தில் நீ ஞானமுள்ளவனாயிருக்கும்படி, ஆலோ சனையைக் கேட்டு, புத்திமதியை ஏற்றுக்கொள்'' நீதி.19:20.

நாம் நமது முதிர்வயதிலும் ஞானமுடையவர்களாய் இருக்கவேண்டும் என்றால் நாம் இளவயதுள்ளவர்களாயிருக்கும்போதே தேவ ஆலோசனைகளை, புத்திமதிகளை கேட்டு அதற்கு ஏற்றவாறு செயல்படுகிறவர்களாகக் காணப்படுவது மிகவும் அவசியமாகவுள்ளது. இன்று அநேகர் ஆலோசனையைக் கேட்கவும், புத்திமதியை ஏற்றுக்கொள்ளவும் விருப்பம் இல்லாதவர்களாகக் காணப்படுவதினால் அவர்கள் தங்கள் வயோதிப நாட்களில் ஞானமற்ற வர்களாகச் செயல்பட ஆரம்பித்து விடுகிறார்கள். ஆகவே நாம் எப்போதும் தேவ ஆலோசனையைக் கேட்கிறவர்களாகவும், புத்திமதிகளை ஏற்றுக்கொள்கிற வர்களாகவும் காணப்படுவது மிகவும் அவசியமானது என்று நாம் அறிய வேண்டும்.

நமது சரீர அவயவங்களும் – தேவ ஞானமும்

நமது சரீர அவயவங்களில் எந்த எந்த அவயவங்களில் தேவ ஞானம் காணப்படவேண்டும் என்பது குறித்து இந்த அத்தியாயத்தில் விபரமாக அறிந்து கொள்ளப்பார்ப்போம். நமது சரீரத்தின் அவயவங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவைகள் 1. நமது சரீரத்தில் வெளிப்புறமாக நாம் காணக்கூடியதான அவயவங்கள். அவைகள் கண், காது, வாய், கைகள், கால்கள் ஆகும். 2. நமது சரீரத்தில் காண முடியாததாகவுள்ள சரீர அவயவங்கள் இருதயம், மனது(mind) ஆகியவை ஆகும்.

நமது சரீரத்தின் வெளிப்புறத்தில் உள்ள கண், காது, வாய், கைகள், கால்கள் ஆகிய அவயவங்கள் செயல்பட நமது சரீரத்தில் உள்ளாக அமைந்துள்ள இருதயம், மனது ஆகிய அவயவங்கள் காரணமாகவுள்ளது என்பதை நாம் அறிய வேண்டும். அதுபோலவே இருதயத்திலும், மனதிலும், ஞானத்தைப் பெற்றவர்களின் வெளிப்புற சரீர அவயவங்கள் மிகவும் சிறப்பாக செயல்படும் என்பதையும் நாம் அறிய வேண்டும். இந்தப் பகுதியில் முதலாவது நமது சரீரத்தின் உள்ளாக அமைந்துள்ள அவயவங்கள் பற்றியும் பின்னர் நமது சரீரத்தின் வெளிப்புறத்தில் அமைந்துள்ள அவயவங்கள் பற்றியும் நாம் விபரமாக அறிந்துகொள்ளப் பார்ப்போம்.

A. இருதயமும் - தேவ ஞானமும்

நமது சரீர அவயவங்களில் இருதயமானது மிகவும் முக்கியமான அவயவம் ஆகும். ஏனெனில் இந்த இருதயம் சரீரத்தின் வெளியே உள்ள அவயவங்களாகிய கண், காது, வாய், கைகள், கால்கள் ஆகிய வெளிப்புற அவயவங்கள் செயல்பட காரணமாக உள்ளது. ஆகவே இந்த இருதயம் ஞானத்தைப் பெற்றதாக இருப்பது மிகவும் அவசியமாகும். இந்த இருதயத்தைக் குறித்து சில முக்கியமானக் காரியங்களை வேத வசனத்தின் அடிப்படையில் நாம் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1. இருதயத்தின் தன்மை

முதலாவது நமது இருதயம் எத்தன்மையுடையது? என்று நாம் அறிந்திருக்க வேண்டும். நமது இருதயம் எத்தன்மையுடையது என்பதை கீழ்க்கண்ட வேத வசனங்களின் மூலம் நாம் நன்கு அறிய முடியும்.

a) நமது இருதயத்தின் நினைவுகள் பொல்லாதது என்று தேவனே சாட்சி கொடுத்தார்

"அவன் இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டார். " ஆதி.6:5."எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?" எரேமியா. 17:9.

b) இருதயத்திற்குள்ளிருந்து புறப்படுகிறவைகள் மனிதனைத் தீட்டுப்படுத்தும் தன்மையுடையது

"மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப் படுத்தும்.எப்படியெனில் மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும்,தூஷணமும், பெருமையும், மதி கேடும் புறப்பட்டு வரும். பொல்லாங்கானவைகளாகிய இவை களெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்." மாற்.7:20-23.

c) நமது பொக்கிஷம் (Treasure) எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயம் இருக்கும்

"உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" மத். 6:21, லூக்.12:34.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து நமது இருதயம் எவ்வளவு கேடுபாடான தன்மையுடையதாயிருக்கிறது என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். ஆதியில் தேவன் மனுஷனை சிருஷ்டித்த துவக்க நாட்களிலேயே மனிதனின் இருதயத்தின் நினைவுகளின் தோற்றமானது நித்தமும் பொல்லாதது என்று தேவனே சாட்சி கொடுத்திருக்கிறார். நமது இருதயமானது திருக்குள்ளதும் (Deceitful) மகா கேடுள்ளதாயிருக்கிறது (Desperately Wicked) என்றும், மனிதனின் இருதயத்திற்குள்ளிருந்துதான் *மாற். 7:20-23*-ல் கூறப் பட்டுள்ளதுபோல் எல்லாவிதமான தீமையானக் காரியங்களும் புறப்பட்டு வருகிறது என்றும், மனிதனின் பொக்கிஷம் உலகப் பிரகாரமான ஐசுவரியத்தைப் பற்றியதாகவே இருக்கும் என்பதை நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

2. நம் இருதயத்தில் ஞானம் ஏன் அவசியம்?

நம் இருதயத்தில் ஞானம் ஏன் அவசியம் என்று கீழ்க்கண்ட வசனங்களின் மூலம் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

a) கர்த்தரின் இருதயத்தை மகிழ்ச்சியாக்க நமக்கு ஞான இருதயம் அவசியம்

"என் மகனே, உன் இருதயம் ஞானமுள்ளதாயிருந்தால், என்னிலே என் இருதயம் மகிழும்"நீதி.23:15.

நம் இருதயம் ஞானமுடையதாயிருந்து, நாம் நமது ஜீவியத்தை சரியாக அமைத்துக் கொண்டு, நாம் நமது தேவனின் மகிமையான நாமம் மகிமைப்படும் படியாக எல்லாக் காரியங்களிலும் செயல்படுகிறோம் என்றால், நமது நல்ல ஜீவிய முறைகளின் மூலம், நமது நல்ல செயல்பாடுகளின்மூலம் நமது தேவனின் இருதயம் மகிழ்ச்சியடையும். ஆனால் இன்று அநேகரின் இருதயம் ஞானமற்ற தாயிருந்து, தேவனுக்குப் பிரியமில்லாததையும், தேவனுக்கு அருவருப்பானக்

காரியங்களையும் செய்வதின்மூலம் நமது தேவனின் இருதயத்தை துக்கப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். நாம் தேவனின் இருதயத்தை துக்கப்படுத்துகிறோம் என்றால் அது நமக்குத்தான் வேதனையாக ஆகிவிடும் என்பதை மறக்கக் கூடாது(*அப்.9:5* பார்க்கவும்)

b) ஆசரிப்புக்கூடாரத்தை உண்டாக்க ஞான இருதயம் அவசியம்

"பெசலெயேலையும் அகோலியாப்பையும், கர்த்தரால் ஞானமடைந்து அந்த வேலையைச் செய்யவரும்படி தங்கள் இருதயத்தில் எழுப்புதலடைந்த ஞான இருதயத்தாராகிய எல்லாரையும், மோசே வரவழைத்தான்" *யாத்.36:2-8, 35:10,25,26,28:3.*

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஞான இருதயமுடையவர்களை மோசே ஆசரிப்புக்கூடாரத்தை உண்டாக்க அழைத்தான் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நமது சரீரம் தான் தேவன் தங்கும் ஆலயம் என்று *I கொரி.3:16, 6:19* போன்ற வசனங்களில் கூறப்பட்டுள்ளது. ஆகவே தேவனின் ஆலயமாகிய நமது சரீரத்தை வேத வசனத்தின்படி சரியாக அமைத்துக்கொள்ள நமது இருதயம் ஞானத்தைப் பெற்றுக்கொள்வது மிகவும் அவசியமாகவுள்ளது.

c) நியாயம் விசாரிக்க [அரசாட்சி செய்ய] ஞான இருதயம் வேண்டும்.

"உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க....அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்" I இராஜா.3:9.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் சாலமோன் ராஜா தமது ஜனங்களை நியாயம் விசாரிக்க அதாவது சரியான முறையில் ஆட்சிசெய்ய தனக்கு ஞான இருதயம் வேண்டும் என்று தேவனிடம் கேட்கிறான். ஏனெனில் ஜனங்களை சரியான முறையில் ஆட்சிசெய்ய தனக்கு ஞான இருதயம் வேண்டும் என்பதை சாலமோன் ராஜா உணர்ந்து அதை கர்த்தரிடம் கேட்கிறான். நமது இன்றைய ஆட்சித் தலைவர்களும் தேவனிடம் ஞான இருதயத்தைக் கேட்டுப்பெற்றுக் கொண்டு, கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு, லஞ்ச ஊழல் போன்ற தீமையானக் காரியங்களை விட்டுவிலகி ஆட்சி செய்வார்களென்றால் எவ்வளவு நன்றாயிருக்கும். இன்றைய அரசியல் தலைவர்கள் உலக ஞானம் உடையவர்களாய் ஜாதிக்கலவரங்கள், மதக் கலவரங்களைத் தூண்டிவிடுவதும், லஞ்சம் வாங்குவதும், தெய்வ பயம் இல்லாத துன்மார்க்கரான ரௌடிகளை தூண்டி விட்டு தங்களுக்கு பிடிக்காதவர்களை துன்புறுத்தி, அழிக்க வகைதேடுவதும் இன்றும் இவ்விதமான கொடிய தீமையானக் காரியங்களைத் துணிந்து செய்கிறவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கீழ்த்தரமான மனிதர்கள் எப்படி நியாயமாக, நேர்மையாக, அரசாட்சி செய்ய முடியும். நமது அரசியல் தலைவர்கள் ஞான இருதயத்தைப் பெற்றவர்களாக, கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு ஆட்சி செய்ய நாம் அவர்களுக்காக ஊக்கமாக ஜெபம் செய்ய வேண்டும்.

d) நன்மை தீமை இன்னதென்று வகையறுக்க ஞான இருதயம் வேண்டும்

"நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும் ; ...." I இராஜா.3:9.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் சாலமோன் ராஜா தேவனிடம் தன் வாழ்க்கையில் நன்மை தீமை என்பது இன்னதென்று சரியாக வகையறுக்க எனக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தாரும் என்று கேட்கிறார். மனித வாழ்க்கையில் நன்மை என்பது என்ன என்று கீழ்க்கண்ட வேத வசனம் விளக்குகிறது. ***"மனுஷனே நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார் ; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்." மீகா 6:8***

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் மூன்றுக் காரியங்கள் மனிதனுக்கு நன்மையானது என்று கூறப்பட்டிருப்பதை நாம் அறியலாம். 1)மனிதர் மற்றவர்களிடம் நியாயஞ்செய்கிறவர்களாக இருக்க வேண்டும் 2)மனிதர் தங்களில் இரக்க சுபாவம் உடையவர்களாயிருக்க வேண்டும் 3) மனிதர் தேவனிடம் மனத்தாழ்மையாய் நடந்து கொள்ள வேண்டும். இந்த மூன்று காரியங்களும் விசேஷித்தக் கருத்துடையது என்பதை நாம் அறிய வேண்டும்.

முதலாவது ஒரு மனிதன் மற்றவர்களிடம் நியாயஞ்செய்கிறவனாகக் காணப்படுவான் என்றால் நிச்சயமாகவே அவனிடம் மற்றவர்களுக்கு தீமை செய்யும் சுபாவம் காணப்படாது. இன்றைய மனிதர்களுக்கு நியாயஞ்செய்யும் சுபாவம் இல்லாததினால்தான் அவர்கள் மற்றவர்களுக்கு தீமை செய்கிறவர்களாக கொலைகள், கொள்ளைகள், விபச்சாரம் போன்ற தீமையானக் காரியங்களைத் துணிந்து செய்கிறவர்களாக காணப்படுகிறார்கள்.

இரண்டாவதாக மனிதர் இரக்கத்தை சிநேகிக்க வேண்டும் என்று கூறப் பட்டுள்ளது. இரக்கத்தை சிநேகிப்பது என்பது நம்மில் இரக்க சுபாவம் காணப்பட வேண்டும் என்பதாகும். இரக்கம் என்பது நாம் மற்றவர்கள் மேல் காட்டும் பட்சம் அல்லது பரிவு ஆகும். நம்மில் இரக்க சுபாவம் காணப்பட்டால்தான் நாம் ஆபத்தான சூழ்நிலையில் உள்ளவர்களுக்கு அல்லது நமது உதவியை நாடுகிறவர்களுக்கு நாம் இரங்கி அவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளை யும் செய்யமுடியும். இன்றைய மனிதர் பெரும்பாலும் இரக்கமற்றவர்களாக, மிகவும் கொடியவர்களாகக் காணப்படுகிறார்கள் என்றால் அது மனிதர் இரக்கத்தை சிநேகிக்க மனமற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துவதாக வுள்ளது என்பதை நாம் அறியவேண்டும்.

மூன்றாவதாக மனிதர் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பது என்று கூறப்பட்டுள்ளது. மனத்தாழ்மை அல்லது தாழ்மையாய் நடப்பவர்கள் என்றால் அவர்களிடத்தில் என்ன என்னக் காரியங்கள் காணப்படவேண்டும் என்று கீழ்க்கண்ட வேத வசனங்கள் மூலம் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

"இஸ்ரவேலின் பிரபுக்களும் ராஜாவும் தங்களைத் தாழ்த்திக் கர்த்தர் நீதியுள்ளவர் என்றார்கள்" IIநாளா.12:6 ."அவர்கள் ....விருத்தசேதமன மில்லாத தங்கள் இருதயத்தைத் தாழ்த்தி, தங்கள் அக்கிரமத்துக்குக் கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொண்டால்," லேவி.26:41.

ஒரு மனிதன் தன்னைத் தாழ்த்துவான் என்றால் நிச்சயமாகவே தேவன் தன் செயல்களில் எல்லாம் நீதிபரர் என்று ஒத்துக்கொள்வான். அதுபோலவே தனக்குக் கிடைக்கும் சிட்சை, தண்டனை இவைகளும் நியாயமானது என்று ஒத்துக் கொள்வான். இன்று பெரும்பாலுமான ஜனங்கள் தங்களில் காணப்படும் அறியாமையினாலும், மேட்டிமையினாலும் தேவன் எங்களை சோதிக்கிறார். தேவனுக்கு கண்ணில்லை, காதில்லை என்று சொல்லி தேவனைக் குற்றப்படுத்தப் பார்க்கிறார்களேயொழிய தங்களில் காணப்படும் தவறுகளை ஒத்துக்கொள்வதில்லை.

3. இருதயத்தில் ஞானத்தை எவ்விதம் பெறுவது

நம் இருதயத்தில் ஞானத்தை எவ்விதம் பெறுவது என்பது பற்றி வேத வசனங்கள் மூலம் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

a) தேவனே நம் இருதயத்தை ஞானத்தினால் நிரப்புகிறார்

"சகலவித வேலைகளையும் செய்யும்படிக்கு அவர்களுடைய இருதயத்தை (தேவன்) ஞானத்தினால் நிரப்பினார்" யாத்.35:35,36:2

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஆசரிப்புக்கூடாரத்தை உண்டாக்கும் வேலையை செய்தவர்களின் இருதயத்தை தேவனே ஞானத்தினால் நிரப்பினார் என்று அறிகிறோம். இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது யாதெனில் தேவனின் காரியங்களைச் செய்யும் தேவ ஊழியர்களின் இருதயத்தை தேவனே அவர்களின் தேவைக்கேற்ப ஞான வரங்களினால் நிரப்புகிறார் என்பதை நாம் அறியலாம்.

b) இருதயத்தில் ஞானத்தைப் பெற ஜெபிக்க வேண்டும்

"உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்" I இராஜா. 3:9

சாலமோன் ராஜா தான் ஞான இருதயம் உடையவனாக இருக்கவேண்டியதின் அவசியத்தை உணர்ந்து அதை தேவனிடமே கேட்டுப் பெற்றுக்கொண்டான். இந்நாட்களில் நாமும் நமக்கு எந்த எந்தக்காரியங்களைச் செய்ய நமக்கு ஞானம் வேண்டும் என்று தேவனிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டு அந்தக் குறிப்பிட்டக் காரியத்தில் மிகவும் சிறப்பாக, தேவநாமம் மகிமைப்படும்படியாக நாம் செயல்படுவோம் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

உதாரணமாக ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிற ஒரு மனிதன் தனக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பணியை மிகவும் சிறப்பாகச் செய்துமுடிக்க தேவனிடமிருந்து அந்த விசேஷித்த தேவ ஞானத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டு தனக்குக் கொடுக்கப்பட்ட அந்தப் பணியை மிகவும் சிறப்பாகச் செய்துமுடித்து அதின்மூலம் தேவ நாமம் மகிமைப்படும்படியாகவும், தனக்கும்

நல்ல பெயர் கிடைக்கும்படியாகவும் செயல்படலாமே. இவ்விதமாகவே நமது வாழ்க்கையின் ஒவ்வொரு காரியங்களிலும் நாம் மிகவும் சிறப்பாகச் செயல்பட தேவ ஞானத்தை தேவனிடமிருந்து கேட்டுப் பெற்றுக்கொண்டு நாம் செய்கிற எல்லாக் காரியங்களிலும் மிகவும் சிறப்பாக செயல்பட பார்க்கலாமே ! அதுபோல ஒரு தொழில் செய்யவோ, வியாபாரம் செய்யவோ நம் குடும்பக் காரியங்களில் செயல்படுவதிலோ, நாம் தேவனிடமிருந்து தேவ ஞானமாகிய வரத்தைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு நமது தேவனின் நாமம் மகிமைப்படும்படியாக மிகவும் சிறப்பாக செயல்படலாமே! நமது பிள்ளைகள் கல்வியில் அல்லது செயல்பாடுகளில் ஞானமற்றவர்களாக இருக்கலாம். அப்படியென்றால் *யாக்.1:5*-ல் கூறப்பட்டுள்ளதுபோல "*...ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன் ; அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்*" என்ற வசனத்தின்படி நமது பிள்ளைகளுக்காக ஜெபித்து அவர்கள் தங்கள் கல்வியிலும் மற்றக் காரியங்களிலும் தேவ ஞானத்தைப் பெற்று மிகவும் சிறப்பானவர்களாக ஆகும்படியாகச் செய்யலாமே!

C) இருதயத்தில் ஞானத்தைப்பெற நாம் நமது நிலையற்ற வாழ்நாளைக் குறித்து எண்ணவேண்டும்

"நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்" சங்.90:12 ."என் நாட்கள் புகையைப்போல் ஒழிந்தது ; ...."சங்.102:3.

மேற்கூறப்பட்டுள்ள வேத வசனத்தில் தேவ மனிதனாகிய மோசே தேவனிடம் தேவனே நாங்கள் ஞான இருதயத்தைப் பெற்றுக்கொள்ள எங்கள் வாழ்நாளை எண்ண எங்களுக்குப் போதியும் என்று ஜெபிக்கிறார். நம் வாழ்நாளை நாம் எண்ண முடியாது. நமது முடிவு எப்பொழுது இருக்கும் என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடியாது. மனிதனின் நிலையைக் குறித்து இரண்டாவது அத்தியாயத்தில் விபரமாக எழுதியுள்ளேன்.

இன்று மனிதரில் அநேகர் தாங்கள் இந்த பூமியில் நித்திய நித்திய காலமாக இருக்கப்போவதுபோல் ஆஸ்திக்கு மேல் ஆஸ்தி என்றும், வீடுகளுக்கு மேல் வீடுகள் என்றும் சேர்க்கிறார்கள். ஆனால் அவர்கள் முடிவு சடுதியில் இருக்கும் என்பதை அவர்கள் நினைப்பதில்லை. அவர்கள் தங்கள் நிலையற்ற நிலையை உணர்ந்து தங்கள் இருதயத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயமாகிய ஞானத்தைப் பெற்றுக்கொண்டு தங்கள் சரீரமாகிய ஆலயத்தை வேத வசனமாகிய அஸ்திபாரத்தின்மேல் கட்டினவர்களாய் தங்கள் ஜீவியத்தை தேவன் விரும்பும் வண்ணமாக சிறப்பாக அமைத்துக் கொள்ள தேவ வரமாகிய ஞானத்தையும், தேவனிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டு இந்த உலகில் தேவனுக்கு மகிமையாக ஜீவிப்பார்கள் என்றால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

4. இருதயத்தில் ஞானமுடையவன் அல்லது ஞானியின் இருதயம் எத்தன்மை யுடையது?

இருதயத்தில் ஞானமுள்ளவன் அல்லது ஞானியின் இருதயம் எத்தன்மை யுடையது என்று வேத வசனங்களின்மூலம் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

a) இருதயத்தில் ஞானமுள்ளவன் கட்டளைகளை ஏற்றுக்கொள்கிறான்

"இருதயத்தில் ஞானமுள்ளவன் கட்டளைகளை ஏற்றுக்கொள்கிறான்" நீதி.10:8

ஒரு மனிதன் தன் இருதயத்தில் ஞானமுள்ளவனாக இருப்பான் என்றால் அவன் தேவ கட்டளைகளை தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு அதற்கு முழுவதுமாகக் கீழ்ப்படிந்து அவைகளுக்கு ஏற்றபடி தன் ஜீவியத்தை அமைத்துக்கொள்வான். இன்று உலகின் ஜனங்கள் தெய்வபயமாகிய தேவ ஞானம் இல்லாதவர்களாக இருப்பதினால் தான் தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மனமற்றவர்களாயிருந்து எல்லாவித தீமையானக் காரியங்களையும் துணிகரமாகச் செய்கிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள்.

b) இருதயத்தில் ஞானமுள்ளவன் விவேகி (Prudent)

"இருதயத்தில் ஞானமுள்ளவன் விவேகியென்னப்படுவான்" நீதி.16:21.

"தன் வழியைச் சிந்தித்துக் கொளவது விவேகியின் ஞானம்" நீதி.14:8.

"விவேகியோ தன் நடையின்மேல் கவனமாயிருக்கிறான்" நீதி. 14:15.

மேற்கூறப்பட்டுள்ள வேத வசனங்களில் கூறப்பட்டிருக்கும் விவேகி என்ற வார்த்தைக்கு ஆங்கில வேத புத்தகத்தில் (Prudent) என்ற வார்த்தையும், (Man of understanding) என்ற வார்த்தையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவைகளின் பொருள் Prudent என்றால் கவனமுள்ளவன், ஜாக்கிரதையுள்ளவன் என்றும், Man of understanding என்றால் புரிந்து கொள்ளும் அல்லது அறிந்து கொள்ளும் திறனுடையவன் என்றும் அறிந்து கொள்ளலாம்.

மேற்கூறப்பட்டுள்ள வேத வசனங்களில் முதல் வசனத்தில் இருதயத்தில் ஞானமுள்ளவன் விவேகி என்னப்படுவான் என்பதிலிருந்து விவேகி என்பவன் தன் இருதயத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயமாகிய ஞானத்தையுடையவனாக இருப்பவன் என்று அறியலாம். இதே கருத்தை உறுதிப்படுத்தும் வண்ணமாக பின்கூறப்பட்டுள்ள இரண்டு வசனங்களும் அமைந்துள்ளது என்பதையும் அறியலாம். இந்த வசனங்களில் கூறப்பட்டுள்ள வழி, நடை என்ற வார்த்தைகள் நாம் அமைத்துக்கொள்ளும் ஜீவிய முறைகளைக் குறிப்பதாகவுமுள்ளது என்பதையும் நாம் அறிய வேண்டும்.

இன்றைய தேவ ஜனங்களாகிய நாம் விவேகிகளாக ஜீவிக்கின்றோமா ? இன்று பெரும்பாலுமான தேவ ஜனங்களும், தேவ ஊழியர்களும் தங்கள் ஜீவியத்தைக் குறித்து ஜாக்கிரதையுள்ளவர்களாக, ஏனோதானோ என்று அல்லவா ஜீவிக்கிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள்.

c) ஞானியின் இருதயம் அறிவையூட்டும்

"ஞானியின் இருதயம் அவன் வாய்க்கு அறிவையூட்டும்" நீதி.16:23

இந்த அத்தியாயத்தின் துவக்கத்திலேயே மனிதனின் இருதயம் எத்தன்மை யுடையது என்று விளக்கமாக எழுதியுள்ளேன். *"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்"* என்று *மத்.12:34-*ல் கூறப்பட்டுள்ளது. நமது இருதயம் *மாற்.7:20-23-*ல் கூறப்பட்டுள்ள தீமையானக்காரியங்கள் உடையதாக இருக்கும் என்றால் நமது வாயின் பேச்சும் தீமையுள்ளதாகவும், அசுத்தமான தாகவும் இருக்கும். ஆனால் ஞானியின் இருதயம் தெய்வபயம் உடையதாக இருப்பதினால் தீமையானக் காரியங்கள் அதில் காணப்படாதபடி காத்துக் கொள்வதினால் அது அந்த மனிதனின் வாய்க்கு நல்லக் காரியங்களைப் பேசும்படியான அறிவைக் கொடுப்பதாகவுள்ளது. ஆகவே நமது இருதயத்தில் ஞானம் உடையவர்களாக இருப்பது எவ்வளவு முக்கியம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

d) ஞானியின் இருதயம் துக்கவீட்டிலே இருக்கும்

"ஞானியின் இருதயம் துக்கவீட்டிலே இருக்கும் ; மூடருடைய இருதயம் களிப்பு வீட்டிலே இருக்கும்" பிரசங்கி7:4

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஞானிகளின் இருதயம் துக்கவீட்டிலே இருக்கும் என்பது ஞானிகளின் இருதயம் துக்கவீட்டுக்குப் போக விரும்பும் என்பதைக் குறிப்பதாகவுள்ளது. ஏனெனில் துக்கவீட்டில் எல்லா மனிதர்களின் முடிவைப் பற்றியும் சிந்திக்க ஏதுவுண்டு. இந்த அத்தியாயத்தின் துவக்கத் திலேயே மனிதன் எவ்வளவு நிலையற்றவனாயிருக்கிறான் என்றும் அவன் முடிவு எவ்வளவு சடுதியில் வருகிறது என்பது பற்றியும் விபரமாக எழுதியுள்ளேன். ஆகவே மனிதர் துக்கவீட்டிற்கு போகும்பொழுது அன்று அந்த குறிப்பிட்ட மனிதனுக்கு வந்த முடிவு நாளை எனக்கும் வரும் என்பதை சிந்தித்து தன் ஜீவியத்தை சரிசெய்து கொள்ள ஏதுவாக இருக்கும். ஆனால் இன்றைய மனிதர்கள் எத்தனை துக்கவீட்டுக்குப் போனாலும் தங்கள் முடிவைப்பற்றி எண்ணமுடியாதவர்களாய் உணர்வற்றவர்களாக அல்லவா இருக்கிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள்.

e) ஞானியின் இருதயம் காலத்தையும் நியாயத்தையும் அறியும்

"ஞானியின் இருதயம் காலத்தையும் நியாயத்தையும் அறியும்" பிரசங்கி 8:5

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நியாயம் என்ற வார்த்தைக்கு ஆங்கில வேத புத்தகத்தில் (Judgement) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தையின் பொருள் நியாயத்தீர்ப்பு என்பதாகும். அப்படியென்றால் ஞானியின் இருதயம் இந்தக் காலத்தையும் இந்த நாட்களில் வரப்போகும் தேவனின் நியாயத்தீர்ப்பையும் குறித்து அறிந்துகொள்ளும் என்பதாகும். ஆண்டவராகிய இயேசுவும் அன்றைய ஜனங்களைப்பார்த்து மாயக்காரரே பூமியின் தோற்றத்தை யும், வானத்தின் தோற்றத்தையும் நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே. இந்தக் காலத்தையோ நிதானியாமற்போகிறதென்ன *(லூக்.12:56)* என்றார்.

அதுபோலவே அப்போஸ்தலனாகிய பவுலும் எபேசு சபையினரைப் பார்த்து நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் என்று *எபே.5:16*-ல் கூறியுள்ளார்.

ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்தின் முடிவு காலத்தில் நடக்கப்போகும் சம்பவங்கள் பற்றி *மத்தேயு 24*-ம் அதிகாரத்தில் விளக்கமாகக் கூறியுள்ளார். நாம் ஞான இருதயம் உடையவர்களாயிருந்தால் நிச்சயமாகவே இந்த நாட்களின் சம்பவங்களைப் பார்க்கும்பொழுது நிச்சயமாகவே நமது ஆண்டவராகிய இயேசு கூறியதுபோல் இந்த உலகத்தின் முடிவு வெகு சமீபமாயிருக்கிறது என்றும் நமது தேவனின் நியாயத் தீர்ப்பின் நாள் வெகு சீக்கிரமாய் வரப்போகிறது என்பதையும் அறிந்து. இந்த நாட்களைப் பிரயோஜனப்படுத்திக் கொள்கிறவர்களால் தாங்கள் பெற்ற இரட்சிப்பைக் காத்துக் கொள்கிறவர்களாகவும், மற்றவர்களையும் இரட்சிப்புக்குள்ளாக நடத்துகிறவர்களாகவும் இருப்போம். இன்றைய தேவ ஜனங்களாகிய நாம் இதையாச் செய்கிறோம். உலகத்துக்குள்ளாக மயங்கினவர் களாக அல்லவா இருக்கிறோம். நமது மயக்கம் தெளிய தேவன் தாமே கிருபை செய்வாராக!

5. இருதயத்தில் ஞானத்தையுடையவர்களுக்குரிய ஆசீர்வாதம்

நாம் நமது இருதயத்தில் தேவஞானத்தைப் பெற்றவர்களாக ஜீவிக்கும் பொழுது நாம் நம் வாழ்க்கையில் சில சிறப்பானக் காரியங்களைப் பெற்றுக் கொள்கிறோம். நாம் பெற்றுக்கொள்ளும் சிறப்பானக் காரியங்கள்பற்றி சிறிது விளக்கமாகப் பார்ப்போம்.

a) நமது ஞானத்தைப் பற்றிக் கேட்க அநேகர் நம்மிடம் வருவார்கள்

"சாலமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காக, சகல தேசத்தாரும் அவன் முகதரிசனத்தைத் தேடினார்கள்" I இராஜா.10:24

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தேவன் சாலமோனின் இருதயத்திலே ஞானத்தைக் கொடுத்தார். அந்த விசேஷித்த ஞானத்தைப் பற்றி அநேக ஜாதியினர் கேள்விப்பட்டு அவனின் விசேஷித்த ஞானத்தைப்பற்றிக் கேட்க அவனிடம் வந்தார்கள். சேபாவின் ராஜ ஸ்திரீயும் மிகுந்த பரிவாரத்தோடு சாலமோனின் ஞானத்தைக் கேட்க வந்தாள் என்று இதே *I இராஜா. 10:1* –ல் கூறப்பட்டுள்ளது. இன்றைய தேவ ஜனங்களாகிய நாமும் இவ்விதம் விசேஷித்த ஞானத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டவர்களாக கர்த்தருக்கென்று விசேஷித்த முறையில் செயல்படுவோம் என்றால் நம்மையும் காணவேண்டும் என்று நம்மிடம் அநேகர் வருவார்கள். தேவ ஜனங்களாகிய நாம் இவ்விதம் செயல்படுகிறோமா? நாம் கொஞ்சம் முயற்சி செய்வோம் என்றால் மிகவும் நன்றாயிருக்குமே!

b) நாம் பெறும் ஞானத்தின் மூலமாக நாம் தீமையானக் காரியங்களிலிருந்து காக்கப்படுகிறோம்

"ஞானம் உன் இருதயத்தில் பிரவேசித்து, அறிவு உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்போது, நல்யோசனை உன்னைக் காப்பாற்றும், புத்தி உன்னைப் பாதுகாக்கும்" நீதி. 2:10,11

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களை இந்த அத்தியாயத்தின் முதல் வசனத்திலிருந்து 19-ம் வசனம் வரை வாசித்துப்பார்ப்பது நல்லது. இந்த வசனங்களிலிருந்து ஒரு மனிதன் தேவ ஞானத்தைப் பெற்றுக்கொள்ள என்ன செய்யவேண்டும் என்றும், அவன் தேவ ஞானத்தைப் பெற்றுக்கொள்ளும் பொழுது அவன் பெறும் ஆசீர்வாதமானக் காரியங்கள் என்ன என்றும் அறிந்துகொள்ளலாம்.

இந்த அத்தியாயத்தில் மூன்றாம் வசனத்தில் ஞானத்தை வா என்று கூப்பிடுகிறது என்பது ஞானமாகிய இயேசுவை நமது இருதயத்தில் அழைத்து ஏற்றுக்கொள்வது என்பதாகும். நாம் ஆண்டவராகிய இயேசுவை நமது இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும் பொழுது நாம் கர்த்தருக்குப் பயப்படுதலை இன்னதென்று சரியாக உணர்ந்து கொண்டு தேவனை அறிந்துகொள்ளுகிற அறிவையும் பெற்றுக்கொள்கிறோம் என்பதை கீழ்க்கண்ட வேத வசனத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

"ஞானத்தை வா என்றுக் கூப்பிட்டு, புத்தியைச் சத்தமிட்டு அழைத்து, அதை வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடுவாயாகில், அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்" நீதி.2:3,4,5.

இவ்விதம் ஞானமாகிய இயேசு நம் இருதயத்தில் வரும்பொழுது *(வச.10)* நமது யோசனைகள், சிந்தனைகள் இவைகளில் முற்றிலும் மாற்றம் உண்டாகிறது. இவ்விதம் நம்மில் உண்டாகும் நல்யோசனையானது நம்மை எல்லாத் தீமையானக் காரியங்களிலிருந்தும், தீமையான மனிதர்களிடமிருந்தும் நம்மை விலக்கிக் காப்பதாகவுள்ளது. எந்த எந்த மனிதர்களிடமிருந்து அல்லது எந்த எந்தக் காரியங்களிலிருந்து நாம் காக்கப்படுகிறோம் என்பது பற்றி *12-ம் வசனத்திலும்* அதின் பின் உள்ள வசனங்களிலும் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அவைகளைப்பற்றி சிறிது விபரமாகப் பார்ப்போம்.

c) **துன்மார்க்கருடைய வழிக்குக் காக்கப்படுவது** *(வச.12)*

நாம் துன்மார்க்கரின் வழிக்குக் காக்கப்படவேண்டும் என்றால் துன்மார்க்கன் யார், அவன் வழி எத்தன்மையுடையது, ஏன் அவன் வழியினின்று காக்கப்பட வேண்டும் என்று நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

துன்மார்க்கன் யார் என்று *சங்.36:1, 10:4* ஆகிய வசனங்களில் கூறப் பட்டுள்ளது. இந்த வசனங்களிலிருந்து துன்மார்க்கன் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாதவன் தேவன் இல்லையென்று சொல்கிறவர்கள் என்றும் அறிந்து கொள்ளலாம். இவ்வித துன்மார்க்கரின் வழி எத்தன்மையுடையது என்று கீழ்க்கண்ட வேத வசனங்கள் மூலம் நாம் அறிந்துகொள்ளப் பார்ப்போம்.

"அவன் (துன்மார்க்கன்) வழிகள் கேடுள்ளவைகள் (grievous - *கொடூரமானது) சங்.10:5."துன்மார்க்கருடைய பாதையோ காரிருளைப் போலிருக்கும் தாங்கள் இடறுவது இன்னதில் என்று அறியார்கள்" நீதி. 4:19.*

"துன்மார்க்கருடைய வழியோ அவர்களை மோசப்படுத்தும்" (Seduceth - *தீய* செயல் செய்யத் தூண்டும்) *நீதி.12:26. "துன்மார்க்கருடைய வழி கர்த்தருக்கு அருவருப்பானது"* (abomination) *நீதி.15:9.*

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து தெய்வபயம் இல்லாத துன்மார்க்கரின் வழி எத்தன்மையுடையது என்று நன்கு அறிந்துகொள்ளலாம். இதில் துன்மார்க்கரின் வழி என்பது ஜீவிய முறையைக் குறிப்பதாகவுள்ளது. துன்மார்க்கரின் வழி கேடுள்ளது என்பது ஆங்கில வேதபுத்தகத்தின்படி கொடூரமானது என்று கூறப்பட்டுள்ளது. ஆம் இந்த தெய்வபயம் இல்லாத துன்மார்க்கரின் செயல்பாடுகளைப்பற்றி எண்ணும்போதே நடுக்கம் உண்டாகிறது. ஒன்றும் அறியாத பொது ஜனங்களின் உயிர்களை கொலை செய்கிறார்கள். பொது இடங்கள், வாகனங்கள், ஆகாய விமானங்கள் போன்ற தேசிய சொத்துக்களை குண்டுகள் வைத்து அழிக்கப்பார்க்கின்றனர். இன்றைய அரசியல்வாதிகளும் மகா கொடிய துன்மார்க்கராக இருந்து எல்லாவிதமான குழப்பங்களையும் உண்டாக்குகிறார்கள். இவ்வித துன்மார்க்க மனிதரால் எவ்வளவு கொடூரமானக் காரியங்கள் நடைபெறுகிறது என்பதை எளிதில் எவரும் அறிந்து கொள்ளலாம்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இரண்டாவது வசனம் துன்மார்க்கருடைய வழி காரிருளைப் போலிருக்கும் என்பது, ஒரு மனிதன் காரிருளில் செல்கிறவனாக இருந்தால் அந்த மனிதனால் தனக்கு முன் இருக்கும் ஆபத்தை அறிந்துகொள்ள முடியாது. அதுபோலத்தான் துன்மார்க்கரின் வழியும் இருக்கும். மூன்றாவது வசனத்தில் துன்மார்க்கரின் வழி அவர்களை மோசப்படுத்தும் என்பது ஆங்கில வேத புத்தகத்தின் வார்த்தையின்படி துன்மார்க்கரின் வழி அவர்களை தீமையானக் காரியங்கள் செய்ய, அவர்களைத் தூண்டும் என்றும் அறிந்து கொள்ளலாம்.

இவ்விதமாக மிகவும் கொடூரமானதும், காரிருளைப் போலிருந்து அவர்களை இடறச் செய்வதற்கு ஏதுவானதும், அவர்களை தீமை செய்யத் தூண்டுவதாக உள்ளதுமான இந்தத் துன்மார்க்கரின் வழியானது தேவனுக்கு அருவருப்பான வழி என்று நான்காவது வசனத்தின் மூலமாக அறிகிறோம்.

d) **மாறுபாடு பேசுகிற மனுஷனுக்குக் காக்கப்படுவது** *(வச.12)*

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் மாறுபாடு என்ற வார்த்தைக்கு ஆங்கில வேத புத்தகத்தில் (Perverse) என்ற வார்த்தை கூறப்பட்டுள்ளது. இதன் பொருள் நல்ல வழியிலிருந்து தப்பான வழியில் திருப்புவது, உண்மையான விசுவாசத்தை விட்டு விலகச்செய்வது, தவறானக் காரியங்களில் பிடிவாதம் காட்டுவது, குதர்க்கமாக அர்த்தம் செய்வது என்று கூறப்பட்டுள்ளது. இன்று பெரும்பாலுமான தேவ ஊழியர்களும் இவ்விதமானக் காரியங்களைத்தானே செய்கிறார்கள். சத்தியத்திற்கு நேராக செல்லவேண்டும் என்று விரும்புகிற ஜனங்களை தவறான வழியில் திருப்புவதும், உண்மையான விசுவாசத்தை விட்டு ஜனங்களை விலகச் செய்வதும், தவறான காரியங்களில் பிடிவாதம் காட்டுவதும், வேத வசனங்களை குதர்க்கமாக அர்த்தம் சொல்லி ஜனங்களை குழப்பத்திற்குள்ளாக்கியும் தானே போதிக்கிறார்கள். தேவ ஞானத்தைப்பெற ஒரு மனிதன் இவ்விதமானக்

காரியங்களிலிருந்து காக்கப்படுவான் என்பது எவ்வளவு சிறப்பானக் காரியம் பாருங்கள். ஆகவே நாம் தேவ ஞானத்தைப் பெற்றுக்கொள்வது எவ்வளவு முக்கியம் என்று நாம் எல்லாரும் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும்.

e) அந்தகார வழிகளில் நடக்க நீதிநெறிகளை விட்டுத் தீமை செய்ய மகிழ்ந்து, துன்மார்க்கருடைய மாறுபாடுகளில் களிகூறுகிறவர்களுக்கும் காக்கப்படுவது *(வச.13,14)*

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் அந்தகாரத்தில் நடப்பதற்காக நீதி நெறிகளை விட்டு என்பது சிலர் துணிகரங்கொண்டு கொலைகள், கொள்ளைகள், விபச்சாரம் போன்றக் காரியங்களைச் செய்வதற்காக நீதிநெறியாகிய, நேர்மையான, நீதியான வழியை விட்டுவிட்டு, மற்றவர்களுக்கும் தீமை செய்வதில் மகிழ்ச்சியடைகிறவர்களாயிருந்து, கர்த்தருக்குப் பயப்படும் பயம் சிறிதளவும் இல்லாத துன்மார்க்கரின் மாறுபாடான காரியங்களில் களிகூறுகிறவர்களும், தன் இருதயத்தில் ஞானத்தைப் பெற்றவன் காக்கப்படுவான் என்று அறியலாம். மாறுபாடு என்ற வார்த்தைக்கு இதர முந்திய பகுதிகளில் விளக்கம் எழுதியுள்ளேன்.

f) மாறுபாடான பாதைகளிலும் கோணலான வழிகளிலும் நடக்கிறவர் களுக்கும் தப்புவிக்கப்படுவது *(வச.15)*

மாறுபாடான பாதை என்பது நல்ல வழியை விட்டுவிட்டு தவறான வழியில் செல்வது என்பதாகும். அதுபோல கோணலான வழி என்பது நேர்மையற்ற வாழ்க்கை முறையைக் குறிப்பதாகும். இன்றைய மனிதர்களில் அநேகர் தேவனின் நல்ல வழியை விட்டுவிட்டு வியாபாரத்தில் அல்லது தாங்கள் செய்யும் தொழிலில் அதிக லாபம் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணி குறைந்த அளவுள்ள நிறுவைக் கற்களையும், படிகளையும் வைத்திருப்பதும், பொருள்களில் கலப்படம் செய்வதும் போன்ற நேர்மையற்ற வழியான கோணலான வழியைத் தெரிந்துகொள்கிறவர்களாக இருக்கிறார்கள். இருதயத்தில் ஞானத்தைப் பெற்ற மனிதன் இவ்விதம் தவறான பாதையில் நடக்கிறவர்களுக்கும், நேர்மையற்ற வழியை தெரிந்து கொள்கிறவர்களுக்கும் காக்கப்படுவான்.

g) தன் இளவயதின் நாயகனை விட்டு, தன் தேவனுடைய உடன் படிக்கையை மறந்து இச்சகமான வார்த்தைகளை பேசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கும் தப்புவிக்கப்படுவாய் *(வச.16,17)*

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து தேவ ஞானத்தை தன் இருதயத்தில் பெற்ற ஒரு மனிதன் இச்சகமான வார்த்தையைப் பேசுகிறதான பரஸ்திரீக்குக் காக்கப்படுவான் என்று கூறப்பட்டுள்ளது. இந்த பரஸ்திரீ எத்தன்மையுள்ளவள் என்றும் இந்த வசனங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அவள் தன் இளவயதின் நாயகனாகிய தன் கணவனை விட்டுவிட்டு தேவ சமூகத்தில் தன் கணவனோடு செய்துகொண்ட உடன்படிக்கையாகிய

தேவனுடைய உடன்படிக்கையை மறந்து மற்றவர்களைக் கெடுக்கக்கூடிய இச்சகமான வார்த்தைகளைப் பேசுகிறவளாகவும் இருக்கிறாள் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இன்றைய மனிதர்கள், விசேஷமாக வாலிபர்கள் இவ்விதமாக பரஸ்திரீகளிடமிருந்து முற்றுமாகத் தங்களைக் காத்துக்கொள்ள தங்கள் இருதயத்தில் ஞானத்தைப் பெற்றவர்களாக இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகவுள்ளது என்பதை நாம் மறக்கக்கூடாது.

B. நமது மனமும் - தேவ ஞானமும்

"என் மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டறிந்தது என்று நான் என் உள்ளத்திலே சொல்லிக்கொண்டேன்" பிரசங்கி 1:16;8:16.

"வானத்தின்கீழ் நடப்பதை யெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம் பண்ணினேன் ;..." பிரசங்கி 1:13.

"ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும். இந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம்" வெளி.17:9.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து நாம் எந்த ஒரு காரியத்தையும் சரியாக அறிந்து செயல்படுவதற்கு நமது மனம் தேவஞானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் அவசியமாகவுள்ளது என்று காண்கிறோம். நமது சரீரத்தில் வெளிப்புறமாக அமைந்துள்ளதும், நாம் பார்க்கவும், பேசவும், பயன்படும் சரீர அவயவங்களாகிய கண், செவி, வாய் போன்ற அவயவங்கள் சரியாக செயல்பட நமது சரீரத்தின் உள்ளாக அமைந்துள்ள நமது இருதயமும், நமது மனதும் தேவ ஞானத்தைப் பெற்றதாக செயல்படுவது மிகவும் அவசியமாகவுள்ளது. ஆகவே நமது இருதயம் தேவ ஞானத்தைப் பெற்றதாக செயல்படுவது எவ்வளவு அவசியமாகவுள்ளதோ அவ்வளவாக நமது மனமும் தேவ ஞானத்தைப் பெற்றதாக இருக்கவேண்டியது மிகவும் அவசியமாக வுள்ளது.

எவ்விதம் நம் இருதயத்தில் தேவ ஞானத்தைப் பெற்றுக்கொள்ள நாம் ஜெபிப்பதும், நமது நிலையற்ற வாழ்வை எண்ணி கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை நாம் பெற்றுக்கொள்வது எவ்விதம் மிகவும் அவசியமாகவுள்ளதோ, அவ்விதமாகவே நமது மனமும் தேவ ஞானத்தைப் பெற்றுக்கொள்வதும் மிகவும் அவசியமாகவுள்ளது என்பதை நாம் அறியவேண்டும்.

நமது இருதயத்திலும், மனதிலும் ஞானத்தைப் பெற்றவர்களாக செயல்படுவோம் என்றால் நாம்தான் ஞானிகள் என்று நாம் நம்மை உறுதிபடுத்திக் கொள்ளலாம். அவ்விதம் தேவ ஞானத்தைப் பெற்ற ஞானியின் கண்கள், செவி, வாய் முதலான அவயவங்கள் எவ்விதம் செயல்படுகிறது என்பதை சிறிது விளக்கமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

C. ஞானியின் கண்களும்- தேவ ஞானமும்

"ஞானியின் கண்கள் அவன் முகத்திலே இருக்கிறது ; மூடனோ இருளில் நடக்கிறான்" பிரசங்கி 2:14.

"பரிதானம் ஞானிகளின் கண்களை குருடாக்கும்" உபா.16:19.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் ஞானியின் கண்கள் அவன் முகத்தில் இருக்கிறது என்பது ஞானியின் கண்கள் தவறில்லாதபடி சரியான முறையில் செயல்படுகிறது என்றும், அது தவறானக் காரியங்களைக் காண அவன் விரும்புவ தில்லை என்றும் அறிந்து கொள்ளலாம். ஆனால் மூடன் இருளில் நடக்கிறான் என்பது, அவன் கண்கள் உடையவனாக இருந்தாலும் அவன் இருளில் நடக்கிறவனாக அவன் கண்கள் தவறானக் காரியங்களைக் காண்கிறதாகவுள்ளது என்றும் அறியலாம். எவ்விதம் இருளில் நடக்கிற ஒரு மனிதன் தான் செல்கிற வழி எத்தன்மையுடையது என்று அறிய முடியாதவனாக இருக்கிறானோ அதுபோலவே மூடனான மனிதனும் தனது தவறான கண்ணின் பார்வையின் செயலின் முடிவு எப்படியிருக்கும் என்று அறியாதவனாக இருக்கிறான். இந்த நாட்களில் நாமும் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக நமது பார்வை தவறானதாக இருக்கும் என்றால் அதின் முடிவு நமக்கு வேதனையாக இருக்கும் என்பதை நன்கு உணர்ந்து நமது கண்ணின் பார்வையைக் குறித்து நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

அதுபோலவே மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இரண்டாம் வசனத்தில் ஒரு மனிதன் ஞானியாக இருந்தாலும் பரிதானம் வாங்குகிறவனாக இருந்தால் அவனில் காணப்படும் பரிதானம் வாங்கும் சுபாவமானது அவனது கண்களை குருடாக்கி அவன் உண்மைக்கு மாறாக செயல்படச் செய்துவிடும். ஆகவே ஒரு மனிதன் ஞானத்தைப் பெற்றவனாக இருந்தாலும் அவனில் பரிதானம் வாங்கும் சுபாவம் காணப்படும் என்றால் அது அவனுடைய மேலான வாழ்க்கையைக் கெடுத்துவிடும். ஆகவே பரிதானம் வாங்குவது போன்ற தவறான சுபாவங்கள் தங்களில் காணப்படாத படி தேவ ஞானத்தைப் பெற்ற தேவ ஜனங்கள் தங்களைக் காத்துக் கொள்ளவேண்டும்.

D. ஞானியின் செவியும் - தேவ ஞானமும்

"ஞானியின் செவி அறிவை நாடும்" நீதி.18:15.

"ஜீவனுக்கேதுவான கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானிகளிடத்தே தங்கும்" நீதி.15:31.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் ஞானியின் செவி அறிவை நாடும் என்பது கர்த்தருக்குப் பயப்படும் பயமாகிய ஞானத்தையும், வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக்கொள்ள உதவும் ஞானமாகிய வரத்தையும் பெற்ற மனிதனாகிய ஞானியின் செவியானது அறிவை நாடும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இன்றைய மனிதர் பெரும்பாலானவர்களின் செவிகள் உலக மனிதர்கள் பேசும் அசுத்தமான வார்த்தைகளையும், கேலிப்பரியாசமான வார்த்தைகளையும், ஆபாசமான சினிமாப் பாட்டுகளையும், மற்றவர்களைப் பற்றிக் கெடுத்துப் பேசும் வார்த்தைகளையும், வஞ்சகமாகப் பேசும் வார்த்தை களையும் விரும்பிக் கேட்கிறது. இப்படிப்பட்டவர்களை ஞானிகள் என்று எப்படி சொல்லமுடியும்.

இந்த வசனத்தில் அறிவை நாடுவது என்பது தேவனை அறிந்து கொள்வதான அறிவைக் குறிப்பதாகும். தேவன் யார்? அவர் எத்தன்மையுடையவர்? அவருக்கும்

நமக்கும் உள்ள உறவு என்ன? அவர் மனிதருக்கு செய்திருக்கும், செய்யப்போகும் காரியங்கள் என்னவென்று அறிந்து கொள்வதான அறிவைக் குறிப்பதாகவுள்ளது என்றும் நாம் அறியவேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இரண்டாவது வசனத்தில் ஜீவனுக்கு ஏதுவானக் கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானிகளிடத்தே தங்கும் என்பதில் ஜீவனுக்கு ஏதுவானக் கடிந்து கொள்ளுதல் என்பது நம்மை மோட்சத்திற்கு நேராக வழிநடத்தக்கூடியதான கடிந்துகொள்ளுதல் என்பதாகும். இன்றைய தேவ ஜனங்களாகிய விசுவாசிகள், ஊழியர்கள் தங்களை கொஞ்சம் கடிந்து கொண்டு பிரசங்கித்தால் இப்படியா பிரசங்கிப்பது, சாபமான வார்த்தைகளைச் சொல்லி பிரசங்கிக்கலாமா என்று முறுமுறுக்க ஆரம்பிக்கிறார்கள். இன்றைய ஊழியர்களும் கடிந்துகொண்டு பிரசங்கிப்பதை விட்டுவிட்டு விசுவாசிகள் விரும்புவதை பிரசங்கிக்கிறார்கள். இது இன்றைய சபைகளின் அல்லது விசுவாசிகளின் பரிதாப நிலையை வெளிப்படுத்துவதாகவுள்ளது. ஆனால் ஜீவனுக்கு ஏதுவான கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் காது கர்த்தருக்குப் பயப்படும் பயமாகிய ஞானத்தையும், வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக்கொள்ள உதவும் தேவ வரமாகிய ஞானத்தையும் பெற்ற ஞானிகளாகிய மனிதரிடத்தில் நிச்சயமாகத் தங்கும் என்பதை நாம் தெளிவாக அறிந்து இருக்கவேண்டும். ஊழியர்களும் நிச்சயமாக எச்சரித்து, கடிந்து கொண்டு ஜனங்களுக்குப் போதிக்கவேண்டும் என்பதை மறக்கக்கூடாது. இது சம்பந்தமாக *எபே.3:17,18,19* வசனங்களில் கூறப்பட்டுள்ள எச்சரிப்பின் வார்த்தைகளை ஊழியர்கள் எப்பொழுதும் மனதில் கொள்ளவேண்டும்.

E. ஞானியின் வாயும்- தேவ ஞானமும்

1. "ஞானவான்களுடைய நாவு அறிவை உபயோகப்படுத்தும்" ***நீதி.15:27.***
2. "என் வாய் ஞானத்தைப் பேசும்" ***சங்.49:3, நீதி.31:26.***
3. "ஞானியினுடைய வாய்மொழிகள் தயையுள்ளவைகள்" ***பிரசங்கி.10:12.***
4. "ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஒளஷதம்" ***நீதி.12:18.***
5. "ஞானிகளுடைய அமரிக்கையான வார்த்தைகளே கேட்கப்படத்தக்கவைகள் ***பிரசங்கி 9.17.***
6. "ஞானிகளின் வாக்கியங்கள் தாற்றுக்கோல்கள் போலவும் சங்கத்தலைவர்களால் அறையப்பட்ட ஆணிகள் போலவும் இருக்கிறது" ***பிரசங்கி 12:11.***
7. "ஞானவான்களின் உதடுகளோ அவர்களைக் காப்பாற்றும்" ***நீதி.17:28 யோபு13:5.***
8. "பேசாதிருந்தால் மூடனும் ஞானவான் என்று எண்ணப்படுவான்" ***நீதி.17:28, யோபு 13:5.***

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து தேவ ஞானத்தைப் பெற்ற ஒரு மனிதனின் வாய் எவ்விதம் சிறப்பாகச் செயல்படுகிறது என்பது பற்றி நாம்

தெளிவாக அறிந்து கொள்ள முடியும். ஞானவான்கள் பேசும்பொழுது அறிவைப் பயன்படுத்தி பேசுவார்கள் என்றும், மிகவும் ஞானமாக பேசுவார்கள் என்றும் அறியலாம். அதுபோல அவர்கள் வார்த்தைகள் தயவுள்ளதாகவும் ஔஷதமாகவும் (Healings) உள்ளது என்றும் அறியலாம். இதில் ஔஷதம் என்பது சுகமாக்கும் தன்மையுடையது என்று ஆங்கில வேத புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. ஆம் ஞானியின் வார்த்தையானது மற்றவர்களின் இருதயத்தின் வேதனையை நீக்க வல்லதாகவும் இருக்கும். அது மட்டுமல்லாது ஞானிகளின் அமரிக்கையான வார்த்தையானது எல்லாராலும் விரும்பக் கேட்கக்கூடியதாகவும் உள்ளது என்றும் அறியலாம்.

ஞானியின் வார்த்தைகள் தாற்றுக்கோல்போல் உள்ளது என்பது ஞானிகளின் வார்த்தைகள் நம்மை செயல்படத் தூண்டும் தன்மையுடையதாகவும், சங்கத் தலைவர்களால் அறையப்பட்ட ஆணிகள்போல என்பது ஞானிகள் பேசும் வார்த்தைகளின் உறுதித்தன்மையையும் குறிப்பதாகவுள்ளது என்றும் அறியலாம்.

ஞானிகளின் வார்த்தையானது அவர்களை எல்லாவித ஆபத்தான சூழ்நிலையிலும் காப்பாற்றும் என்றும், ஒரு மனிதன் மூடனாக இருந்தாலும் அவன் பேசாமல் தன் வாயை மூடிக்கொண்டு மௌனமாக இருப்பான் என்றால் அந்த மூடனும் ஞானி என்று கருதப்படுவான் என்றும் அறியலாம்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து தேவ ஞானத்தைப் பெற்ற ஒரு மனிதன் பேசும் வார்த்தையானது எவ்வளவு சிறப்பான தன்மையுடையது என்று அறியலாம். நாமும் முயற்சி செய்வோமா !

ஞானவான்களிடத்தில் காணப்பட வேண்டிய சில முக்கியமானக் காரியங்கள்

இதுவரையில் தேவ ஞானம் என்ன, தேவ ஞானம் நமக்கு ஏன் அவசியம், தேவ ஞானத்தைப் பெறுவதற்கு ஏதுவாக நடத்தக்கூடிய காரியங்கள் யாது / எவை என்பது பற்றியும், நமது சரீர அவயவங்களில் எந்த அவயவங்களில் தேவ ஞானம் காணப்பட வேண்டும். தேவ ஞானத்தைப் பெற்றவர்களின் சரீர அவயவங்கள் எவ்விதம் செயல்பட வேண்டும் என்பதை இதுவரையில் அறிந்தோம். இந்த அத்தியாயத்தில் ஞானவான்களிடத்தில் காணப்படவேண்டிய சில சிறப்பானக் காரியங்கள் எவையென்றும், ஞானத்தைப் பெற்றவர்கள் செய்ய வேண்டியக் காரியங்கள் என்ன என்றும் வேத புத்தகத்தில் தேவ ஞானத்தைப் பெற்றவர்களுக்கு கொடுக்கப் பட்டிருக்கும் எச்சரிப்புக்கள் பற்றியும் விபரமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

A. ஞானவான்களிடத்தில் காணப்பட வேண்டிய முக்கியமானக்காரியங்கள்

ஒரு மனிதன் ஞானமுள்ளவன் என்றால் அவனிடம் காணப்படக்கூடிய மிக முக்கியமானக் காரியங்கள் பற்றி இந்தப் பகுதியில் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

1. ஞானமுள்ளவன் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவான்

"ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்கிறவன் ஞானமுள்ளவன்" நீதி.11:30.

நாம் தேவ ஞானத்தைப் பெற்றவர்கள் என்றால் நம்மில் காணவேண்டிய மிக முக்கியமானக் காரியம் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவது ஆகும். இன்று தேவ ஜனங்கள் ஞானமில்லாதவர்களைப் போல ஆத்துமாக்களைக் குறித்து அக்கறையற்ற வர்களாக இருக்கிறார்கள். நமது கர்த்தராகிய இயேசு கடைசியாக சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளையானது, *"நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்...என்றார்" மத்.28:19,20.*

இன்று நாம் உலகின் எல்லாப் பாகங்களுக்கும் சென்று சுவிசேஷத்தைக் கூறவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் நம்மில் அநேகர் இந்தக் கட்டளையைக் குறித்து சிந்தனையற்றவர்களாக நிர்விசாரமாக இருப்பதைப் பார்க்கும்பொழுது ஆச்சரியமாகவுள்ளது. அப்போஸ்தலனாகிய பவுலும் சுவிசேஷம் அறிவிப்பதின் முக்கியத்துவத்தைக் குறித்து பின்கண்டவாறு குறிப்பிடுகிறார். *"சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை ; அது என்மேல் விழுந்த கடமை யாயிருக்கிறது ; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ" I கொரி.9:16* என்றார். அதுபோலவே அவர் தீமோத்தேயுவுக்கு ஆலோசனையாக பின்கண்டவாறு கூறுகிறார். *"சமயம் வாய்த்தாலும்*

வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப்பிரசங்கம் பண்ணு" II தீமோ.4:2 என்றார். இந்த நாட்களில் நாம் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக எப்படியாவது ஒரு கூட்டம் ஜனங்களை கர்த்தரின் வருகைக்கென்று ஆயத்தப்படுத்த வேண்டும் என்ற வாஞ்சையோடும் தாகத்தோடும் செயல்பட வேண்டியவர்களாயிருக்கிறோம். செயல்படுவோமா!

2. ஞானமுள்ளவன் ஆலோசனைக்கு செவி கொடுப்பான்

"ஆலோசனைக்கு செவிகொடுக்கிறவனோ ஞானமுள்ளவன்" நீதி.12:15 ;13:10.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஆலோசனையைக் கேட்கிறவன் ஞானமுள்ளவன் என்பதிலிருந்து ஆலோசனையைக் கேட்பது எவ்வளவு முக்கியம் என்று அறிந்துகொள்ளலாம். இதைப் பின்கண்ட வேத வசனமும் நன்கு விளக்கும். *"ஆலோசனையைக் கேளாத கிழவனும், மூடனுமாகிய ராஜாவைப் பார்க்கிலும் ஏழையும், ஞானியுமாகிய இளைஞனே வாசி." பிரசங்கி 4:13.*

இந்நாட்களில் தேவன் நம்மிடம் நேரிடையாகவோ அல்லது தமது ஊழியர்களின் மூலமாகவோ நம்மிடம் பேசும்பொழுது நாம் அவருடைய ஆலோசனைக்கு செவிகொடுத்து நமது ஜீவியத்தை சரிசெய்து கொள்வது மிகவும் அவசியமாகவுள்ளது. நாம் ஞானமுள்ளவர்கள் என்றால் நிச்சயமாக தேவ ஆலோசனைக்கு செவி கொடுத்து அதற்கு ஏற்றபடி நமது ஜீவியத்தை சரிசெய்து கொள்ளப் பார்ப்போம்.

3. தேவ எச்சரிப்பை உணர்ந்து ஜனங்களுக்கு அறிவிக்கத்தக்கவன் ஞானமுள்ளவன்

"இதை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார் ? தேசம் அழிந்து, ஒருவனும் கடந்து போகாதபடி அது பாழாக்கப்படுகிற முகாந்திரமென்னவென்று கர்த்தருடைய வாய் தன்னுடனே சொல்லுகிறதைக் கேட்டு அறிவிக்கத் தக்கவன் யார்?" எரே.9:12, ஓசியா 14:9.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தேசம் பாழாக்கப்படுகிறத என்றால் அதன் காரணம் என்ன என்று உணர்ந்து கொள்ளக்கூடிய ஞானமுள்ளவன் யார் ? என்று கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது தேசம் பாழாக்கப்படுகிறதின் காரணத்தை கர்த்தரே கூறும்பொழுது அதைக் கேட்ட ஜனங்களை எச்சரிக்கும் வண்ணமாக அவர்களுக்கு அறிவிக்கத்தக்கவன் யார்? என்று கூறப்பட்டுள்ளது.. அது மட்டுமல்லாது தேசம் பாழாக்கக்கப்படுகிறதின் காரணத்தை கர்த்தரே கூறும்பொழுது அதைக்கேட்ட ஜனங்களை எச்சரிக்கும் வண்ணமாக அதை அவர்களுக்கு அறிவிக்கத்தக்கவன் யார்? என்று கூறப்பட்டுள்ளது.

எவ்விதம் அன்றைய தீர்க்கதரிசிகள், ஊழியர்கள் ஞானமற்றவர்களாக இருந்து தேசத்திற்கு ஏற்படும் அழிவைக் குறித்து உணர்ந்துகொள்ள முடியாதவர்களாகவும், தேவனின் எச்சரிப்பின் வார்த்தைகளைக் கேட்டு ஜனங்களுக்கு அறிவிக்க முடியாதவர் களாகவும் இருந்தார்களோ, அதுபோலவே

இன்றைய ஊழியர்களும் ஞானமற்றவர்களாக இருந்து இன்றைய மனுக்குலத்துக்கு வரப்போகும் அழிவைக் குறித்து உணர முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள். இன்றைய ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் ஞானஸ்நானம் எடுப்பது, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவது போன்றக் காரியங்களை மறைத்து தேவன் அற்புதமானவர், தேவன் வல்லமையுள்ளவர், தேவன் அதிசயங்களைச் செய்கிறவர் என்று திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டு தேவன் உனக்கும் அற்புதங்களைச் செய்வார், அதிசயங்களைச் செய்வார் என்று இவ்விதமான வார்த்தைகளினாலே ஜனங்களை வஞ்சிக்கும் வண்ணமாக அல்லவா பிரசங்கித்துக் கொண்டுத் திரிகிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள்!

இன்றைய ஊழியர்கள் தேசத்திற்கு வருகிற அழிவைக் குறித்து ஜனங்களை எச்சரித்து, ஜனங்களை அழிவிலிருந்து காக்கும் வண்ணமாக தேவனிடமிருந்து வார்த்தைகளைக் கேட்டு அதை ஜனங்களுக்கு அறிவிப்பார்கள் என்றால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

4. ஞானமுள்ளவன் தீமைக்கு விலகுகிறான்

"ஞானமுள்ளவன் பயந்து தீமைக்கு விலகுகிறான் ; மதியீனனோ மூர்க்கங்கொண்டு துணிகரமாயிருக்கிறான்" நீதி.14:16.

கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானம் என்றும், கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் தீமையை விட்டு விலகுவார்கள் என்றும் இந்த புத்தகத்தின் முதல் அத்தியாயத் திலேயே எழுதியுள்ளேன். இவ்விதம் கர்த்தருக்குப் பயப்படுகிறவனாகிய ஞானமுள்ளவன் நிச்சயமாக தன் வாழ்க்கையைக் குறித்து பயம் உடையவனாக எல்லாவித தீமையான காரியங்களை விட்டு விலகித் தன்னை முற்றுமாகக் காத்துக்கொள்வான். ஆனால் மதியீனனான மனிதன் (Fool - மூடன்) மூர்க்கங் கொண்டு தீமையானக் காரியங்களில் துணிகரங்கொண்டு செயல்படுவான். நாம் எவ்விதம் செயல்படுகிறோம். ஞானமுள்ளவர்களாக தீமையான காரியங்களுக்கு நம்மை விலக்கிக் காத்துக் கொள்கிறோமா? அல்லது நாம் மதியீனராக இருந்து தீமைசெய்ய துணிகரங்கொண்டு செயல்படுகிறோமா? சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

5. ஞானமுள்ளவன் கர்த்தரின் கிருபைகளை உணர்ந்து கொள்வான்

"ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்து கொள்வார்கள்" சங்.107:43.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கிருபை என்ற வார்த்தையின் பொருளானது, நாம் ஒன்றைப் பெறத் தகுதியற்றவர்களாய் இருக்கும்பொழுது தேவன் அதை நமக்கு இலவசமாகக் கொடுக்கும் அந்தக் காரியத்துக்கு கிருபை என்று சொல்லலாம். நாம் பெற்றுள்ள மீட்பு, இரட்சிப்பு போன்ற ஆவிக்குரிய அனுபவங்களை நாம் பெற்றுக் கொள்ள எவ்வளவேனும் தகுதியுள்ளவர்கள் அல்லவே அல்ல. ஆனால் நமது தேவன் தமது அளவற்றக் கிருபையினால் நமது தகுதியைப் பாராது அவைகளை நமக்குக் கொடுத்துள்ளார்.

இந்த உலகின் ஜனங்கள் இந்த நமது தேவனின் கிருபையை உணரமுடியாதவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் நம்மில் காணப்படும் தேவ

ஞானமானது இந்த தேவனின் அளவற்றக் கிருபையை நாம் உணர்ந்து கொள்ளச் செய்கிறது. ஆகவே நாம் அவருடைய அளவற்றக் கிருபையினாலே நாம் பெற்ற எல்லாவித ஆவிக்குரிய நன்மையானக் காரியங்களுக்காக அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம்.

6. ஞானமுள்ளவனும் - போதகரும்

"ஞானமுள்ளவனுக்குப் போதகம் பண்ணு, அவன் ஞானத்தில் தேறுவான்...." நீதி.9:9.

"ஞானவான்களுடைய போதகம் ஜீவஊற்று ; அதினால் மரணக் கண்ணிகளுக்குத் தப்பலாம்" நீதி.13:14.

மேற்கூறப்பட்டுள்ள இரண்டு வசனங்களில் முதல் வசனத்தில் ஞானமுள்ள வனுக்குப் போதித்தால் அவன் அதிகமாக ஞானத்தைப் பெற்று ஞானத்தில் தேறுவான் என்றும், இரண்டாவது வசனத்தில் ஞானவான்களின் போதகமானது நமக்கு ஜீவனுள்ள அதாவது உயிரை அளிக்கும் ஊற்றாகவுள்ளது என்றும் நாம் ஞானவான்களின் போதகத்தைக் கேட்டு அதற்கு ஏற்றவாறு செயல்படும்பொழுது அதின்மூலம் நாம் நமக்கு மரணத்தை உண்டுபண்ணக்கூடிய கண்ணிகளுக்கு (Snares) தப்பமுடியும் என்பதையும் நாம் நன்கு அறியவேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ளக் காரியங்களிலிருந்து ஞானிகளுக்குப் போதிப்பதும், ஞானிகளின் போதகத்தைக் கேட்டு அதற்கு ஏற்றவாறு செயல்படுவதும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று அறிந்துகொள்ளலாம்.

7. ஞானமுள்ளவன் தன்னை கடிந்துகொள்ளுகிறவனை நேசிப்பான்

"பரியாசக்காரனைக் கடிந்துகொள்ளாதே, அவன் உன்னைப் பகைப்பான் ; ஞானமுள்ளவனைக் கடிந்துகொள், அவன் உன்னை நேசிப்பான்" நீதி.9:8.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் பரியாசக்காரனை கடிந்து கொண்டால் அவன் நம்மைப் பகைப்பான் என்றும் ஞானமுள்ளவனைக் கடிந்து கொண்டால் அவன் நம்மை நேசிப்பான் என்றும் காண்கிறோம். இதிலிருந்து நாம் அறிவது யாதெனில் பரியாசக்காரன் ஞானவான்களின் கடிந்து கொள்ளுதலை விரும்பமாட்டான். ஆகவே தன்னைக் கடிந்து கொள்ளுகிறவர்களை பகைக்கிற வனாக இருப்பான் என்றும் ஞானமுள்ளவன் தன்னை கடிந்துகொள்ளுகிறவனை நேசிப்பான் என்றும் அறியலாம்.

இன்றைய தேவ ஜனங்கள் ஞானமற்றவர்களாக ஊழியர்கள் தங்களைக் கடிந்துகொள்ளும்பொழுது அதை ஏற்றுக்கொள்ள மனமற்றவர்களாக இருந்து ஊழியர்களுக்கு விரோதமாக முறுமுறுக்கிறவர்களாக இருக்கிறவர்களாக இருக்கிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள்.

B. ஞானத்தைப் பெற்றவர்கள் தங்கள் ஞானத்தினால் செய்யவேண்டியக் காரியங்கள்

நாம் தேவ ஞானத்தைப் பெற்றவர்கள் என்றால் நாம் என்ன என்ன காரியங்கள் செய்யவேண்டும் என்று இந்தப் பகுதியில் விபரமாக அறிந்துகொள்ளப் பார்ப்போம்.

1. ஞானத்தைப் பெற்றவர்கள் காலத்தை பிரயோஜனப்படுத்த வேண்டும்

"நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்துகொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" எபே.5:15,16.

"புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்" கொலோ.4:5.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ளக் காரியங்களைக் கீழ்க்கண்டவாறு பிரித்து தியானிக்கலாம்.

a) நாம் ஞானமற்றவர்களைப்போல நடக்கக்கூடாது.

b) நாம் ஞானமுள்ளவர்களைப்போல் கவனமாய் நடக்கவேண்டும்.

c) புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடக்கவேண்டும்.

d) இந்த நாட்கள் பொல்லாதவைகள்.

e) நாம் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ளக் காரியங்கள் குறித்து சிறிது விளக்கமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

a) நாம் ஞானமற்றவர்களைப்போல் நடக்கக்கூடாது

இன்று பெரும்பாலுமான கிறிஸ்தவர்கள் ஞானமற்றவர்களாய் காலத்தைக்குறித்து கவனமற்றவர்களாக ஏனோதானோவென்று ஜீவிக்கிறார்கள். நாம் பயன்படுத்தாது வீணாக்கியக் காலத்தை நாம் மீண்டும் பெறமுடியாது என்பதை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் கொள்ளவேண்டும்.

b) நாம் ஞானமுள்ளவர்களைப்போல் கவனமாய் நடக்கவேண்டும்

நாம் ஞானத்தைப் பெற்றவர்களாக நமது வாழ்க்கையைக் குறித்து மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். சாலமோன் ராஜா மிகுந்த ஞானத்தைப் பெற்றவனாக இருந்தாலும் அவன் வாழ்க்கையில் மதியீனமானக் காரியங்கள் காணப்பட்டபடியினாலே அவனுடைய அந்திய காலத்திலே தேவ ஆசீர்வாதங்களை இழந்தவனாகக் காணப்பட்டான். நம்முடைய வாழ்க்கையிலும் நாமும் அநேக வரங்களைப் பெற்றவர்களாக இருந்தாலும், நமது ஜீவியத்தைக் குறித்து நாம் கவனமாக இல்லையென்றால் நமது ஆவிக்குரிய ஜீவியத்தை நாம் நஷ்டப்படுத்திக் கொள்ளும்படியான நிலை ஏற்படும். நாம் பெற்ற அநேக ஆவிக்குரிய வரங்கள் நமக்குப் பயனற்றுப்போய்விடும் என்பதை நாம் அறியவேண்டும்.

c) புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடக்கவேண்டும்

இன்று நம்மைச் சுற்றிலும் தேவனை அறியாத அநேக ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் நமது ஜீவிய முறைகளை மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய வாழ்க்கையில் தவறானக் காரியங்கள்

காணப்படும் என்றால் அந்த தவறானக் காரியங்களைப் பார்த்து கிறிஸ்தவர்கள் இப்படி செய்கிறார்கள் என்று நமது மகிமையான தேவனின் நாமத்தை தூஷிப்பார்களே என்று அறிந்து, *ரோமர் 2:24*-ல் கூறியுள்ளபடி நம் மூலமாக நமது தேவனின் நாமம் தூஷிக்கப்படாதபடி நம்மைக் காத்துக்கொள்வது மிகவும் சிறப்பாயிருக்கும்.

d) இந்த நாட்கள் பொல்லாதவைகள்

நாம் வாழ்கிறதான இந்த நாட்கள் மிகவும் பொல்லாதவைகள் என்று நாம் எல்லோருமே அறிவோம். எங்கு பார்த்தாலும் சமாதானமற்ற நிலையும், கலவரங்களும், கொலைகள், வெறிகள் என்று எல்லாவித தீமையானக் காரியங்களும் எங்கும் நிலவுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். மனிதர் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாதவர்களாக எல்லாவித தீமையானக் காரியங்களையும் செய்ய துணிகரங் கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இந்த நாட்கள் மிகவும் பொல்லாதவைகள் என்று நாம் அறியவேண்டும்.

e) காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்வது

மிகவும் கொடிய நாட்களாகிய இந்த நாட்களில் தேவ ஜனங்களாகிய நாம் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக இருக்கிறோம் என்றால் கிருபையாகக் கொடுக்கப் பட்டிருக்கும் இந்தக் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளப் பார்க்க வேண்டும். காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்வது என்றால் முதலாவது நாம் பெற்ற இரட்சிப்பை இழந்துவிடாதபடி அதைக் காத்துக்கொள்ள ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். அதோடு கர்த்தரின் வருகைக்கும் நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, நம் குடும்பத்தில் உள்ளவர்களையும், மற்றவர்களையும் இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தப் பார்க்க வேண்டும். இந்த நாட்களை பிரயோஜனப் படுத்தி எப்படியாவது ஒரு கூட்டம் ஜனங்களை நமது கர்த்தரின் வருகைக்கென்று ஆயத்தப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

உ. கிறிஸ்துவின் வசனம் நம்மில் வாசமாயிருப்பது

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" கொலோ.3:16.

கிறிஸ்துவின் வசனமாகிய வேத வசனமானது நமக்குள்ளே அதாவது நமது இருதயத்திற்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக(முழுமையாக) வாசமாயிருக்கும் என்றால், நாம் ஞானமற்றவர்களைப்போல தவறாக செயல்பட மாட்டோம். நாம் வேத வசனங்களை நன்கு கற்றவர்களாக இருந்தும் ஞானமற்றவர்களாக நாம் செயல்படுவதினால்தான் நமக்குப் பலவிதமான பிரச்சினைகள் வந்துவிடுகிறது என்பதை நாம் எண்ணுவதில்லை. வேத வசனங்கள்ளை நம் இருதயத்தில் பதித்துக்கொண்டு அதை நமது ஞானமான செயல்பாடுகளின் மூலம் வெளிப்படுத்த வேண்டும்.

ஊ. ஞானத்தோடு இச்சையடக்கமும் உடையவர்களாயிருக்க வேண்டும்

"இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்,

ஞானத்தோடே இச்சையடக்கத்தையும்....கூட்டி வழங்குங்கள்" II பேதுரு 1:5,6.

மேற்குறிப்பிட்டுள்ள வசனங்களோடு அதற்கு முன் உள்ள மூன்றாம் நான்காம் வசனங்களையும் சேர்த்து தியானித்தால் நாம் நம்மை அழிவுக்கு நேராய் நடத்தக்கூடிய பாவமும், அசுத்தமுமான வாழ்க்கை முறையை விட்டுவிட்டு கிறிஸ்துவுக்குள்ளான ஒரு புதிய வாழ்க்கை முறையான இரட்சிப்புக்குள்ளாக வரும்பொழுது நாம் தேவனை அறிகிற அறிவைப் பெற்றவர்களாக அதின்மூலம் நாம் பெறும் தேவ வல்லமையினாலே ஜீவனாகிய மோட்சத்தை பெறுவதற்கும், நாம் இந்த உலகில் ஜீவிக்கும் வரையில் தேவ பக்தியோடு வாழ்வதற்கு வேண்டிய எல்லாவற்றையும் அந்த வல்லமையினாலே நாம் பெற்றுக் கொள்ளுகிறவர் களாயிருக்க வேண்டும். ஆகவே நாம் எப்பொழுதும் நமது ஆவிக்குரிய வாழ்க்கையைக் குறித்து ஜாக்கிரதையுடையவர்களாய் இருந்து, நாம் பெற்றுள்ள இந்த புதிய ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் ஞானத்தோடு மேற்குறிப்பிடப் பட்டுள்ள இச்சையடக்கம் போன்ற ஆவிக்குரிய சுபாவங்களையும் நாம் வெளிப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம்.

4. ஞானமுள்ளவன் கோபத்தை ஆற்றுவான்

"ராஜாவின் கோபம் மரண தூதருக்குச் சமானம் ; ஞானமுள்ளவனோ அதை ஆற்றுவான் " நீதி. 16:14.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கோபமானது மரணத்தைக் கொண்டு வரும் மரணதூதனுக்கு சமானமாகவுள்ளது என்பதிலிருந்து அந்தக் கோபம் எவ்வளவு ஆபத்தானது என்பதை நாம் அறியலாம். ஆனால் அவ்வித கொடிய ஆபத்தான கோபத்தையும் தேவ ஞானத்தைப் பெற்ற ஒரு மனிதன் ஆற்றுவான் என்பதிலிருந்து தேவ ஞானத்தைப் பெறுவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று நாம் அறிந்து கொள்ளலாம்.

இன்றைய மனித சமுதாயத்தினரிடையே கோப உணர்வுகள் ஏற்பட்டு கலவரங்கள், கொலைகள், போன்றவைகள் ஏற்படுகிறது. ஆனால் இன்றைய மனிதர்கள் ஞானமற்றவர்களாயிருந்து அவ்வித கோப உணர்வுகளை ஆற்றுவதற்குப் பதிலாக கலவரங்களைத் தூண்டிவிடுகிறவர்களாயிருந்து அநேக உயிர்ச்சேதங்கள் ஏற்படவும் காரணமாகிவிடுகின்றனர். என்ன பரிதாபம் பாருங்கள். இன்றைய மனித சமுதாயம் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக சமுதாயங் களிடையே கோப உணர்வுகள் ஏற்படும்பொழுது அந்தக் கோப உணர்வுகளை, வெறிச்செயல்களை தூண்டி விடுகிறவர்களாக அல்லாது அந்தக் கோப உணர்வுகளை ஆற்றுகிறவர்களாக செயல்பட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

5. ஞானத்தைப் பெற்றவன் மிருகத்தின் இலக்கத்தைக் கணக்குப் பார்க்க வேண்டும்

"இதிலே ஞானம் விளங்கும் ; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தி யுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன் ; அது மனுஷனுடைய இலக்க மாயிருக்கிறது அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு" வெளி.13:18.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்திற்கு முந்திய வசனமாகிய 17-ம் வசனத்தில் அந்திக் கிறிஸ்துவின் அரசாட்சி காலத்தில் மிருகத்தின் முத்திரையையாவது, மிருகத்தின் நாமத்தையையாவது, அந்த நாமத்தின் இலக்கத்தையாவது தரித்தவர்கள் அல்லாது மற்றவர்கள் கொள்ளவோ, விற்கவோ முடியாது என்று கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது அடுத்த வசனமாகிய 18-ம் வசனத்தில் அந்த நாமத்தின் இலக்கத்தை கணக்குப் பார்க்க வேண்டும் என்றும், அதினால் தேவ ஞானம் விளங்கும் என்றும், அது மனுஷனுடைய இலக்கமாகிய 666 என்று கூறப்பட்டுள்ளது. மனிதன் 6-ம் நாளில் சிருஷ்டிக்கப்பட்டவன். ஆகவே இந்த 666 என்ற இலக்கமானது மனிதனோடு சம்பந்தப்பட்ட ஒரு எண்ணாக உள்ளது என்று அறியலாம்.

நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமானக் காரியம் யாதெனில் வரப்போகும் அந்திக்கிறிஸ்து அரசியல் தலைவனும், மதத் தலைவனுமாக இருப்பான் என்பதை மனதில் கொள்ள வேண்டும். இந்த நாட்களில் இந்தக் காரியங்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருப்பது மிகவும் அவசியமாகவுள்ளது.

C. தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக ஜீவித்த மனிதர்கள்

இந்தப் பகுதியில் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக ஜீவித்த மனிதர்கள் யார் யார் என்றும் அவர்களில் காணப்பட்ட சிறப்பானக் காரியங்கள் என்ன என்ன என்றும் விபரமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1) யோசேப்பு

தேவன் யோசேப்புக்கு ஞானத்தைக் கொடுத்தார்

"தேவனோ, அவனுடனேகூட (யோசேப்போடு கூட) இருந்து, எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமூகத்திலே அவனுக்குக் கிருபையையும் ஞானத்தையும் அருளினார் ; ....." அப்.7:10 "பின்பு, பார்வோன் யோசேப்பை நோக்கி : தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும் ஞானமுள்ளவன் வேறொருவனும் இல்லை" ஆதி.41:39.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் தேவன் யோசேப்புக்கு தேவ ஞானத்தை அருளினார் என்றும் இரண்டாவது வசனத்தில் யோசேப்பு தேவ ஞானத்தை பெற்றவன் என்று அவன் செயல்பாடுகளின் மூலம் எகிப்தின் ராஜா வாகிய பார்வோனால் அறிந்து கொள்ள முடிந்தது என்றும் காண்கிறோம். இந்நாட்களில் நாமும் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக செயல்படுவோம் என்றால் நமது செயல்பாடுகளின் மூலம் மற்றவர்கள் நாம் தேவ ஞானத்தைப் பெற்றவர்கள் என்று அறிந்து கொள்ளும்படியாய் கர்த்தர் செய்வார்.

ஒரு சமயம் யோசேப்பு இவ்விதம் தேவ ஞானத்தைப் பெற அவனில் காணப்பட்ட சிறப்பானக் காரியம் என்ன என்று கேட்கலாம். ஆனாலும் அவனில் காணப்பட்ட ஒரே ஒரு சிறப்புத்தன்மையைப் பற்றி மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

யோசேப்பு போத்திபாரின் வீட்டில் இருக்கும்பொழுது போத்திபாரின் மனைவி யோசேப்போடு தவறான உறவுகொள்ள அவனுக்கு ஆசை காட்டினாள். ஆனால் யோசேப்பு அவளுடைய தவறான செயலுக்கு உடன்படாமல் தன்னை முற்றிலுமாகக் காத்துக் கொண்டான். ஆனால் யோசேப்பின் இந்த நேர்மையான செயலுக்கு தவறாகத் தண்டனை பெற்று சிறைச்சாலையில் போடப்பட்டான். யோசேப்பு இந்த சிறைத் தண்டனையையும் பொறுமையோடு ஏற்றுக் கொண்டான். *(ஆதி.39:7-13 வரை வாசிக்கவும்)* இவ்விதம் யோசேப்பு தன்னில் பாவம் காணப்படாதபடி முற்றுமாகத் தன்னைக் காத்துக் கொண்டதினாலும், தான் யாதொரு தவறும் செய்யாமல் தவறாகத் தண்டனை பெற்றபோதும் அதை யோசேப்பு பொறுமையோடு ஏற்றுக் கொண்டான். ஆகவே தேவன் யோசேப்பை விசேஷித்தபிரகாரமாக உயர்த்தி எகிப்தின் அரசனான பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில் உட்காரும்படி செய்து கொடிய பஞ்சகாலத்தில் பஞ்சம் இல்லாதபடி தன் தேசத்தை பாதுகாப்பது என அறிந்துகொள்ளத்தக்க விசேஷித்த தேவ ஞானத்தை தேவன் யோசேப்புக்கு கொடுத்தார்.

இந்நாட்களில் நாமும் யோசேப்பைப்போல எல்லாவித சூழ்நிலைகளிலும் நம்மில் சிறிதளவும் பாவம் காணப்படாதபடி நம்மை காத்துக்கொள்வோம் என்றால் நிச்சயமாகவே தேவன் நம்மையும் உயர்த்தி சூழ்நிலைக்கு ஏற்றபடி சிறப்பாகச் செயல்பட விசேஷித்த ஞானத்தைக் கொடுத்து நம்மை மேன்மைபடுத்துவார்.

2) யோசுவா

மோசே யோசுவாவின்மேல் கைகளை வைத்ததினால் யோசுவா ஞானத்தைப் பெற்றான்.

"மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவர் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டார்; இஸ்ரவேல் புத்திரர் அவருக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியே செய்தார்கள்." உபா.34:9.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஞானத்தின் ஆவி என்பதில் ஆவி என்ற வார்த்தையானது நம்மை செயல்படத் தூண்டும் சக்தியைக் குறிப்பதாக வுள்ளது. அப்படியானால் ஞானத்தின் ஆவி என்பது நாம் ஞானமாக செயல்பட நம்மைத் தூண்டும் சக்தியாகவுள்ளது என்று அறியலாம். இந்த ஞானத்தின் ஆவியை மோசே தன் கைகளை யோசுவாவின் தலையின்மீது வைத்தபடியினால் யோசுவா ஞானத்தின் ஆவியைப் பெற்றுக்கொண்டார் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால் அந்த விசேஷித்த தேவ வல்லமையை மோசே பெற்றிருந்தார் என்று அறியலாம். அதுபோலவே புதிய ஏற்பாட்டுக்காலத்திலும் அப்போஸ்தலராகிய பவுல் எபேசு சபையின் விசுவாசிகளின்மேல் கைகளை வைத்தபோது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்று அந்நிய பாஷைகளைப் பேசி தீர்க்கதரிசனம் சொன்னார்கள் *அப்.19:6-ல்* வாசிக்கிறோம். இன்றைய ஊழியக்காரர்களும் தேவ வல்லமையை, வரங்களைப் பெற்றவர்களாக இருப்பது மிகவும் அவசியமாகவுள்ளது.

யோசுவா விசேஷித்த ஞானத்தின் ஆவியைப் பெற்றுக்கொள்ள தன்னிடத்தில் காணப்பட்ட சிறப்பான காரியம் என்ன என்று அறிந்துகொள்ளப் பார்ப்போம்.

"உத்தமமாய் என்னைப் பின்பற்றின கேனேசியனான எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும்......." எண்.32:11.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் காலேபும், யோசுவாவும் கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தை வேவுபார்க்க மோசேயினால் அனுப்பப்பட்ட பன்னிரண்டு மனிதர்களில் பத்து மனிதர் விசுவாசம் இல்லாதவர்களாக தாங்கள் பார்த்து வந்த தேசத்தைக் குறித்து துர்ச்செய்தி சொன்னார்கள். ஆனால் காலேபும், யோசுவாவும் தேவன்மேல் அவர்கள் கொண்டிருந்த அந்த தேசம் மகா நல்ல தேசம் என்றும் அந்த ஜனங்களைக் காத்த நிழல் அவர்களை விட்டு விலகிப் போயிற்று என்றும், கர்த்தர் நம்மோடே இருக்கிறார் ; அவர்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை என்று தைரியமாகச் சொன்னார்கள் (எண்.14:7-9 பார்க்கவும்) இவ்விதம் அவர்கள் கர்த்தரை உத்தமமாய் (wholly- முழுமையாக) பின்பற்றினபடியால் யோசுவா இந்த விசேஷித்த ஞானத்தைப் பெறும்படி தேவன் யோசுவாவுக்கு அநுக்கிரகம் பண்ணினார். ஆகவ ஜனங்கள் அவனுக்குக் கீழ்ப்படிந்து அடங்கியிருந்தார்கள். இவ்விதமாக நாமும் கர்த்தருக்காக வைராக்கியமாய் இருந்து, தேவனை முழுமையாக பின்பற்றுவோம் என்றால் தேவன் நமக்கும் விசேஷித்த ஞானத்தின் ஆவியைக் கொடுத்து ஜனங்கள் நமக்குக் கீழ் அடங்கியிருக்கும்படிச் செய்வார்.

3) தானியேல்

தானியேலுக்கு தேவன் ஞானத்தைக் கொடுத்தார்

"என் பிதாக்களின் தேவனே, நீர் எனக்கு ஞானமும் வல்லமையும் கொடுத்து, நாங்கள் வேண்டிக்கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து, ராஜாவின் காரியத்தை எங்களுக்குத் தெரிவித்தபடியினால், உம்மைத் துதித்துப் புகழுகிறேன் என்றான்" தானி.2:23 ;5:11,14.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தேவன் தானியேலுக்கு விசேஷித்த ஞானத்தைக் கொடுத்ததினால் அவன் தேவனைத் துதித்துப் புகழுகிறான். எவ்விதமான சூழ்நிலையில் தேவன் தானியேலுக்கு விசேஷித்த ஞானத்தைக் கொடுத்தார். அந்த ஞானத்தைப் பெற்றுக் கொள்ள தானியேலிடம் காணப்பட்ட சிறப்புத்தன்மை என்ன என்று அறிந்துகொள்ளப் பார்ப்போம். யோசேப்பு அவன் சகோதரரால் பகைக்கப்பட்டு அதின் காரணமாக அவன் எகிப்துக்குக் கொண்டு போகப்பட்டான். ஆனால் யோசேப்பு எகிப்தின் சூழ்நிலையிலும் பாவத்திற்குள்ளாகாதவாறு தன்னைக் காத்துக்கொண்ட படியினால் தேவன் யோசேப்பை உயர்த்தி, அவனுக்கு விசேஷித்த ஞானத்தைக் கொடுத்து, அதின்மூலம் எகிப்தில் வந்த கொடிய பஞ்சகாலத்திலும் எகிப்தின் ஜனங்களும், யோசேப்பின் சொந்த குடும்பத்தினரும் பஞ்சத்தினால் அழிந்து போகாதவாறு பாதுகாக்கப்படும்படியாக தேவன் அனுக்கிரகஞ் செய்தார்.

ஆனால் தானியேலின் காலத்தில் தேவன் இஸ்ரவேலருக்கு சுதந்தரமாகக் கொடுத்த கானான் தேசத்தில் அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்ததினால் அவர்கள் அடிமைகளாக பாபிலோனுக்கு கொண்டு போகப் பட்டனர். பாபிலோனுக்கு வந்த அந்தக் காலகட்டத்தில் தானியேலும் அவன் நண்பர்களும் இருந்தனர். ஆனால் பாபிலோனின் அடிமைத்தன வாழ்க்கையிலும் தானியேலும் அவன் நண்பர்களும் ராஜாவின் போஜனத்தினால் தங்களைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாதபடி தங்களைக் காத்துக்கொண்டனர். *(தானி.1:8)* ஆகவே தேவன் அவர்களில் ஒருவனாகிய தானியேலுக்கு விசேஷித்த ஞானத்தைக் கொடுத்தார். அதின்மூலம் அவன் தேவனுடைய வெளிப்பாடு பெற்று அரசனின் தரிசனத்தை வெளிப்படுத்தினான்.

தேவ ஜனங்களாகிய நாமும் இந்த நாட்களில் தேவ ஞானத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாகவும் நாம் உலகக் காரியங்களால் தீட்டுப்படுத்திக் கொள்ளாதபடிக்கு நம்மைக் காத்துக்கொள்ளப் பார்க்க வேண்டும். செயல்படுவோமா!

4) தாவீது

தாவீது தேவ ஞானத்தைப் பெற்றவனாக இருந்தான்

"தேசத்தில் நடக்கிறதையெல்லாம் அறிய, என் ஆண்டவனுடைய ஞானம் தேவதூதனுடைய ஞானத்தைப்போல் இருக்கிறது என்றாள்" II சாமு.14:20.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தெக்கோவா ஊர் ஸ்திரீ தாவீது ராஜாவின ஞானத்தைப் பற்றிக் கூறும்பொழுது தேசத்தில் நடக்கும் எல்லாக் காரியங்களையும் சரியாக அறிந்துகொள்ள தாவீது ராஜாவின் ஞானமானது தேவ தூதனின் ஞானத்தைப்போல் விசேஷித்த ஞானமாயிருந்தது என்று கூறுகிறாள். ஏனெனில் தெக்கோவா ஊர் ஸ்திரீ தாவீது ராஜாவினிடத்தில் பேசும் பொழுது அவன் கூறிய வார்த்தைகள் படைத்தலைவனாகிய யோவாபினால் அவளுக்குப் போதிக்கப்பட்டவைகள் என்றும் தாவீது ராஜா தான் அறிந்துள்ளதை அவளுக்கு வெளிப்படுத்தினான். அரசாட்சியில் இருக்கிறவர்கள் ஜனங்கள் எவ்விதம் பேசுகிறார்கள் என்றும் அவர்கள் பேச்சில் உட்கருத்துக்கள் ஏதும் இருக்கிறதா என்றும் தெளிவாக அறிந்து கொண்டு மிகவும் ஞானமாய் செயல்பட வேண்டும்.

ஒரு சமயம் தாவீது ராஜாவினிடத்தில் இவ்வித விசேஷித்த ஞானம் காணப்பட அவனில் காணப்பட்ட சிறப்பான காரியம் என்ன என்று கேட்கலாம். தாவீது ராஜா அவ்வப்போது தவறுகள் செய்து, அந்தத் தவறுகள் தேவ ஊழியர்களால் (தீர்க்கதரிசிகளால்) அவனுக்கு சுட்டிக்காட்டப்பட்ட பொழுது, உடனடியாக தனது தவறுகளை ஒத்துக்கொண்டு, அவைகளுக்காக மனஸ்தாபப்பட்டு, தேவனிடம் மன்னிப்புக்காக வேண்டி, நின்றதை தாவீதின் வாழ்க்கையில் காணலாம். (*II சாமு. 12:3,24:18* முதலிய வசனங்களைப் பார்க்கவும்) இந்நாட்களில் தேவ ஜனங்களாகிய நாமும் கூட தேவன் நம்முடைய தவறுகளை நேரிடையாகவோ, வேத வசனங்கள் மூலமாகவோ, ஊழியர்கள் மூலமாகவோ நமக்கு சுட்டிக்காட்டும்பொழுது நாமும் தாவீது ராஜாவைப்போல் நமது

தவறுகளை உணர்ந்து, அவைகளுக்காக மனஸ்தாபப்பட்டு, தேவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். அதுவல்லாது நமது தவறுகளைக் குறித்து சாக்குப்போக்குச் சொல்ல முயற்சிக்கக்கூடாது.

"தன் தவறுகளை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான் ; அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்" நீதி.28:13

4) சாலமோன்

சாலமோன் தேவ ஞானத்தை தேவனிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டான்

"உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் , அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும் ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்" I இராஜா. 3:9.

"தேவன் அவனை (சாலமோனை) நோக்கி:......... நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக்கொண்டபடியினால், உன் வார்த்தை களின்படி செய்தேன் ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்...I இராஜா. 3:11-12 ;4:29,30.

"நியாயம் விசாரிக்கிறதற்குத் தேவன் அருளின ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள்" I இராஜா.3:28.

"சாலோமோனின் ஞானத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட பூமியின் சகல ராஜாக்களிடத்திலுமிருந்து நானா ஜாதியான ஜனங்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்கிறதற்கு வந்தார்கள்." I இராஜா.4:34.

"வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம் பண்ணினேன்....." பிரசங்கி1:13.

"என் இருதயத்தை ஞானத்தால் தேற்றிக்கொண்டிருக்கும்போதே, நான் என் தேகத்தை மதுபானத்தால் சீராட்டிக்கொண்டிருக்கவும், மதியீனத்தைப் பற்றிக் கொண்டிருக்கவும் என் உள்ளத்தில் வகை தேடினேன்" பிரசங்கி 2:3.

மேற்கூறப்பட்ட வசனங்களிலிருந்து சாலமோன் ராஜா ஞானத்தை தேவனிடம் மிகவும் வாஞ்சையோடு கேட்டான் என்றும், தேவன் அவனுக்கு விசேஷித்த ஞானத்தைக் கொடுத்து, இவ்வித ஞானத்தைப் பெற்றவன் உனக்கு முன் இருந்ததுமில்லை ; உனக்குப் பின் இருக்கப்போவதுமில்லை என்றும், அதுமட்டுமல்லாது அவன் கேட்காத ஐசுவரியத்தையும், மகிமையையும் அவனுக்குக் கொடுத்து தேவன் சாலமோனனை விசேஷமானவனாக்கினார். ஜனங்களை நியாயம் விசாரிக்கிறதற்கேற்ற ஞானம் சாலமோனுக்கு உண்டு என்று அவன் ராஜ்யத்தில் உள்ள எல்லா ஜனங்களும் கண்டு அவனுக்குப் பயந்திருந்தார்கள் *(I இராஜா. 3:16-28)* வரையுள்ள வசனங்களை வாசித்து அறிந்து கொள்ளப்பார்க்கவும். அதுமட்டுமல்லாது

சாலமோனின் விசேஷித்த ஞானத்தைப் பற்றி அறியாத நானா ஜாதியான ஜனங்களும் அவனிடத்தில் வந்தார்கள்.

இவ்வித விசேஷித்த ஞானத்தைப்பெற்ற சாலமோன் ராஜா தான் தேவனிடம் கேட்டுப்பெற்றுக் கொண்ட ஞானத்தினால் வானத்தின் கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்ய அவன் மனதைப் பிரயோகம் பண்ணினான் என்றும், அதே நேரத்தில் அவன் இருதயத்தை மதுபானத்தால் சீராட்டிக் கொண்டிருக்கவும், மதியீனத்தைப் பற்றிக் கொண்டிருக்கவும் வகை தேடினான் என்று கூறப்பட்டுள்ளது.

தேவன் தமது ஜனங்களுக்கு விசேஷித்த வரமாகிய ஞானத்தைக் கொடுப்பது தேவக் காரியங்களைச் செய்வதற்கும், தேவனை மகிமைப்படுத்து வதற்குமே ஒழிய உலகக்காரியங்களை ஆராய்ச்சி செய்வதற்கோ, வேறு எந்த ஒரு காரியத்துக்கோ அல்ல என்பதை நாம் சரியாக அறிந்து கொள்ள வேண்டும். உலகக் காரியங்களை ஆராய தன் மனதை பிரயோகித்து, தன் இருதயத்தை மதுபானத்தால் சீராட்டவும், மதியீனத்தைப் பற்றிக் கொண் டிருக்கவும் தன் உள்ளத்திலே வகை தேடினான் என்று கூறப்பட்டுள்ளது. ஒரு தவறு அநேக தவறுகளுக்கு வழிவகுக்கும் என்பதை நாம் மறக்கக்கூடாது.

சாலமோன் ராஜா தேவன் தனக்குக் கொடுத்த ஞானத்தினால் தேவாலயத்தை மிகவும் விசேஷித்த முறையில் கட்டினாலும் அவன் உலகக் காரியங்களை ஆராய ஆரம்பித்ததினாலே தன் ஜீவியத்தை காத்துக்கொள்ள அறியாதவனாயிருந்தான். இன்றும் அநேக தேவ ஊழியர்கள் தாங்கள் பெற்ற விசேஷித்த வரமாகிய தேவ ஞானத்தை தேவ நாம மகிமைக்கென்று பயன்படுத்தாது, ஐஸ்வரியத்தையும், புகழையும் நாடி செயல்படுவதினால் தங்களின் இரட்சிப்பைக் காத்துக்கொள்ள முடியாதவர்களாகி விடுகிறார்கள். மிகவும் எச்சரிக்கையாயிருந்த செயல்படுவோமா!

6) **எஸ்றா**

_எஸ்றா நியாயாதிபதிகளை நியமிக்கும் தேவ ஞானம் பெற்றிருந்தான்_

"உன் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை அறிந்த சகல ஜனங்களையும் நியாயம் விசாரிக்கத்தக்க துரைகளையும், நியாயதிபதி களையும், எஸ்றாவாகிய நீ உன்னிலுள்ள உன் தேவனுடைய ஞானத்தின் படியே ஏற்படுத்துவாயாக".... எஸ்றா 7:25.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் பெர்சிய ராஜாவாகிய அர்தசஷ்டா என்பவன் இஸ்ரவேல் ராஜ்யத்திற்கு தலைவனாக நியமிக்கப்பட்ட எஸ்றா என்ற வேதபாரகனுக்குக் கொடுக்கும் கட்டளையைப் பார்க்கிறோம். (*வசனம் 14-ஐப் பார்க்கவும்*) மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் வேதபாரகனாகிய எஸ்றாவை தேவ ஞானத்தைப் பெற்றவன் என்று ராஜாவாகிய அர்தசஷ்டா கூறுவதைச் காண்கிறோம். அப்படியென்றால் ஒரு மனிதனின் செயல்பாட்டின் மூலம் அவன் தேவன் அருளிய ஞானத்தைப் பெற்றவன் என்று மற்றவர்கள் அறிந்து

கொள்ளமுடியும். அவன் பெற்ற தேவ ஞானத்தைக் கொண்டு தனது நாட்டை மிகவும் சிறந்த முறையில் பரிபாலனம் செய்யக்கூடிய மிகவும் சிறந்த மனிதர்களை வெவ்வேறுவித உத்தியோகங்களுக்கு எஸ்றாவால் நியமிக்க முடியும் என்பதையும் அந்த அரசன் அறிந்து அந்த அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பை வேத பாரகனாகிய எஸ்றாவிடமே கொடுப்பதையும் காண்கிறோம். அப்படியென்றால் இந்த விசேஷித்த ஞானத்தை எஸ்றா பெற்றுக்கொள்வதற்கு அவனிடம் காணப்பட்ட சிறப்பானக் காரியம் என்ன என்று பார்ப்போம்.

"கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதி நியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்" என்று காண்கிறோம். இன்றும் பெரும்பாலுமான தேவ ஊழியர்கள் வேத வசனங்களை இரவு பகலாக ஆராய்ந்து பார்க்கவோ, தேவ வசனம் போதிக்கும் வண்ணமாக தங்கள் ஜீவியத்தை அமைத்துக் கொள்ளவோ, தாங்கள் கற்றுக் கொண்ட வேத வசனங்களை தெளிவாக மற்றவர்களுக்குப் போதிக்கவோ மனமற்றவர்களாய் இருப்பதைக் காண முடிகிறது. இவர்கள் தேவன் வல்லமையுள்ளவர், அற்புதங்களைச் செய்கிறவர், உங்களுக்கும் அற்புதங்களைச் செய்வார் என்று ஜனங்களைக் கவரக்கூடிய ஆசை வார்த்தைகளைச் சொல்லி *எரே.6:14, 8:11*-ல் கூறியுள்ளபடி சமாதானமில்லாதிருந்தும் சமாதானம் சமாதானம் என்று சொல்லி ஜனங்களின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள். இவ்விதமாகவே அநேகப் புத்தகங்களும், பத்திரிக்கைகளும் எழுதப்படுகிறது. இந்தப் புத்தகங்களும், பத்திரிக்கைகளும் ஊழியர்களின் சுயவிளம்பரத்திற்காக எழுதப்படுகிறவைகளாக இருக்கிறதே ஒழிய ஜனங்கள் வேத சத்தியங்களை தெளவாக அறிந்து கொள்ள வேண்டும். ஜனங்களை கர்த்தரின் வருகைக்கு ஆயத்தப்படுத்த வேண்டும் என்ற வாஞ்சையில் எழுதப்படுகிறவைகளாக இல்லை.

இன்றைய ஊழியர்களின் இவ்வித செயல்பாடுகளினால், சிலர் சத்தியங்களை அறிந்துகொண்டு, தங்கள் ஜீவியத்தை அதற்கு ஏற்றவாறு அமைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பினாலும், அவர்கள் சரியான வேத சத்தியங்களை அறிந்த கொள்ளமுடியாதபடி *ஆமோஸ் 8:11*-ல் கூறப்பட்டுள்ள வசனம் (போதனை) கிடைக்காத கொடிய பஞ்சத்தை உண்டாக்குவதாகவுள்ளது என்பதை நமது ஊழியர்கள் அறிய வேண்டும்.

இன்றைய ஊழியர்கள் தங்கள் பெயருக்கும், புகழுக்கும், சுயலாபத்திற்கும் என்று செயல்படுவதை விட்டு விட்டு இரவும் பகலும் தேவனுடைய வேத வசனங்களை ஆராய்ந்து பார்க்கிறவர்களாகவும், வேத வசனத்தின்படி தங்கள் ஜீவியத்தை அமைத்துக்கொள்கிறவர்களாகவும், தாங்கள் கற்றுக்கொண்ட வேத சத்தியங்களை மற்றவர்களும் தெளிவாக அறிந்து கொள்ளும் வண்ணமாக உபதேசிக்கவும், புத்தகங்கள், பத்திரிக்கைகள் எழுதும்படியாக தேவ ஞானத்தைப் பெற்றுக்கொண்டு செயல்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். இவ்விதமாக செயல்பட வேதபாரனாகிய எஸ்றாவைப்போல் தங்கள் இருதயத்தை பக்குவப்படுத்திக் கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

7) ஸ்தேவான்

ஸ்தேவான் மற்றவர்கள் எதிர்த்து நிற்கமுடியாத ஞானத்தைப் பெற்றிருந்தான்

"அவன் (ஸ்தேவான்) பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற்போயிற்று" அப்.6:10,3.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஸ்தேவானை சூழ்ந்து நின்ற ஜனங்களால் ஸ்தேவான் பேசின ஞானத்தையும், ஆவியையும் (வைராக்கியத்தையும்) எதிர்த்து நிற்க அவர்களால் முடியவில்லை. ஸ்தேவான் பந்தி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டவன் என்பதை இந்த அதிகாரத்தின் துவக்க வசனங்களிலிருந்து அறியலாம். ஆனால் அவன் தேவனுக்காக மிகவும் வைராக்கியம் உடையவனாக கர்த்தருடைய ஜனங்களுக்கு அறிவிக்கிறவனாக இருந்தான் என்பதை நாம் காண்கிறோம்.

இன்றைய ஊழியர்களும் கர்த்தருக்காக மிகவும் வைராக்கியம் உடையவர்களாயிருந்து கர்த்தருக்கென்று செயல்பட்டால் நிச்சயமாகவே தேவன் அவர்களுக்கு விசேஷித்த ஞானத்தைக் கொடுப்பார். இதை கீழ்க்கண்ட வேத வசனமும் உறுதிபடுத்துவதாகவுள்ளது.

"உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும், எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்" லூக்.21:15.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தை ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமாக எடுத்துக்கொண்டு அவர்கள் தேவனுக்கென்று வைராக்கியமாக செயல்பட முயற்சிக்க வேண்டும்.

8) பெசலேயேல்

பெசலேயேல் எல்லா வேலையும் செய்யும் தேவ ஞானம் பெற்றிருந்தான்

"அவனுக்கு (பெசலேயேலுக்கு) ஞானத்தையும் புத்தியையும் அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார்" யாத். 35:33

"ஞான இருதயமுள்ள யாவருடைய இருதயத்திலும் ஞானத்தை அருளினேன்....." யாத்.31:6

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் தேவன் பெசலேயேலுக்கு ஞானத்தைக் கொடுத்தார் என்றும் இரண்டாம் வசனத்தில் ஞான இருதயமுள்ள யாவருடைய இருதயத்திலும் தேவன் ஞானமாகிய வரத்தை அருளுவதாகவும் காண்கிறோம்.ஒரு தனிப்பட்ட மனிதன் அல்லது ஒரு குறிப்பிட்ட ஜனங்கள் கர்த்தருக்குப் பயப்படுதலாகிய ஞானத்தை தங்கள் இருதயத்தில் உடையவர்களாக இருந்தால் தேவன் அவர்களுக்கு விசேஷித்த

வரமாகிய ஞானத்தைக் கொடுத்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையை மிகவும் விசேஷித்தப் பிரகாரம் செய்துமுடிக்க தேவன் உதவி செய்கிறார். கர்த்தர் நமக்குத் தமது வரமாகிய ஞானத்தைக் கொடுக்கும்படியாக நாம் கர்த்தருக்குப் பயப்படுதலாகிய ஞானத்தை உடையவர்களாய் இருப்பது மிகவும் அவசியமாகவுள்ளது என்பதை நாம் அறிய வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள தேவ ஞானத்தைப் பெற்ற மனிதர்களின் வாழ்க்கையிலிருந்து அவர்கள் எந்த எந்தக் காரியங்களுக்காக தேவ ஞானமாகிய வரத்தைப் பெற்றவர்களாகக் காணப்பட்டார்கள் என்றும் அந்த தேவ ஞானமாகிய வரத்தைப்பெற அவர்களில் காணப்பட்ட சிறப்பானக் காரியங்கள் என்ன என்றும் பார்ப்போம்.

எந்தக் எந்தக் காரியங்களுக்காக தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக இருந்தார்கள்

i) கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்ட

ii) தேசத்தை பஞ்சமான சூழ்நிலையில், குழப்பமான சூழ்நிலையில் சரியான முறையில் தேசத்தை பரிபாலனம் செய்ய

iii) தேசத்தின் ஜனங்களின் எண்ணங்கள், செயல்பாடுகள் இவைகளைச் சரியாக அறிந்து கொள்ள.

iv) ஜனங்களை நியாயம் விசாரிக்க, நன்மை , தீமை இன்னதென்று அறிய.

v) தேசத்தை பரிபாலனம் செய்வதற்குத் தகுதியான அதிகாரிகளை ஏற்படுத்த

vi) தேவனுடைய வெளிப்பாடுகளை பெற்றுக்கொள்ள

vii) தேவ ஜனங்களை வழிநடத்த

viii) எதிர்ப்புகளின் மத்தியிலும், ஆபத்துக்களின் மத்தியிலும் தேவனைப் பற்றிய சத்தியங்களை தைரியமாக போதிக்க

மேற்கூறப்பட்டுள்ள காரியங்களில் முதல் காரியம் ஆலயத்தைக் கட்ட இரண்டு முதல் ஐந்து காரியங்கள் அரசாட்சி செய்வது சம்பந்தமான காரியங்களை குறிப்பதாகவுள்ளது. ஆறாவதாகக் கூறப்பட்டிருக்கும் தேவனுடைய வெளிப்பாடு களைப் பெறுவது என்பது தேசத்தை ஆட்சி செய்வதற்கானாலும் சரி, சபை சம்பந்தமானக் காரியங்களானாலும் சரி, வாழ்க்கையின் எந்த ஒரு காரியத்துக்கானாலும் சரி, இந்த தேவனின் வெளிப்பாட்டைப் பெறுவது மிகவும் அவசியமாகவுள்ளது இதன் முக்கியத்துவத்தைக் கீழ்க்கண்ட வேத வசனம் நன்கு விளக்கும் ***"தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள்"* *நீதி. 29:18.***

ஏழாவது எட்டாவதாகக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் ஊழிய சம்பந்தமான காரியங்களைக் குறிப்பதாகவுள்ளது. மேற்கூறப்பட்டுள்ளக் காரியங்களிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமானக் காரியம் யாதெனில் வேலை செய்கிறவர்கள் தாங்கள் வேலை செய்யும் ஸ்தலங்களில் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமைகளை சிறப்பான முறையில் செய்து முடிக்க தே

தொழில் செய்கிறவர்கள் சிறப்பான தொழில் செய்யவோ ஆட்சி செய்கிறவர்கள் சிறப்பாக ஆட்சி செய்யவோ, ஊழியர்கள் சிறப்பாக சபைகளை நடத்தவோ, குடும்பஸ்தர்கள் சிறப்பாக தங்கள் குடும்பங்களை நடத்தவோ மற்றும் எந்தக் காரியங்களுக்கானாலும் சரி தேவ ஞானமாகிய வரத்தை நாம் பெற்றுக் கொண்டு, விசேஷித்த பிரகாரமாக செயல்படுவது மிகவும் சிறப்பானக் காரியமாகும். ஆகையினால்தான் அப்போஸ்தலனாகிய பவுல் ஞான வரங்களை விரும்புங்கள் என்று *I கொரி.14:1*-ல் கூறுகிறார். இந்தக் கடைசி நாட்களில் ஜீவிக்கிறதான நாம் நம் வாழ்க்கையை மிகவும் சிறப்பாக அமைத்துக்கொள்ள, நமது குடும்பங்களை சரியாக நடத்த, நமது சபைகளை விசேஷித்த பிரகாரமாக நடத்த, அலுவலகங் களில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமைகளை விசேஷித்த பிரகாரமாக செய்து முடிக்க, நமது தொழிலில் விசேஷித்த பிரகாரமாக செயல்பட நாம் எல்லாரும் தேவனே எங்களுக்கு உம்முடைய விசேஷித்த ஞானமாகிய வரத்தைத் தாரும் என்று கெஞ்சிக் கேட்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இது குறித்து அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறும் ஆலோசனையை அறிந்திருப்பது நல்லது.

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" யாக்.1:5.

கர்த்தரிடம் இந்த தேவ ஞானமாகிய வரத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டு மிகவும் சிறப்பாக செயல்பட முயற்சிப்போமா? கர்த்தர் தாமே கிருபை செய்வாராக!

இந்த விசேஷத்த ஞானத்தைப்பெற அவர்களிடம் காணப்பட்ட சிறப்பானக் காரியங்கள்

இந்த விசேஷித்த ஞானத்தைப் பெற மேற்கூறப்பட்டுள்ள மனிதர்களிடம் காணப்பட்ட விசேஷித்த தன்மைகள் என்ன என்று அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

i) கர்த்தருக்குப் பயப்படும் பயமாகிய ஞானம்

ii) பாவம் காணப்படாதபடி தங்களைக் காத்துக் கொள்வது

iii) தேவனை உத்தமமாய், முழுமையாகப் பின்பற்றுவது

iv) போஜனத்தினால் தீட்டுப்படாதபடி தங்களைக் காத்துக்கொள்வது

v) தங்களில் தவறுகள் காணப்படும்பொழுது உடனே தேவனிடம் மன்னிப்புக் கேட்பது

vi) கர்த்தருடைய வேதத்தை இரவு பகலாய் ஆராய்ந்து பார்ப்பதும்,கற்றுக் கொண்ட வேத சத்தியங்களுக்கு ஏற்றவாறு தங்கள் ஜீவியத்தை காத்துக்கொள்வதும், தாங்கள் கற்றுக்கொண்ட வேத சத்தியங்களை மற்றவர்களுக்குத் தெளிவாகப் போதிப்பதற்கு தங்கள் இருதயத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளுவதாகும்.

vii) கர்த்தருக்காக வைராக்கியம் உடையவர்களாயிருப்பது.

இந்தக் கடைசி நாட்களில் வாழ்கிறதான நாம் நம் வாழ்க்கையின் மூலமாக தேவ நாமம் மகிமைப்படும்படி நம்மில் தேவ ஞானமாகிய விசேஷித்த வரங்கள் காணப்படும்படியாக மேற்கூறப்பட்டுள்ள காரியங்களினால் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும். செய்வோமா!

D. தேவ ஞானத்தைப் பெற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவ எச்சரிப்புகள்

தேவ ஞானத்தைப் பெற்ற மனிதர்கள் எவ்விதம் எச்சரிப்போடு இருக்கவேண்டும் என்று இந்தப் பகுதியில் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1. ஒருவனும் தன்னை ஞானியென்று எண்ணக்கூடாது

"நீ உன்னை ஞானியென்று எண்ணாதே ; கர்த்தருக்குப் பயந்து தீமையை விட்டு விலகு" நீதி.3:7.

இன்றைய மனிதர்களில் பெரும்பாலுமானவர்கள் தாங்கள் தான் சிறந்த ஞானிகள், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லிக்கொண்டு தங்கள் ஜீவியத்தைக் குறித்து விழிப்புடையவர்களாயிராதபடி, ஏனோதானோவென்று ஜீவித்து தாங்கள் பெற்ற மேன்மையான ஆவிக்குரிய அநுபவங்களை இழந்து விடுகின்றனர். அதினால் தான் அந்த வசனத்தின் பின்பகுதியில் சரியான ஆலோசனை கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது கர்த்தருக்குப் பயந்து தீமையான எல்லாக் காரியங்களையும் விட்டு விலக வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆம் நாம் நம்முடைய வாழ்க்கையில் எப்பொழுதும் கர்த்தருக்குப் பயப்படுகிற வர்களாக நமது வாழ்க்கையில் காணப்படக்கூடிய எல்லாவித தீமையான காரியங்களையும் விட்டு விலக வேண்டும். நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் பெற்ற மேலான ஜீவியத்தைக் குறித்து நாம் எப்போதும் விழிப்போடு இருப்பது மிகவும் அவசியமாகவுள்ளது.

2. பரிதானம் வாங்கக்கூடாது

"பரிதானம் ஞானிகளின் கண்களைக் குருடாக்கிவிடும்." உபா.16:19

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஒரு மனிதன் ஞானத்தைப் பெற்றவனாக இருந்தாலும் அவன் பரிதானம் வாங்குகிறவனாக இருந்தால் அவனில் காணப்படும் அந்தப் பரிதானம் வாங்கும் சுபாவமானது அவன் கண்களை குருடாக்கி நியாயம் எது, அநியாயம் எது என்று பார்க்க முடியாதபடி செய்து விடும். ஆகவே அதிகாரத்தில் உள்ளவர்கள் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக சிறப்பாக ஆட்சி செய்கிறவர்களாக இருந்தாலும் அவர்களிடம் பரிதானம் வாங்கும் சுபாவம் சிறிதளவும் காணப்படக்கூடாது.

இன்றைய நமது அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதற்கு எல்லையேஇல்லை. இவர்கள் கண்கள் குருடானவர்களாக உண்மையை பொய்யென்றும், பொய்யை உண்மையென்றும் மாற்றிச் சொல்லி கொஞ்சம் கூட பயமின்றிச் செயல்படுகிறார்கள். இவர்கள் தேவ ஞானமாகிய கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை பெற்றவர்களாயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

8. தேவ ஞானத்தைப் பெற்றவர்கள் மதுபானத்திற்குத் தங்களை அடிமையாக்கக் கூடாது

"என் இருதயத்தை ஞானத்தால் தேற்றிக்கொண்டிருக்கும்போதே, நான் என் தேகத்தை மதுபானத்தால் சீராட்டிக் கொண்டிருக்கவும்,...என் உள்ளத்தில் வகை தேடினேன்" பிரசங்கி 2:3.

மேற்கூறப்பட்டுள்ள வசனம் சாலோமோன் ராஜாவினால் கூறப்பட்ட வசனமாகும். அதில் அவன் தன் இருதயத்தை சீராட்டிக் கொண்டிருக்கவும் தனது உள்ளத்தில் வகை தேடினான் என்று கூறப்பட்டுள்ளது. ஆங்கில வேதப் புத்தகத்தில் கூறியுள்ளபடி அவன் ஞானத்தை தன் இருதயத்தில் அறிந்து கொள்ள முயற்சிக்கும்போதே தன் தேகத்தை மதுபானத்திற்கு அடிமையாக்க வகை தேடினார் என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு மனிதன் ஞானத்தை அறிந்து கொள்ள முயற்சிக்கும்போதே மதுபானத்திற்கு தன்னை அடிமையாக்க முயற்சிக்கிறான் என்றால் அது மிகவும் ஆபத்தான ஒரு காரியமாகும். மதுபானம் எத்தன்மையுடையது என்றும் அது குறித்து கர்த்தரின் எச்சரிப்பு என்ன என்றும் கீழ்க்கண்ட வேத வசனங்கள் மூலம் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

"மதுபானம் இரத்த வருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய் தோன்றும் போது, நீ அதைப் பாராதே ; அது மெதுவாய் இறங்கும். முடிவில் அது பாம்பைப் போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும். உன் கண் பரஸ்திரீகளை நோக்கும் ; உன் உள்ளம் தாறுமாறான வைகளைப் பேசும். நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப்போலும் பாய்மரத்தட்டிலிலே படுத்திருக்கிறவனைப் போலும் இருப்பாய். என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை ; என்னை அறைந்தார்கள், எனக்குச் சுரணையில்லை ; நான் அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய்" நீதி.23:31-35.

"திராட்சரசம் பரியாசஞ்செய்யும், மதுபானம் அமளிபண்ணும் அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல" நீதி. 20:1.

"ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந் தானே" நீதி.23:29,30.

மதுபானம் குறித்த தேவ எச்சரிப்புகள்

"மதுபானப்பிரியலரையும் மாம்சப் பெருந்தீனிக்காரரையும் சேராதே. குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள்"......நீதி.23:20,21.

"திராட்சரசம் குடிப்பது ராஜாக்களுக்குத் தகுதியல்ல.

மதுபானம் பிரபுக்களுக்குத் தகுதியல்ல சிறுமைப்படுகிறவர்களுடைய நியாயத்தையும் புரட்டுவார்கள்." நீதி.31:4,5.

"சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களை சூடாக்கும்படி தரித்திருந்து, இருட்டிப்போகுமளவும் குடித்துக்கொண்டேயிருக்கிறவர்களுக்கு ஐயோ! அவர்கள்....மதுபானத்தையும் வைத்து விருந்து கொண்டாடுகிறார்கள்..."ஏசாயா 5:11,12.

"இந்த ஆணையுறுதியின் வார்த்தை களைக் கேட்டும், தாகத் தினிமித்தம் வெறிக்கக் குடித்து, மன இஷ்டப்படி நடந்தாலும் எனக்குச் சுகமுண்டாயிருக்கும் என்று தன் உள்ளத்தைத் தேற்றிக்கொண்டால், கர்த்தர் அவனை மன்னிக்கச் சித்தமாயிரார்" உபா.29:19.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் மதுபானம் எத்தன்மையுடையது என்றும் அதை பயன்படுத்துவதினால் ஏற்படும் தீமையான விளைவுகள் பற்றியும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்நாட்களில் தேவ ஜனங்களில் யாரும் மதுபானங்களுக்கு அடிமையாகாதபடி தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும். சிறந்த ஞானத்தைப் பெற சாலமோன் ராஜாவும் தன்னைக் காத்துக்கொள்ளாதபடி மதுபானத்துக்கு தன்னை அடிமையாக்கினதினாலே அவன் பெற்றிருந்ததான மேலான தேவ ஞானமானது அவனுக்குப் பயன் இல்லாமல் போய்விட்டது. ஆகவே மதுபானம் குறித்து நாம் ஜாக்கிரதையாயிருப்போமாக! நான் தாகத்துக்காக குடித்தேன் என்று சொல்லிக்கொண்டு மன இஷ்டப்படி நடந்தாலும் தேவன் அப்படிப்பட்டவர்களை மன்னிக்க மாட்டார் என்பதை நாம் அறிய வேண்டும்.

மேற்கூறப்பட்டிருக்கும் வசனங்களில் இறுதி வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தேவனின் எச்சரிப்பைக் கவனிப்பது மிகவும் நல்லது. அதில் சுகம் உண்டாயிருக்கும் என்ற வார்த்தைக்கு ஆங்கில வேத புத்தகத்தில் பீஸ் (Peace) என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் அமைதி, சமாதானம் என்பதாகும். இன்று அநேகர் தாங்கள் மன அமைதிக்காக அல்லது சமாதானத்திற்காக குடிப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் தேவன் அவர்களைப் பார்த்துத் தான் நான் அப்படிப்பட்டவர்களை மன்னிக்கச் சித்தமாயிரேன் என்று கூறுகிறார். ஆம் தாகத்துக்காக என்றோ அல்லது மன அமைதிக்காக என்றோ மனிதர்கள் துணிந்து குடிப்பார்கள் என்றால் தேவன் அவர்களை மன்னிக்க மாட்டார். அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கையில் எல்லாமே வேதனை நிறைந்ததாகவே இருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

4. தேவ ஞானத்தைப் பெற்றவர்கள் மதியீனத்தைப் பற்றிக் கொண்டிருக்கக் கூடாது

"என் இருதயத்தை ஞானத்தால் தேற்றிக் கொண்டிருக்கும்போதே, ...மதியீனத்தைப் பற்றிக் கொண்டிருக்கவும் என் உள்ளத்தில் வகை தேடினேன்" பிரசங்கி 2:3.

இதற்கு முந்திய பாகத்தில் கூறப்பட்டுள்ளதுபோலவே ஒரு மனிதன் ஞானத்தை அறிந்து கொள்ள அல்லது பெற்றுக் கொள்ள வாஞ்சையுடையவனாய்

செயல்படும்பொழுதே அவன் மதுபானம் அருந்துகிறவனாக இருந்தால் எவ்விதமும் தேவன் அவனை மன்னிக்க சித்தங்கொள்ள மாட்டார் என்றும் பார்த்தோம். அதுபோலவே மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கூறப்பட்டுள்ளது போல் சாலமோன் ராஜாவிடம் காணப்பட்ட மதியீனமும் மிகவும் தவறான சுபாவமாகும். இதினால் சாலமோன் ராஜா தொடர்ந்து தேவ ஆசீர்வாதங்களைப் பெற முடியாதவனாக ஆகிவிட்டான். ஆகவே இந்தப்பகுதியில் இந்த மதியீனம் எத்தன்மையுடையது என்பது பற்றி அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

a) ஞானத்திலும் கனத்திலும் பேர் பெற்றவனையும் மதியீனமானது கெட்டுப்போகச் செய்யும்

"செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப் போகப்பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்" பிரசங்கி10:1.

எவ்விதம் ஒரு தைலக்காரனுடைய நறுமண பரிமள தைலத்தில் செத்த ஈக்கள் விழும் என்றால் அந்த பரிமள தைலம் முழுவதும் கெட்டுப்போகும். அதுபோலவே ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்ற ஒருவனிடம் காணப்படும் சொற்ப மதியீனமும் அவனை முழுவதுமாக கெடுத்துவிடும். ஆகவே ஞானத்தைப் பெற்றவர்கள் தங்களில் மதியீனம் காணப்படாதபடி தங்களைக் காத்துக் கொள்ளவேண்டும்.

b) மனுஷனுடைய மதியீனம் அவன் வழியை தாறுமாறாக்கும்

"மனுஷனுடைய மதியீனம் அவன் வழியை தாறுமாறாக்கும்"- நீதி.19:3.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தாறுமாறு என்ற வார்த்தைக்கு ஆங்கில வேத புத்தகத்தில் (பெர்வர்ட் - Pervert) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் சரியான வழியைவிட்டு தவறான வழியில் செல்வது என்பதாகும். ஆம் ஒரு மனுஷனில் மதியீனம் காணப்படும் என்றால் அது அவனை தேவன் காட்டும் சரியான வழியைவிட்டு தவறான வழியில் செல்லும்படியாகச் செய்துவிடும்.

சாலமோன் ராஜா தேவ ஞானத்தைப் பெற்று சிறந்த அரசனாக விளங்கினான். ஆனாலும் அவனில் காணப்பட்ட மதியீனத்தினாலே அவன் தேவ கட்டளையை மறந்து அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள் மேல் ஆசை கொண்டு அவர்களை மனைவிகளாக்கிக் கொண்டான் என்றும் அந்த அந்நிய ஜாதியான ஸ்திரீகள் சாலொமோன் தேவனை விட்டு வழுவிப்போகும்படி செய்து அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள் என்றும் *I* இராஜா. 11:1-5 வரையுள்ள வேத வசனங்களின் மூலம் அறியலாம். நாமும் இந்நாட்களில் மிகவும் கவனமாக இருந்து நம்மில் மதியீனமானக் காரியங்கள் சிறிதளவும் காணப்படாதபடி நம்மைக் காத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

நமது குடும்பமும் தேவ ஞானமும்

நமது குடும்பங்களில் தேவ ஞானம் காணப்படுவது எவ்வளவு அவசியமானது என்று அநேகர் அறிந்து கொள்வதில்லை. நமது குடும்பங்களில் தேவ ஞானம் இல்லாததினால்தான் அநேகக் குழப்பங்கள் ஏற்படுகிறது. ஆகவே நமது குடும்பங்களில் தேவ ஞானம் எவ்வளவு அவசியம் என்பது பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.

நமது குடும்பங்களில் தாத்தா, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா என இவ்விதமாக பல உறவு முறைகள் இருப்பதை நாம் அறிவோம். ஆனால் இவைகளைச் சுருக்கி குடும்பம் என்றால் கணவன் அல்லது குடும்பத் தலைவன், மனைவி அல்லது குடும்பத்தின் தலைவி, பிள்ளைகள் இவர்களால் ஆனது என்று எடுத்துக் கொள்ளலாம். அப்படியென்றால் நமது குடும்பம் தேவ ஞானத்தைப் பெற்ற குடும்பமாக இருக்கவேண்டும் என்றால் குடும்பத்தின் அங்கங்களாக உள்ள புருஷன், மனைவி, பிள்ளைகள் எல்லோரும் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக இருப்பது மிகவும் அவசியமாகும். ஆகவே இவைகள் பற்றி சிறிது விளக்கமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

A. கணவனும் - தேவ ஞானமும்

"ஞானமுள்ளவனுக்கு ஒப்பானவன் யார்?" பிரசங்கி 8:1.

கணவன் குடும்பத்தின் தலைவன் ஆவான். ஆகவே குடும்பத்தின் தலைவனாகவுள்ள கணவன் தேவ ஞானத்தைப் பெற்றவனாக இருந்தால் அவனுக்கு ஒப்பானவன் யாருமில்லை. ஏனெனில் அவனுடைய செயல்பாடுகள் எல்லாம் மிகவும் சிறப்பானதாக இருக்கும். அவன் குடும்பத்தின் காரியங்கள் எல்லாவற்றையும் மிகவும் சிறப்பாகச் செய்யப் பார்ப்பான்.

குடும்பத்தின் தலைவனாகவுள்ள கணவன் பற்றி வேத வசனம் கூறும் சில பொதுவானக் காரியங்களையும் நாம் அறிந்திருப்பது மிகவும் பயனுள்ளதாயிருக்கும்.

1. கணவன் மனைவிக்கு தலைவனாயிருக்கிறான்

"ஸ்திரீக்குப் புருஷன் தலைவனாயிருக்கிறான்" I கொரி.11:3, எபே.5:23.

இந்த நாட்களில் பெரும்பாலும் ஆண்களும்,பெண்களும் சமம் என்ற கருத்து எங்கும் நிலவுகிறதை நாம் காணலாம். ஆனால் வேத புத்தகம் இந்த கருத்தை மறுக்கிறது. மேற்கூறப்பட்டுள்ள வேத வசனத்தில் புருஷன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் என்று கூறப்பட்டுள்ளது. பொதுவாக மிருகங்களைக் கவனித்துப் பார்ப்போம் என்றால் அவைகளின் உடலும் தலையும் பூமிக்கு சமமான உயரத்தில் (Parellel to ground) அமைந்துள்ளதைக் காணலாம். ஆனால் மனிதனின் உடலில் தலையானது சரீரத்துக்கு மேலாக (Vertical to ground) அமைந்திருப்பதைக் காணலாம். எவ்விதம் மனிதனின் உடம்பில் தலையானது சரீரத்துக்கு மேலாக அமைந்திருக்கிறதோ அதுபோலவே புருஷன்

மனைவிக்கு மேலாக வைக்கப்பட்டிருக்கிறான் என்பதை நாம் தெளிவாக அறியவேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தலை என்ற வார்த்தை விசேஷித்த கருத்துடையதாகும். பொதுவாக அரசாங்க அலுவலகங்களிலோ அல்லது தொழிற்சாலைகளிலோ தலைமை ஸ்தானத்தில் உள்ளவர்களை ஆங்கிலத்தில் Head of Department (அலுவலகத்தில் தலையாகவுள்ளவர்) என்ற பொருள்படக் கூறப்பட்டுள்ளது. அலுவலகத்தின் தலையாகவுள்ள அந்த மனுஷனுக்கு அந்த அலுவலகத்தில் எல்லாவித வசதிகளோடு கூடிய தனிப்பட்ட அறை, உதவியாளர்கள் (P.A's) என்று பலக்காரியங்கள் அந்த மனிதனின் வசதிக்காக செய்து கொடுக்கப்படுகிறது. ஏனெனில் அந்த மனிதனுக்கு அந்த அலுவலகத்தைக் குறித்து விசேஷித்த பொறுப்பு உண்டு.

அந்த அலுவலகத்தில் அல்லது தொழிற்சாலையில் நடைபெறும் எல்லாக் காரியங்களுக்கும் அந்த மனிதன் தான் முழுப்பொறுப்புடைய வனாக இருக்கிறான். ஒரு சமயம் அந்த ஸ்தலத்தில் தாழ்வான நிலையில் (lowest level)-ல் வேலை செய்யும் ஒரு மனிதன் ஐயோ நான் நாள் முழுவதும் எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்கிறேன். ஆனால் எனக்கு மிகவும் கொஞ்சமாக சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால் இந்த தலைமைப் பதவியில் இருக்கும் இந்த மனிதன் எந்த ஒரு வேலையும் செய்வதில்லை. ஆனால் இந்த மனிதனுக்கு எல்லாரையும் விட அதிகம் சம்பளம் கொடுக்கிறார்கள். எல்லாவித வசதிகளும் அந்த தலைமைப் பதவியில் உள்ள மனிதனுக்கு செய்து கொடுக்கிறார்கள். எல்லா வித வசதிகளும் அந்த தலைமைப் பதவியில் உள்ள மனிதனுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளதே என்று அந்த தாழ்ந்த நிலையில் உள்ள மனிதன் சொல்வான் என்றால் அந்த மனிதனை நாம் புத்தியில்லாதவன். அவன் அந்த தலைமைப் பதிவியில் உள்ள மனிதனின் பொறுப்பு எவ்வளவு அதிகம் என்பதை அறியாமலிருக்கிறானே என்று சொல்வோமல்லவா. அது போலவே குடும்பத்தின் தலைவனாகவுள்ள கணவனும் குடும்பத்தில் உள்ளவர்களின் மதிப்பிற்குரிய வனாக இருக்கிறான்.

மனைவியானவள் தனக்குத் தலையாகவுள்ள கணவனை எல்லாக் காரியங்களிலும் கனம் பண்ண வேண்டும். அவனுக்கு எல்லாக் காரியங்களிலும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்க வேண்டும். இந்நாட்களில் பெரும்பாலுமான ஸ்திரீகள் தங்கள் கணவன்மார்களை அடிமையைப் போல நடத்த முயற்சிக்கிறார்கள். ஸ்திரீகளின் இவ்வித செயல்பாடுகளினால் அவர்கள் குடும்பங்களில் குழப்பங்கள் உண்டாகுமேயொழிய சமாதானமான நிலை ஏற்படாது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

2. கணவன் தன் மனைவியிடம் அன்பு கூற வேண்டும்

"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள் ; "...எபே.5:25.

அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்பு கூரவேண்டும் தன் மனைவியில்

அன்பு கூருகிறவன் தன்னில்தான் அன்புகூறுகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே"..எபே.5:28,29.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் புருஷர்கள் தங்கள் மனைவியிடம் அன்புகூற வேண்டும் என்றும், அவர்களிடம் எவ்விதம் அன்பு கூர்வது என்பது பற்றி இரண்டாவது வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

புருஷர்கள் மனைவிகளை தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து அவர்களிடம் அன்பு கூர வேண்டும் என்றும், அவர்கள் எவ்விதம் அன்பு கூர்வது என்பது பற்றி இரண்டாவது வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

புருஷர்கள் மனைவிகளை தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து அவர்களிடம் அன்புகூற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஒரு சரீரத்தில் ஒரு கொடிய புண் அல்லது சில குறைபாடுகள் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அது மிகவும் அவலட்சணமாகவும், வேதனையானதாகவும் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். நாம் அந்தப் புண் அல்லது குறை பாட்டைப் பற்றி மற்றவர்களிடம் கூறவோ, காண்பிக்கவோ விரும்புவோமா? விரும்பமாட்டோமல்லவா! அதுபோலவே நமது மனைவியிடம் காணப்படும் சில பெலஹீனங்களை அல்லது குறைபாடுகளை நாம் மற்றவர்களிடம் கூறி மனைவியை இழிவுபடுத்தக்கூடாது.

நமது சரீரத்தில் காணப்படும் புண் அல்லது காயம் அது எவ்விதம் சீக்கிரத்தில் சுகமாகவேண்டும் என்று முயற்சி செய்வோமோ, அதுபோலவே மனைவியில் காணப்படும் வியாதி, பெலஹீனங்கள் நீங்கி சுகம் பெற நாம் அதிகம் முயற்சி செய்ய வேண்டும். அதுபோலவே நமது சரீரம் நன்றாக இருக்கவேண்டும் என்று நாம் நல்ல ஆகாரங்களை உட்கொள்ளவும், நமது சரீரத்தை அழகுபடுத்தவும் நல்ல உடைகளை உடுத்தவும் முயற்சி செய்கிறோம் அல்லவா! அதுபோலவே, நமது மனைவிக்கும் நல்ல ஆகாரங்கள் கொடுத்து, நல்ல உடைகள் கொடுத்து மனைவியை மிகச் சிறப்பானவளாக வைத்திருக்கப் பார்க்கவேண்டும்.

அடுத்தாற்போல் ஒரு புருஷன் தன் மனைவி, பிள்ளைகளிடம் எவ்விதம் அன்பு கூர்வது என்பது பற்றி ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கப் பார்க்கிறேன். நமது விசுவாசிகளில் ஒரு மனிதன் தினமும் கூலி வேலை செய்து, அதின் மூலம் அவனுக்கு தினமும் ரூபாய் 50 சம்பளமாகக் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த மனிதன் நான் அதிகக் கடினமாக வேலை செய்ய வேண்டியுள்ளது. ஆகவே என் உடல் நன்றாக இருக்க நான் சாப்பிடவேண்டும் என்று சொல்லி, தனக்கு சம்பளமாகக் கிடைத்த இந்த ஐம்பது ரூபாயில் நாற்பது ரூபாய்க்கு ஹோட்டலில் நன்றாக சாப்பிட்டுவிட்டு மீதி பத்து ரூபாயைக் கொண்டு வீட்டில் கொடுத்து, இந்த பத்து ரூபாயில் எல்லாக் காரியங்களையும் பார்த்துக்கொள். எனக்கு இரண்டு முட்டைகள் வாங்கி அதை ஆம்பிளேட்டு போட்டு வை என்று சொல்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இவ்வித மனிதனை தன் குடும்பத்தினரிடம் அன்புள்ளவன் என்று நாம் சொல்லமுடியுமா

மேற்கூறப்பட்டக் காரியத்துக்கு மாறாக இந்த மனிதன் தான் கூலியாகப் பெற்ற இந்த 50 ரூபாயை அப்படியே தன் வீட்டுக்குக் கொண்டுவந்து தேவன் *உபா.8:18* -ன் படி தனக்கு பணம் சம்பாதிக்க பெலன் கொடுத்ததற்காக அவருக்கு நன்றி சொல்லி (ஸ்தோத்திரம் செய்து), அந்தப் பணத்தில் ஒரு பகுதியைக் கர்த்தருக்கென்று பிரித்து வைத்து விட்டு, மீதியாக உள்ளப் பணத்தை தேவனே இந்தப் பணத்தை எங்களுக்கு ஆசீர்வதித்துத் தாரும். எங்களுக்கு *உபா.2:7*-ன் படி ஒன்றும் குறைவுபடாத வாழ்க்கையையும், *உபா.28:12*-ன் படி கடன்படாத வாழ்க்கையையும் தாரும். *மத்.14:19*-ல் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஆசீர்வதித்துக் கொடுத்ததுபோல், எங்களுக்கு இந்த கொஞ்ச வருமானத்தையும் ஆசீர்வதித்துத் தாரும். இந்தப் பணத்தை எவ்விதம் செலவு செய்வது என்று அறிந்து கொள்ள உம்முடைய விசேஷித்த ஞானத்தை எங்களுக்குத் தாரும் என்று ஜெபித்து, அந்தப் பணத்தைக் கொண்டு, தன் குடும்பத்திற்குத் தேவையான எல்லாப் பொருள்களையும், தன் கையிலிருக்கும் பணத்திற்கு ஏற்றவாறு வாங்கிக் கொண்டு வந்து அந்தப் பொருள்களுக்காக தேவனுக்கு நன்றி சொல்லி (ஸ்தோத்திரம் சொல்லி) அந்தப் பொருள்களை ஞானமாக பயன்படுத்த தேவனே உமது விசேஷித்த ஞானத்தைத் தாரும் என்று ஜெபித்து, அந்தப் பொருள்களைக் கொண்டு நல்ல ஆகாரப் பொருள்களாக சமைத்துக் கொடுத்து, இவ்விதம் தங்களுக்கு குடும்பத்தில் உள்ள எல்லாரும் ஆகாரமாக தேவன் கொடுத்த ஆகாரப் பொருளுக்காக தேவனுக்கு நன்றி சொல்லி (ஸ்தோத்திரம் செய்து) புருஷன், மனைவி, பிள்ளைகள் எல்லாருமாக சேர்ந்து உட்கார்ந்து, சந்தோஷமாக சாப்பிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்.கொஞ்சம் சிந்தனை செய்து பாருங்களேன். கொஞ்சம் செயல்படவும் முயற்சியுங்களேன்.

இவ்விதம் செயல்படுகிற ஒரு மனிதனை உண்மையிலேயே இந்த மனிதன் தன் மனைவி பிள்ளைகளிடம் அன்புகூருகிற மனிதன் என்று சொல்ல லாமல்லவா! குடும்பத்தின் தலைவர்களாக உள்ள எல்லா சகோதரர்களும் குடும்பத்தின் முழுப்பொறுப்பையும் ஏற்று, இவ்விதம் தங்கள் மனைவி பிள்ளைகளிடம் அன்புகூறுகிறவர்களாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். நமது விசுவாசிகளான சகோதரர்கள் இவ்விதம் செயல்படுவார்களா?

இன்று ஆண்களில் பெரும்பாலானோர் ஹோட்டல் உணவு பதார்த்தங்களை அதிகம் விரும்பி சாப்பிடுகிறார்கள். ஆனால் இந்த ஹோட்டல் உணவு பதார்த்தங்களைத் தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் தங்கள் பணம் வீணாவது மட்டுமல்ல நமது சரீரத்தின் சுகத்தையும் அது அதிகம் பாதிக்கும் என்பதையும் நாம் தெளிவாக உணர வேண்டும்.

இங்கு கர்த்தருக்கு கொடுப்பது பற்றி சில வார்த்தைகள் எழுத விரும்புகிறேன். இன்று பெரும்பாலும் சபைகளில் தசமபாகம் காணிக்கையை *மல்.3:10* -ன் படி சபைக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஊழியர்கள் விசுவாசிகளுக்குப் போதிப்பதைக் கேட்கலாம். முதலாவது நாம் அறிந்து கொள்ள வேண்டிய காரியம் யாதெனில் தசமபாகம் கொடுப்பது பற்றிய உபதேசம் புதிய ஏற்பாட்டுக்கால தேவ ஜனங்களாகிய நாம் தசமபாகத்தை அதிகமாகக் கொடுக்கப்

பழக வேண்டும். கர்த்தர் தங்களது உள்ளத்தில் ஏவுகிறபடியும், கர்த்தர் தங்களை ஆசீர்வதித்துள்ளதற்கேற்றபடியும் காணிக்கை கொடுக்க முயற்சிக்க வேண்டும். *II கொரி. 9:7*-ல் கூறியுள்ளபடி விசனத்தோடும், கட்டாயத்தோடும் என்றல்லாது உற்சாகத்தோடு கொடுக்கப்பழக வேண்டும். செயல்படுவோமா?

இரண்டாவதாக, தசமபாக காணிக்கைகளை முன் சொல்லப்பட்ட *மல்.3:10*-ன் படி சபைக்குக் கொண்டு வரவேண்டும் என்று ஊழியர்கள் கூறினாலும், இன்று ஊழியங்கள் பலவிதங்களில் நடைபெறுகிறது. ஆகவே நாம் கர்த்தருக்காக கொடுப்பது குறித்து கர்த்தரிடமே ஆலோசனையைக் கேட்டு, கர்த்தர் தங்களை உணர்த்துவதற்கு ஏற்றவாறு ஊழியங்களை, ஊழியர்களைத் தாங்க முயற்சிக்க வேண்டும். செயல்படுவோமா? தேவன் கிருபை செய்வாராக!

3. புருஷன் மனைவியோடு விவேகமாய் வாழ வேண்டும்

"அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால் உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்" I பேதுரு 3:7

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நித்திய ஜீவன் என்பது மோட்சத்தைக் குறிக்கும் வார்த்தையாகும். இந்த மோட்சப் பாக்கியத்தை நாம் கிருபையினாலே பெற்றுக்கொள்வதினால் அந்த மோட்சத்திற்குக் கிருபை என்ற வார்த்தையும் நித்திய ஜீவனோடு சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. இந்த நித்திய ஜீவனாகிய கிருபை என்று கூறப்பட்டிருக்கும் மோட்சத்தை நம்மைப்போலவே அவர்களும் (மனைவிகளும்) பெற்றுக்கொள்ளுகிறவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

சில மதங்களில் பெண்கள் ஆராதனை ஸ்தலங்களுக்கு அனுமதிக்கப் படுவதில்லை. ஏனெனில் பெண்கள் மோட்சம் செல்ல தகுதியற்றவர்கள் என்பது அவர்கள் சித்தாந்தம். ஆனால் கிறிஸ்தவ மார்க்கம் அவ்விதம் போதிப்பதில்லை. மோட்சம் குறித்தவரையில் ஆணும் பெண்ணும் சமமாகவே கருதப்படுகிறார்கள். மோட்சத்தில் பிரவேசிக்க ஒரு ஆண் என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டுமோ, அந்த எல்லாக் காரியங்களையும் பெண்களும் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே ஆண்கள் பெண்களை இழிவான ஜெந்துக்களாக எண்ணக்கூடாது.

பெண்கள் பெலவீனப்பட்டவர்கள் என்று மேற்கூறப்பட்டுள்ள அதே வசனத்தில் கூறப்பட்டுள்ளது. இயற்கையில் பெண்கள் ஆண்களைவிட பெலவீனமானவர்கள். ஒரு மனிதன் பெலவீனமானவனாக இருக்கும் பொழுது அவனுக்கு எல்லாக் காரியங்களிலும் சந்தேகம் வரும். எரிச்சல் வரும். அது போலவே பெண்களும் பெலவீனமானவர்களாயிருப்பதினால் அவர்களுக்கு ஆண்களைக் குறித்த சந்தேகங்கள் வரும். அதுபோலவே பெண்களுக்குப்

பிரியமில்லாத ஒரு காரியத்தை ஆண் செய்தால் பெண்கள் அதிகம் எரிச்சலடைவார்கள். இது பெண்களிடம் இயற்கையாகக் காணப்படும் பெலவீன சுபாவமாகும். ஆகவே ஆண்கள் பெண்களிடம் மிகவும் விவேகமாக நடந்து கொள்ளப் பார்க்க வேண்டும்.

எவ்விதம் புருஷர்கள் தங்கள் மனைவியிடம் விவேகமாக நடந்து கொள்வது என்பது பற்றி வேத புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் ஒரு உதாரணத்தை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். ***ஆதியாகமம் 22***-ம் அதிகாரத்தில் தேவன் ஆபிரகாமிடம் உன் புத்திரனும், உன் ஏகசுதனும், உன் நேசக் குமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு மோரியா தேசத்துக்குப்போய் அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகன பலியாகப் பலியிடு என்றார். ***(வசனம் 2-ஐப் பார்க்கவும்)*** ஆபிரகாமும் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவ்விதமாகவே செய்தான் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் காரியத்தைக் குறித்து ஆபிரகாம் சாராளிடம் கூறியதாகவோ அல்லது அவளுடைய அனுமதியைக் கேட்டதாகவோ அந்த வசனங்களில் கூறப்படவில்லை. ஏனெனில் ஈசாக்கை பலியிடுவது குறித்து சாராளிடம் கூறியிருந்தால் நிச்சயமாகவே ஈசாக்கை பலியிட சாராள் அனுமதித்திருக்கமாட்டாள்.

இதுபோலவே புருஷர்களும் தங்கள் மனைவியிடம் எந்த எந்தக் காரியங்களைச் சொல்லலாம். எவைகளைச் சொல்லக்கூடாது என்று அறிந்து மிகவும் விவேகமாய் நடந்துகொள்ளப் பார்க்கவேண்டும்.

B. மனைவியும் - தேவ ஞானமும்

"புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் ; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்" நீதி.14:1.

வேத புத்தகத்தை ஆராய்ந்து பார்க்கும்பொழுது அதில் வீடு என்ற வார்த்தை ஏழுவிதக் கருத்துக்களில் உபயோகப்படுத்தியிருப்பதைக் காணலாம். அவைகள்

i) வீடு - நாம் குடியிருக்கும் வீடு

ii) வீடு - தனி மனிதனின் ஜீவியம்

iii) வீடு - குடும்பம்

iv) வீடு - இராஜ்யம்

v) வீடு - தேவனுடைய ஆலயம்

vi) வீடு - சபை அல்லது சமுதாயம்

vii) வீடு - பரலோகம்

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வீடு என்ற வார்த்தை நமது குடும்பமாகிய வீட்டைக் குறிக்கும் என்பதை நாம் அறிய வேண்டும். அதுபோலவே மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் புத்தியுள்ள ஸ்திரீ என்ற வார்த்தையானது ஆங்கில வேதபுத்தகத்தின்படி (ஞானமுள்ள ஸ்திரீ -

Wise Woman) என்று கூறப்பட்டிருப்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு ஸ்திரீ ஞானமுடையவளாக இருந்து தன் குடும்பமாகிய வீட்டைக் கட்டலாம். இங்கு கட்டுவது என்பது செழித்து விருத்தியடையச் செய்வது என்பதாகும். அதுபோலவே இடித்துப்போடுவது என்பது அழித்துப்போடுவது என்பதாகும். அப்படியென்றால் ஒரு ஸ்திரீ ஞானமுடையவளாயிருந்து தன் குடும்பமாகிய வீட்டை செழித்து விருத்தியடையச் செய்யலாம். அல்லது அவள் ஞானமற்றவளாக இருந்து தன் குடும்பமாகிய வீட்டை அழித்துப் போடுகிறவளாக இருக்கலாம். இந்த புத்தகத்தை வாசிக்கும் எனக்கு அன்பான சகோதரியே நீங்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறீர்கள்?

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஞானமுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் என்பதுபோல் ஒரு ஞானமுள்ள மனிதன் தன் வீட்டைக் கட்டுகிறான் என்று வேத புத்தகத்தில் எங்கும் கூறப்படவில்லை என்பதையும் நாம் அறிய வேண்டும். அப்படியென்றால் ஒரு குடும்பம் விருத்தியடைவதும், அழிந்து போவதும் மனைவியின் கையில்தான் உள்ளது என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். அப்படியென்றால், ஒரு குடும்பத்தில் மனைவியின் செயல்பாடுகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். இன்று பெரும்பாலுமான ஸ்திரீகள் தங்கள் ஞானமற்ற செயல்பாடுகளினால் தங்கள் குடும்பமாகிய வீட்டைத் தங்கள் கைகளினால் (செயல்பாடுகளினால்) இடித்துப் போடுகிறவர்களாகவே இருக்கிறார்கள் என்பதை எண்ணும் பொழுது மிகவும் துக்கமாகவுள்ளது. குடும்பத்தில் மனைவியின் செயல்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் ஸ்திரீகளைப் பற்றி இந்தப் பகுதியில் சிறிது விபரமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1. மனைவி புருஷனுக்கு ஏற்ற துணையாக இருக்கிறாள்

"தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" ஆதி.2:18.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்று தேவன் அவனுக்கு ஏற்ற துணையாக ஒரு ஸ்திரீயை உண்டாக்கவேண்டும் என்று விருப்பங்கொண்டார் என்று காண்கிறோம். இதில் ஏற்றதுணை என்ற வார்த்தைக்கு ஆங்கில வேத புத்தகத்தில் (help meet) என்ற வார்த்தை பணன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் தகுதியான துணை அல்லது தகுதியான உதவியாள் என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது.

அலுவலகங்களில் தலைமை ஸ்தானத்தில் உள்ள அதிகாரிகளுக்கு (Head of Department) உதவியாளர்கள் (Personal Assistants) நியமிக்கப்படுகிறார்கள். இந்த உதவியாளர்களின் வேலை யாதெனில் அந்த தலைமை ஸ்தானத்தில் உள்ள அதிகாரிகள் அந்தக் குறிப்பிட்ட நாளில் என்ன என்னக் காரியங்கள் செய்யவேண்டும் என்று இந்த உதவியாளர்கள் அவர்களுக்கு ஞாபகப்படுத்துவார்கள். அதுபோலவே மனைவியும் கணவன் என்ன என்னக் காரியங்கள் செய்ய வேண்டும் என்று அவனுக்கு ஞாபகப்படுத்துவதும், கணவன் கையிட்டுச் செய்யும் எல்லா வேலைகளிலும் அவனுக்கு உதவியாக அல்லது துணையாக

செயல்படுவதற்காகவும் தான் மனைவியை தேவன் உண்டாக்கினார் என்பதை எல்லா சகோதரிமார்களும் நன்கு உணர வேண்டும். அதுவல்லாது புருஷன் மீது அதிகாரம் செலுத்தவோ, புருஷனை அடக்கி அரசாட்சி செய்யவோ ஒரு நாளும் முயற்சிக்கக் கூடாது.

2. வெவ்வேறு ஸ்திரீகள்

இந்தப் பகுதியில் வேத புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வெவ்வேறு வித ஸ்திரீகளைப் பற்றிய வேத வசனங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். வேத புத்தகத்தின் உதவியோடு இந்த ஸ்திரீகளின் சுபாவங்களைக் கற்றுக் கொண்டு தவறான ஸ்திரீகளின் சுபாவங்களை விட்டுவிட்டு நல்ல சுபாவமுடைய ஸ்திரீகளின் சுபாவங்களை தங்களில் காத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

நல்ல சுபாவமுடைய ஸ்திரீகள்

குணசாலியான ஸ்திரீ - நீதி. 3:10, 12:4

புத்தியுள்ள ஸ்திரீ - நீதி.14:1, 19:14

நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ - நீதி.11:16

தவறான சுபாவமுடைய ஸ்திரீகள்

பரஸ்திரீ- நீதி. 5:3,4,5,6,20 ; 2:17; 6:24 ; 7:4-27; 9:13; 22:14 ; 23:27,33

விபச்சார (விபச்சாரி) ஸ்திரீ - நீதி.30:30; 6:26

இலச்சை உண்டு பண்ணுகிற ஸ்திரீ - நீதி. 12:4

புத்தியில்லாத ஸ்திரீ - நீதி.14:1

மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீ - நீதி.11:22

வேசி- நீதி. 7:10

நிர்மூட ஸ்திரீ - நீதி. 9:13

மதியற்ற ஸ்திரீ- நீதி. 9:13

சண்டைக்காரி - நீதி. 19:13 ;17:1; 25:24 ;21:9,19 ;27:15,16

வாயாடி - நீதி. 9:13

3. மனைவியின் முக்கியத்துவம்

"மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான் ; கர்த்தரால் தயையும் பெற்றுக்கொள்ளுகிறான்" நீதி.18:22

"புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு" நீதி.19:14

சிலர் திருமணமே செய்யக்கூடாது. பெண்கள் மிகவும் ஆபத்தானவர்கள் என்று கூறுவதுண்டு. அவர்களுடைய இவ்வித கருத்துக்கு பல காரணங்களையும் அவர்கள் கூறுவதுண்டு. ஆனால் தேவன் மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று கண்டு அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்கினார் என்றால், தேவன் உண்டாக்கிய எல்லாக் காரியமும் நன்மையானதாகவும், நல்லவைகளாகவும்தான் இருக்கும் என்பதை நாம் அறிய வேண்டும். ஆனால் மனிதரின்

பாவத்தினால் தான் மனிதரிலும் ஸ்திரீகளிலும் எல்லாவித தவறான சுபாவங்கள் அவர்களை) பிடித்துக்கொண்டது என்பதை நாம் அறிய வேண்டும். இதைக் கீழ்க்கண்ட வேத வசனம் நன்கு தெளிவுபடுத்துகிறது.

"தேவன் மனுஷனை செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்" பிரசங்கி 7:29. "தேவனை அறியும் அறிவை) பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்" ரோமர் 1:28.

இந்தப் பகுதியின் தலைப்பு வசனங்களில் முதல் வசனம் மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான் என்றும், அவன் கர்த்தரின் தயவையும் பெற்றுக் கொள்ளுகிறான் என்றும் கூறப் பட்டுள்ளது.அதுபோல இரண்டாம் வசனத்தில் புத்தியுள்ள மனைவி கர்த்தர் அருளும் ஈவு என்று கூறப்பட்டுள்ளது. இதில் புத்தியுள்ள என்ற வார்த்தைக்கு ஆங்கில வேதப்புத்தகத்தில் (Prudent wife) (கவனமாகவுள்ள, ஜாக்கிரதையாக உள்ள மனைவி) என்று கூறப்பட்டுள்ளது. ஒரு மனைவி தன் வாழ்க்கையைக் குறித்து, தன் குடும்பத்தின் எல்லாக் காரியங்களையும் குறித்து கவனமாக, ஜாக்கிரதையாக இருக்கிறாள் என்றால், அப்படிப்பட்ட மனைவி கர்த்தரால் நமக்கு ஈவாகக் கொடுக்கப்பட்ட மனைவியாக இருக்கிறாள் என்று நாம் அறிய வேண்டும். ஆகவே மனைவியானவள் தனது குடும்ப சம்பந்தமான எல்லாக் காரியங்களிலும் மிகவும் கவனமாக இருக்கவேண்டியவள் என்பதை ஒவ்வொரு ஸ்திரீயும் நன்கு அறிய வேண்டும். எதையுமே அறிந்து கொள்ளமுடியாத, புரிந்து கொள்ளமுடியாத நிரூடமாக இருக்கக்கூடாது. குடும்பங்களில் மனைவியின் செயல்பாடுகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை ஒவ்வொரு ஸ்திரீயும் நன்கு உணர வேண்டும். அதுபோல ஒவ்வொரு கணவனும் மனைவியின் முக்கியத்துவத்தை உணரவேண்டும்.

4. ஸ்திரீகளைப் பற்றி கூறியிருக்கும் சில முக்கியமானக் காரியங்கள்

ஸ்திரீகளைப் பற்றி கூறியிருக்கும் சில முக்கியமானக் காரியங்களைப் பற்றி இந்தப் பகுதியில் சிறிது அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

அ) ஸ்திரீகள் பெலவீன பாண்டம்

"புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியால் ......" I பேதுரு 3:7.

ஸ்திரீகள் பெலவீன பாண்டம் என்பது பற்றி முந்தியப் பகுதிகளில் சிறிது விளக்கம் எழுதியுள்ளேன். அதாவது ஸ்திரீகள் பெலவீனமாயிருப்பதினால் அவர்கள் எளிதில் எரிச்சலடைவார்கள், எதிலும் சந்தேகங்கொள்வார்கள் என்றும் பார்த்தோம். இந்தப் பகுதியில் சிறிது கூடுதலாக அறிந்துகொள்ளப் பார்ப்போம்.

வேதப் புத்தகத்தில் பெண்களை பெலவீனபாண்டங்கள் என்று கூறியிருந்தாலும் அவர்களுடைய செயல்பாடுகளைப் பார்த்தால் அவர்கள்

அணுகுண்டுகளைவிட சக்தி வாய்ந்தவர்களாயிருப்பார்கள் என்பதை நாம் அறிய வேண்டும்.உதாரணமாக ஒரு குடும்பத்தில் பத்து பேர் ஒரே குடும்பமாக வாழ்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்த பத்துபேரும் மிகவும் ஐக்கியமாக ஒரே குடும்பமாக இருப்பார்கள். ஆனால் ஒரு பெலவீன பாண்டம் புதிதாக அந்தக் குடும்பத்தில் வந்து சேருகிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த பெலவீனபாண்டம் வந்த கொஞ்ச நாட்களிலேயே இந்த பத்துபேர் அடங்கிய குடும்பம் பத்து தனிக் குடும்பங்களாக பிரிந்துபோகச் செய்துவிடும் அந்த பெலவீன பாண்டம். அதுமட்டுமல்லாது இந்த பத்துபேரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கமுடியாதபடி கொடிய கசப்புணர்வுகளையும் உண்டு பண்ணி விடும் அந்தப் பெலவீனபாண்டம். அந்த அளவுக்கு இந்த பெலவீன பாண்டங்கள் சக்திவாய்ந்தவர்களாயிருப்பார்கள். இந்த பெலவீன பாண்டங்கள் குடும்பங்களில் என்ன என்ன குழப்பங்கள் உண்டாக்குவார்கள் என்று யாருமே சொல்ல முடியாது. இந்த பெலவீன பாண்டங்களின் வார்த்தைகளை யாரும் அப்படியே நம்பிவிடக் கூடாது. ஆபத்து வந்து விடும்.

b) எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணர முடியாதவர்கள்

"எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள்" II தீமோ. 3:7.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் சில பெண்கள் எவ்வளவுதான் வேதத்தின் சத்தியங்களைக் கற்றாலும் அவர்களால் அந்த சத்தியங்களை உணரமுடியாதவர் களாயிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களை தவறான உபதேசங்களைப் போதிக்கிறவர்கள் தங்கள் வசப்படுத்திக் கொள்வார்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஒன்றையும் உணரமுடியாதவர்களை எப்படித் தவறான உபதேசக்காரர்கள் அவர்களை வசப்படுத்திக்கொள்ள முடிகிறது என்று சிந்தனை செய்தேன். எங்கள் குடும்பத்தில் நடந்த ஒரு சம்பவத்தை வைத்தே கர்த்தர் இந்தக் காரியத்தை எனக்குக் கற்றுக் கொடுத்தார்.

எங்கள் வீட்டிற்கு அருகில் ஒரு பெயர் கிறிஸ்தவ சபையுண்டு. அதில் ஊழியம் செய்ய ஒரு வாலிபனான போதகன் வந்தான். அவன் தான் ஒரு பெரிய சாதனையாளன் என்று பெயர் பெற வேண்டும் என்று விரும்பி செயல்படுகிறவனாக பல காரியங்களைச் செய்தான். அந்தச் சபையில் திடப்படுத்தல் ஆராதனை ஒன்று வந்தது. அதற்குப் பிள்ளைகளைச் சேர்த்து அவர்களுக்கு விசேஷ வகுப்புகளை நடத்தினான். அந்த போதகன் தன் இயற்கை சுபாவத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக எனது மனைவியின் உதவியோடு எனது மகள் இந்த திடப்படுத்துதல் வகுப்புகளுக்குப் போகாமலேயே இறுதிநாள் சடங்குகளில் மட்டும் கலந்துகொள்ளச் செய்து தனது சாதனையை முடித்து விட்டான். ஒரு குழந்தை ஞானஸ்நானம் எடுக்காமலேயே திடப்படுத்தல் எடுத்தது அந்தப் போதகனின் சாதனையின் சிறப்பு அம்சமாகும்.

நான் இது குறித்து சிந்தனை செய்தபொழுது கர்த்தர் ஒரு காரியத்தை எனக்கு உணர்த்தினார். அதாவது ஒரு ஸ்திரீ தன் புருஷனை அடக்கி அரசாட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உடையவளாக இருப்பாள் என்றால் இவ்விதமாகத் தான் செயல்படுவாள் என்று உணர்த்தினார். தனது இந்த தவறான செய்கையானது சத்தியத்திற்கு ஏற்றவாறு ஊழியஞ்செய்கிற தனது கணவனுக்கு பெருத்த அவமானமாக இருக்குமே என்று எண்ணவில்லை. ஏனெனில் கணவனுக்கு அவமானம் என்றோ, கௌரவப் பிரச்சினை என்றோ ஒன்றுமில்லை. தனது அதிகாரம் தான் இநத வீட்டில் நடைபெறுகிறது என்பதை எல்லோரும் அறியவேண்டும் என்று இவ்விதமாக செயல்படுவார்கள் என்பதை அறிந்து கொண்டேன்.

புருஷனை அடக்கி அவன் தலைமீது உட்கார்ந்து அரசாட்சி செய்யவேண்டும் என்று எண்ணுகிற ஒரு ஸ்திரீ குடும்பத்தின் எந்த காரியத்திலும் கவனம் செலுத்த மாட்டாள். அவள் எவ்விதம் தன் புருஷனை அடக்குவது, எவ்விதம் அவன்மீது அதிகாரத்தை செலுத்துவது என்பதிலேயே அவள் எண்ணமும் , சிந்தனையும் உடையவளாக இருப்பாள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இவ்விதக் குடும்பங்களில் எப்போதும் குழப்பங்கள்தான் ஏற்படுமேயொழிய அமைதியான நிலை இருக்காது. ஸ்திரீகளின் இவ்விதமான தவறான சுபாவமானது பிள்ளைகளின் நல்வாழ்க்கையை அதிகம் பாதிக்கும் என்பதை ஸ்திரீகள் நன்கு உணர வேண்டும்.

c) எலும்புருக்கியான ஸ்திரீ

"இலச்சை உண்டுபண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியா யிருக்கிறாள்" நீதி. 12:4.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் எலும்புருக்கியாயிருக்கிறாள் என்பது கொடிய வேதனை உண்டாக்குகிறவளாயிருக்கிறாள் என்பது பொருளாகும். நமது எலும்பில் சேதம் ஏற்படும் என்றால் அது நமக்கு மிகவும் அதிகமான வேதனையைக் கொடுக்கும். அதுபோலவே இலச்சை உண்டுபண்ணுகிற ஸ்திரீயும் தன் புருஷனுக்கு மிகவும் அதிகமான வேதனையை உண்டுபண்ணுகிற வளாயிருப்பாள்.

இலச்சை உண்டுபண்ணுவது என்றால் என்ன என்று கீழ்க்கண்ட வேத வசனங்கள் மூலத் சிறிது அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

"அறுப்புக்காலத்தில் தூங்குகிறவனோ இலச்சை உண்டாக்குகிற மகன்" நீதி.10:5.

"தன் தகப்பனைக் கொள்ளையிட்டு தன் தாயைத் துரத்திவிடுகிறவன், இலச்சையையும் அவமானத்தையும் உண்டாக்குகிற மகன்" நீதி.19:26.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் அறுப்புக்காலத்தில் தூங்குகிறவன் இலச்சையை உண்டாக்குகிற மகன் என்பது செயல்பட வேண்டிய நேரத்தில் செயல்படாது தூங்கிக்கொண்டு இருந்தால் அது இலச்சையை உண்டாக்கும் அனுபவமாகும். சில பெண்கள் இரவு 7 மணியிலிருந்து மறுநாள்

காலை 8 மணி வரை தூங்கிக் கொண்டே இருந்துவிட்டு, பின் ஐயோ! நான் எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்கிறேன் என்று சொல்வார்கள். சிலர் அரைப்படி அரிசியை வாயில் போட்டுக்கொண்டு சோம்பலாக தெருவாசலில் உட்கார்ந்துகொண்டு போகிறவர்களையும் வருகிறவர்களையும் ஆவென்றுப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அல்லது தெரு வாசலில் உட்கார்ந்து கொண்டு வீட்டு விருதாப்பெண்களைக் கூட்டி வைத்துக்கொண்டு அவள் அங்கு போனாள், இவள் இங்கு வந்தாள் என்று வீணான வெட்டிப் பேச்சுக்களைப் பேசுவார்கள். இவ்வித வெட்டிப்பேச்சுக்கள் சில நேரம் தங்களுக்கு ஆபத்தாக இருக்கும் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இரண்டாவது கூறப்பட்டுள்ள வசனத்தில் தகப்பனைக் கொள்ளையடித்து, தாயை துரத்திவிடுகிறவன் இலச்சையை உண்டாக்குகிற மகன் என்று கூறப்பட்டுள்ளது. அதுபோலவே ஸ்திரீகளும் தங்கள் கணவனுக்குத் தெரியாமல் வரவு செலவு செய்வது, புருஷனுக்குத் தெரியாமல் கொடுக்கல் வாங்கல் செய்வது போன்றக் காரியங்களும் புருஷனைக் கொள்ளையடிக்கும் காரியங்களாகும். புருஷன் வயதான நிலையில் இருக்கும் போதோ அல்லது பெலவீனமான நிலையில் இருக்கும்போதோ, செத்துப்போ, ஏன் இருக்கிறாய் என்று இவ்விதமாக அவன் மனதை வேதனைப்படுத்தும் வார்த்தைகளைச் சொல்பவர்களும் தங்கள் கணவனுக்கு இலச்சை உண்டாக்குகிறவர்களாயிருந்து அவனுக்கு எலும்புருக்கிகளாயிருப்பார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

சில பெண்கள் தங்கள் கணவன் வயதாகி பெலவீன பட்ட நிலையில் இருக்கும்போது, இனி இந்த மனிதனால் தனக்கு எந்தவித பயனும் இருக்காது என்று அறிந்து, அந்த ஸ்திரீ தன் புருஷனை நீ செத்துப்போயேன், ஏன் உயிரோடிருக்கிறாய்? நீ சாகேன் நீ சாகேன் என்று தனது கணவன் மனதை அதிகம் வேதனைப்படும்படியாக அதிகமாகப் பேசுவார்கள். அந்த மனிதன் மிகவும் வேதனைப்பட்டு, சில நாட்களில் மரித்தும் விடுவான், அப்பொழுது அந்த ஸ்திரீ மரித்த தனது கணவனின் சரீரத்துக்கு அருகில் உட்கார்ந்த கொண்டு மற்றவர்கள் முன்னிலையில் ஏன் ராசா, நீ உயிரோடிருந்தால் உன் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பேனே என்று ஒப்பாரி வைப்பார்கள். இவ்விதமான மாயமானக் காரியங்கள் விசுவாசிகளான ஸ்திரீகளிடம் கொஞ்சம்கூட காணப்படக்கூடாது.

d) சாவிலும் அதிகக் கசப்பான ஸ்திரீ

"கண்ணிகளும் வலைகளுமாகிய நெஞ்சமும், கயிறுகளுமாகிய கைகளுமாகிய ஸ்திரீயானவள், சாவிலும் அதிக கசப்புள்ளவளென்று கண்டேன் ; தேவனுக்கு முன்பாகச் சற்குணனாயிருக்கிறவன் அவளுக்குத் தப்புவான் ; பாவியோ அவளால் பிடிபடுவான் " பிரசங்கி 7:26.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கண்ணிகள், வலைகள், கயிறுகள் போன்றவைகள் மற்றவர்களைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்களாகும். அதுபோலவே தங்களுடைய தவறான அல்லது பாவமான செயல்களுக்காக மற்றவர்களை தங்கள் வசமாக்கிக் கொள்வதற்காக வஞ்சகமாக செயல்படும் ஸ்திரீகள் எத்தன்மையுடையவர்கள் என்று மேற்கூறப்பட்டுள்ள

வசனம் மிகத் தெளிவாகக் கூறுகிறது. அவர்கள் சாவிலும் கசப்பானவர்கள் என்பது, அவர்கள் எவ்விதம் தங்கள் வலைகளில் விழாதவர்கள் அல்லது கண்ணிகளில் அகப்படாதவர்களை எவ்வளவாக துன்புறுத்த எண்ணங்கொண்டு மிகவும் கொடூரமாகச் செயல்படுவார்கள் என்பதை விளக்குவதாகவுள்ளது. இந்த வசனத்தில் கூறப்பட்டிருப்பதற்கு *ஆதி.39:7-9* வரையுள்ள வசனங்களில் கூறப்பட்டிருக்கும் யோசேப்பின் வாழ்க்கையில் நடந்த சம்பவமானது சிறந்த உதாரணமாகும். போத்திபாரின் மனைவி யோசேப்பின் மீது இலச்சைகொண்டு அவனை தன் இச்சைக்கு உள்ளாக்க அவள் பலமுறை முயற்சி செய்தாள். ஆனால் யோசேப்பு அவள் வலையில் விழாதபடி முழுவதுமாக தன்னைக் காத்துக் கொண்டான்.

யார் இவ்வித கொடிய ஸ்திரீகளின் வலைக்குத் தப்பக்கூடும் ? என்று அதே வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது தேவனுக்கு முன்பாக சற்குணனா யிருக்கிறவன் அவளுக்குத் தப்புவான் என்று கூறப்பட்டுள்ளது. இதில் சற்குண னாயிருக்கிறவன் என்ற வார்த்தைக்கு ஆங்கில வேதப் புத்தகத்தில் (whoso pleaseth God) (தேவனைப் பிரியப்படுத்துகிறவன்) என்று கூறப்பட்டுள்ளது. அப்படி யென்றால் கர்த்தரைப் பிரியப்படுத்துகிறவன் என்று எண்ணுகிறவன் அவளுக்குத் தன்னை தப்புவித்துக்கொள்வான் என்று காண்கிறோம்.

போத்திபாரின் மனைவி வெறி கொண்டு கொடூரமாகச் செயல்பட்டதால் யோசேப்புக்கு எவ்வளவு கசப்பை உண்டுபண்ணியது பாருங்கள். இன்றும் இவ்விதம் வஞ்சகமாகவும், வெறித்தன்மையோடும் செயல்படுகிற ஸ்திரீகளை நமது சமுதாயங்களில் காண்கிறோம் அல்லவா? இந்த ஸ்திரீகளின் தவறான வாழ்க்கை முறையானது அநேகர் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்ய தூண்டுவதாக இருக்கிறது என்றும், சமுதாயத்தில் பெரும்பாலோனோர் இவ்வித ஸ்திரீகளின் பக்கமே சாய்கிறார்கள் என்பதையும் நாம் காண்கிறோம். இவ்வித தவறான ஸ்திரீகளின் செயல்களுக்கு உடன்படாதவர்கள் மிகுந்த வேதனைக்குள்ளாகக் கடந்து செல்வதையும் காண்கிறோம். வஞ்சகமும் வெறித்தன்மையும் உள்ள ஸ்திரீகளின் செயல்பாடுகள் மிகவும் கொடியதாக இருக்கும்.

இந்த காரியமானது எவ்வளவாக நமது மனித சமுதாயத்தை பாவத்திற்குள்ளாக இருந்து அழிவுக்கு நேராகச் சென்று கொண்டிருக்கிறது என்பதை நமக்கு தெளிவுபடுத்துகிறது அல்லவா. வஞ்சகத்தன்மையுடைய ஸ்திரீகள் எவ்வளவு கொடியவர்களாக இருப்பார்கள் என்பதை நாம் அறிய வேண்டும். தேவ ஜனங்கள் ஒவ்வொருவரும் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக இருந்து கர்த்தரைப் பிரியப்படுத்துகிற சற்குணர்களாக ஜீவித்து இவ்வித கேடுபாடுகளுடைய ஸ்திரீகளிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள மிகவும் ஜாக்கிரதை யுடையர்களாயிருக்க வேண்டும்.

e) குணசாலியான ஸ்திரீ (Virtuous Woman)

"குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது" நீதி. 31:10.

"குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்" நீதி.12:4

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் குணசாலியான ஸ்திரீ என்ற வார்த்தைக்கு ஆங்கில வேத புத்தகத்தில் (Virtuous) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தையின் பொருள் நற்குணமிக்க, நல்லொழுக்கமுள்ள, கற்புள்ள என்பதாகும். அதாவது குணசாலி என்றால் நற்குணங்கள் அல்லது நல்ல குணங்கள் மிகுந்தவளும், நல்ல ஒழுக்கமுள்ளவளும், கற்புள்ளவளுமான ஸ்திரீ என்பதாகும். இவ்வித நல்ல குணங்கள் நிறைந்த குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பன் யார்? என்பதிலிருந்து இவ்விதமான ஒரு சிறந்த குணங்களுடைய ஸ்திரீயைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமான ஒரு காரியம் என்றும் அறியலாம். இவ்வித குணசாலியான ஸ்திரீயின் விலை முத்துக்களைவிட உயர்ந்தது என்று கூறப்பட்டுள்ளது. பொதுவாக முத்துக்கள் ஒரு விலையுயர்ந்த பொருளாகும். ஆனால் குணசாலியான ஸ்திரீயின் விலை முத்துக்களைவிட உயர்ந்தது என்பது அவள் எவ்வளவாக சிறப்புத்தன்மை வாய்ந்தவள் என்பதைக் காட்டுகிறது.

அதுபோலவே இரண்டாவது வசனத்தில் கூறப்பட்டுள்ள குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள் என்பதும் அந்த குணசாலியான ஸ்திரீயின் சிறப்பான நிலையை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது என்று அறியலாம். பொதுவாக ராஜாக்கள் கிரீடத்தை அணிவார்கள். ஒரு மனிதனை ராஜா என்று வெளிப்படுத்துவது அவன் அணிந்துள்ள கிரீடமாகும். அதுபோலவே ஒரு குணசாலியான ஸ்திரீயையுடைய புருஷன் ராஜாவைப்போல் மிகவும் சிறப்பானவனாகக் காணப்படுவான். அப்படியென்றால் ஒரு குணசாலியான மனைவியையுடைய புருஷன் ஒரு மேன்மையான அல்லது அந்தஸ்தான நிலையை அடைகிறான் என்று அறியலாம்.

ஒவ்வொரு மனிதனின் வெற்றியின் பின் ஒரு ஸ்திரீ உண்டு என்று கூறப்படுவதுண்டு. ஒரு ஸ்திரீ தன் கணவன் செய்யும் எல்லாக் காரியங்களிலும் அவனுக்கு உறுதுணையாக இருந்து, அவனுக்கு ஏற்ற ஆலோசனைகள் கொடுத்து இவ்விதமாக அவன் செய்யும் காரியங்களிலும் வெற்றிபெற ஏற்ற உதவியாக இருக்கமுடியும். இன்று பெரும்பாலுமான ஸ்திரீகள் தங்கள் செயல்பாடுகளினால் தங்கள் கணவன், எந்த நல்ல காரியங்களும் செய்ய மனமற்று வாழ்க்கையில் தோல்வியுற்றவர்களாக, மனைவிக்குப் பயந்தவர்களாக ஆகும்படிச்செய்து விடுகிறார்களே! என்ன பரிதாபம் பாருங்கள்!

மேற்கூறப்பட்டுள்ள காரியங்களிலிருந்து நாம் அறிந்துகொள்வது யாதெனில் ஸ்திரீகள் தங்கள் செயல்பாடுகளினால் பெலவீனப்பாண்டங்களாக விளங்கி குடும்பங்களில் பிரிவினைகளையும், விரோதங்களையும், பகைகளையும் உண்டாக்குகிறவர்களாக இருக்கலாம். அல்லது தன் புருஷனை அடக்கி ஒடுக்கி அவன்மீது அரசாட்சி செய்யவேண்டும் என்கிற எண்ணத்திலேயே தன் முழுக்கவனத்தையும் வைத்து, அதின்மூலம் எப்போதும் கற்றாலும் ஒன்றையும் புரிந்து கொள்ள முடியாதவர்களாக அல்லது புரிந்து கொள்ள மனமற்றவர்களாக இருக்கலாம். அல்லது புருஷனுக்கு இலச்சை உண்டுபண்ணுகிறவளாயிருந்து

அவனுக்கு எலும்புருக்கியாக இருக்கலாம். அல்லது தங்கள் வஞ்சகமான செயல்பாடுகளினால் சாவிலும் கசப்பானவளாயிருந்து அநேகருக்கு அவர்கள் வாழ்க்கையை கசப்பாக இருக்கும்படிச் செய்துவிடலாம். அல்லது மேற்கூறப் பட்டுள்ள எந்த ஒரு தவறான சுபாவமும் இல்லாதவர்களாக, நற்குணமிக்க நல்லொழுக்கமுள்ள, கற்புள்ளவர்களாக விளங்கும் குணசாலியான ஸ்திரீயாக ஜீவித்து அதின் மூலம் தன் புருஷனுக்கு முத்துக்களைவிட சிறப்பானவளாக, புருஷனுக்குக் கிரீடமாக அதாவது புருஷனை சிறப்பானவனாக ஆக்குகிறவளாக விளங்கலாம். இதை வாசிக்கிற எனக்கு அருமையான சகோதரியே! நீங்கள் எப்படிப்பட்டவர்களாக விளங்குகிறீர்கள் என்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள்!

குணசாலியாக வாழ்ந்துகாட்டிய ஸ்திரீ

"இப்போதும் மகளே, நீ பயப்படாதே ; உனக்கு வேண்டியபடியெல்லாம் செய்வேன் ; நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாம் அறிவார்கள்" ரூத்.3:11.

வேத புத்தகத்தில் குணசாலியான ஸ்திரீ என்று சாட்சி பெற்ற ரூத்தைப்பற்றி நமது சகோதரிகள் வேத புத்தகத்தில் வாசித்து ரூத்தைப்போல சாட்சியாக வாழ்ந்து காட்டவேண்டும். ரூத் குணசாலி என்று தனது சொந்த ஜனமில்லாத, எந்த சொந்த பந்தமுமில்லாத, முன்பின் தெரியாத வேற்றுமனிதரான இஸ்ரவேல் ஜனங்களிடமிருந்து ரூத் நற்குணசாலி என்று சாட்சி பெற்றவளாக வாழ்ந்து காட்டினாள். ரூத் குணசாலி என்று பெயர் பெற அவளிடத்தில் சிறப்பான குணங்கள் என்ன என்று சிறிது அறிந்து கொள்ளப்பார்ப்போம்.

ரூத் தன் வாழ்க்கையில் தன் மாமியாராகிய நகோமியினால் தனக்கு எந்த ஒரு நன்மையும் இருக்காது என்பதை நன்கு அறிந்திருந்தும் தன் மாமியாரின் சுகத்துக்காக தன்னை முழுவதுமாக தியாகம் செய்து, தன் இனஜன பந்துக்களை முழுவதுமாக மறந்து, தனக்கு முன்பின் தெரியாத இன்னொரு ஜாதியான ஜனங்களிடத்தில் தன் மாமியாரைப் பின்பற்றி வந்தாள் என்றால் அவளின் நற்குணத்தை என்னவென்று சொல்வது!

இதில் ஒரு முக்கியமானக் காரியம் யாதெனில் இந்த ரூத் தேவ சாபத்தைப் பெற்ற மோவாபிய ஜாதியைச் சேர்ந்தவளென்றும் இந்த ஜாதி ஜனங்கள் தேவ ஜனங்களோடு ஐக்கியம் கொள்ளமுடியாது என்று *உபா.23:3*-ல் கூறப் பட்டுள்ளது. இவ்விதம் தேவ ஜனங்களோடு ஐக்கியம் கொள்ளமுடியாத, ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த ஸ்திரீயாக ரூத் இருந்தாலும், தன் மாமியாரின் சுகத்துக்காக தன்னையே முழுமையாக தியாகம் செய்து, தான் முன்பின் அறியாத ஜனங்களாகிய இஸ்ரவேலரிடத்தில் வந்ததினால், தேவன் அவளை வெகுவாய் ஆசீர்வதித்தார். அதினால் அவள் நமது ஆண்டவராகிய இயேசுவின் முப்பாட்டியாக விளங்கும் பாக்கியத்தைப் பெற்றாள் என்பது எவ்வளவு சிறப்பான காரியம் என்று சிறிது சிந்தித்துப் பாருங்கள் (*மத்.1:5* -ஐப் பார்க்கவும்)

"அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசம் அடைந்தார்கள் அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை" சங்.34:5.

இந்த உலக மனிதரில் அவரை நோக்கிப் பார்த்த யாவரும் பிரகாசம் அடைந்து தங்கள் வாழ்க்கையின் மேன்மையானக் காரியங்களைப் பெற்றார்களேயொழிய அவர்கள் முகங்கள் வெட்கப்படும்படியாக தேவன் அவர்களை ஒருபோதும் கைவிட்டதில்லை. இவ்விதமாக நமது அருமையான சகோதரிமார்களும் தங்கள் தியாகமான வாழ்க்கையின் மூலமாக குணசாலியான ஸ்திரீ என்று பெயர் பெற்றுக்கொள்ள முயற்சிப்பார்களா? தேவன் தாமே கிருபை செய்வாராக.

5. ஸ்திரீகள் கட்டாயமாக அறிந்திருக்க வேண்டிய சில முக்கியமானக் காரியங்கள்

இந்தப் பகுதியில் ஸ்திரீகள் எல்லாரும் அறிந்திருக்கவேண்டிய சில முக்கியமானக் காரியங்களை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். இது ஸ்திரீகள் தங்களைக் குறித்து சரியாக அறிந்துகொண்டு, வேத வசனத்தின் உபதேசத்திற்கு ஏற்றவாறு செயல்பட இது மிகவும் உதவியாயிருக்கும்.

a) மனைவி கணவனுக்காக உண்டாக்கப்பட்டவளேயொழிய கணவன் மனைவிக்காக உண்டாக்கப்படவில்லை

"புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள்" I கொரி. 11:9.

தேவன் மனிதனை உண்டாக்கி பின் அவனுக்குத் துணையாக ஒரு ஸ்திரீயை உண்டாக்கினார். அதாவது புருஷனுக்கு உதவியாக ஸ்திரீயை உண்டு பண்ணினாரே தவிர ஸ்திரீக்கு சேவை செய்ய புருஷனை உண்டாக்க வில்லை. இந்தியாவிலிருந்து நோபல் பரிசு பெற்ற சர்.சி.வி. ராமன் (Sir. C.V. Raman) மரித்தபோது அவர் மனைவி, நான் இவருக்கு சேவை செய்வதற்காகப் பிறந்தேன். இப்பொழுது என் கடமை முடிந்துவிட்டது என்று கூறினார்களாம். இன்றைய ஸ்திரீகள் இவ்விதம் சொல்வார்களா? என் புருஷனை அடக்கி அரசாட்சி செய்யவே நான் பிறந்தேன் என்பார்கள் இல்லையா? எவ்வளவு ஆபத்தானக் காரியம் பாருங்கள் !

b) மனைவி புருஷன் மீது அதிகாரம் செலுத்தக்கூடாது

"புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை" I தீமோ.2:12.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஸ்திரீயானவள் பருஷன்மீது அதிகாரம் செலுத்தக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. வேத வசனம் இவ்விதம் திட்டமும் தெளிவுமாகக் கூறினாலும் இன்று பெரும்பாலுமான ஸ்திரீகள் தங்கள் கணவனை அடக்கி, ஒடுக்கி அதிகாரம் செலுத்தவே முயற்சிக்கின்றனர். இது மிகவும் ஆபத்தான ஒரு காரியம் என்று அவர்கள் எண்ணுவதில்லை. புருஷனை அடக்கி அரசாட்சி செய்யவேண்டும் என்று விரும்புகிற ஒரு ஸ்திரீ தன் புருஷனுக்கு அதிகம் வேதனையை உண்டாக்குகிறவளாயிருப்பாள். புருஷனின் மனம் நோகும்படியாக மிகவும் அவதூறாகப் பேசுவாள்.

உலகப்பிரகாரமான மனிதர்களின் வீடுகளில் ஸ்திரீகள் தங்கள் புருஷன்மீது அதிகாரம் செலுத்த முயற்சிக்கிறார்கள் என்றால் உடனே அவர்களின் கணவன்

இந்த ஸ்திரீயின் தலையும் சரீரமும் சேர்ந்து இருப்பதினால்தான் இவ்வித பிரச்சினைகள் வருகிறது. ஆகவே இவளின் தலையை எடுத்துவிட்டால் (வெட்டிவிட்டால்) எல்லாப் பிரச்சனைகளும் நீங்கிவிடும் என்று தலையை வெட்டி விடுகின்றனர். வேற சிலர் ஐயோ, இவள் கொடிய அரக்கியாக இருக்கிறாளே, இவளை அடக்க யாராலும் கூடாது. ஆகவே நாம் இவ்வித நிலையிலிருந்து விடுதலை பெற, மன அமைதி பெற நாம் நன்றாக குடித்து வெறிக்க வேண்டும் என்றும், இன்னும் வேறு இவ்வித தீமையானக் காரியங் களைச் செய்யவும் எண்ணி, இவ்விதமாக தங்கள் வாழ்க்கையை முழுவதுமாகக் கெடுத்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். வேறுசிலர் இவ்வித ஸ்திரீகளோடு வாழ்வதைவிட சாவதுமேல் என்று எண்ணி தற்கொலை செய்து கொள்கிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள் !

ஆனால் விசுவாசிகள், ஊழியர்கள் குடும்பங்களில் இவ்வித தவறான சுபாவமுடைய ஸ்திரீகள் இருந்தால், அப்படிப்பட்டவர்களுக்காக ஜெபிப்பதைத் தவிர வேறு எதுவும் செய்வதில்லை. ஆகவே இவ்வித கணவனையுடைய ஸ்திரீகள் தங்கள் கணவன் ஆவிக்குரியவனாக இருப்பதினால் தனக்கு எந்தவித ஆபத்தும் வராது. ஆகவே நாம் இன்னும் அதிகம் புருஷனை அடக்கி அரசாட்சி செய்ய வேண்டும் அல்லது வம்புத்தனங்கள் செய்ய வேண்டும் என்று துணிகரங்கொண்டு செயல்பட ஆரம்பித்து விடுகிறார்கள். எவ்வளவு பரிதாபம் பாருங்கள்!

c) மனைவி தன் தகப்பன் வீட்டை மறக்கவேண்டும்

"குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்து சிந்தித்துக் கொள்.உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார் ; அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்" சங்.45:10,11.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் ஸ்திரீகளுக்கு சில காரியங்கள் ஆலோசனைகளாகக் கூறப்பட்டுள்ளது. ஸ்திரீகள் இந்தக் காரியங்களைக் கேட்டு , சிந்தித்து, சரியாக செயல்பட அறிந்து கொள்ள வேண்டும்.

i) தன் ஜனத்தையும், தகப்பன் வீட்டையும் மறக்கவேண்டும்

இன்று பெரும்பாலுமான பெண்கள் புதிதாக திருமணம் ஆன கணவன் வீட்டுக்கு வரும்பொழுது தங்கள் தகப்பன் வீட்டைப்பற்றியும் தன் இனஜன பந்துக்களைப் பற்றியும் அதிகமாகப் புகழ்ந்து பேசுவார்கள். ஒரு சமயம் தங்கள் குடும்பத்தைப் பற்றி புகழ்ச்சியாகப் பேச எந்த ஒரு சிறப்பானக் காரியமும் இல்லாமல் இருக்கலாம். இருந்தாலும் அவர்களுடைய நாக்கு மிகவும் அதிகமாக இருக்கும். அவளுடைய இவ்வித நாக்கு அவளுக்குப் பல கசப்பான அனுபவங்களைக் கொண்டுவந்துவிடும். ஒரு சமயம் இந்த ஸ்திரீ தன் குடும்பத்தைக் குறித்து புகழ்ச்சியாகப் பேசுவது அவளுடைய குடும்ப வாழ்க்கையையே சந்தோஷமற்றதாக்கிவிடும். ஒரு சமயம் அவள் அழகுடைய வளாக இருக்கலாம். ஆனால் அவளுடைய அழகு அவளுக்குப் பயனற்றதாகி

விடும் என்பதை அவள் அறிந்திருக்கவேண்டும். அவள் தன் குடும்பத்தைப் பற்றியோ, தன் தகப்பன் வீட்டைப் பற்றியோ வீண் பெருமையான காரியங்களைப் பேசக்கூடாது. தன் கணவனைப் பற்றியும், தன் கணவன் வீட்டாரைப் பற்றியும் மிகவும் புகழ்ச்சியாகப் பேச அவள் அறிந்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அந்த ஸ்திரீயின் அழகு அவளுக்குப் பயனுள்ளதாக இருக்கும். தன் கணவனின் நேசத்தை அவள் பெற்றுக்கொள்ளமுடியும்.

ii) அவர் உன் ஆண்டவர் அவரைப் பணிந்து கொள்

ஆண்டவர் என்றால் எஜமான் என்று பொருள்படும். எவ்விதம் வேலைக்காரர் தங்கள் எஜமானைப் பணிந்துகொள்கிறார்களோ, அவ்விதமாகவே ஸ்திரீகளும் தங்கள் எஜமான்களாக கணவனை ஏற்றுக் கொள்ளவேண்டும். வேத புத்தகத்தில் சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந் தாள் என்று *I பேதுரு. 3:6* -ல் கூறப்பட்டுள்ளது. முந்தைய நாட்களில் ஸ்திரீகள் அதிகாலையில் படுக்கையிலிருந்த எழுந்தவுடன் முதலாவது தங்கள் கணவனின் கால்களைத் தொட்டு வணங்கி, பின்பு தங்கள் கடமைகளைச் செய்ய ஆரம்பிப்பார்கள்.

கணவனை வணங்கும் பழக்கம் தேவனை அறியாத புறஜாதியான ஜனங்களிடத்தில் காணப்படும் ஒரு காரியமாகும். ஆனால் தேவ ஜனங்களாகிய ஸ்திரீகளுக்கு கணவனை ஆண்டவன் என்று சொல்வதும், கணவனைப் பணிந்து கொள்வது என்பதும் கௌரவக் குறைச்சலாக இருக்கும் என்று எண்ணுகிறார்கள் என நினைக்கிறேன். சில குடும்பங்களில் ஆண்கள் அதிகாலையில் எழும்பி காப்பி போட்டு வைத்துவிட்டு தங்கள் மனைவியிடம் , காப்பி ரெடியாகவுள்ளது. காப்பி கொண்டு வரட்டுமா? என்று கேட்கும் நிலையும் உள்ளது என்று நான் அறிவேன். (அன்பினால் ஒருவருக்கொருவர் உதவி செய்வது வேறு)

இந்த நாட்களில் தேவனை அறியாத புறஜாதியான ஜனங்கள் தேவ ஞானம் இல்லாதவர்களாக இருந்தாலும் மிகவும் ஞானமாக செயல்படுகிறார்கள். ஆனால் தேவனை அறிந்திருக்கிறோம் என்று சொல்கிறதான தேவ ஜனங்கள் தேவ ஞானம் அற்றவர்களாக செயல்படுவதைக் காணும்போது மிகவும் வேதனையாகவுள்ளது.

d) மனைவி தன் புருஷனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்

"அந்தப்படியே மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படிந்திருங்கள் ;அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப் படுவார்கள். இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்" I பேதுரு 3:1,2,5 ; எபேசியர் 5:21 ;கொலோ.3:18.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களின்மூலம் நாம் அறிந்து கொள்ளவேண்டிய முக்கியமானக் காரியம் என்னவெனில் வேத புத்தகத்தில் மனைவி புருஷனுக்குக்

கீழ்ப்படியவேண்டும் என்று கூறப்பட்டுள்ளதேயொழிய புருஷன் மனைவிக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று கூறப்படவில்லை. ஆகவே மனைவி, புருஷனைக் கீழ்ப்படிய வைக்கவேண்டும் என்று எண்ணி செயல்படக்கூடாது.

ஒரு மனைவி புருஷனுக்குள் கீழ்ப்படிய வேண்டும் என்றால் அவளிடம் காணப்பட வேண்டிய காரியங்கள் என்ன என்றும் மனைவியிடம் காணப்படும் கீழ்ப்படிதல் அவளுக்கு எவ்விதம் பயன்படுகிறது என்றும் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

மனைவி தன் கணவனுக்குக் கீழ்ப்படிய அவளிடம் காணப்பட வேண்டியக் காரியங்கள்

i) மனைவியிடம் புருஷனைக் குறித்த பயம் (கீழ்ப்படிதல்)காணப்படவேண்டும்

"நீ அவனை (ஈசாக்கை) உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால், நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்." ஆதி.22:12.

"நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால் உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்." ஆதி.22:18.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களைத் தியானிக்கும்பொழுது ஆபிரகாம் தேவனுக்குப் பயப்படுகிறவனாக இருந்ததினால் அவன் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறவனாக காணப்பட்டான் என்று அறியலாம். அதுபோலவே ஒரு மனைவி தன் புருஷனுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்றால் அவளிடம் தன் புருஷனைக் குறித்த பயம் காணப்படவேண்டும். இன்று அநேக ஸ்திரீகளிடம் தங்கள் கணவனைக் குறித்த பயம் கொஞ்சம் கூட கிடையாது. ஆகவே அவர்கள் தங்கள் கணவனுக்கு ஒருபோதும் கீழ்ப்படிவதும் கிடையாது. இன்றைய ஸ்திரீகளும் தங்கள் கணவனுக்குப் பயப்படுகிறவர்களாக, அவனுக்கு எல்லா காரியங்களிலும் கீழ்ப்படிந்து நடந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

ii) மனைவி புருஷனுக்குக் கீழ்ப்படிய தன்னைத்தான் கணவனுக்கு அடிமையாக (கீழ்ப்படிதல்) ஒப்புக்கொடுக்க வேண்டும்

"எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமையாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" ரோமர் 6:16.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஒன்றிற்கு கீழ்ப்படிய அதற்கு நம்மை அடிமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று அறிகிறோம். அப்படியென்றால் ஒரு மனைவி, தன் புருஷனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றால் தன்னை தன் புருஷனுக்கு முழுமையாக அடிமையாக ஒப்புக்கொடுக்கவேண்டும் என்று அறிகிறோம். இன்றைய ஸ்திரீகள் இவ்விதம் தங்கள் கணவனுக்குக் கீழ்ப்படிய தங்களை பூரணமாய் ஒப்புக்கொடுப்பார்களா? புருஷனை அடக்கி ஒடுக்கி அவர்கள் அரசாட்சி செய்ய அல்லவா விரும்புகிறார்கள். இவர்கள் எப்படி

தங்களை தங்கள் கணவனுக்கு முழுமையாக ஒப்புக்கொடுப்பார்கள்?

மனைவியின் கீழ்ப்படிதல் எவ்விதம் அவளுக்குப் பயன்படுகிறது

மனைவியில் காணப்படும் கீழ்ப்படிதல் எவ்விதம் அவளுக்குப் பயன்படுகிறது? என்றும், அதின்மூலம் அவள் பெறும் நன்மை என்ன என்றும் அறிந்து கொள்ளப்பார்ப்போம்.

i) மனைவியின் கீழ்ப்படிதல் அவளுக்கு அலங்கரிப்பாயிருக்கிறது

"மயிரைப்பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்" I பேதுரு 3:3,4,5.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இறுதியில் கூறப்பட்டுள்ள வசனத்தில் பரிசுத்த ஸ்திரீகள் தங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிவது அவர்களுக்கு அலங்கரிப்பாயிருந்தது என்று காண்கிறோம். ஒரு ஸ்திரீ புருஷனுக்குக் கீழ்ப்படிகிறவர்களாயிருந்தால் அவளிடம் சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியும் காணப்படும் என்றும் இந்த சுபாவங்களும் ஸ்திரீக்கு அலங்காரமாயுள்ளது என்றும் அறியலாம்.

இன்று பெரும்பாலும் மயிரை அலங்கரிப்பதும், பொன்னாபரணங்களை அணிவதும், விலையுயர்ந்த வஸ்திரங்களை உடுத்துவதுமாகிய புறம்பான அலங்கரிப்பு தான் அநேக ஸ்திரீகளுக்கு அலங்கரிப்பாக இருக்கிறதே ஒழிய கீழ்ப்படிதலின் சுபாவம் கொஞ்சம்கூட கிடையாது. இப்படிப்பட்டவர்கள் எப்படி புருஷனுக்குக் கீழ்ப்படிவார்கள்? எப்படி அடங்கி நடப்பார்கள்?

iii) கீழ்ப்படிதலின் மூலம் ஸ்திரீகள் தங்கள் கணவனை கர்த்தருக்கென்று ஆதாயம் பண்ணமுடியும்

இந்தப் பகுதியின் தலைப்பு வசனத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் ஸ்திரீகள் தங்கள் கீழ்ப்படிதலின்மூலம் தங்கள் கணவனை கர்த்தருக்கென்று போதனையின்றி ஆதாயம் பண்ண முடியும். இவ்விதம் கீழ்ப்படிகிற சுபாவமுடைய ஸ்திரீகள் தங்கள் பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கையின் மூலம் தங்கள் கணவனை கர்த்தருக்கென்று போதனையின்றி ஆதாயம் பண்ணமுடியும். பயபக்தியுடன் கூடிய கற்புள்ள நடக்கை என்பது, கணவனிடம் அடக்கமாகப் பேசுவது, கணவனுக்கு எல்லாக் காரியங்களிலும் அடங்கி நடப்பது போன்ற காரியங்களாகும். இன்றைய மனைவிமார் பெரும்பாலும் தங்கள் கணவனிடம் அடக்கமாகப் பேசுவதோ, அடங்கி நடப்பதோ கிடையாது. அதுமட்டுமல்லாது, கணவனை ஒருமையில் மதிக்காமல் அவதூறாகப் பேசுவதும், புருஷனுக்கு கீழ்ப்படியாமல் புருஷன் விருப்பத்திற்கு நேர் எதிர்மாறாக

செயல்படுகிறவர்களுமாக அல்லவா இருக்கிறார்கள். இவ்வித ஸ்திரீகள் தங்கள் கணவனை எப்படி கர்த்தருக்கென்று ஆதாயம் பண்ண முடியும்.

e) ஸ்திரீகளும் நீதிமொழிகள் 31-ம் அதிகாரமும்

விசுவாசிகளான ஒவ்வொரு ஸ்திரீயும் இந்த நீதிமொழிகள் 31-ம் அதிகாரம் 10-ம் வசனம் முதல் கடைசி வசனம் வரையுள்ள வசனங்களை குறைந்தது வாரத்திற்கு ஒரு முறையாவது வாசித்து தியானம் செய்ய முயற்சிக்க வேண்டும். இந்த வேத பகுதியை நன்கு வாசிப்பது மட்டுமல்லாது, இந்தப் பகுதியில் குறிப்பிட்டிருக்கும் குணசாலியான ஸ்திரீயின் செயல்பாடுகளைப் பற்றி நன்கு கற்று அறிந்து கொண்டு தானும் அவ்விதமாக குணசாலியான ஸ்திரீயாக செயல்பட வேண்டும் என்ற வாஞ்சையுடையவர்களாய், அவ்விதமாகவே செயல்பட முயற்சி செய்ய வேண்டும். இந்த குணசாலியான ஸ்திரீயின் செயல்பாடுகள் பற்றி குறிப்பிட்டிருக்கும் சில முக்கியமான சுபாவங்கள், செயல்பாடுகள் இவைகள் பற்றி சிறிது விபரமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

i) கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீ

"சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண் ; கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்" நீதி.31:30.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் இருந்து நாம் அறிவது யாதெனில் தன் கணவரால் புகழப்படுகிற குணசாலியான ஸ்திரீயானவள் கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயாக இருப்பாள் என்று கூறப்பட்டுள்ளது. ஏனெனில் கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீ தான் மற்றவர்களால் புகழப்படக்கூடிய குணசாலியான ஸ்திரீயாக விளங்குவாள் என்பதை நாம் அறியவேண்டும். அதுவல்லாது சௌந்தர்யம், அழகு என்பது வஞ்சனையும், வீணுமானது என்பதையும் நாம் அறிய வேண்டும்.

இன்று பெரும்பாலுமானவர்கள் பணத்துக்கும், சௌந்தரியத்துக்கும், அழகுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆனால் இன்றைய நாட்களில் கர்த்தருக்குப் பயப்படுவது குறித்து யாருமே முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பொதுவாக ஒரு மாப்பிள்ளை வீட்டார் தங்கள் பையனை பெண் பார்க்கப் போகிறார்கள் என்றால், மாப்பிள்ளையின் பெற்றோர் அந்தப் பெண்ணிற்கு எவ்வளவு நகை போடுவார்கள்? எவ்வளவு ரொக்கம் கொடுப்பார்கள் ? என்று பார்ப்பார்கள. ஆனால் அதே நேரத்தில் மாப்பிள்ளையாகப் போகும் வாலிபனோ அந்தப்பெண் தக்காளிப்பழம் போல சிகப்பாயிருப்பாளா? அல்லது ஆரஞ்சுபோல மஞ்சளாயிருப்பாளா? என்று இவ்விதமாகப் பார்ப்பான். அந்தப்பெண் கர்த்தருக்குப் பயப்படும் பயம் உடையவளா என்று பார்ப்பதில்லை.

ஆனால் கர்த்தருக்குப் பயப்படுகிற ஒரு பெண் தனக்கு சௌந்தரியம், அழகு இல்லையென்றாலும், அதிகம் வரதட்சணை கொடுக்க முடியாத நிலையில் உள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருந்தாலும், அவள் தன் வாழ்க்கையில் தீமையாகத் தோன்றுகிற எல்லாக் காரியங்களையும் வெறுத்து, அதை விட்டு விலகி, தன்னைக் காத்துக் கொண்டவளாகவும், தன் குடும்பக் காரியங்களை

யெல்லாம் மிகவும் சிறப்பாகச் செய்கிறவளாகவும் இருப்பாள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ii) மற்றவர்களால் புகழப்படுகிற ஸ்திரீ

"அவள் பிள்ளைகள் எழும்பி அவளைப் பாக்கியவதி என்கிறார்கள். அவள் புருஷனும் அவளைப் பார்த்து: அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு ;நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான்" நீதி. 31:28,29.

கர்த்தருக்குப் பயந்து, தன் வாழ்க்கையில் தீமையாகத் தோன்றுகிற எல்லாக் காரியங்களையும் வெறுத்து, அவகைளை விட்டு விலகி, தன் குடும்பக் காரியங்களை மிகவும் ஞானமாக செய்கிற ஸ்திரீ நிச்சயமாகவே தன் பிள்ளைகளாலும், கணவனாலும், மற்றவர்களாலும் புகழப்படுவாள் என்பது நிச்சயமான ஒரு காரியமாகும்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் கூறப்பட்டிருக்கிற சிறப்பான காரியம் யாதெனில் ஒரு ஸ்திரீ குணசாலியாக விளங்கி அநேகரைவிட, மேம்பட்ட, சிறந்த குணசாலியாக விளங்குவது ஆகும். அப்படியென்றால், ஒரு ஸ்திரீ குணசாலியாக விளங்க மற்ற அநேகரை விட மிகவும் சிறப்பாக செயல்பட முயற்சிக்க வேண்டும். நமது சகோதரிமார் இவ்விதம் செயல்பட முயற்சிப்பார்களா?

iii) அதிகாலமே எழும்பும் ஸ்திரீ

"இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து, தன் வேலைக் காரிகளுக்குப் படியளக்கிறாள்" நீதி.31:15.

ஸ்திரீகள் அதிகாலமே எழும்புவது என்பது மிகவும் முக்கியமான ஒரு காரியமாகும். ஆங்கிலத்தில் *A good beginning in half done* என்று கூறப்படுவதண்டு. இதன் பொருள் சரியான அல்லது நல்ல துவக்கமானது பாதி வேலை முடிந்ததாகிவிடும் என்பதாகும். மனித வாழ்க்கையில் ஆணானாலும், பெண்ணானாலும் ஒவ்வொருவரும் அதிகாலமே எழுந்து செயல்படுவது என்பது மிகவும் முக்கியமான ஒரு காரியமாகும். *"அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" நீதி. 8:17* என்று வேத வசனம் கூறுகிறது. அதிகாலேமே அதிக இருட்டோடே ஆண்டவராகிய இயேசுவின், மரித்து அடக்கம் பண்ணப்பட்ட சரீரத்தைக் காணவேண்டும் என்று வாஞ்சையோடு சென்ற மகதலேனா மரியாளுக்கு உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசுவை முதலாவது தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது என்பது எவ்வளவு சந்தோஷமான ஒரு காரியம் பாருங்கள்.

அதிகாலமே எழுந்து சிறிது நேரம் தேவனை நன்கு துதித்து, பின் நமது சரீரப்பிரகாரமான, ஆவிக்குரிய தேவைகளுக்காக, நமது குடும்பத்தில் நமது கணவன் மற்றுமுள்ள ஒவ்வொருவரின் சரீர, ஆவிக்குரிய தேவைகளுக்காக, நமது கிராமம், மாவட்டம், மாகாணம், தேசம் சம்பந்தமானக் காரியங்களுக்காக, ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக இவ்விதம் எல்லாக் காரியங்களுக்காகவும் அந்த அதிகாலை வேளையிலே ஜெபித்து, பின் தனது அன்றாடக் காரியங்களைச்

செய்ய முயற்சி செய்தால் எவ்வளவு ஆசீர்வாதமாக இருக்கும். விசுவாசிகளான ஊழியர்களான (ஆண், பெண் உள்பட) எல்லாருமே இவ்விதம் செயல்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். கொஞ்சம் முயற்சி செய்து பாருங்களேன்!

நான் சில சமயங்களில் அதிகாலை நான்கு அல்லது நாலரை மணியளவில் தெருக்களில் செல்லும்பொழுது, தேவனை அறியாத புறஜாதி ஜனங்களின் தெருக்களில் செல்லும்பொழுது, அந்தத் தெருக்களில் உள்ள ஸ்திரீகள் அந்த அதிகாலை நேரத்தில் தங்கள் வீட்டின் முற்றங்களில் தண்ணீர் தெளிப்பது மற்றும் வேலைகளை மிகவும் சுறுசுறுப்பாக செய்வதைப் பார்த்து நான் மிகவும் ஆச்சரியப்படுவதுண்டு. ஆனால் கிறிஸ்தவர்கள் வசிக்கிற தெருக்களில் காலை ஆறு மணிக்குக்கூட ஸ்திரீகள் எழும்பி செயல்படுவதில்லை என்பதைக் காணும்பொழுது மிகவும் துக்கமாக இருக்கும்.

தேவ ஞானம் இல்லாத புறஜாதி ஸ்திரீகள் ஞானமாக செயல்படுகிறார்கள். தேவனை அறிந்திருக்கிறோம் என்று சொல்லுகிற கிறிஸ்தவ ஸ்திரீகள் முழுவதும் ஞானமற்றவர்களாக செயல்படுவதைப் பார்க்கும்பொழுது மிகவும் துக்கமாகவுள்ளது.

iv) இரவிலும் விழித்திருக்கிற ஸ்திரீ

"இரவிலும் அவள் விளக்கு அணையாதிருக்கும்" நீதி.31:18.

இரவிலே அவள் விளக்கு அணையாதிருக்கும் என்பது ஸ்திரீயானவள் இரவிலும் அதிக நேரம் விழித்திருந்து செயல்படுவதைக் குறிப்பதாகவுள்ளது. ஸ்திரீகள் இரவிலும் தன் குடும்பத்தில் உள்ள எல்லாரும் நித்திரைக்குப் போனபின்பும், தான் தேவ சமூகத்தில் காத்திருந்து, தான் அதிகாலையில் தேவனைத் துதித்து ஜெபித்தது போல இரவிலும் தேவனைத் துதித்து, எல்லாக் காரியங்களுக்காகவும் தேவனை நோக்கி ஜெபிக்க முயற்சிக்க வேண்டும். நமது சகோதரிமார் முயற்சி செய்வார்களா!

v) தனது வீட்டுக்காரியங்களில் கண்ணோக்கமாயிருக்கிற ஸ்திரீ

"அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியங்கள் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள்" நீதி.31:27.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் குணசாலியான ஸ்திரீ சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியங்கள் எப்படி நடக்கிறது என்று மிகவும் கண்ணோக்கமாயிருப்பாள் என்று கூறப்பட்டுள்ளது.

இன்று அநேக ஸ்திரீகள் எந்த ஒரு வேலையும் செய்யாதபடி சோம்பலாக உட்கார்ந்து நேரத்தைக் கழிப்பதும், அக்கம் பக்கத்தில் உள்ள ஸ்திரீகளோடு வீணான வெட்டிப் பேச்சுகளைப் பேசி நேரத்தைப் போக்கடிப்பதையும், சிலர் நாள் முழுவதும் தூங்கியே நேரத்தைப் போக்கடிப்பதையும் நாம் காணலாம். இன்னும் சிலர் தங்கள் புருஷனை எப்படி அடக்கி அரசாட்சி செய்யவேண்டும் என்பதிலேயே கவனமாக இருப்பார்களேயொழிய தங்கள் வீட்டுக்காரியங்கள் எப்படி நடக்கிறது என்பதில் கவனம் செலுத்த மாட்டார்கள்.

ஸ்திரீகள் சோம்பலுடையவர்களாயிராதபடி குடும்பத்தில் நடக்கிற ஒவ்வொரு

காரியங்களிலும் மிகவும் கண்ணோக்கமாயிருக்க வேண்டும். விசேஷமாக குடும்பத்தின் வரவு, செலவு என்ன என்பது பற்றியும், பிள்ளைகளின் செயல்பாடுகள் பற்றியும் ஸ்திரீகள் கவனமாக இருக்க வேண்டும்.

vi) வியாபாரக் கப்பலைப்போல் செயல்படுகிற ஸ்திரீ

"அவள் வியாபாரக் கப்பலைப் போலிருக்கிறாள்" நீதி.31:14.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் குணசாலியான ஸ்திரீ வியாபாரக் கப்பலைப் போலிருப்பாள் என்பது அவளுடைய துரிதமாக செயல்படும் விதத்தைக் குறிப்பதாகவுள்ளது. எவ்விதம் கப்பலில் சரக்குகளை ஏற்றுவதும், இறக்குவதுமாக துரிதகதியில் செயல்படுவதுபோல, ஒரு குணசாலியான ஸ்திரீயும் தன் செயல்பாடுகளில் மிகவும் துரிதமாகவும், அதே நேரத்தில் மிகவும் கிரமமாகவும் செயல்படுவாள் என்று அறியலாம். துரிதமாகச் செயல்படுவது மட்டுமல்லாது, கிரமமாகவும் செயல்படுவது என்பது மிகவும் அவசியமாகவுள்ளது.

vii) சிறுமையானவர்களுக்கும், ஏழைகளுக்கும் உதவுகிற ஸ்திரீ

"சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள்" நீதி.31:20.

குணசாலியான ஸ்திரீ ஏழை எளியவர்களுக்கு உதவுகிறவளாக இருப்பாள் என்று மேற்கூறப்பட்டுள்ள வசனத்தின்மூலம் நாம் அறியலாம். ஸ்திரீகள் இரக்க சுபாவமுடையவர்களாக, மற்றவர்களுக்கு உதவுகிறவர்களாக இருக்கவேண்டும். இன்று பெரும்பாலுமான ஸ்திரீகளிடத்தில் இந்த மற்றவர்களுக்கு உதவி செய்யும் சுபாவம் அறவே இல்லாமல் போய்விட்டது. நமது விசுவாசிகளான ஸ்திரீகள் குணசாலிகளாக இருந்து மற்றவர்களுக்கும் உதவி செய்யும் சுபாவம் உடையவர்களாக இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகவுள்ளது.

viii) புருஷனுக்கு நன்மையையே செய்கிற ஸ்திரீ

"அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும் ; அவள் சம்பத்துக் குறையாது. அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்கு தீமையை யல்ல, நன்மையையே செய்கிறாள்" நீதி.31:11,12.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து நாம் அறிவது யாதெனில் ஒரு குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்கு நன்மை செய்கிறவளாக செயல்படுவாளேயொழிய, அவனுக்கு தீமை செய்ய மாட்டாள் என்றும், அந்த ஸ்திரீயின் புருஷனின் இருதயம் அவளை நம்பும் என்பதிலிருந்து அந்த ஸ்திரீ தன் புருஷனுக்கு நம்பிக்கை துரோகம் செய்யமாட்டாள் என்றும் அறியலாம்.

இன்று அநேக ஸ்திரீகள் புருஷனுக்குத் தெரியாமலே கொடுக்கல் வாங்கல் செய்வது, அவனுக்குத் தெரியாமலே புருஷன் வீட்டுப் பொருட்களை தன் தாய் தகப்பன் வீட்டிற்குக் கொடுக்கப் பார்ப்பது போன்ற காரியங்களைச் செய்யப் பார்ப்பார்கள். புருஷனுக்குத் தெரியாமல் செயல்படுவதோ, புருஷனுக்கு நஷ்டம் உண்டாகும்படியாக செயல்படுவது போன்றக் காரியங்கள் ஒரு குணசாலியான ஸ்திரீக்கு தகுதியாக இருக்காது. ஆகவே நமது ஸ்திரீகள் குணசாலிகளாயிருந்து

தங்கள் தங்கள் புருஷனுக்கு நன்மை செய்கிறவர்களாகவும், தன் புருஷனின் இருதயம் தன்னை முழுவதும் நம்பும்படியாகவும் செயல்படப் பார்க்கவேண்டும்.

ix) உற்சாகமாய் வேலைசெய்கிற ஸ்திரீ

"தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள்" நீதி.31:13

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் குணசாலியான ஸ்திரீ தன் கைகளினால் உற்சாகத்தோடு வேலை செய்கிறாள் என்று கூறப்பட்டதிலிருந்து அந்த குணசாலியான ஸ்திரீயின் செயல்பாடுகள் எல்லாம் உற்சாகத்தோடு செயல்படுவதாக உள்ளது என்று அறியலாம். அவள் எவ்விதம் செயல்படுகிறாள் அல்லது வேலை செய்கிறாள் என்று இந்த அதிகாரத்தில் உள்ள *16,19,22,24* முதலிய வசனங்களிலும் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து நாம் அறிவது யாதெனில் ஸ்திரீகள் தங்கள் காரியங்களில் உற்சாகமாக வேலை செய்ய முயற்சிக்க வேண்டும். சோம்பலோடு வேலை செய்யக்கூடாது. *"சோம்பற் கையால் வேலை செய்கிறவன் ஏழையாவான்" (நீதி.10:4)* என்று கூறப்பட்டுள்ளதை நினைவில் கொள்ள வேண்டும்.

குணசாலியான ஸ்திரீ இவ்விதம் உற்சாகத்தோடு வேலை செய்வதினால் அந்த ஸ்திரீயின் வீட்டில் உள்ளவர்களுக்கு குளிர் பற்றி பயம் இல்லை. ஏனெனில் இந்த வீட்டில் உள்ளவர்களுக்கு இரட்டைப்புரை உடுப்பு (Scarlet) உள்ளது. அதுபோலவே வருங்காலத்தைப் பற்றியும் அவள் கவலைப்படாமல் மகிழ்ச்சி யாயிருக்கிறாள்.*(வச.25)* இன்று அநேகர் தங்கள் பிள்ளைகளின் படிப்பு, வருங்காலம் இவைகளைக் குறித்துக் கவலைப்படுகிறார்கள். ஆனால் உற்சாகமாய் வேலை செய்து, கிடைக்கும் வருமானத்தை ஞானமாக தேவ ஆலோசனைப்படி செலவு செய்தால் ஒரு குறைவும் இல்லாதபடி தேவனே எல்லாக் காரியங்களையும் பொறுப்பேற்று நடத்துவார். ***"உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருந்தார் ; உனக்கு ஒன்றும் குறைவுபடவில்லை." (உபா.2:7)*** இந்த வசனத்தின்படி தேவன் நம்மோடிருந்து நமக்கு எந்த குறைவுகளும் இல்லாதபடி நம்மைக் காத்துக்கொள்வார்.

இன்று அநேகக் குடும்பங்களில் ஆசீர்வாதமற்ற நிலை காணப்படுவதற்கு அவர்கள் கர்த்தருக்குக் கொடுக்க மனமற்றவர்களாயிருப்பதுதான் காரணம் என்பதை அவர்கள் அறிய வேண்டும். உற்சாகமாய் வேலை செய்வது பணம் சம்பாதிப்பது மட்டுமல்லாது, கிடைத்த வருமானத்தில் உற்சாகமாய் கர்த்தருக்குக் கொடுக்கவும் விருப்பமுடையவர்களாயிருக்க வேண்டும். (*II* கொரி.9:7 பார்க்கவும்) அதுபோலவே கிடைத்த வருமானத்தை சிக்கனமாகச் செலவு செய்யப் பார்க்கவேண்டும். யார் அதிகம் செலவு செய்கிறார்கள் என்று புருஷன், மனைவி போட்டி போட்டுக்கொண்டு செலவு செய்யக்கூடாது. இந்தக் காரியங்களில் மனைவி மிகவும் ஞானமாய் செயல்படப் பார்க்க வேண்டும்.

x) குணசாலியான ஸ்திரீயின் கணவன் பேர்பெற்றவனாயிருப்பது

"அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாய ஸ்தலங்களிலே உட்கார்ந்திருக்கையில் பேர் பெற்றவனாயிருக்கிறான்" நீதி.31:23.

முன்கூறப்பட்டுள்ள வசனங்களின்படி ஒரு ஸ்திரீ குணசாலியான ஸ்திரீயாக இருந்து மிகவும் ஞானமாக செயல்பட்டு குடும்பத்தில் எல்லாக் காரியங்களையும் பொறுப்புடன் நடத்துகிறவளாயிருந்தால் நிச்சயமாகவே அவ்வித ஸ்திரீயின் புருஷன் மற்ற பெரிய மனிதர்கள் இருக்கும் பொது இடங்களில் பேர்பெற்றவனாகக் காணப்படுவான் என்பது நிச்சயம்.

இன்றைய ஸ்திரீகள் இவ்விதமாகவா செயல்படுகிறார்கள்? புருஷனை அடக்கி, ஒடுக்கி, கணவனிடம் அதிக வேலை வாங்கி, புருஷனை அவதூறாகப் பேசி, அவன் தலைமீது உட்கார்ந்து, அவன்மீது அரசாட்சி செய்ய அல்லா முயற்சி செய்கிறார்கள். இவ்வித குடும்பங்களில் இருந்து புருஷன் எப்படி பேர்பெற்றவனாக விளங்கமுடியும்.

புருஷன் வீட்டைவிட்டு வெளியே வேலை செய்வதற்கோ, அல்லது வேறு ஏதாவது காரியங்கள் செய்யவோ புறப்படுகிறான் என்றால் மனைவியானவள் அவனை அவதூறாகப்பேசி, அவன் தன் பெலனை இழக்கும்படிச் செய்தால், அந்த மனிதன் வேலை பார்க்கும் ஸ்தலத்திலோ அல்லது அவன் செயல்படும் மற்றக் காரியங்களிலோ அவன் திறமையாகச் செயல்படாதபடி, தன் பெலனை இழந்தவனாகக் காணப்படுவான் என்பதை எல்லா ஸ்திரீகளும் நன்கு அறிய வேண்டும். மனைவியானவள் தன் புருஷனை உற்சாகப்படுத்துகிற ஏற்ற துணையாக (Help Meet) செயல்பட முயற்சிக்க வேண்டும். அவ்வித மல்லாவது புருஷனை அடக்கி, அவதூறாகப்பேசி இவ்விதம் புருஷன் தன் பெலனை இழக்கும்படிச் செய்யக்கூடாது. புருஷனின் மனது வேதனைப்படும்படி புருஷனை அவதூறாகப் பேசக்கூடாது. புருஷன்மீது அதிகாரம் செலுத்த எந்த ஒரு ஸ்திரீயும் முயற்சி செய்யக்கூடாது என்பதை எல்லா ஸ்திரீகளும் கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டும்.

f) ஸ்திரீகளும் மரத்தின் வேர் பாகமும்

நமது குடும்பங்களில் ஸ்திரீகள் செயல்படவேண்டிய விதத்தை ஒரு மரத்தின் அடிபாகம் அல்லது வேர்பாகம் செயல்படுவதற்கு ஒப்பிட்டுச் சொல்லலாம்.

ஒரு மரம் நன்கு பசுமையாக இருந்து நன்கு கனிகள் கொடுக்க வேண்டும் என்றால் இந்த மரத்தின் வேர் பாகமானது பூமியின் ஆழத்தில் சென்று, பூமியின் சாரத்தை எடுத்து, மரத்தின்மேல் பாகத்திற்கு அனுப்ப வேண்டும். ஒரு சமயம் அந்த மரத்தைப் பார்க்கிறவர்கள் ஆஹா இந்த மரம் எவ்வளவு பசுமையாக இருக்கிறது. எவ்வளவு நன்றாக கனிகள் கொடுக்கிறது என்று அந்த மரத்தின் மேல் பகுதியைப் பார்த்து பெருமையாகப் பேசலாம். அந்த மரத்தைப் பார்க்கிற யாரும் இந்த மரத்தின் மேல் பாகம் பசுமையாக இருந்து கனிகள் கொடுப்பதற்கு அதின் வேர் பாகம் தான் காரணம் என்று வேர் பாகத்தைப்பற்றி யாரும் பெருமையாகப் பேசுவதில்லை.

ஒரு சமயம் அந்த மரத்தின் வேர் பகுதியானது செழிப்பாயிருந்து, நன்கு கனிகள் கொடுப்பதற்கு நான் தானே காரணம். ஆனால் என்னைப்பற்றி யாரும் புகழ்ந்து பேசுதில்லையே! ஆகவே என்னை எல்லாரும் காணும்படியாக நான் பூமிக்குமேலே வந்துவிடுவேன் என்று சொல்லி அந்த வேர் பாகமானது பூமிக்கு

மேலே வந்து விடுகிறது என்று வைத்துக்கொள்வோம். என்ன சம்பவிக்கும்? அந்த மரமானது சாய்ந்து, விழுந்து அழிந்து விடும் அல்லவா?

அதுபோலவே நமது குடும்பங்கள் நன்கு செழிப்பானதாக எல்லாவித ஆசீர்வாதங்களையும் பெற்றக் குடும்பமாக இருக்க அந்தக் குடும்பத்தின் தலைவியாக உள்ள ஸ்திரீயானவள் இரவு பகலாக உழைக்கிறவளாகவும், தனது கணவன் பிள்ளைகளின் சுகவாழ்வுக்காக இரவு பகலாக ஜெபிக்கிறவளாகவும் இருப்பது மிகவும் அவசியமாகவுள்ளது. ஒரு சமயம் இந்த ஸ்திரீ செயல்படுவதை யாரும் கவனிக்காமல் இருக்கலாம். அல்லது அந்த ஸ்திரீயைப் பற்றி யாரும் புகழ்ந்து பேசாமல் இருக்கலாம். ஆனாலும் அந்த ஸ்திரீயின் செயல்பாடுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பதை எல்லாரும் அறியவேண்டும்.

அவ்விதமல்லாவது குடும்பத்தின் தலைவியாக உள்ள ஸ்திரீயானவள் தன் புருஷனை அடக்கி, அரசாட்சி செய்யவேண்டும். அதை அநேகர் காண வேண்டும் என்று எண்ணி, எப்பொழுதும் தன் புருஷனை அடக்கி அரசாட்சி செய்ய வேண்டும் என்று எண்ணுகிறவளாயிருந்து தன் புருஷனை தரம் தாழ்த்தி கூறுகிறவளாயிருந்தால், அவ்வித ஸ்திரீ தன் தவறான செயல்பாடுகளினால் தன் குடும்பமாகிய வீட்டை இடித்துப்போடுகிறவளாக இருப்பாள் என்பதை நாம் கண்டிப்பாக நினைவில் கொள்ள வேண்டும்.

நமது குடும்பங்களில் ஸ்திரீகளின் செயல்பாடுகள் முற்றும் தியாகத்தை வெளிப்படுத்துவதாகவுள்ளது. அவ்விதமாக செயல்படுவதற்காகவே ஸ்திரீகள் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். எவ்விதம் ஒரு மரத்தின் மேல்பாகம் பசுமையாக, செழிப்பாக இருக்க அதின்வேர் பாகம் தன்னை மறைத்து, பூமியின் சாரத்தை எடுத்துக் கொடுப்பதுபோல, ஸ்திரீயும் தன் கணவன் பிள்ளைகளின் செழிப்பான வாழ்வுக்காக தன்னை முழுவதும் மறைத்து இரவு பகலாக உழைக்கிறவர்களாகவும், இரவு பகலாக கண்ணீர்விட்டு ஜெபிக்கிறவர்களாகவும் இருப்பது மிகவும் அவசியமாகவுள்ளது.

"இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார் அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்" பிரசங்கி 7:29.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் தேவன் மனிதர்களை செம்மையானவர்களாக உண்டாக்கியிருந்தாலும் அவர்கள் பல உபாய தந்திரங்களைத் தேடிக்கொண்டவர்களாக இருந்து தங்களுக்கு தீவிரமான அழிவைத் தேடிக்கொள்கிறவர்களாக இருக்கிறார்கள். அதுபோலவே பெண்களும் தங்கள் புருஷர்களுக்கு அடங்காதவர்களாகவும், ஆண்களும் பெண்களும் சமம் என்று கூறி செயல்படுகிறவர்களாகவும், தங்கள் குடும்பத்தை எவ்விதம் நடத்துவது என்பதை அறியாதவர்களாகவும் இருந்து, தங்கள் ஞானமற்ற செய்கைகளினால் தங்கள் குடும்பமாகிய வீட்டை இடித்துப் போடுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இவ்வித தவறான செயல்பாடுகளினால்

குடும்பங்களில் சமாதானம் இல்லை, சந்தோஷம் இல்லை. பிள்ளைகளின் செயல்பாடுகளை அறிந்துகொள்ள முடியவில்லை. எல்லாம் குழப்பமாகவே உள்ளது. சரியாக செயல்பட முயற்சிப்போமா? தேவன் தாமே கிருபை செய்வாராக!

ஜ) ஸ்திரீகளும் - திருக்குறளும்

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்

நன்கலம் நன்மக்கட் பேறு

இதன் பொருள் :கணவனுக்கு அனைத்து வகைகளிலும் உறுதுணையாக இருந்து செயல்படுவதே மனைவிக்குப் பெருமை. நல்ல குழந்தைகளை உருவாக்குவது அந்தப் பெருமைக்குப் பெருமை சேர்ப்பதாக அமையும்.

சமீபத்தில் நான் வாசித்த ஒரு தினசரிப் பத்திரிக்கையில் மேற்கூறப்பட்டுள்ள திருக்குறளும் அதன் பொருளும் கூறப்பட்டுள்ளது. தேவனை அறியாத புறஜாதி மனிதர்கள் கூட ஸ்திரீகள் எவ்விதம் குடும்பங்களில் செயல்படவேண்டும். பிள்ளைகளை வளர்ப்பது என்பது பற்றியும் எழுதி வைத்துள்ளார்கள். அதுபோல ஸ்திரீகளும் குடும்பங்களில் அடக்கத்தோடு நடந்துகொண்டு, கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று சொல்லி தங்கள் கணவனுக்கு மிகவும் அடங்கியிருக்கிறார்கள். தங்கள் பிள்ளைகளையும் நல்லொழுக்கமுடையவர் களாக வளர்க்கப் பிரயாசப்படுகிறார்கள். ஆனால் விசுவாசிகளான ஸ்திரீகளில் பெரும்பாலுமானவர்கள் தங்கள் கணவனுக்கு அடங்கி நடப்பதில்லை. கணவனை அடக்கி அரசாட்சி செய்ய முயற்சிக்கிறார்கள். தங்கள் பிள்ளைகளை எவ்விதம் வளர்க்க வேண்டும் என்றும் அறியாதவர்களாயிருக்கிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள்!

ஞ) ஸ்திரீகளும் - கிராமியப்பாடலும்

நல்லப் பெண்ணைப் பார் - என் தோழா நீ

நல்ல பெண்ணைப் பார்

சரணம்

எழுத்து வாசகம் அறியாதவன் மட்டி

ஏதும் அறியாதவன் சுரண்டுவான் சட்டி

கழுத்திலே அவளுக்குத் தாலியைக் கட்டி

காரியம் இல்லையது காசுக்கு நஷ்டி - நல்ல பெண்ணைப் பார்

நான் சிறுவனாக இருந்த நாட்களிலே எங்கள் ஊரில் உள்ள வாலிபர்கள் பல கிராமியப் பாடல்களைப் பாடி ஆண்கள் கோலாட்டு (களியல்) அடிப்பதுண்டு. இப்பொழுது இந்தப் பாடல்களில் எதுவும் எனக்க ஞாபகத்தில் இல்லை. ஆனால் ஒரே ஒரு பாடலின் ஒரு சரணம் மட்டும் எனக்கு ஞாபகத்தில் உள்ளது. அந்த சரணத்தை மட்டும் மேலே குறிப்பிட்டுள்ளேன்.

அந்த சரணத்தின் அர்த்தமானது ஒரு ஸ்திரீ எழுதப்படிக்கத் தெரியாத வளாயிருப்பாள் என்றால் அவள் ஒன்றையும் அறியமுடியாத

மண்டூகமாயிருப்பாள். எதையுமே அறிந்துகொள்ள முடியாதவள் வெறும் சட்டி சுரண்டுகிறவளா யிருப்பாள். ஒன்றையும் அறியமுடியாத மண்டூகமும், வெறும் சட்டி சுரண்டுகிறவளுமாகிய ஸ்திரீயின் கழுத்திலே தாலியைக் கட்டுவதினால் எந்தவித பயனும் இல்லாதபடியிருந்து, வெறும் காசுக்கு நஷ்டமாகும் என்று கூறப்பட்டுள்ளது.

இன்று கிராமப்புறங்களில் பெரும்பாலுமான குடும்பங்களில் பெண் குழந்தைகளை கல்வி கற்க வைப்பதில்லை. சிலரிடம் ஏன் உங்கள் பெண் குழந்தைகளை கல்வி கற்க அனுப்பவில்லை என்று கேட்டால் அவர்கள் பொட்டைக் கழுதைகள் படித்து என்ன பிரயோஜனம் ஐயா என்று சொல்வதுண்டு. இது நமது ஜனங்களின் அறியாமையைக் காட்டுவதாக உள்ளது. ஒரு குடும்பத்தில் ஆண் கற்றவனாக இருந்தால் அது அவனுக்கு மட்டும்தான் பிரயோஜனமாயிருக்கும். ஆனால் அந்தக் குடும்பத்தில் உள்ள பெண் கற்றவளா யிருந்தால் அது குடும்பத்தில் உள்ள எல்லாருக்கும், விசேஷமாக அவள் பிள்ளைகளுக்கும் மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள காரியங்களிலிருந்து நமது குடும்பங்களில் ஸ்திரீகளின் செயல்பாடுகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், அவர்களால் மட்டுமே குடும்பமாகிய வீடு கட்டப்பட முடியும் என்பதையும், அதினால் ஸ்திரீகள் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக செயல்படி வேண்டியது மிகவும் அவசியமாகவுள்ளது என்று நாம் தெளிவாக அறியவேண்டும்.

C. பிள்ளைகளும் - தேவ ஞானமும்

"ஞானமுள்ள மகன் தகப்பனுடைய போதகத்தைக் கேட்கிறான்" நீதி.13:1

"ஞானமுள்ள மகன் தகப்பனை சந்தோஷப்படுத்துகிறான்"நீதி.10:1, 15:20,23:24,29:3.

இந்த அத்தியாயத்தில் இதுவரை ஒரு குடும்பத்தின் தலைவனாகவுள்ள கணவன் ஞானத்தைப் பெற்றவனாக இருப்பது பற்றியும், குடும்பத்தின் தலைவியாகவுள்ள மனைவி ஞானத்தைப் பெற்றவளாக இருப்பது பற்றியும் விபரமாக அறிந்து கொள்ளப் பார்த்தோம். இந்ததப் பகுதியில் குடும்பத்தில் அங்கங்களாகவுள்ள பிள்ளைகள் ஞானத்தைப் பெற்றிருப்பது பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில், ஞானமுள்ள மகன் தகப்பனுடைய போதகத்தைக் கேட்கிறான் என்றும், இரண்டாவது வசனத்தில் ஞானமுள்ள மகன் தன் தகப்பனை சந்தோஷப்படுத்துகிறான் என்றும் கூறப்பட்டுள்ளது. பொதுவாக பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பது பிள்ளைகள் தாங்கள் சொல்வதைக் கேட்க வேண்டும். கேட்டு அந்த வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து செயல்பட வேண்டும் என்றும் பிள்ளைகளின் செயல்பாடுகள் தங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்க வேண்டும் என்பது தான்

ஆனால் இன்றைய பிள்ளைகளில் பெரும்பாலானோர் தங்கள் பெற்றோர் சொல்வதைக் கேட்கவில்லை. அவர்கள் செயல்பாடுகள் பெற்றோர்களுக்குக் கொடிய வேதனையைக் கொடுப்பதாக இருக்கிறதேயொழிய, சந்தோஷத்தைக் கொடுப்பதாக இருப்பதில்லை. ஆனால் நமது பிள்ளைகள் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக இருந்தால், நிச்சயம் அவர்கள் தங்கள் தாய் தகப்பனின் போதகத்தைக் (வார்த்தைகளைக்) கேட்பார்கள். தங்களின் செயல்பாடுகள் மூலம் தங்கள் பெற்றோரை சந்தோஷப்படுத்துவார்கள் என்பதை நாம் அறிய வேண்டும்.

நமது பிள்ளைகள் தேவ ஞானத்தைப் பெறாதவர்களாய் இருப்பதற்குப் பெரும்பாலும் பெற்றோர்கள் தான் காரணமாக இருப்பார்கள் என்பதை நாம் அறிய வேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வளர்க்க வேண்டிய வழியில் வளர்ப்பதில்லை. பெரும்பாலுமான பெற்றோர்கள் ஆடு மாடுகளின் குட்டிகள் வளருவதுபோல நாங்களும் எங்கள் பிள்ளைகளை வளர்க்கிறோம் என்பதுபோல, தங்கள் பிள்ளைகளை வளர்க்கிறார்களேயொழிய, நமது பிள்ளைகள் தேவனால் கொடுக்கப்பட்ட ஆத்துமாக்கள். அவர்களின் ஆத்துமாக்களுக்காக தாங்கள் தேவனுக்குக் கணக்கு கொடுக்க வேண்டும் என்று ஒரு போதும் அவர்கள் எண்ணுவதில்லை. அதுமட்டுமல்லாது நமது பிள்ளைகள்தான் நமது உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு சாட்சியாக உள்ளவர்கள் என்று எண்ணுவதில்லை. இந்தப் பகுதியில் நமது பிள்ளைகளைப் பற்றிய சில பொதுவானக் காரியங்களை எழுதினால் அது நமக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். இந்த தேவ ஆலோசனைக்கு ஏற்றவாறு நாம் நமது பிள்ளைகளை நடத்துவோம் என்றால் அது நமது பிள்ளைகளுக்கும், நமது குடும்பத்துக்கும் ஆசீர்வாதமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

1. பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்

"இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்" சங். 127:4

நாம் நமது பிள்ளைகளைக் குறித்து நாம் அறிந்துகொள்ள வேண்டியக் காரியமாக மேற்கூறப்பட்டுள்ள வசனம் கொடுக்கப்பட்டுள்ளது. நமக்கு நமது பெற்றோர்களின் அல்லது முன்னோர்களின் சொத்துக்களை சுதந்தரமாகக் கொடுக்கப்படுகிறது. நமது முன்னோர்கள் நமக்கு வைத்துப்போகும் சுதந்திரமாகிய சொத்துக்களைப் பேணிக் காப்பது நமது விசேஷித்த கடமையாகும். தனது பெற்றோர்கள் வைத்துப்போகும் சுதந்தரத்தைக் காப்பாற்றுவதற்காக தனது உயிரைக் கொடுத்த நாபோத் என்ற மனிதனின் சரித்திரம் பற்றி ஐ இராஜா. 21:1-13 வரையுள்ள வசனங்களை வாசித்து அறிந்து கொள்ளலாம். அதுபோலவே தேவன் நமக்கு வாழையடி வாழையாக நமது பிள்ளைகளை சுதந்திரமாக நமக்குக் கொடுத்திருக்கிறார். தேவன் நமக்குச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கும் நமது பிள்ளைகளை நாம் பேணிக்காத்து தேவ நாம மகிமைக்கென்று வளர்க்கப் பிரயாசப்படவேண்டும்.

2. கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்

"கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" சங்.127:4.

நாம் நமது பிள்ளைகளை குறித்து சரியாக அறிந்துகொள்ளும் வண்ணமாக மேற்கூறப்பட்டுள்ள வசனம் கொடுக்கப்பட்டுள்ளது.மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கர்ப்பத்தின் கனி என்பது, எவ்விதம் ஒரு மரத்தை நாம் வளர்க்கும்பொழுது அது குறித்த காலத்தில் கனிகொடுப்பது போல நமது குடும்ப வாழ்க்கையின் மூலமாக நமக்குக் கிடைக்கும் கனியாக நமது பிள்ளைகள் நமக்குக் கொடுக்கப்படுகிறார்கள் என்று நாம் அறிய வேண்டும். கர்ப்பத்தின் கனியாக நமக்குக் கிடைக்கும் பலன் என்று கூறப்பட்டுள்ளது. இதில் பலன் என்ற வார்த்தைக்கு ஆங்கில வேத புத்தகத்தில் (Reward) என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுளது. இந்த ரிவார்ட் என்ற வார்த்தையின் பொருள் சன்மானம், வெகுமதி என்று கொடுக்கப்பட்டுள்ளது. நமக்குக் கிடைக்கும் சன்மானத்திற்கு அல்லது வெகுமதிக்கு நாம் பணம் கொடுப்பதில்லை. நாம் பெறும் சன்மானம் அல்லது வெகுமதி நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. அதுபோலவே நாம் சந்தோஷப்படுவதற்காகவே தேவன் நமக்குப் பிள்ளைகளைக் கொடுக்கிறார் என்பதை நாம் அறிய வேண்டும். ஆனால் நமது பிள்ளைகள் வளர்ந்து வரும்பொழுது அவர்கள் நமக்கு சந்தோஷத்திற்குப் பதிலாக வேதனையைக் கொடுக்கிறவர்களாக மாறிவிடுகிறார்கள். இவ்விதமான பிள்ளைகளின் தவறான சுபாவத்திற்கு பெற்றோர்தான் காரணம் என்பதை அநேகர் அறிவதில்லை.

நமது பிள்ளைகளை நாம் எவ்விதம் வளர்க்கவேண்டுமோ, அவ்விதமாக நாம் வளர்ப்பதில்லை. அதனால் நமது பிள்ளைகள் நமக்கு சந்தோஷத்திற்குப் பதிலாக வேதனையைக் கொடுக்கிறவர்களாக ஆகி விடுகிறார்கள். அநேகப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் கொஞ்சம் கூட கவனம் செலுத்துவதில்லை. அதனால் பின்னர் அவர்கள் பிள்ளைகளினால் அவர்கள் அதிகம் வேதனையை அனுபவிக்கிறார்கள். இந்த நாட்களில் பெற்றோர்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

8. பெற்றோர்கள், பிள்ளைகள் குறித்த சில பொதுவானக் காரியங்கள்

பெற்றோர்களின் வாழ்க்கை முறை எவ்விதம் அவர்கள் பிள்ளைகளைப் பாதிக்கிறது என்றும் பிள்ளைகளின் வாழ்க்கை முறை எவ்விதம் பெற்றோரைப் பாதிக்கிறது என்றும் இந்தப் பகுதியில் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

a) பெற்றோரின் நல்வாழ்க்கையின் மூலம் பிள்ளைகள் தேவனால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். ஆனால் பெற்றோரின் பாவமான வாழ்க்கை பிள்ளைகளுக்கு சாபமும், வேதனையாகவும் இருக்கும்

"என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருகவே பெருகப்பண்ணுவேன்" ஆதி.26:24.

"நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான் ; அவனுக்குப்பின் அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள்" நீதி.20:7

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் தேவன ஈசாக்கிடம் நான் ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருகப்

பண்ணுவேன் என்று சொல்கிறார். ஆபிரகாம் தேவனுக்குப் பயப்படுகிறவனாக (ஆதி.22:12) கீழ்ப்படிகிறவனாக(ஆதி.22:18) தேவனை முழுமையாக விசுவாசிக்கிறவனாக (ஆதி.15:6) ஜீவித்தபடியினால் தேவன் ஆபிரகாமி னிமித்தம் ஈசாக்கை ஆசீர்வதித்தார். பெற்றோர் தேவனுக்குப் பயப்படு கிறவர்களாக, தங்கள் வாழ்க்கையின் எல்லாக் காரியங்களுக்கும் தேவனை பூரணமாய் விசுவாசிக்கிறவர்களாகவும், கீழ்ப்படிகிறவர்களாகவும் ஜீவித்தால் தேவன் நிச்சயமாகவே அவர்களுக்குப்பின் அவர்கள் பிள்ளைகளை ஆசீர்வதிப்பார் என்பதை நாம் அறிய வேண்டும். அப்படியல்லாது, தேவனுக்குப் பிரியமில்லாது ஜீவித்து தங்கள் பாவத்தில் நிலைத்திருந்தால் நிச்சயமாகவே அப்படிப்பட்டவர்கள் தேவ சாபத்தை ஏற்று, அவர்கள் வாழ்க்கையில் எல்லாவித வேதனைகளையும் அனுபவிப்பார்கள். ஆகவே பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கை முறையைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இது குறித்து தேவன் கட்டளையாகக் கொடுத்திருக்கும் வேத வசனத்தைக் கவனிப்பது மிகவும் நல்லது.

"உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்து பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவரா யிருக்கிறேன்" யாத்.20:5

b) பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கை முறை குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பிள்ளைகளின் தவறுகளை பெற்றோர் கண்டிக்கவில்லை யென்றால் பெற்றோர் தண்டிக்கப்படுவார்கள் என்பதை அறிந்திருக்க வேண்டும்

"யோபு : ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின் படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான்" யோபு 1:5

யோபு தன் பிள்ளைகள் சந்தோஷமாக விருந்து கொண்டாடும் நேரத்திலும் அவர்கள் தங்கள் செய்கையின் மூலம் தேவனை தூஷித்திருக்கலாம் என்று எண்ணி அவர்களை அழைத்து, பரிசுத்தப்படுத்தி அவர்களுக்காக சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துகிறவனாக இருந்தான். இது யோபு எவ்வளவாக தன் பிள்ளைகள் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தவர்களாக இருக்கக்கூடாது என்று மிகவும் கவனமாக இருந்ததைக காட்டுவதாகவுள்ளது.

இன்று பெரும்பாலுமான பெற்றோர் தங்கள் பிள்ளைகள் எங்கு செல்கின்றனர்- யார் யாரோடு பழகுகின்றனர்? எவ்விதம் செயல்படுகின்றனர் ? என்று சிறிதளவும் கவனிப்பதே கிடையாது. இதினால் அவர்களுடைய பிள்ளைகள் தவறான சுபாவம் உடைய பிள்ளைகளாய் மாறி விடுகின்றனர். ஆகவே நாம் நமது

பிள்ளைகள் குறித்து மிகவும் கவனமாக இருந்து, அவர்களை ஏற்றவிதமாய் எச்சரித்து, அவர்களை சரியான வழியில் நடத்தப் பிரயாசப்பட வேண்டும். ஒரு சமயம் நாம் நமது பிள்ளைகள் குறித்து கவனமாக இல்லையென்றால் அவர்களின் தவறான செயல்பாடுகள் பெற்றோருக்கு அழிவை உண்டுபண்ணும் என்பதை கீழ்க்கண்ட வேத வசனம் தெளிவுபடுத்துகிறது.

"அவன் (ஏலி) குமாரர் தங்கள்மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம், நான் அவர்கள் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்பு செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன்" I சாமு.3:43.

" நீ என்னைப் பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன்" I சாமு.2:29.

ஏலி கர்த்தரைக் குறித்து வைராக்கியமுள்ளவனாயிருந்தாலும் தன் பிள்ளைகளின் தவறான ஜீவிய முறைகளைக் குறித்து கவனமற்றவனாகவும், தேவனை விட தன் பிள்ளைகளை அதிகம் மதிக்கிறவனாகவும் இருந்ததினாலே அவனுக்கும், அவன் பிள்ளைகளுக்கும் அழிவு வந்தது என்பதை நாம் அறியவேண்டும். இந் நாட்களிலே நாம் நமது பிள்ளைகள் குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

நமது பிள்ளைகள் எவ்விதமான நண்பர்களோடு பழகுகிறார்கள். எவ்விதமானக் காட்சிகளைக் காண்கிறார்கள். எவ்விதமான புத்தகங்களை விரும்பி வாசிக்கிறார்கள். எவ்விதமாய் பேசுகிறார்கள் என்று இவ்விதமாக அவர்களின் எல்லாவித காரியங்களையும் குறித்து பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை மிகவும் உன்னிப்பாகப் பார்க்க வேண்டும். அவர்கள் தவறு செய்வதைக் காணும்போது நமது பிள்ளைகள் தானே, அவர்கள் தவறு செய்தால் பரவாயில்லை என்று சொல்லக்கூடாது. தேவனைவிட நமது பிள்ளைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது.

4. வெவ்வேறு சுபாவமுடைய பிள்ளைகள்

வெவ்வேறு சுபாவமுடைய பிள்ளைகளைக் குறிக்கும் வேத வசனங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அந்த வேத வசனங்களை வேத புத்தகத்தில் வாசித்து, தியானம் செய்து, அவர்கள் செயல்பாடுகள் குறித்து அறிந்துகொண்டு, அதற்கு ஏற்றவாறு நமது பிள்ளைகள் தங்கள் ஜீவியத்தை சரியாக அமைத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

a) நல்ல சுபாவமுடைய பிள்ளைகள்

ஞானமுள்ள மகன் - நீதி.13:1; 10:1; 15:20; 29:3

ஞானமுள்ள பிள்ளை - நீதி.23:24

புத்தியுள்ள மகன் - நீதி.10:5

விவேகமுள்ள மகன் - நீதி.15:5, 28:7

b) தவறான சுபாவமுடைய பிள்ளைகள்

மூடனான மகன் - நீதி.10:1;15:5;17:21,25;19:13

மதியற்ற மகன் - நீதி.15:20;17:21

இலச்சையை உண்டாக்குகிற மகன் - நீதி.10:5 ;19:26

பரியாசக்காரனான மகன் - நீதி.13:1

போஜனப்பிரியருக்குத் தோழனான மகன் - நீதி.29:3

பாழ்க்கடிக்கிற மனுஷனுக்குத் தோழன் - நீதி.28:24

துஷ்டப்பிள்ளை -உபா.21:18,20

5. பிள்ளை வளர்ப்பது

"பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" எபே.6:4.

ஊழியர்கள் பிள்ளைகளை வளர்ப்பது

"தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும்" I தீமோ.3:4.

பிள்ளைகளை வளர்ப்பது என்றால் பிள்ளைகளுக்கு நல்ல சத்தான ஆகாரங்களைக் கொடுத்து நல்ல திடகாத்திரமான குழந்தைகளாக வளர்ப்பது என்று அநேகர் எண்ணுகின்றனர். பிள்ளைகளை சரீரப்பிரகாரமான திடகாத்திரமான குழந்தைகளாக வளர்ப்பது நல்லதுதான். ஆனால் அவர்களை ஆவிக்குரிய பிரகாரமாகவும் மிகவும் சிறப்பான குழந்தைகளாக, கர்த்தரை மகிமைப்படுத்துகிற குழந்தைகளாக, சமுதாயத்தில் நல்லவர்கள் என்று பெயர் வாங்கும் குழந்தைகளாக வளர்ப்பது மிகவும் அவசியமாகவுள்ளது.

ஊழியர்களும் தலைப்பு வசனத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் தங்கள் பிள்ளைகளை நல்லொழுக்கமுடையவர்களாக இருக்கும்படி கீழ்ப்படியப் பண்ணுகிறவர்களாக இருக்கவேண்டும். இன்று பெரும்பாலுமான ஊழியர்களின் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களின் வாழ்க்கை முறைக்கு நேர் எதிராக வாழ்ந்து, தங்கள் மூலமாக நமது பரிசுத்தமான தேவனின் நாமம் தூஷிக்கப்படும்படியாக நடந்து கொள்ளுகிறவர்களாயிருக்கிறார்கள். ஊழியர்கள் ஏலிக்கு நேரிட்டது போல் தங்களுக்கு நேரிடாமல் இருக்க தங்கள் பிள்ளைகள் குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

பிள்ளைகளை வளர்ப்பதில் நாம் முக்கியமாக அறிந்து கொள்ளவேண்டிய காரியம் யாதெனில், பிள்ளைகளை வளர்ப்பதல் தாய்க்கு முக்கிய பங்குண்டு என்பதாகும். ஏனெனில் பிள்ளைகள் தங்கள் தாயிடம் தான் அதிகப் பாசம் உடையவர்களாக இருப்பார்கள். ஒரு தாய் ஒன்றையுமே அறிந்து கொள்ள முடியாத நிலைமையுடையவளாக இருந்தால், அவ்வித ஸ்திரீ வளர்க்கிற பிள்ளைகளும் தாயைப் போலவே ஒன்றையும் அறிந்து கொள்ள முடியாதவர்களுமாயிருப்பார்கள் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். அதுபோலவே தாய் தன் புருஷனிடம் எப்பொழுதும் எதிர்த்துப் பேசுகிறவளாகக் காணப்பட்டால்

பிள்ளைகளும் தங்கள் தகப்பனிடம் எதிர்த்துப் பேசும் சுபாவம் உடையவர்களாகக் காணப்படுவார்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

a) பிள்ளைகள் நடக்க வேண்டிய வழியில் அவர்களை நடத்துவது

"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து ; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்" நீதி.22:6.

பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் பிள்ளைகள் சிறு பிராயமுள்ளவர்களாய் இருக்கும்பொழுதே அவர்கள் நடக்க வேண்டிய சரியான வழியில் அவர்களை நடத்துவதாகும். மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்தினால், அவன் அதை தன் முதிர் வயதிலும் விடாதிருப்பான் என்பதாகும்.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நடக்க வேண்டிய வழி என்பது நாம் அமைத்துக் கொள்ள வேண்டிய ஜீவிய முறையைக் குறிப்பதாகும். நமது பிள்ளைகள் எவ்விதம் தங்கள் ஜீவிய முறையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் சிறுபிராயமுள்ளவர்களாயிருக்கும் பொழுதே அவர்களை அந்த குறிப்பிட்ட ஜீவிய முறையில் நடத்தப் பார்க்க வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் அந்த ஜீவிய முறையை தங்கள் முதிர்வயதிலும் விடாது பின்பற்றுவார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இன்று பெரும்பாலுமான பெற்றோர்கள், நமது பிள்ளைகள் சிறு பிள்ளைகள் தானே, அவர்கள் பெரியவர்கள் ஆகும்பொழுது அவர்களை சரியான வழியில் நடத்தலாம் என்று எண்ணி, தங்கள் பிள்ளைகளை அவர்கள் இஷ்டம்போல் வளர விட்டுவிடுகின்றனர். ஆனால் இந்த பிள்ளைகள் 15 வயது 16 வயது ஆகும்பொழுது பெற்றோர்கள் அவர்களுக்கு ஆலோசனை சொல்ல முற்பட்டால், அந்த பிள்ளைகள் தங்கள் பெற்றோர் மீது மிகுந்த எரிச்சலடைவார்கள். பெற்றோர் சொல்லும் வார்த்தைகளுக்கு நேர் எதிர்மாறாக செயல்படுவார்கள். அவ்வித பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்கு மிகுந்த மனவேதனையையும், கவலையயையும் உண்டாக்குவார்கள். ஆகவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

தமிழிலே சில பழமொழிகள் உண்டு. ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையாது என்றும், தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்றும் கூறப் படுவதுண்டு. அதாவது பிள்ளைகள் சிறிய குழந்தைகளாக இருக்கும் பொழுது என்ன சுபாவத்தைக் கற்றுக் கொள்கிறார்களோ அதே சுபாவம் தான் அவர்கள் மரணம் வரையில் அவர்களில் நிலைத்திருக்கும் என்றும், இவர்களின் சிறுபிராயத்திலேயே இவர்களை நல்ல சுபாவங்களுக்குள் அவர்களை நடத்தவில்லை என்றால் அவர்களின் முதிர்வயதிலும் அவர்களை அவர்கள் தவறான ஜீவிய முறையிலிருந்து திருப்ப முடியாது என்பதை நாம் அறியவேண்டும்.

சமீப நாட்களில் ஆராய்ச்சியின் மூலம் தாயின் வயிற்றிலிருக்கும் குழந்தையும் வெளியில் உள்ள சத்தங்களைக் கேட்கமுடியும் என்று கண்டுபிடித்துள்ளனர். இதை ஆமோதிக்கும் வண்ணமாக வேத புத்தகத்தில் *லூக்.14:1-ல்* எலிசபெத்தின் வயிற்றில் இருந்தக் குழந்தை மரியாளின் வாழ்த்துதலைக்

தொட்டவுடன் அக்கினிப்பால் துள்ளிற்று என்று கூறப்பட்டுள்ளது. அப்படி யென்றால் பிள்ளைகள் மிகவும் சிறுபிராயத்திலேயே எல்லாக் காரியங்களையும் கவனிக்கும் திறன் உடையவர்களாக இருப்பதால் அந்த சிறு பிராயத்திலேயே நாம் எவ்விதமாக அவர்களை நடத்த விரும்புகிறோமோ அவ்விதமான காரியங்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். இல்லை யென்றால் பிற்காலத்தில் நமது பிள்ளைகளின் தவறான சுபாவங்களினால் பெற்றோர்கள் கொடிய வேதனையை அனுபவிக்க வேண்டியதிருக்கும் என்பதை பெற்றோர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

பிள்ளைகளை எவ்விதம் நடத்துவது என்று பெற்றோர் முதலாவது நன்கு அறிந்திருக்க வேண்டும். இரண்டாவது பெற்றோர் எவ்விதம் தங்கள் பிள்ளைகளை நடத்த வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவ்விதமாகவே பெற்றோரும் நடந்து காட்ட வேண்டும். எல்லாக் காரியங்களிலும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல முன் மாதிரிகளாக இருக்க வேண்டும்.

அதிகாலையில் எழுவது, கர்த்தரை ஸ்தோத்தரிப்பது, ஜெபிப்பது, வேதம் வாசிப்பது, காலைக்கடன்களை முடிப்பது, குறித்த நேரத்தில் பள்ளிக்கூடம் செல்வது போன்ற ஒழுங்கு முறைகளில் நமது பிள்ளைகளை நடத்தப் பார்க்க வேண்டும். அதுபோலவே பிள்ளைகளும் மாலையில் பள்ளியில் இருந்து வந்தவுடன் சிறிது நேரம் விளையாடுவது, பின் குறித்த நேரத்தில் கை கால்களைக் கழுவி உணவு உண்பது, பின் கொடுக்கப்பட்ட பாடங்களைப் படிப்பது, பின் ஜெபித்து படுக்கைக்கு போவது அல்லது படுக்கைக்குப் போகுமுன் குடும்ப ஜெபம் செய்வது போன்றக் காரியங்களில் நமது பிள்ளைகளை ஒழுங்காக நடத்தினால் அவர்கள் தங்கள் வாலிப நாட்களிலும் முதிர்வயதான பிறகும் கூட இவ்வித காரியங்களில் நிலைத்திருப்பார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக நடந்து காட்ட வேண்டும். ஒரு நாளும் ஜெபியாத, வேதம் வாசியாத தகப்பனோ, தாயோ தங்கள் பிள்ளைகளை ஜெபம் செய்ய, வேதம் வாசிக்கச் சொல்வது அர்த்தமற்றதாயிருக்கும். ஆகவே பெற்றோர் இவ்வகை காரியங்களில் மிகவும் கவனமாக நடந்து கொள்ளப் பார்க்க வேண்டும்.

பிள்ளைகள் எவ்விதம் கர்த்தரின் வழியில் நடக்க வேண்டும் என அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்

நமது பிள்ளைகள் எவ்விதம் சரியான வழியில் நடக்க வேண்டும் என்று பெற்றோர்களே தங்கள் முன்மாதிரியான வாழ்க்கை முறையிலே தங்கள் பிள்ளைகளை அவர்கள் சிறுபிராயமாக இருக்கும்போது முதற்கொண்டே அவர்களை நடத்த வேண்டும். அப்பொழுது தான் பிள்ளைகள் தங்கள் முதிர்வயதிலும் அந்த நல்ல வாழ்க்கையை விடாமல் கைக்கொள்வார்கள் என்று சென்ற முந்திய பகுதியில் பார்த்தோம். இந்தப் பகுதியில் நமது பிள்ளைகள் எவ்விதம் கர்த்தரின் வழியில் செல்வது என்று கற்றுக் கொள்ளும்படியாக அவர்களுக்கு என்ன என்ன காரியங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும் அல்லது பழக்க வேண்டும் என்று சற்று விபரமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

i) நமது பிள்ளைகளுக்குக் கர்த்தரின் வார்த்தைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும்

"நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாள மாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து,..". உபா.11:19,20 ;32:46.

பெற்றோர்கள் கர்த்தரின் வார்த்தைகளை தங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்குமுன் அவர்கள் தங்கள் தேவனின் வார்த்தைகளை நன்கு கற்று, தங்கள் இருதயத்திலும், தங்கள் ஆத்துமாவிலும் அவைகளைப் பதித்துக்கொண்டு, பின்னர் அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதை எல்லாப் பெற்றோர்களும் அறிய வேண்டும்.

இன்று பெரும்பாலுமான பெற்றோர் தேவனின் வார்த்தைகளைத் தாங்களும் கற்றுக் கொள்வதில்லை. தங்கள் பிள்ளைகளுக்கும் அவைகளைக் கற்றுக் கொடுப்பதில்லை. சில பெற்றோர் தாங்கள் தேவனின் வார்த்தைகளைக் கற்றுக்கொடுக்காமலேயே தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளை கற்றுக் கொடுக்க முயற்சி செய்கின்றனர். இவ்வித செய்கைகளினால் அவர்கள் பிள்ளைகளும் தேவனின் வார்த்தைகளைக் கற்று தேவனைப் பற்றி அறிந்து கொள்வதில்லை. குடும்பமாகவும், தேவனை சரியாக அறிந்து அவர் விரும்புகிற வண்ணமாக செயல்படி முடியாதபடி ஆகிவிடுகிறது. ஆகவே பெற்றோர்கள் தேவனின் வார்த்தைகளை நன்றாகக் கற்றுக் கொண்டு பின்னர் அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கும் போதித்து அவைகளை அவர்கள் கைக்கொள்ளும் படியாகச் செய்வதும் மிகவும் அவசியமாகவுள்ளது. நாம் எந்த அளவிற்கு வேதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவைகளை நம் குடும்பத்தில் உள்ள எல்லாரும் இரவு பகலாக கற்றுக் கொண்டு அவைகளை நமது பிள்ளை களுக்கும் கற்றுக் கொடுக்கிறோமோ, அந்த அளவிற்கு காத்தரின் ஆசீர்வாதம் நம் குடும்பங்களில் தங்கும். செயலபடுவோமா?

ii) நமது பிள்ளைகளுக்கு கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும்

"என் வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணுவேன் ; அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக் கடவர்கள்" உபா.4:9.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நாம் ஏன் வேத வசனத்தை கற்றுக்கொண்டு, நமது பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. நாம் வேத வசனத்தைக் கற்றுக் கொள்வதின்மூலம் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைப் பெற்றுக்கொள்கிறோம்.

இன்றைய மனித குலம் தெய்வபயம் அற்றவர்களாக எல்லாவிதமான தீமையானக் காரியங்களையும் மிகவும் துணிகங்கொண்டு செய்கிறார்கள்.

கொலை, கொள்ளை, விபச்சாரம், ஜாதிக் கலவரங்களைத் தூண்டுவதும், பொதுச்சொத்துக்களை அழிப்பது போன்ற கொடிய தீமையான காரியங்களைத் துணிகரங்கொண்டு செய்கின்றனர். இவ்வித துன்மார்க்கரான ஜனங்களும் தெய்வபயத்தைப் பெற்றுக்கொண்டு இவ்வித தீமையான காரியங்களுக்கு தங்களை விலக்கிக் காத்துக் கொள்வார்கள் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும். நமது பிள்ளைகள் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைப் பெற்றுக் கொள்ளும்படிக்கு வேத வசனங்களை இரவு பகலாக கற்றுக் கொண்டு தங்கள் வாழ்க்கையில் எல்லாவித தீமையான காரியங்களுக்கும் தங்களை விலக்கிக் காத்துக் கொள்வார்கள் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும். பெற்றோர் வேத வசனத்தைக் கற்று அதின்மூலம் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். அதோடு அவர்கள் பிள்ளைகளும் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை பெற்றுக்கொள்ளும் வண்ணமாக அவர்கள் பிள்ளைகளுக்கும் வேத வசனங்களைப் போதிக்க வேண்டும். (கர்த்தருக்குப் பயப்படும் பயம் குறித்து விளக்கமாக புத்தகம் எழுதியுள்ளேன். அதை வாங்கி வாசித்து கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைக் குறித்து விபரமாக அறிந்து கொள்ளப் பார்க்கவும்)

iii) பிள்ளைகள் நியாயத்தையும் நீதியையும் செய்து கர்த்தரின் வழியையும் காத்து நடப்பது குறித்து போதிக்க வேண்டும்

"கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும் நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியையும் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் (போதிப்பான்) என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்" ஆதி.18:19.

மேற்சொல்லப்பட்ட வசனத்தில் தேவன் ஆபிரகாமைக் குறித்து சொல்லும் பொழுது ஆபிரகாம், தன் குடும்பத்தினர் மற்றவர்களுக்கு நீதியும் நியாயமும் செய்யும்படி அவர்கள் கர்த்தரின் வழியைக் காத்து நடக்கவேண்டும் என்றும் கட்டளையிடுவான் (போதிப்பான்) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்சொல்லப்பட்ட வசனத்தில் கூறப்பட்டிருக்கும் இரண்டு காரியங்களுமே மனித வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமான காரியங்களாகும்.

இன்றைய மனிதர்களில் பெரும்பாலுமானவர்கள் மற்றவர்களுக்குத் தீமை செய்ய வேண்டும் என்கிற எண்ணம் உடையவர்களாக இருக்கிறார்களேயொழிய எல்லாரிடமும் நியாயமாக, நீதியாக, நேர்மையாக நடக்க வேண்டும் என்கிற எண்ணம் அவர்களிடம் கொஞ்சம் கூட கிடையாது. மற்றவர்களை வஞ்சிக்க வேண்டும். யாரையாவது கெடுக்க வேண்டும். எப்படியாவது குறுக்கு வழியில் துரிதமாக பணம் சம்பாதிக்க வேண்டும் என்கிற எண்ணம் தான் இன்றைய மனிதர்களிடம் பெரும்பாலும் காணப்படுகிறது. அதுபோலவே கர்த்தருடைய வழியைக் காத்து நடக்கவும் மனமற்றவர்களாயிருக்கிறார்கள். கர்த்தருடைய வழியைக் காத்து நடப்பது என்பது வேத வசனம் போதிக்கும் வண்ணமாக நமது ஜீவியத்தை சரியாக அமைத்துக்கொள்வதாகும். இன்றைய பெரும்பாலுமான ஜனங்கள் தேவனுடைய வழியைக் காத்து நடக்கிறவர்களாக அல்லாது மனித உபதேசங்களுக்கு ஏற்றபடி தங்கள் ஜீவியத்தை அமைத்துக் கொள்கிறவர்களாக இருக்கிறார்கள். இவ்வித தவறான காரியங்களினால் குடும்பங்களில்,

சமுதாயங்களில் சமாதானமற்ற நிலையும், எல்லாவித குழப்பங்களும் நிலவுகிறது என்பதை நாம் அறியவேண்டும்.

இன்றைய ஜனங்கள் நீதியும் நியாயமும் செய்கிறவர்களாகவும், கர்த்தருடைய வழியைக் காத்து நடக்கிறவர்களாகவுமாக இருந்து, இவைகளை தங்கள் பிள்ளைகளும் கைக்கொள்ளும்படியாக அவர்களுக்கும் இவைகளைப் போதிக்க வேண்டும். செய்வோமா?

iv) பிள்ளைகள் தேவ காரியங்களை மறவாதிருக்கும்படியாக போதிக்க வேண்டும்

"உன் கண்கள் கண்ட காரியங்களை நீ மறவாதபடிக்கும், உன் ஜீவனுள்ள நாளெல்லாம் அவைகள் உன் இருதயத்தை விட்டு நீங்காதபடிக்கும் நீ எச்சரிக்கையாயிருந்து, உன் ஆத்துமாவை ஜாக்கிரதையாய்க் காத்துக் கொள் ; அவைகளை உன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அறிவிக்கக் கடவாய் (போதிக்கக்கடவாய்)" உபா.4:10.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கர்த்தரின் தாசனாகிய மோசே இஸ்ரவேல் ஜனங்களை எச்சரிக்கும் வண்ணமாக அவர்கள் ஓரேபிலே கண்ட காட்சியை மறக்காதபடிக்கும், அந்தக் காரியங்கள் தங்கள் இருதயத்தை விட்டு நீங்காதபடிக்கும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று கூறுகிறார். ஆனால் இஸ்ரவேல் மக்கள் தேவன் தங்கள் வாழ்க்கையில் செய்த எல்லா அதிசயமானக் காரியங்களையும் மறந்தார்கள் என்று *சங்.78:11;106:13*-ல் கூறப்பட்டுள்ளது. அதினால் அவர்கள் தேவனுக்கு கோபமூட்டி, தேவனை பரீட்சை பார்த்தார்கள் என்று *சங்.78:17,18* முதலிய வசனங்களில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். நாமும் பல சந்தர்ப்பங்களில் தேவனை கோபமூட்டுகிறவர்களாகவும், தேவனை பரீட்சை பார்க்கிறவர்களாகவும் ஆகிவிடுகிறோம். இந்த நாட்களில் நாம் தேவனை மறப்பது குறித்து மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். இன்றைய உலகின் ஜனங்கள் ஏன் தேவனை மறக்கிறார்கள் என்றும், எவ்விதம் செயல்படுகிறார்கள் என்றும், அவர்களுக்கு நேரிடக்கூடிய சாபமான காரியங்கள் என்ன என்றும் சற்று விபரமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

a) ஏன் இந்த உலகின் ஜனங்கள் தேவனை மறக்கிறார்கள்?

''தங்களுக்கு இருந்த மேய்ச்சலினால் திருப்தியானார்கள் ; திருப்தியான பின்பு அவர்கள் இருதயம் மேட்டிமையாயிற்று. அதினால் என்னை மறந்தார்கள்" ஓசி.13:6.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் மேய்ச்சல் என்பது தேவன் நமது தேவைகளுக்காக ஏற்படுத்தி வைத்திருக்கும் நன்மையானக் காரியங்களாகும். ஆம்! தேவன் மனிதனின் தேவைகளுக்காக ஏற்படுத்தி வைத்திருக்கும் எல்லாவித நன்மையான காரியங்களையும் அனுபவித்து, அதினால் திருப்தியாகி, அவர்கள் திருப்தியானதினால் மேட்டிமையடைவதினால் தேவனை மறந்து விடுகிறார்கள் என்று காண்கிறோம். ஆம் ! இன்றைய உலகின் ஜனங்கள், தேவன் மனிதனின் தேவைகளுக்காக ஏற்படுத்தி வைத்திருக்கும் எல்லாவித நன்மைகளை

அனுபவித்து, திருப்தியடைந்து, பின் தங்களில் மேட்டிமையடைந்து, தேவனின் செயலை மறந்து செயல்பட ஆரம்பிக்கிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள் !

b) கர்த்தரை மறக்கிறவர்கள் செயல்படுவது

தேவனை மறக்கிறவர்கள் எவ்விதம் செயல்படுவார்கள் என்று அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

i) தேவனை மறக்கிறவர்கள் விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டுவார்கள் [வணங்குவார்கள்]

"என் ஜனங்களோ என்னை மறந்து மாயையான விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டுகிறார்கள்" எரே.18:15, உபா.4:23; 8:19, நியா.3:7, சங்.44:20 ; 78:11; 106:13, ஓசி.8:14.

தேவனை மறந்து ஜீவிக்கிற ஜனங்கள் விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டுகிறவர்களாக அல்லது விக்கிரகங்களை வணங்குகிறவர்களாக இருப்பார்கள் என்பதை நாம் அறிய வேண்டும். நமது பாரத தேசத்தின் ஜனங்கள் விக்கிரகங்களை வணங்குகிற ஜனங்களாக இருப்பதற்குக் காரணம் நமது தேசத்தின் ஜனங்கள் சத்தியமாகிய தேவனை மறந்து தங்கள் இஷ்டம்போல் வாழ ஆரம்பித்ததினால்தான் என்பதை நாம் அறிய வேண்டும். நம்முடைய தேசம் தெய்வமல்லாத விக்கிரகங்களை வணங்குவதை விட்டுவிட்டு ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கிற அல்லது நமஸ்கரிக்கிற ஒரு தேசமாக மாறும்படியாக தேவ ஜனங்களாகிய நாம் இரவும் பகலுமாக ஜெபிக்கிறவர்களாக ஆக வேண்டும்.

ii) தேவனை மறக்கிறவர்கள் விக்கிரகங்களை நம்புவார்கள்

"நீ என்னை மறந்து பொய்யை (விக்கிரகத்தை) நம்பினாய்" எரே.13:15.

நமது தேசத்தின் ஜனங்கள் தங்களை சிருஷ்டித்த தேவனை மறந்து விக்கிரகங்களை வணங்குவதினால், அவர்கள் தாங்கள் வணங்கும் விக்கிரகங்களைத் தான் தங்களுடைய எல்லாக் காரியங்களுக்கும் நம்புகிறார்கள். அதுபோலவே விசுவாசிகளாகிய தேவ ஜனங்களில் சிலர் தேவனை மறந்து விக்கிரகங்களை நம்புகிறவர்களாக விக்கிரகங்களிடத்தில் போய் ஆலோசனை கேட்க ஆரம்பிக்கிறார்கள். அதினால் அவர்கள் தேவ சாபத்தை ஏற்று தங்கள் வாழ்க்கையில் எல்லாவித வேதனைகளை அனுபவிக்கிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டும்.

iii) தேவனை மறக்கிறவர்கள் தேவனைப் புறம்பே தள்ளி தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களைச் செய்வார்கள்

"நீ என்னை மறந்து, என்னை உனக்குப் புறம்பே தள்ளி விட்டதினிமித்தம் உன் முறைகேட்டையும், உன் வேசித்தனங்களையும் சுமப்பாய்" எசே.23:35.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் இருந்து நாம் அறிவது யாதெனில் ஒரு மனிதன் தேவனை மறந்து, தேவனை தனக்குப் புறம்பே தள்ளிப்போடுவான் என்றால் அவன் முறைகேடாகவும், வேசித்தனமாகவும் காரியங்களையும் துணிந்து செய்வான். அதினால் அவன் தன் தவறான வாழ்க்கை முறைகளினால்

வரும் சாபமானக் காரியங்களை சுமக்க வேண்டியதிருக்கும் என்பதை மறக்கக்கூடாது.

iv) தேவனை மறக்கிறவர்கள் பொருளாசையுடையவர்களாய் இருப்பார்கள்

"நீ வட்டியையும் பொலிசையையும் வாங்கி, பொருளாசையினால் உன் அயலானுக்கு இடுக்கண் செய்து, என்னை மறந்து போனாய் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" எசே.22:12.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஒரு மனிதன் தேவனை மறக்கும்பொழுது வட்டி,பொலிசை முதலானவைகளை வாங்குகிறவனாகவும், பொருளாசை யுடையவனாக இருந்து மற்றவர்களுக்கு இடுக்கண் செய்கிறவனாகவும் இருப்பான் என்று நாம் அறிகிறோம். இன்றைய உலகின் மனிதர்கள் தேவனை மறந்தவர்களாய் வட்டி வாங்குவது, பொருளாசையினால் மற்றவர்களுக்கு இடுக்கண் செய்கிறவர்களாயிருப்பதை நாம் கண்கூடாகக் காணலாம். இந்நாட்களில் நமது நிலை என்ன என்று அறிந்து இவ்வித தீமையானக் காரியங்களுக்கு நம்மை விலக்கிக் காத்துக் கொள்வோம் என்றால் அது எவ்வளவு ஆசீர்வாதமாக இருக்கும் என்று நாம் அறிய வேண்டும்.

v) கர்த்தரை மறக்கிறவர்கள் மனிதருக்குப் பயப்படுவார்கள்

"நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் ; சாகப்போகிற மனுஷனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும் பயப்படுகிற தற்கும், வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்?" ஏசா.51:12.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்திலிருந்து நாம் அறிந்து கொள்வது யாதெனில் கர்த்தரை மறக்கிறவர்கள் மனிதர்கட்குப் பயப்படுகிறவர்களாகக் காணப் படுவார்கள் என்று நாம் அறிகிறோம். இன்று பெரும்பாலுமானவர்கள் மனிதருக்குப் பயப்படுகிறவர்களாக, அவர்கள் நிர்ப்பந்தத்தினால் பல தீமையான காரியங்களைச் செய்கிறார்கள். மனிதருக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும் என்று *நீதி.29:25* -ல் கூறப்பட்டுள்ளது. நமது ஆண்டவராகிய இயேசுவும், சரீரத்தைக் கொலைசெய்து, அதன் பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள் என்று *லூக்.12:4*-ல் கூறியுள்ளார்.

இந்த நாட்களில் நாம் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக, மனிதரைக் குறித்துப் பயப்படாதவர்களாக இருப்போமாக. மனிதருக்குப் பயப்படும் பயம் நமக்குப் பலவிதங்களில் ஆபத்தான நிலையை உண்டு பண்ணும் என்பதை நாம் அறிய வேண்டும்.

நமது பிள்ளைகள் தேவனை மறந்து மேற்கூறப்பட்டுள்ள தீமையானக் காரியங்கள் ஒன்றையும் செய்யாது எப்பொழுதும் தேவன் தங்கள் வாழ்க்கையில் செய்த மகிமையான காரியங்களை தங்கள் இருதயத்தில் நினைத்துக் கொள்ளும்படியாகப் போதிக்கவேண்டும். செயல்படுவோமா?

c. தேவனை மறக்கிறவர்களுக்கு நேரிடும் சாபமானக் காரியங்கள்

தேவனை மறக்கிறதான ஜனங்களுக்கு நேரிடக்கூடிய சாபகரமானக் காரியங்கள் என்ன என்று சிறிது விபரமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

i) தேவனை மறந்தால் கையின் பிரயாசம் சபிக்கப்பட்டு பலன் கிடையாமற்போகும்

"உன் இரட்சிப்பின் தேவனை மறந்தாய் ; ஆதலால் நீ நேர்த்தியான நாற்றுகளை நட்டாலும், அந்நிய தேசத்துக் கன்றுகளை வைத்தாலும், பகற்காலத்திலே உன் நாற்றை வளரவும், விடியற்காலத்திலே உன் விதையை முளைக்கவும் பண்ணினாலும், பலனைச் சேர்க்கும் நாளிலே துக்கமும், கடும் வேதனையுமே உங்கள் அறுப்பாயிருக்கும்." ஏசா.17:10,11.

ii) தேவ ஜனங்கள் தேவனை மறக்கும்பொழுது தேவன் அவர்களை அந்நியரின் கையில் விறறுப் போடுகிறார்

"அவர்கள் (இஸ்ரவேலர்) தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்து போகிறபோது, அவர் அவர்களை ஆத்சோரின் சேனாதிபதியாகிய சிசெராவின் கையிலும், பெலிஸ்தரின் கையிலும், மோவாபிய ராஜாவின் கையிலும் விற்றுப்போட்டார் ; இவர்கள் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார்கள்." I சாமு.12:9.

iii) கர்த்தரை மறந்தது குறித்து கர்த்தர் விசாரிப்பார்

"என்னை மறந்துபோன நாட்களினிமித்தம் அவனை விசாரிப்பேன்" ஓசி.2:13.

iv) தேவனை மறந்து விக்கிரகங்களைப் பின்பற்றி சேவித்து பணிந்து கொண்டால் அழிவு வரும்

"உன் தேவனாகிய கர்த்தரை நீ மறந்து, வேறே தேவர்களைப் பின்பற்றி அவர்களை சேவித்து, அவர்களைப் பணிந்து கொள்வாயானால் நிச்சயமாய் அழிந்துபோவீர்கள் என்று உங்களுக்கு சாட்சியாய் அறிவிக்கிறேன்" உபா.8:19, எரே.13:24,25, ஓசி.8:14, சங்50:22.

v) தேவனை மறக்கிறவர்கள் நரகத்தில் தள்ளப்படுவார்கள்

"தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவார்கள்" சங்.9:17.

நாம் தேவனை மறந்து செயல்படுகிறவர்களாக இருந்தால் நாம் எவ்வளவு தான் நமது வயல்நிலங்களில் பிரயாசப்பட்டாலும், அறுவடையின் நாளிலே துக்கமும், கடும் வேதனையும்தான் நமது பங்காயிருக்கும். அதுபோலவே நாம் தேவனை மறந்தால் தேவன் உலக ஜனங்கள் கையில் நம்மை அடிமைகளாக விற்றுப் போடுவார் என்றும், தேவனை மறக்கிறவர்களுக்கு நியாயத்தீர்ப்பு உண்டு என்றும், தேவனை மறந்து விக்கிரகங்களை பின்பற்றி, சேவித்தால் அவர்களுக்கு நிச்சயம் அழிவு வரும் என்றும், தேவனை மறந்து செயல்படுகிற எல்லா

ஜாதிகளும் நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்பதையும் நாம் நிச்சயமாக அறியவேண்டும்.

கிருபையாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த நாட்களில் நாம் தேவனை மறந்து செயல்படாதிருக்கும்படியாக நாம் எச்சரிக்கையாயிருக்கவும், நமது பிள்ளைகள் தேவனை மறக்காதிருக்கும்படியாக நமது பிள்ளைகளுக்குப் போதிப்பதும் மிகவும் அவசியமாகவுள்ளது.

d) பிள்ளைகளை சிட்சிப்பது / கண்டிப்பது

இதற்கு முந்திய பகுதிகளில் நமது பிள்ளைகள் நடக்கவேண்டிய வழியில் அவர்களை நடத்துவதும் அவர்களுக்கு அதைக்குறித்துப் போதிப்பதும் குறித்து விபரமாக அறிந்து கொள்ளப்பார்த்தோம். இந்தப் பகுதியில் நமது பிள்ளைகள் நடக்க வேண்டிய வழியில் அவர்கள் சரியாக நடக்கும்படியாய் அவர்களை எவ்விதம் சிட்சிப்பது, கண்டிப்பது என்பதுபற்றி சிறிது விபரமாக இந்தப்பகுதியில் அறிந்து கொள்ளப் பார்ப்போம். இந்தப் பகுதியில் சிட்சை, கண்டிப்பது என்றால் என்ன? அது எத்தன்மையுடையது? அதின் முக்கியத்துவம் என்ன? என்றும் நமது பிள்ளைகளை ஏன் சிட்சிக்க வேண்டும்? எவ்விதம் சிட்சிக்க வேண்டும்? என்றும் சிறிது விபரமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

i) சிட்சை என்றால் என்ன?

தமிழ் வேதபுத்தகத்தில் சிட்சை என்ற வார்த்தைக்கு ஆங்கில வேதபுத்தகத்தில் (chastening) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் தண்டிப்பது, அடிப்பது என்பதாகும். நமது குடும்பங்களில் நமது பிள்ளைகள் தவறு செய்யும்பொழுது நாம் சில நேரம் அவர்களை கோபப்பட்டுப் பேசுகிறோம் அல்லது அவர்கட்கு அடி கொடுக்கிறோம் அல்லது வேறு வகையில் அவர்களுக்கு தண்டனைகள் கொடுக்கப் பார்க்கிறோம். இவ்விதமாக நமது பிள்ளைகளை கடிந்து கொள்வதை, தண்டனைகள் கொடுப்பதை சிட்சை என்று கூறுகிறோம்.

ii) சிட்சை எத்தன்மையுடையது?

"எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும் ; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத்தரும்" எபி.12:11.

பொதுவாக சிட்சை, கடிந்து கொள்வது, தண்டிப்பது என்பது பிள்ளைகளுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் காரியமாக இருக்காது. ஆனால் அவர்கள் அதில் பழகிவிட்டார்கள் என்றால் பிற்காலத்தில் அவர்களுக்கு அது நீதியாகிய பலனைத் தரும் என்று கூறப்பட்டுள்ளது. நீதியாகிய சமாதான பலன் என்பது நீதியாகிய சமாதானக்கனி (Peaceable fruit) என்று கூறப்பட்டுள்ளது. இதில் சமாதானம் என்பது யுத்தம், குழப்பம் இல்லாத அமைதியான நிலை என்பதாகும். நீதியாகிய சமாதானப்பலன் என்பது நாம் பெறுகிறதான தேவ நீதியானது, யுத்தம், கலக்கம், குழப்பம் இல்லாத அமைதியான நிலையாகிய கனி என்று பொருள்படும். எவ்விதம் கனி கொடுக்கக்கூடிய மரத்தின் கன்றை நமது தோட்டத்தில்

நடும்பொழுது, அது துளிர்த்து, வளர்ந்து, செடியாகி, மரமாகி, பூப்பூத்து, காய் காய்த்து பின் கனி தருவதுபோல நாம் அனுபவிக்கிறதான சிட்சையின் அனுபவமானது நம்மில் படிப்படியாக அநேகவித மாறுதல்களை உண்டு பண்ணி இறுதியில் நமக்கு தேவநீதியாகிய சமாதானப்பலனைத் (கனியை) தருவதாக உள்ளது. அதுபோலவே பிள்ளைகள் பெற்றோரின் சிட்சைக்கு அடங்கி நடப்பார்கள் என்றால் அது அவர்களுக்கு பிற்காலத்தில் மிகவும் சமாதானமான நிலையைக் கொடுக்கும் என்பதை எல்லாப் பிள்ளைகளும் நன்கு அறியவேண்டும்.

இன்று பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும்பொழுது அவர்களை சிட்சியாது விட்டுவிட்டு அவர்கள் வளர்ந்து பெரியவர்களானபின் அவர்களை சிட்சிக்க, கடிந்துகொள்ள ஆரம்பிக்கிறார்கள். அப்பொழுது பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் சிட்சைக்கு அடங்குவதில்லை. மாறாக அவர்கள் பெற்றோரை எதிர்த்துப் பேசுகிறவர்களாகவும், எதிர்மாறாக செயல்படுகிறவர்களாகவும் இருப்பார்கள். ஆகவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சிறுபிராயமுதல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், கடிந்து கொள்வதிலும் வளர்க்க வேண்டும். அவர்கள் அதில் பழகிவிட்டால், அவர்கள் பெரியவர்களான பின்பும் தாங்கள் பெற்றோரால் சிட்சிக்கப்படும்பொழுது எரிச்சலடைந்து எதிர்த்துப்பேசாது பெற்றோரின் சிட்சைக்கு அடங்கி நடப்பார்கள். நமது குடும்பங்களில் முயற்சி செய்து பார்ப்போமா?

iii) சிட்சிப்பதின் / தண்டிப்பதின் முக்கியத்துவம்

"தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனை சிட்சிக்கிறான்" நீதி.3:12.

"பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான். அவன்மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான்" நீதி.13:24.

"தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?" எபி.12:7.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களின் மூலம் நாம் அறிந்துகொள்வது யாதெனில் தன் பிள்ளைகளிடம் அன்பாயிருக்கிற ஒரு தகப்பன் நிச்சயம் தன் பிள்ளைகளை கடிந்துகொண்டு, சிட்சிப்பான். அவ்விதம் அவர்களை சிட்சியாத தகப்பன் அவர் களைப் பகைக்கிறான் என்பதை நாம் அறிய வேண்டும். சில பெற்றோர் எங்கள் பிள்ளை ஒற்றைக்கோர் பிள்ளை, அருமையானபிள்ளை, செல்லப் பிள்ளை, சிறுபிள்ளை என்று இவ்விதமாகச் சொல்லி அவர்களை சிட்சியாது, அவர்களை தன் இஷ்டம்போல் வளர விட்டுவிடுகின்றனர். பின்னர் அந்தப்பிள்ளை பெரியவர் களாக வளரும்பொழுது தன் பெற்றோருக்கு கொடிய வேதனையையும், அவமானத்தையும் உண்டு பண்ணுகிற பிள்ளையாக வளர்ந்திருப்பதைக்கண்டு மிகவும் வேதனைப்படுகின்றனர். இந்த நேரத்தில் ஐயா !ஆண்டவன் இப்படிப்பட்ட பிள்ளையை எங்களுக்குக் கொடுத்து விட்டானே, எங்களுக்குப் பிள்ளை யில்லாமல் இருந்திருந்தால் கூட நன்றாயிருந்திருக்குமே என்று இவ்விதமாக தேவன்மீது குறைகூற ஆரம்பித்து விடுகின்றனர். ஆகவே தங்கள்

பிள்ளைகளை சிறுபிராயமுதல் சிட்சித்து, தண்டித்து வளர்க்காத பெற்றோர் தங்கள் பிள்ளை களைப் பகைக்கிறார்கள் என்றும், அவ்விதமான பெற்றோர் பிற்காலத்தில் தங்கள் பிள்ளைகளின்மூலம் அதிகமான வேதனையடைவார்கள் என்பதையும் நாம் தெளிவாக அறியவேண்டும். அப்படியென்றால் நமது பிள்ளைகள் பெரியவர்களாகும்பொழுது அவர்களிடம் காணப்படும் தவறான சுபாவங்களுக்கு பெரும்பாலும் பெற்றோர்களின் தவறான வளர்ப்புமுறைதான் காரணம் என்று எல்லாப் பெற்றோர்களும் அறிய வேண்டும்.

iv) ஏன் நமது பிள்ளைகளை நாம் சிட்சிக்க வேண்டும்?

"அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மை சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடக்கிறோம்" எபி.12:9.

"பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்" நீதி.29:15.

"பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும் ; அதைத் தண்டனையின் பிரம்பு அவனை விட்டு அகற்றும்" நீதி.22:15.

"உன் மகனை சிட்சை செய், அவன் உனக்கு ஆறுதல் செய்வான், உன் ஆத்துமாவுக்கு ஆனந்தத்தையும் உண்டாக்குவான்" நீதி.29:17.

"பிள்ளையை தண்டியாமல் விடாதே ; அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே" நீதி.23:13,14.

நமது பிள்ளைகளை நாம் சிட்சிக்க வேண்டும் என்பதற்கு மேற்குறிப்பிட்டுள்ள ஐந்து வசனங்களில் ஐந்து முக்கியமானக் காரியங்கள் கொடுக்கப்பட்டிருப்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் பெற்றோரின் சிட்சையின் மூலமாகத்தான் பிள்ளைகள் பெற்றோருக்கு அஞ்சி அல்லது பயந்து நடக்கிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது. பிள்ளைகளுக்கு பெற்றோரைக் குறித்த பயம் இருந்தால்தான் பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள் என்பதை எல்லாப் பெற்றோரும் அறிய வேண்டும். கீழ்ப்படியாமல் இருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு பெற்றோரைக்குறித்த பயம் இல்லாததினால்தான் என்பதை நாம் நன்கு அறிய வேண்டும்.

இரண்டாவது வசனத்தில் பிரம்பும் கடிந்து கொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால், பிள்ளைகளைப் பிரம்பினால் அடிப்பதும், அவர்களைக் கடிந்துகொள்வதும் நமது பிள்ளைகளுக்கு ஞானத்தைக் கொடுக்கும் என்று அறிகிறோம். அப்படியென்றால் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை சிட்சிப்பதின்மூலம் அவர்கள் தங்கள் பெற்றோருக்குப் பயந்து நடக்கிறவர்களாகவும், அதே நேரத்தில் தேவ ஞானத்தைப் பெற்றவர் களாகவும் காணப்படுவார்கள் என்று அறியலாம். ஞானம் என்பது கர்த்தருக்குப் பயப்படுதல் ஆகும். கர்த்தருக்குப் பயப்படுவது என்பது தீமையை வெறுத்து, அவைகளை விட்டு விலகுவது ஆகும். ஆகவே இவ்விதம் கர்த்தருக்குப்

பயப்படுதலாகிய தேவ ஞானத்தைப் பெற்ற பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையில் தீமையாகத் தோன்றுகிற எல்லாக் காரியங்களையும் வெறுத்து, அவைகளை விட்டு விலகுவார்கள் என்று அறிந்து கொள்ளலாம். அப்படியென்றால் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை சிட்சிப்பதின் மூலமாக பிள்ளைகளுக்கு தங்கள் பெற்றோரைக்குறித்து பயமும், கர்த்தருக்குப் பயப்படுதலாகிய ஞானத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள் என்று அறிய வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் மூன்றாவது வசனத்தில் பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும். அதைத் தண்டனையின் பிரம்பு அவனை விட்டு அகற்றும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால் நாம் நமது பிள்ளைகளை சிட்சிப்பதின்மூலம் அவர்கள் மதியீனமாக் காரியங்களிலிருந்து தங்களை விலக்கிக் காத்துக் கொள்ள முடியும் என்று அறியலாம். மனிதனில் காணப்படும் மதியீனமானது அவன் வழியை தாறுமாறாக்கும் என்று *நீதி.19:3*-ல் கூறப்பட்டுள்ளது. இதில் தாறுமாறாக்கும் என்பது சரியான வழியைவிட்டுத் தவறான வழியில் செல்லச் செய்துவிடும் என்பதாகும். அப்படியென்றால் பெற்றோர் பிள்ளைகளை சிட்சிப்பதின் மூலம் அவர்கள் சரியான வழியை விட்டு தவறான வழியில் செல்லச்செய்யும் வழியைத் தாறுமாறாக்கும் தன்மையுடைய மதியீனத்தை பிள்ளையின் நெஞ்சத்தைவிட்டு அகற்றுகிறது என்று அறியலாம்.

அது மட்டுமல்லாது பிள்ளைகளில் காணப்படும் மதியீனமானது *பிரசங்கி 10:1*- ல் கூறப்பட்டுள்ளதுபோல் பிள்ளையின் ஜீவியத்தைக் கெடுத்துவிடும் என்றும், பிள்ளைகளை சிட்சிப்பதின்மூலம் பிள்ளைகளில் காணப்படும் மதியீனமானக் காரியங்களிலிருந்து தங்கள் ஜீவியத்தைக் காத்துக்கொள்ளவும் உதவுகிறது என்றும் நாம் அறிய வேண்டும்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை சிட்சித்து வளர்ப்பதின்மூலம் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கும், தேவனுக்கும் பயந்து நடக்கிறவர்களாகவும், தங்கள் ஜீவியத்தைக் கெடுத்து, தவறான வழியில் செல்லச் செய்யக்கூடிய மதியீனத்தை பிள்ளைகளின் நெஞ்சிலிருந்து அகற்றுவதாகவும் இருந்து, பிள்ளைகள் நல்ல சுபாவமுள்ள பிள்ளைகளாகவும், தங்கள் ஜீவியத்தை நன்கு கற்றுக் கொண்டவர்களாகவும் இருந்து இவ்விதமாக பிள்ளைகள் தங்கள் நல்வாழ்க்கை யின் மூலம் நான்காவது வசனத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் தங்கள் பெற்றோருக்கு ஆறுதலாகவும், ஆனந்தத்தை உண்டாக்குகிறவர்களாகவும் இருப்பார்கள் என்றும், ஐந்தாவது வசனத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் பிள்ளையை சிட்சிப்பதின்மூலம் அவர்கள் ஆத்துமாவை பாதாளத்துக்கும் (நரகத்துக்கும்) விலக்கிக்காக்க முடியும் என்றும் பெற்றோர்கள் அறிய வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள காரியங்களிலிருந்து பெற்றோர் பிள்ளையை சிட்சித்து வளர்ப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று அறிந்து தங்கள் பிள்ளைகளை சிறுபிராயம் முதலே சிட்சித்து, தண்டித்து, கடிந்து கொண்டு வளர்க்க முயற்சிக்க வேண்டும். செயல்படுவோமா?

V) எவ்விதம் பிள்ளைகளை சிட்சிப்பது

"பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப் பீர்களாக" எபே.6:4.

"நம்பிக்கையிருக்குமட்டும் உன் மகனை சிட்சை செய் ;ஆனாலும் அவனைக் கொல்ல உன் ஆத்துமாவை எழும்ப ஒட்டாதே" நீதி.19:18.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் நாம் எவ்விதம் நமது பிள்ளைகளை சிட்சித்து வளர்ப்பது அல்லது தங்கள் பிள்ளைகளை சிட்சிக்கிற பெற்றோரிடம் என்ன என்னக் காரியங்கள் காணப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அவைகள்

a) பிள்ளைகளை கோபப்படுத்தக்கூடாது.

b) பிள்ளைகளை கர்த்தருக்கேற்றபடி சிட்சிக்க வேண்டும்.

c) சிட்சிக்கவும் வேண்டும். அதோடு போதிக்கவும் வேண்டும்.

d) சிட்சை பலன் செய்யவில்லையென்று சொல்லி பிள்ளையைக் கொலை செய்ய முயற்சிக்கக்கூடாது.

இவைகளைக் குறித்து சிறிது விபரமாக அறிந்துகொள்ளப் பார்ப்போம்.

a) பிள்ளையைக் கோபப்படுத்தக்கூடாது

சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை சிட்சிப்பதாக எண்ணிக்கொண்டு அவர்களை மிகவும் சாபமான, அசுத்தமான வார்த்தைகளைச் சொல்லிப் பேசுவார்கள். நீ நாசமாய்ப்போ, விளங்கவே மாட்டாய், உருப்படவே மாட்டாய் என்று இவ்விதமான வார்த்தைகளைச் சொல்லி, எப்பொழுதும் அவர்களைக் கோபப்படுத்தும் வண்ணமாக மிகவும் அவதூறாகப் பேசிக்கொண்டே யிருப்பார்கள்.பெற்றோரின் இவ்வித தவறான வார்த்தைகளினால் பிள்ளைகள் கோபப்பட்டு,பெற்றோர் சொல்வதற்கு நேர் எதிர்மாறாக செயல்பட முயற்சிப்பார்கள். ஆகவே பெற்றோர் தங்கள் பிள்ளைகள் கோபப்பட்டு எதிர்மாறாக செயல்படாதிருக்கும்படியாக தவறான வார்த்தைகளைச் சொல்லி பிள்ளைகளை அவதூறாகப் பேசாதிருக்கும்படியாக மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

b) பிள்ளைகளை கர்த்தருக்கேற்றபடி சிட்சிப்பது

பிள்ளைகளை கர்த்தருக்கேற்றபடி சிட்சிப்பது என்பது பிள்ளைகளை தேவன் விரும்புகிறவண்ணமாக சிட்சிப்பது என்பதாகும். சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் அடுத்த வீட்டுப் பிள்ளைகளை சுட்டிக்காட்டி அவர்கள் எப்படி துரிதமாக சம்பாத்தியம் பண்ணுகிறார்கள். நீ ஒன்றுமே செய்ய மாட்டேங்கிறாயே என்பார்கள். அடுத்த வீட்டுப்பையன் கள்ளச் சாராயம் வடிப்பது / விற்பது , சிட்டா வட்டிக்குப் பணம் கடனாகக் கொடுப்பது, வியாபாரத்தில் கள்ளத்தராசு, கலப்படம் போன்ற தவறான காரியங்களைச் செய்வது, கள்ளக்கடத்தல் செய்வது போன்ற தவறான காரியங்களைச் செய்து துரிதகதியில் பணம் சம்பாதிக்க

வேண்டும் என்று நமது பிள்ளைகளைத் தூண்டுவோம் என்றால் நாம் நமது பிள்ளைகளை கர்த்தருக்கேற்றபடி சிட்சிக்கிறவர்களாக செயல்படுகிறோம் என்று சொல்லமுடியாது. நாம் நமது பிள்ளைகள் செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும் உண்மையுள்ளவர்களாகவும், நேர்மையுள்ளவர்களாகவும், கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடும், தேவ நாமம் மகிமைப்படும்படியாக செயல்படச் செய்வதும் மிகவும் அவசியமாகும். ஆகவே நாம் நமது பிள்ளைகளை கர்த்தருக்கேற்றபடி சிட்சித்து வளர்க்கப் பார்க்க வேண்டுமேயொழிய உலக ஜனங்களைப்போல் வளர்க்க முயற்சிக்கக்கூடாது.

c) சிட்சிக்கவும் வேண்டும் போதிக்கவும் வேண்டும்

நமது பிள்ளைகளை நாம் சிட்சிப்பதோடு நிறுத்திவிடக்கூடாது. எது சரி, எது தவறு, சரியான வழி எது, தவறான வழி எது, எவ்விதம் செயல்பட வேண்டும் என்று அவர்களுக்கு சரியானக் காரியங்களைப் போதிக்க வேண்டும்.

d) சிட்சை பலன் செய்யவில்லையென்று சொல்லி, பிள்ளைகளை கொலை செய்ய முயற்சிக்கக்கூடாது

பிள்ளையை சிட்சிப்பதினால் பலன் இல்லை. பிள்ளை திருந்திய பாடில்லை. ஆகவே அவன் உயிரோடிருப்பதைவிட அவன் செத்து விடுவதுதான் நல்லது என்று சொல்லி அவன் சாவதை பெற்றோர் விரும்பக்கூடாது.

பிள்ளைகளை வளர்ப்பதில் நாம் முக்கியமாக அறிந்துகொள்ள வேண்டிய காரியம் யாதெனில், பிள்ளைகளை வளர்ப்பதில் தாய்க்கு முக்கிய பங்குண்டு என்பதை எல்லா தாய்மார்களும் நன்கு அறிய வேண்டும். ஏனெனில் பிள்ளைகள் பெரும்பாலும் தங்கள் தாயிடம் தான் அதிகம் பாசமுடையவர்களாயிருப்பார்கள். ஒரு தாய் ஒன்றையும் அறிந்துகொள்ள முடியாத நிர்மூடமாய் இருந்தால் அப்படிப்பட்ட தாய் வளர்க்கிற பிள்ளைகள் அவளைப்போலவே நிர்மூடமாய் இருப்பார்கள் என்பதை நாம் அறியவேண்டும்.இவ்வித நிர்மூடமான ஸ்திரீ புருஷன் பிள்ளைகளைக் கண்டித்தாலும் அவள் அதை அனுமதிக்க மாட்டாள்.

எல்லாப் பெற்றோரும் அறிந்திருக்க வேண்டிய முக்கியமானக் காரியம் யாதெனில் தகப்பன் பிள்ளைகளைத் தண்டிக்கும்பொழுது தாய் அதில் தடையாக நிற்கக்கூடாது. அதுபோல் தாய் பிள்ளைகளைக் கண்டிக்கும்பொழுது தகப்பன் அதற்குத் தடையாக நிற்கக்கூடாது. அதுபோல இரண்டு பேரும் ஒன்றாக சேர்ந்து தண்டிப்பதும் கூடாது.

ஒவ்வொரு பெற்றோரும் ஒவ்வொரு நாளும் கர்த்தாவே நீர் கொடுத்த இந்தப் பிள்ளையை உமக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்க எங்களுக்கு விசேஷித்த ஞானத்தைக் கொடுத்தருளும் என்று ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர் விசேஷித்த கவனமுடையவர்களாய் செயல்படவேண்டும்.

6. பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளைகள்

இந்தப் பகுதியில் பெற்றோர்களைக் குறித்துப் பிள்ளைகளுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் கட்டளை என்ன என்று பார்ப்போம்.

a) பெற்றோருக்குப் பயந்திருக்க வேண்டும்

“உங்களில் அவனவன் தன் தன் தாய்க்கும் தன் தன் தகப்பனுக்கும் பயந்திருக்கவும்,....” லேவி.19:3.

இந்த நாட்களில் அநேகம் பிள்ளைகள் முற்றுமாகத் தங்கள் பெற்றோர்களைக் குறித்து சிறிதளவும் பயம் இல்லாதவர்களாக இருப்பதினால் தான் அவர்கள் தங்கள் பெற்றோருக்கு கொஞ்சம் கூட கீழ்ப்படியாது தங்கள் இஷ்டம்போல் நடக்க விரும்புகிறார்கள். நமது பிள்ளைகள் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக எல்லாவித தீமையான காரியங்களையும் வெறுத்து அவைகளை விட்டு விலக வேண்டும். அதுபோலவே தங்கள் பெற்றோருக்குப் பயந்து, எல்லாக் காரியங்களிலும் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து அடங்கி நடக்க வேண்டும்.

b) பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும்

“பிள்ளைகளே, உங்களைப் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள் ; இது கர்த்தருக்குப் பிரியமானது” கொலோ.3:20, எபே.6:1.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியங்களிலும் கீழ்ப்படிய வேண்டும் என்றும், இது கர்த்தருக்குப் பிரியமானது என்றும் கூறப்பட்டுள்ளது. இதற்கு முந்திய பகுதியில் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குப் பயப்படுகிறவர்களாயிருந்து எல்லாக் காரியங்களிலும் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று பார்த்தோம். அதுபோலவே மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் பெற்றோருக்குக் கீழ்ப்படிவது கர்த்தருக்குப் பிரியமான காரியமாகும் என்று அறிகிறோம். இந்த பெற்றோருக்குப் பயப்படுவதும், கீழ்ப்படிவதும் சிறுபிராய முதலே பிள்ளைகளில் உருவாக வேண்டும்.

c) பிள்ளைகள் தங்கள் பெற்றோரை கனம் பண்ண வேண்டும்

“உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணு வாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனை” எபே.6:2,3; யாத்.20:12.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நாம் ஏன் நமது பெற்றோரை கனம் பண்ண வேண்டும் என்பதற்கு இரண்டு காரணங்கள் கூறப்பட்டுள்ளது. முதலாவது நமது வாழ்க்கையில் நமக்கு நன்மை உண்டாயிருக்கும்படியாக அல்லது நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருக்கும்படியாக நாம் நமது பெற்றோரைக் கனம் பண்ண வேண்டும். இரண்டாவதாக, இந்த பூமியிலே நமது வாழ்நாள் நீடித்திருக்கும்படியாக நாம் நமது பெற்றோரைக் கனம் பண்ண வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால் நமது பெற்றோர் நமது செயல்பாடுகளைக் கண்டு, சந்தோஷப்பட்டு, திருப்தியடைந்து, அதின்மூலம் அவர்கள் நம்மை ஆசீர்வதிக்க வேண்டும். அவர்களின் ஆசீர்வாதத்தின் மூலமாகத்தான் நாம் நமது வாழ்க்கையில் நன்மையையும், நீடித்த ஆயுளையும் பெற்றுக்கொள்ள முடியும். மாறாக, நாம் நமது பெற்றோர்களின் சாபத்தை பெறும்படியாக செயல்பட்டால்

நிச்சயமாகவே நமக்கு நம் வாழ்க்கையில் எல்லாத் தீமையானக் காரியங்களும், குறுகிய ஆயுசும்தான் நமக்குக் கிடைக்கும் பலனாக இருக்கும் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

எனது தகப்பனார் அவர்கள் தனது மரணத்திற்கு முன்பாக என்னிடம், நீ என் மரணத்திற்குப் பின் நன்றாயிருப்பாய் என்று சொன்னார்கள். அவர்களுடைய அந்த ஆசீர்வாதமான வார்த்தையினால் இன்று என் குடும்பம் ஓரளவு நல்ல நிலையில் இருக்க தேவன் கிருபை செய்துள்ளார். நான் எனது உத்யோக நாட்களில் எனது குறைந்த வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சிறிய தொகையை என் தகப்பனாரின் செலவுக்காக ஒழுங்காக அனுப்பிக் கொண்டிருந்தேன். அது என் தகப்பனாருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் ஒரு காரியமாக இருந்தது.

இந்த நாட்களில் எந்த சபையோ, விசுவாசிகளோ எனக்கு உதவி செய்யும் நிலையில் இல்லையென்றாலும் எனது கொஞ்ச ஓய்வூதிய வருமானத்தில் எனது குடும்பத்தின் தேவைகள் சந்திக்கப்படவும், அதுமட்டுமல்லாது என் தேவனுக்காக துண்டுபிரதிகள், புத்தகங்கள் அச்சிடவும் என் ஓய்வூதியம் பயன்பட என் தேவன் கிருபை செய்கிறார். ஆகவே நாம் இந்த உலகில் நன்மை பெறவும், நமது ஆயுசு நாட்கள் நீடித்திருக்கவும் நாம் நமது பெற்றோர்களின் ஆசீர்வாதத்தை பெறும் வண்ணமாக அவர்களை கனம் பண்ணவேண்டும்.

நாம் எவ்விதம் நமது பெற்றோரைக் கனம் பண்ணுவது என்று கேட்கலாம். வேத வசனம் ***"உன் பொருளாலும், உன் விளைவின் எல்லா முதற்பலனாலும் கர்த்தரை கனம் பண்ணு" நீதி.3:9***-ல் கூறப்பட்டுள்ளது. நாம் நமது பொருள் களையும், நமது வயல்களின் முதற்பலன்களையும் தேவனுக்கென்று கொடுத்து இவ்விதமாக தேவனை கனம் பண்ண வேண்டும். அதுபோலவே நாம் நமது பெற்றோர்களுக்கு எல்லாவித உதவிகளையும் செய்து நமது பொருளுதவி கள் மூலம் நமது பெற்றோருக்கு எல்லாவித உதவிகளையும் செய்து நமது பொருளுதவிகள் மூலம் நமது பெற்றோரை கனம் பண்ண வேண்டும். நமது பெற்றோர் வயதாகி, வேலை செய்ய பெலன் இல்லாமல் நமது பிள்ளைகள் நமக்கு உதவி செய்ய மாட்டார்களா? என்று அங்கலாய்க்கும் அந்த வயோதிப நாட்களில் நமது உதவியால் அவர்களை திருப்திபடுத்தி, சந்தோஷப்படச் செய்வோம் என்றால் நிச்சயமாகவே அவர்கள் தங்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நமது பிள்ளைகள் நன்றாயிருக்க வேண்டும் என்று நம்மை ஆசீர்வதிப்பார்கள். அவர்களின் அந்த ஆசீர்வாதமான வார்த்தையானது நமது வாழ்க்கையில் பெரிய மாறுதல்களை உண்டுபண்ணும். இந்தக் காரியத்தை எல்லாப் பிள்ளைகளும் தங்கள் மனதில் பதித்துக்கொள்ள வேண்டும்.

நமது பெற்றோர் பெலவீனப்பட்ட நிலையில் இருக்கும்பொழுது நாம் அவர்களை அசட்டை பண்ணக்கூடாது. நமது இவ்வித செயல் நமது பெற்றோருக்கு மிகுந்த மனவேதனையைக் கொடுக்கும். அதினால் அவர்கள் நம்மை சபிக்கும்படியான ஒரு நிலை ஏற்படலாம். ஆகவே நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

சிலர் தங்கள் பெற்றோர் உயிரோடிருக்கும்பொழுது அவர்களுக்கு ஒரு சிறிய உதவி கூட செய்யமாட்டார்கள். ஆனால் அவர்கள் பெற்றோர் மரித்தபின்

அவர்களுடைய போட்டோக்களை முக்கியமான இடத்தில் வைத்து அதற்கு மாலையிட்டு, ஊதுபத்தி முதலானவைகள் கொழுத்தி வைத்து, அந்தப் படத்திற்கு முன் சாஷ்டாங்கமாய் விழுந்து, வணங்கி இவ்வித செயல்பாடுகளினால் தங்கள் பெற்றோரை கனம் பண்ணுவதாக எண்ணுவாருமுண்டு. இவ்விதமான செயல்கள் அவர்களுக்கு எந்தவிதமான நன்மையும் கொண்டு வராது என்பதை அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள்.

நாம் நம் வாழ்க்கையில் முன்னேற்றமான நிலைக்கு வர நமது பெற்றோர் நமக்காக எவ்வளவாகத் தங்களைத் தியாகம் செய்து, தங்கள் வாழ்க்கையில் பல கஷ்டங்களை அனுபவித்து நம்மைப் பெரியவர்களாக்கியிருப்பார்கள் என்பதை நாம் எப்பொழுதும் எண்ணிப் பார்க்கவேண்டும். பிள்ளைகள் தங்கள் பெற்றோரைக் கனம் பண்ண ஒருநாளும் மறக்கக்கூடாது.

7. வாலிபம்

மனித வாழ்க்கையில் வாலிபப் பருவம் என்பது மிகவும் முக்கியமான ஒரு பருவம் ஆகும். இந்த வாலிப நாட்களில் தான் அநேகர் தங்கள் ஜீவியத்தைக் குறித்து கவனமில்லாதிருந்து தங்கள் வாலிபத்தின் பாவங்களினால் தங்கள் வாழ்க்கையைக் கெடுத்துக்கொண்டு, அவர்கள் முதிர்வயதாகும்போது தங்கள் வாலிபத்தின் பாவங்களினால் பலவித வியாதிகள் உடையவர்களாய், தங்கள் சரீரத்தில் பலவீனப்பட்டவர்களாய் ஐயோ, இப்படி ஆகிவிட்டதே என்று புலம்புகிறவர்களாய் இருக்கிறார்கள். வாலிபர்கள் தங்கள் வாலிபத்தில் தங்கள் ஜீவியத்தைக் காத்துக்கொண்டால் அவர்கள் முதிர்வயதாகும்போதும் தங்கள் வாழ்க்கையில் சந்தோஷமாக இருக்கமுடியும்.

நமது பிள்ளைகள் சிறுபிள்ளைகளாயிருக்கும்பொழுது அவர்கள் தங்கள் தேவைகளுக்கு முற்றுமாக தங்கள் பெற்றோரையே சார்ந்து இருப்பார்கள். ஆனால் பிள்ளைகளின் வயது ஆக ஆக அவர்கள் தங்கள் பெற்றோரை சார்ந்து இருப்பதை விட்டு தாங்களாகவே சுயாதீனமாக செயல்பட விரும்புகிறவர்களாக இருப்பார்கள். பெற்றோர்கள் தங்கள் செயல்பாடுகளில் இடைபடுவதை விரும்ப மாட்டார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் சிறு பிராயமுள்ளவர்களா யிருக்கும்போதே அவர்களைக் கண்டித்து வளர்க்காமல் விட்டு விட்டு, அவர்களின் வாலிப பருவத்தில் அவர்களைக் கண்டிக்க ஆரம்பித்தால் அவர்கள் மிகவும் கோபப்படுகிறவர்களாய் தங்கள் பெற்றோருக்கு எதிர்த்து நிற்கிறவர்களாக இருப்பார்கள். நமது பிள்ளைகளின் சிறுபிராய முதலே அவர்களை கர்த்தருக்கேற்றபடி சிட்சித்து ஆலோசனைகள் கொடுத்து, அவர்கள் நடக்கவேண்டிய வழியில் சரியானபடி நடத்தினால் நிச்சயமாகவே அவர்கள் தங்கள் வாலிப வயதிலும், அவர்கள் முதிர்வயதிலும் அந்த சரியான வழியில் நடக்கிறவர்களாக இருப்பார்கள்.

இளவயதும், வாலிபமும் மாயை (*பிரசங்கி 11:10*) என்று சாலமோன் ஞானி சொல்கிறார். இந்த வாலிபம் என்றும் நிலைத்திருப்பதில்லை. இது ஒரு மாயையான பருவமாகும். ஆனால் அநேகர் இந்த தங்கள் மாயையான வாலிப நாட்களில் துணிகரங்கொண்டு தங்கள் மனம்போல் ஜீவித்து துணிகரமான பாவங்களில் ஈடுபடுகிறவர்களாக இருக்கிறார்கள். கொஞ்ச நாட்களில்

அவர்களின் ஆட்டமும், ஓட்டமும் அடங்கிய நிலையில் ஐயோ என் சரீரம் மிகவும் பலஹீனமாக இருக்கிறதே, என்னால் ஒரு வேலையும் செய்யமுடியவில்லையே என்று அங்கலாய்க்க ஆரம்பிக்கின்றனர்.

தங்கள் வாலிப நாட்களில் தங்கள் வாலிப மூர்க்கத்தில் துணிகரங்கொண்டு பலவிதமான பயங்கரமான பாவ செயல்களில் ஈடுபடுகிறவர்கள் பின்னால் எப்படி தங்கள் பெலஹீனமான நிலையில் தங்களையே நொந்துகொண்டு புலம்புவார்கள் என்று கீழ்க்கண்ட வேத வசனங்கள் நன்கு தெளிவுபடுத்துகின்றன.

"முடிவிலே உன் மாம்சமும் உன் சரீரமும் உருவழியும்போது நீ துக்கித்து: ஐயோ, போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்து கொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணினதே! என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே! சபைக்குள்ளும், சங்கத்துக் குள்ளும் கொஞ்சங்குறைய எல்லாத் தீமைக்குமுள்ளானேனே! என்று முறையிடுவாய்" நீதி.5:11-14.

தங்கள் வாலிப வயதில் போதகத்தையோ, ஆலோசனையையோ, கடிந்து கொள்ளுதலையோ விரும்ப மாட்டார்கள். எனக்கு பெலன் இருக்கிறது, என்னால் எனதையும் சாதிக்க முடியும் என்பார்கள். ஆனால் தங்கள் பெலன் குன்றும்போது ஐயோ நான் ஆலோசனைக்கு, கடிந்து கொள்ளுதலுக்கு என் செவியைச் சாய்த்துக்கேட்காமற் போனேனே என்று புலம்புவார்கள். அவர்களுடைய அந்த புலம்பலினாலே எந்தவித பிரயோஜனமுமிராது. அதுமட்டுமல்லாது அவர்களின் வாலிபத்தின் பாவம் அவர்களின் மரணத்திற்குப் பின்பும் அவர்களைப் பின் தொடரும் என்பதைக் கீழ்க்கண்ட வேத வசனம் நமக்கு எச்சரிக்கிறது.

"அவன் எலும்புகள் அவனுடைய வாலவயதின் பாவங்களினால் நிறைந்திருந்து, அவனோடேகூட மண்ணிலே படுத்துக்கொள்ளும்" யோபு 20:11.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தோடு *பிரசங்கியின்* புத்தகம் 12-ம் அதிகாரத்தை நன்கு தியானித்து, அந்த அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் எச்சரிப்பின் வார்த்தைகளையும் நன்கு அறிந்து, உணர்ந்து கொள்ளப் பார்க்கவேண்டும்.

தங்கள் வாலிப வயதில் துணிந்து பாவங்களைச் செய்வார்கள் என்று சொன்னால், தங்கள் வயோதிபத்தில் மிகவும் அதிகமாக அவர்கள் வேதனைகளை அனுபவிக்க வேண்டியதிருக்கும். வாலிபர்கள் தங்கள் வாலிபத்தில் எவ்விதம் தங்கள் ஜீவியத்தைக் காத்துக்கொள்வது என்று கீழ்க்கண்ட வேத வசனம் நமக்கு தெளிவாகப் போதிக்கிறது.

"வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்வதினால்தானே" சங்.119:9.

"உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" பிரசங்கி12:1.

"இவைகள் (வேத வசனங்கள்) பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும், விவேகத்தையும் கொடுக்கும்" நீதி.1:4.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் வழி என்பது நமது ஜீவியமுறையைக் குறிப்பதாகவுள்ளது. வாலிபர்கள் தங்கள் ஜீவியத்தில் பாவம் கொஞ்சம்கூட இல்லாதபடி தங்கள் ஜீவியத்தை முற்றுமாகக் காத்துக்கொள்ள வேண்டுமாயின் வாலிபர்கள் வேத வசனங்களை அதிகம் வாசித்து, தியானம் செய்து, அதில் எவைகளைச் செய்யக்கூடாது என்று கூறுகிறதோ, அவைகளைச் செய்யாத படியும், எவைகளைச் செய் என்று கூறுகிறதோ அவைகளைச் செய்யவும், இவ்விதமாக தங்கள் ஜீவியத்தைக் காத்துக்கொள்ளப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்லாது, தங்கள் வாலிப நாட்களில் எப்பொழுதும் தங்கள் சிருஷ்டிகரான தேவனை நினைக்க வேண்டும். வாலிபர்கள் வேதத்தை அதிகம் தியானிப்பதினால் தங்கள் வாழ்க்கையின் அறிவையும், விவேகத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் வாலிபர்கள் அறிய வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள காரியங்கள் வாலிபப் பையன்களுக்குரியது. ஆகவே நாம் எப்படியும் செயல்படலாம் என்று வாலிப் பெண்கள் எண்ணக்கூடாது. மேற்கூறப்பட்டுள்ள காரியங்கள் வாலிபப் பையன்கள், வாலிபப் பெண்கள் ஆகிய இருபாலருக்கும் உரிய பொதுவான உபதேசங்கள், எச்சரிப்புகள் ஆகும். வாலிபப் பெண்பிள்ளைகள் தங்கள் ஜீவியத்தைக் குறித்து மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அவன் என்னைப் பார்த்தான், நானும் அவனைப் பார்த்தேன். அவன் கொஞ்சம் சிரித்தான், நானும் கொஞ்சம் சிரித்தேன். அவனிடம் என் கற்பைப் பறி கொடுத்தேன், அவன் ஓடிவிட்டான். நான் என் அவமானத்தைச் சுமந்து திரிகிறேன் என்று புலம்பக்கூடிய ஒரு நிலைவராதபடி ஒவ்வொரு வாலிபப் பெண்ணும் தன் ஜீவியத்தைக் குறித்து மிகவும் விழிப்போடு இருக்க வேண்டும். ஒரு சமயம் உங்கள் அவமானக் காரியங்களினால் உங்களைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கிய உங்கள் அருமையான பெற்றோர் தங்கள் உயிரை இடையிலேயே மாய்த்துக்கொள்ளக்கூடிய கொடிய நிலை வரலாம் என்று ஒவ்வொரு வாலிபப்பெண்ணும் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

8. பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஆலோசனைகள் / புத்திமதிகள்

இந்தப் பகுதியில் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தேவ ஆலோசனைகள், புத்திமதிகள் இவைகளின் வேத பகுதிகளை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். வேத புத்தகத்தின் உதவியோடு இந்த வேத வசனங்களை வாசித்து, நன்கு தியானம் செய்து, கூறப்பட்டிருக்கும் இந்த வேத வசனங்களின் ஆலோசனையின்படி தங்கள் ஜீவியத்தை பிள்ளைகள் காத்துக்கொண்டால் அவர்கள் வாழ்க்கையானது மிகவும் ஆசீர்வாதமான வாழ்க்கையாக இருக்கும் என்பதை நீங்கள் உங்கள் மனதில் பதித்துக்கொள்ளப் பார்க்கவேண்டும்.

a) நமது இருதயத்தைக் கர்த்தருக்குக் கொடுப்பது குறித்த தேவஆலோசனை
   - *நீதி.23:26*

கர்த்தரின் வார்த்தைகளை / ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வது குறித்த ஆலோசனை - *நீதி. 2:1-20 ;3:1-10 ;5:1,2,20 ;7:1-4,24 ;8:32*

கர்த்தரின் சிட்சை / தண்டனை குறித்த ஆலோசனை - *நீதி.3:11,12*

பெற்றோரின் புத்திமதிகளை / ஆலோசனைகளைக் கேட்பது குறித்த ஆலோசனை- *நீதி. 1:8,9 ;4:1,10,20 ;6:20-22*

தவறான போதனைகளைக் கேட்பது குறித்த ஆலோசனை - *நீதி.19:27*

ஞானவான் ஆவது குறித்த ஆலோசனை - *நீதி. 27:11*

தவறான மனிதர்களோடு தோழமை கொள்வது குறித்த ஆலோசனை - *நீதி.1:10-19*

அந்நியர்களுக்காக பிணைபடுவது குறித்த ஆலோசனை - *நீதி.6:1-5*

D. நமது குடும்பமும் - தேவ ஞானமும்

நமது குடும்பம் தேவ ஞானத்தைப் பெற்றிருப்பது குறித்து வேத புத்தகத்தில் ஒன்றும் கூறப்படவில்லை. ஆனால் ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள் எல்லோருமாக தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக செயல்படு கிறார்கள் என்றால் அவ்வித குடும்பத்தை தேவ ஞானத்தைப் பெற்ற குடும்பம் என்று சொல்லலாம். இன்று பெரும்பாலுமான கிறிஸ்தவ குடும்பங்கள் தேவ ஞானத்தைப் பெறாத குடும்பங்களாக, கணவன் குடும்பத்தைக் குறித்த பொறுப் பில்லாதவனாகவும், மனைவி புருஷனுக்கு அடங்காதவளாகவும், பிள்ளைகள் தெய்வபயமும், பெற்றோரைக் குறித்த பயமும் இல்லாதவர்களாகவும், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களாகவும் செயல்படுவதைக் காணும்பொழுது மிகவும் துக்கமாகவுள்ளது. கணவன், மனைவி, பிள்ளைகள் எல்லோரும் தேவ ஞானத்தைப் பெற்றவர்களாக செயல்படுகிறவர்களானால் அவ்வித குடும்பம் எவ்வளவு நன்றாக இருக்கும்.

இந்தப் பகுதியில் குடும்பங்களைக் குறித்த சில பொதுவானக் காரியங்களை அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1. தேவன் மனிதனை உண்டாக்கினதின் நோக்கமும், குடும்ப வாழ்க்கையின் முக்கியத்துவமும்

தேவன் இந்த உலகில் நாம் காண்கிறதான எல்லாவற்றையும் தமது வார்த்தையினாலே உண்டாக்கினார். இந்த உலகில் உள்ள எல்லா ஜீவராசி களையும் ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார். பெரும்பாலான இந்த ஜீவ ராசிகள் எல்லாம் தங்கள் இனப்பெருக்கத்திற்கு மட்டும் கூடுகின்றன. ஆனால் தேவன் மனுஷனை உண்டாக்குவதற்கு சிறிது பிரயாசப்பட்டார் என்று சொல்லலாம். தேவன் பூமியின் மண்ணை எடுத்து அதை ஒரு உருவமாக உண்டாக்கி அந்த உருவத்தின் நாசியில் தமது ஜீவ சுவாசத்தை ஊதி, இவ்விதமாக தேவன் மனிதனை தமது சாயலாக உண்டாக்கினார் என்றும், மனிதன் ஜீவாத்துமாவானான் என்றும் அறிகிறோம். ஆகவே மனிதன் தேவனால் விசேஷித்தப் பிரகாரமாக உண்டாக்கப்பட்டவன் என்பதை நாம் எல்லாரும் மனதில் கொள்ள வேண்டும்.

அதுபோலவே தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல அவனுக்கு ஏற்ற துணையை (Help Meet) உண்டாக்க வேண்டும் என்று எண்ணி தேவன் தாம் உண்டாக்கின மனிதனின் விலா எலும்பை எடுத்து அதினால் ஒரு ஸ்திரீயை உண்டாக்கினார். இவ்விதமாக மனிதனும், மனுஷியும் தேவனால் விசேஷித்த பிரகாரமாக உண்டாக்கப்பட்டவர்கள் என்றும், புருஷனும் மனைவியும் ஒரே சரீரத்தையுடையவர்களும் எப்பொழுதும் இணைந்து வாழ வேண்டியவர்கள் என்பதையும் நாம் அறிய வேண்டும். மற்ற ஜீவராசிகளைப் போல் வெறும் இனப்பெருக்கத்திற்காக மட்டும் கூடி வாழ்கிறவர்களாக அல்லாது ஒருவருக்கொருவர் பாதுகாப்பாகவும், உதவியாகவும், அன்பையும், சிநேகத்தையும், எல்லாவித சுக துக்கங்களையும் பகிர்ந்து கொள்வதற்காகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும் தேவன் மனிதனை எதற்காக சிருஷ்டித்தார் என்றும் கீழ்க்கண்ட வேத வசனம் மிகவும் தெளிவாகக் கூறுகிறது.

"நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து, உருவாக்கி படைத்தேன்" ஏசா.43:7.

அப்படியென்றால் மனிதன் தேவனின் மகிமைக்கென்று அல்லது தேவனை மகிமைப்படுத்துவதற்கென்று சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதை இந்த உலகின் ஜனங்கள் யாவரும் மிகவும் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும். தமிழில் ஒரு பழமொழி உண்டு."படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த பழமொழி வேற்று நாட்டு மனிதர்களால் கூறப்பட்டது அல்ல. இது நமது இந்தியத் திருநாட்டில் குறிப்பாக நமது தமிழ்நாட்டில் கூறப்படும் ஒரு பழமொழியாகும். ஆனால் நம் இந்தியத்திருநாட்டிலும், குறிப்பாக நமது தமிழ்நாட்டிலும் தங்களை சிருஷ்டித்த தேவனை விட்டுவிட்டு, தங்கள் கைகளினால் உண்டாக்கப்பட்ட கடவுளர்களை வணங்கும் காட்சியைப் பார்க்கும்பொழுது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது.

ஏன் தேவன் மனிதனையும், மனுஷியையும் விசேஷித்த பிரகாரமாக உண்டாக்கினார் என்பதற்கு கீழ்க்கண்ட வேத வசனம் பதில் கொடுக்கிறது.

"அவர் (தேவன்) ஒருவனையல்லவா படைத்தார் ? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தி யுள்ள சந்ததியைப் பெறும்படிதானே" மல்.2:15.

தேவனை மகிமைப்படுத்துவதற்காக மனிதன் தேவனால் சிருஷ்டிக்கப் பட்டவன் என்று பார்த்தோம். அதுபோலவே மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தேவன் ஒரு கூட்டம் மனிதரை சிருஷ்டியாமல், ஒரு மனிதனை சிருஷ்டித்ததின் நோக்கம், அந்த ஒரு மனிதனின் மூலமாக தெய்வபயம் உள்ள ஒரு சந்ததியை உருவாக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். ஏனெனில் தேவனுக்குப் பயப்படுகிற ஒரு சந்ததிதான் தேவனை மகிமைப்படுத்து கிறவர்களாக வாழமுடியும். ஆனால் நடந்தது என்ன? தேவனுக்குப் பயந்து ஜீவித்து, தங்கள்

வாழ்க்கையின் மூலமாக தேவனை மகிமைப்படுத்த வேண்டிய மனித சமுதாயம் தெய்வபயம் அற்றவர்களாக, தங்கள் வாழ்க்கையின் மூலமாக தேவனை மகிமைப்படுத்த வேண்டிய மனித சமுதாயம் தெய்வபயம் அற்றவர்களாக, தங்கள் வாழ்க்கையின் மூலமாக தேவனை தூஷிக்கிறவர்களாக மாறி விட்டார்கள். என்ன பரிதாபம் பாருங்கள்!

கர்த்தரின் வருகையை எதிர்நோக்கியிருக்கும் இந்தக் கடைசி நாட்களில் கிறிஸ்தவக் குடும்பங்களில் தேவனுக்குப் பயப்படுகிற பயம் அதிகம் காணப்பட வேண்டும். நமது பிள்ளைகளையும் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக வளர்க்க வேண்டும். இவ்விதமாக நமது குடும்பங்கள் தேவனுக்குப் பயப்படுகிற குடும்பங்களாக இருந்து, நமது வாழ்க்கையின் மூலமாக நமது தேவனின் பரிசுத்தமான நாமம் மகிமைப்படும்படியாக நாம் ஜீவிக்கப் பார்க்க வேண்டும். செயல்படுவோமா?

2. நமது குடும்பம் அற்புதமும் அடையாளமுமாக விளங்குவது

"இதோ நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்" ஏசா.8:18.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும், சேனைகளின் கர்த்தராலே அடையாளங்களாகவும் (For Signs), அற்புதங்களாகவும் (For wonders) இருக்கிறோம் என்பதிலிருந்து தேவ ஞானத்தைப் பெற்ற தேவ பிள்ளைகளின் குடும்பமானது மற்றவர்களுக்கு அடையாளத்துக்கும், அற்புதத்துக்கும் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நமது குடும்பத்தைப் பார்க்கிறவர்கள் ஆஹா இந்தக் கிறிஸ்தவக் குடும்பத்தைப் போல் நமது குடும்பமும் அமைந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். இந்தக் குடும்பத்தின் தலைவனாகவுள்ள கணவன் மிகவும் பொறுப்புள்ளவனாக செயல்படுகிறான். அதுபோல குடும்பத்தலைவியாகிய மனைவி தன் புருஷனுக்கு எல்லாக் காரியத்திலும் மிகவும் கீழ்ப்படிந்து நடக்கிறாள். அதுமட்டுமல்லாது தன் புருஷனுக்கு எல்லாக் காரியங்களிலும் சிறந்த ஆலோசனைக்காரியாகவும், தன் கணவனின் கடினமான சூழ்நிலைகளில் அவனுக்கு சிறந்த ஆறுதலாகவும், தன் புருஷனை எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கச் செய்கிறவர்களாகவும், கணவன் செய்யும் எல்லாக் காரியங்களிலும் அவனுக்கு சிறந்த உதவியாளராகவும் செயல்படுகிறாள். அதுபோலவேஅவள் தன் பிள்ளைகளுக்கு சிறந்த தாயாகவும், சிறந்த ஆசிரியையாகவும், வாழ்க்கையின் சிறந்த வழிகாட்டியாகவும் செயல்படுகிறாள்.

அதுபோலவே அந்தக் குடும்பத்தின் பிள்ளைகளும், தங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியங்களிலும் கீழ்ப்படிந்து, அடங்கி நடக்கிறவர்களாகவும், நல்லொழுக்கம் உடையவர்களாகவும், மிகவும் சிறந்த பிள்ளைகள் என்று சமுதாயத்தில் சாட்சி பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்தக் குடும்பம் மிகவும் சிறப்பான குடும்பமாக, சமுதாயத்தில் மற்ற குடும்பங்களுக்கு ஒரு அடையாளமான குடும்பமாகவும், செயல்பாடுகளில் ஒரு அற்புதமான குடும்பமாகவும் இருக்கிறார்கள் என்றால் அந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் நமது குடும்பத்தைப் பற்றிச் சொன்னால் அது எவ்வளவு சிறப்பாக இருக்கும்.

அதுபோலவே மற்றவர்கள் நமது குடும்பத்தைப் பார்த்து இவர்கள் குடும்பம் ஒரு அற்புதமான குடும்பம். எவ்வளவு கஷ்டங்கள், நெருக்கடிகள், குறைபாடுகள் வந்தாலும் அவர்கள் மனங்கலங்காமலும் எப்பொழுதும் சந்தோஷமாகவே இருக்கிறார்கள். எல்லாவித சூழ்நிலைகளிலும் அவர்கள் தேவனைத் துதித்துக் கொண்டிருக்கிறார்கள். நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீர சத்தம் உண்டு. (*சங்.118:15*) என்ற வசனத்தின்படி இவர்கள் வீட்டில் எப்பொழுதும் துதி ஸ்தோத்திரங்கள் ஏறெடுக்கப்படுகின்றன. இதுவல்லவா ஒரு அற்புதமான குடும்பம். இதுவல்லவா ஒரு உண்மையான கிறிஸ்தவக் குடும்பம் என்று நமது குடும்பத்தைப் பற்றிச் சொல்வார்கள் என்றால் அது எவ்வளவு நன்றாக இருக்கும்.

ஆனால் இன்று அநேகக் கிறிஸ்தவக் குடும்பங்களில் கணவன் தன் குடும்பத்தை எவ்விதம் நடத்தவேண்டும் என்று அறியாதவனாகவும், மனைவி எதையும் அறிந்துகொள்ள முடியாத நிர்மூடமாகவும், தன் புருஷனுக்குக் கீழ்ப்படியாத, அடங்காதவளாகவும் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப் படியாதவர்களாகவும், சமுதாயத்தில் கொடிய துன்மார்க்கப்பிள்ளைகள் என்று பெயரெடுக்கிறவர்களாகவும் இருந்தால் அது எவ்வளவு சாபமானக் காரியமாக இருக்கும் என்று கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். இன்று பெரும்பாலுமான விசுவாசிகளின் குடும்பங்கள் இவ்விதம்தானே செயல்படுகிறது. என்ன பரிதாபம் பாருங்கள்!

நாமும் ஏசாயா தீர்க்கதரிசியைப்போல் நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும், அற்புதங்களாகவும் இருக்கிறோம் என்று சொல்லக்கூடியவர்களாக நமது குடும்பம் சிறப்பாக அமையுமானால் எவ்வளவு ஆசீர்வாதமாக இருக்கும். இவ்விதமாக நமது விசுவாச சகோதரர்களின் குடும்பங்கள் அமையும்படியாக நாம் பிரயாசப்படுவோமா? தேவன் தாமே உதவி செய்வாராக!

3. நமது குடும்பமும் - ஒரு மனதின் ஆவியும்

"இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ?" ஆமோஸ் 3:3.

"அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப் பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்" மத்.18:19.

இந்த நாட்களில் நமது குடும்பங்களில் ஒரு மனதின் ஆவிய காணப்படுவது எவ்வளவு முக்கியமானது என்பதை அநேகர் அறியாதிருக்கிறார்கள். மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோவார்களோ என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து நாம் அறிவது யாதெனில் நமது குடும்பத்தில் புருஷன்,மனைவி ஆகிய இருவரும் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து செயல்பட முடியாது என்பதாகும்.

அதுபோலவே இரண்டாவதாக கூறப்பட்டிருக்கும் வசனத்திலும் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்த ஒரு காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்தில் இருக்கிற பிதாவினால் அது அவர்களுக்கு அருள்செய்யப்படும். அதுபோலவே புருஷன்,மனைவி ஒரு மனதோடு ஜெபம் செய்தால்தான் அவர்கள் ஜெபம் கேட்கப்பட்டு, அவர்கள் வேண்டிக்கொள்ளும் காரியம் அவர்களுக்கு அருள்செய்யப்படும் என்பதை ஒவ்வொரு புருஷனும் மனைவியும் நன்கு அறியவேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் இருந்து நாம் அறிவது யாதெனில் நமது குடும்பங்களில் எல்லாரும் ஒருமித்து செயல்படவேண்டும் என்றாலும் அல்லது நமது ஜெபம் கேட்கப்பட வேண்டும் என்றாலும் நமது குடும்பங்களில் ஒரு மனதின் ஆவி காணப்படவேண்டியது மிகவும் அவசியம் என்று எல்லாரும் அறிய வேண்டும். இன்று பெரும்பாலான தேவ ஜனங்களின் வீடுகளில் தேவ ஆசீர்வாதம் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் அவர்கள் வீடுகளில் ஒரு மனதின் ஆவி இல்லாததுதான் என்பதை அநேகர் அறியாதிருக்கிறார்கள்.

தமிழில் ஒரு பழமொழி உண்டு. வீடு இரண்டுபட்டால் கூத்தாடிக்கு தொக்கு என்று சொல்லப்படுவதுண்டு. நமது குடும்பமாகிய வீடு இரண்டுபட்ட நிலையில் புருஷன் ஒரு பக்கம், மனைவி இன்னொரு பக்கம் என்றிருந்தால், கூத்தாடியாகிய பிசாசு வெகு எளிதாக நமது குடும்பங்களில் உட்புகுந்து எல்லாவித குழப்பங்களையும், வேதனைகளையும் உண்டுபண்ணி விடுவான். இன்று அநேக வீடுகளில் வியாதியும், வறுமையும், பிள்ளைகளின் கீழ்ப்படியாத நிலையும் இவ்வித எல்லாக் குழப்பமான நிலைக்கும் நமது குடும்பங்களில் ஒரு மனதின் ஆவி இல்லாததுதான் காரணம் என்பதை இன்று அநேகர் அறிந்து கொள்வதில்லை.

புருஷன் மனைவியை கடினமாக நடத்துவ்து, மனைவி புருஷனை அடக்கி அரசாட்சி செய்யவேண்டும் என்று எண்ணுவது போன்ற காரியங்கள் நமது குடும்பங்களில காணப்படும் என்றால், அவ்விதமானக் குடும்பங்களில் ஒரு மனதின் ஆவி நிச்சயமாய்க் காணப்படமுடியாது என்றும், அவ்விதக் குடும்பங்களில் பிசாசு எல்லாவிதக் குழப்பங்களையும், வேதனைகளையும் உண்டுபண்ணிக் கொண்டிருப்பான் என்பதையும் நாம் நன்கு அறிய வேண்டும்.

சமீபத்தில் ஒருநாள் என் மனைவி என்னிடம் நீங்கள் ஊழியக்காரியங்களில் வாஞ்சையுடன் செயல்படுகிறீர்கள். நான் அதற்கு எதிர்மாறாக செயல்படுகிறேன். நாம் இவ்விதம் செயல்படுவதினால்தான் நம் குடும்பம் இவ்வளவாவது நன்றாக

இருக்கிறது என்றாள். நான் ஒன்றும் சொல்லவில்லை. ஏனெனில் என் மனைவியின் செயல்பாடுகள் எனக்கு நன்கு தெரிந்ததினால் நான் ஒன்றும் சொல்லவில்லை. நாங்கள் ஒரு மனதின் ஆவியுடையவர்களாய் செயல்பட முடியாததினால் எங்கள் குடும்பத்தில் பலவிதங்களில் நஷ்டங்கள் ஏற்பட்டது. ஆனால் மிக முக்கியமான நஷ்டம் யாதெனில் எங்கள் பிள்ளைகளை சத்தியத்துக்குள் நடத்த முடியவில்லை. ஊழியத்திலும் ஆசீர்வாதம் இல்லை.

நமது குடும்பங்களில் ஒரு மனதின் ஆவி காணப்படவில்லையென்றால் நாம் தேவனிடம் இருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்கு அறிய வேண்டும். புருஷனும் மனைவியும் எதிர்மாறாக செயல்பட முயற்சிக்கக்கூடாது. நமது குடும்பங்களில் எப்பொழுதும் ஒரு மனதின் ஆவி காணப்படும்படியாக நமது குடும்ப ஜெபங்களிலும் தனிப்பட்ட ஜெபங்களிலும் நாம் ஒவ்வொருவரும் ஊக்கமாக ஜெபிக்க வேண்டும்.

4. நமது குடும்பமும் கர்த்தரை சேவிப்பதும்

"நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்" யோசு.24:15.

கர்த்தரை சேவிப்பது என்றால் கர்த்தரை ஆராதிப்பது, கர்த்தரைத் தொழுவது, கர்த்தரை பின்பற்றுவது, கர்த்தருக்கு ஊழியம் செய்வது போன்று பொருள்படும். மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கர்த்தரின் ஊழியக்காரனாகிய யோசுவா அன்றைய இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து நீங்கள் யாரை சேவிக்க விரும்புகிறீர்கள் ? நதிக்கு அப்புறத்திலே உங்கள் பிதாக்கள் ஆராதித்து வந்த விக்கிரகங்களை சேவிப்பீர்களோ? அல்லது நதிக்கு இப்புறத்திலே இந்த தேசத்து ஜனங்களாகிய எமோரியரின் தேவர்களை சேவிப்பீர்களோ? நீங்கள் யாரை சேவித்தாலும் சரி, நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்று கூறிய கர்த்தரின் தாசனாகிய யோசுவாவைப்போல நாமும் கர்த்தருக்காக வைராக்கியமுடையவர்களாய் நாங்களும் கர்த்தரை மட்டும் சேவிப்போம். வேறே தேவர்களை சேவிக்க மாட்டோம் என்று சொல்லவேண்டும். நாம் கர்த்தரை சேவிக்க வேண்டும் என்றால் நமக்கு எது அவசியம்? நாம் எவ்விதம் கர்த்தரை சேவிப்பது? என்றும் கர்த்தரை சேவித்தால் கிடைக்கும் ஆசீர்வாதம் என்ன என்றும் இந்தப் பகுதியில் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

a) கர்த்தரை சேவிக்க நமக்கு எது அவசியம்?

நாம் கர்த்தரை சேவிக்க வேண்டும் என்றால் கீழ்க்கண்ட காரியங்கள் நமக்கு மிகவும் அவசியம் என்று அறிய வேண்டும்.

i) கர்த்தரை சேவிக்க கர்த்தருக்குப் பயப்படும் பயம் நமக்கு அவசியம்

"நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமும் உண்மையுமாய் சேவித்து....."யோசு.24:14 ; உபா.10:12,20 ; I சாமு.12:24.

ii) கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்

"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் உங்கள் முழு

இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து, அவரைச் சேவிக்கும்படி, நான் இன்று உங்களுக்குக் கற்பிக்கிற என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால்....." உபா.11:13.

iii) **கர்த்தரை சேவிக்க அந்நிய தேவர்களை நம்மைவிட்டு அகற்ற வேண்டும்**

"உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும் எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு, கர்த்தரைச் சேவியுங்கள்"யோசு.24:14.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து நாம் அறிவது யாதெனில் நாம் கர்த்தரை சேவிக்க வேண்டும் என்றால் நம்மில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் அவசியம் இருக்க வேண்டும். அதோடு கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதும், அந்நிய தேவர்களை நம்மைவிட்டு அகற்றுவதும் மிகவும் அவசியம் என்று நாம் அறிய வேண்டும். இன்று பெரும்பாலுமான தேவ ஜனங்களிடம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாததினால்தான் எல்லாவித தீமையான காரியங்களையும் துணிந்து செய்கின்றனர். கர்த்தரின் கற்பனை களுக்குக் கீழ்ப்படிய மனமற்றவர்களாயிருக்கிறார்கள். அதுபோலவே தேவனை சேவிக்கிற பெரும்பாலுமான தேவ ஜனங்களிடம் அந்நிய தெய்வங்களாகிய விக்கிரகங்கள் காணப்படவில்லை யென்றாலும், பொருளாசையாகிய விக்கிரகமும் *(எபே.5:3)* புசிப்பது, குடிப்பது, கேளிக்கை ஆகிய உல்லாச வாழ்க்கையாகிய விக்கிரகமும் *(I கொரி.10:7)* அதிகமாய்க் காணப்படுவதை நாம் காணலாம். ஆகவே எல்லா தேவ ஜனங்களும் தங்களில் காணப்படும் எல்லாவித விக்கிரகமான காரியங்களையும் மற்றும் எல்லாவித தீமையான காரியங்களையும் விட்டு விட்டு முற்றுமாக கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களாக கர்த்தரை மட்டும் சேவிக்க வேண்டும். செய்வோமா?

b) **கர்த்தரை எவ்விதம் சேவிப்பது?**

கர்த்தரை எவ்விதம் சேவிக்கவேண்டும் என்று கீழ்க்கண்ட வசனங்கள் மூலம் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

i) **முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் அன்பு கூர்ந்து அவரை சேவிக்க வேண்டும்**

"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து, அவரைச் சேவிக்கும்படி, ..உபா.11:13 ;10:12,20 ; யோசு.22:5.

ii) **மன மகிழ்ச்சியோடும் களிப்போடும் தேவனை சேவிக்க வேண்டும்**

"சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நீ மனமகிழ்ச்சியோடும் களிப் போடும் உன் தேவனாகிய கர்த்தரை சேவியாமற் போனதினிமித்தம்...." உபா.28:47.

iii) உண்மையாய் அவரை சேவிக்க வேண்டும்

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து நாம் அறிவது யாதெனில் நாம் தேவனை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து அவரை சேவிக்க வேண்டும் என்பதிலிருந்து நாம் தேவனை அரைகுறையான மனதோடு சேவிக்கிறவர்களாக அல்லாது முழுவதுமாக அவரிடம் அன்புகூர்ந்து அவரை சேவிக்க வேண்டும். அன்பு என்று சொன்னாலே அது தியாகத்தைக் குறிக்கும் ஒரு வார்த்தையாகும். ஆண்டவராகிய இயேசு நம்மையே தியாகம் செய்து நம்மிடம் அன்புகூர்ந்ததினாலே, அவர் தமது சொந்த இரத்தத்தையே சிலுவையில் சிந்தி நமக்காக சிலுவையில் மரித்தார் என்று அறிகிறோம். அதுபோலவே அவரை சேவிக்க விரும்பும் யாவரும் தங்கள் செல்வத்தை, உத்யோகத்தை, தொழிலை, குடும்பத்தை மற்றும் எல்லாவற்றையும் தியாகம் செய்து அவரை சேவிக்க வேண்டும்.

அதுபோலவே மனமகிழ்ச்சியோடும், களிப்போடும் தேவனை சேவிக்க வேண்டும் என்பது ஏதோ சிலருடைய நிர்ப்பந்தத்திற்காகவோ அல்லது ஏதாவதொரு கட்டயாத்திற்காகவோ தேவனை சேவிக்க வேண்டும் என்று எண்ணாது மனப்பூர்வமாக நாம் தேவனை சேவிக்க எண்ணும் பொழுதுதான் நாம் மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் தேவனை சேவிக்கமுடியும் என்பதை நாம் அறிய வேண்டும்.

அதுபோலவே உண்மையாய் அவரை சேவிக்க வேண்டும் என்பதும், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனா யிருக்கிறான் (*யோவா.7:18*) என்ற வசனத்தின்படி, தனது சுயலாபத்திற்காக தேவனை சேவியாது தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு தேவனை சேவிக்க வேண்டும் என்பதாகும். இன்று பெரும் பாலோனோர் தேவனை சேவிப்பது தங்கள் சுயலாபத்திற்காகத்தான் ஒழிய தேவனை மகிமைப்படுத்துவதற்காக அல்ல என்பதையும் நாம் அறிய வேண்டும்.

C) கர்த்தரை சேவித்தால் கிடைக்கும் ஆசீர்வாதம்

"நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்திரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்கள்....." கொலோ.3:23.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் சுதந்திரமாகிய பலன் என்பது மோட்சத்தைக் குறிக்கும் வார்த்தையாகும். நாம் தேவனை முழு இருதயத்தோடும், முழு மனதோடும், மன மகிழ்ச்சியோடும், களிப்போடும், உண்மையோடும் சேவிப்போம் என்றால் நிச்சயமாகவே நாம் சுதந்திரமாகிய பலனை (மோட்ச பாக்கியத்தை) பெற்றுக்கொள்ள முடியும். உலக ஆதாயத்தையோ, உலக மகிமை யையோ தேடாதபடி உண்மையாக தேவனை சேவிக்க முயற்சி செய்வோம். குடும்பமாக கர்த்தரை சேவிப்பது ஒரு பாக்கியமான காரியமாகும். நாம் குடும்பமாக கர்த்தரை சேவிக்க முயற்சி செய்வோம். தேவன் கிருபை செய்வாராக!

5. திருமணம்

நமது குடும்பங்களில் நடக்கும் முக்கியமானக் காரியங்களில் திருமணக் காரியமும் ஒன்றாகும். அதுபோலவே நமது ஆவிக்குரிய வாழ்க்கையை அதிகமாகப் பாதிக்கும் காரியங்களில் இந்தத் திருமணக் காரியமும் ஒன்றாகும்.

ஆகவே இந்தத் திருமணம் குறித்து நாம் கொஞ்சம் தெளிவாக அறிந்துகொள்ளப் பார்ப்போம். திருமணம் என்றாலே நமது நினைவிற்கு வருவது வரதட்சணை தான். அநேக ஊழியர்கள் வரதட்சணை கொடுப்பது, வாங்குவது கொடிய பாவம் என்று கூறுவதுண்டு. நம்மில் பெரும்பாலானோர் வரதட்சணை குறித்த தேவ காரியங்களை சரியாக அறியாததினால்தான் இந்தத் தவறுகளைச் செய்கிறோம் என்று நாம் அறியவேண்டும். ஆகவே திருமணம் குறித்த சில காரியங்களை அறிந்துகொள்ளப் பார்ப்போம்.

ஆதியிலே தேவன் மனிதனை சிருஷ்டித்த நாளிலே முதலாவது தேவன் ஆதாமை உண்டாக்கினார். பின் மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று கண்ட தேவன் அவனுக்கு ஏற்ற துணையை (Help Meet) அவன் சரீரத்திலிருந்து எடுத்த ஒரு விலா எலும்பினால் உண்டாக்கினார். இவ்விதமாக ஆதாம் என்ற மனிதனுக்கு அவன் விலா எலும்பினாலே ஏவாள் என்ற மனுஷியை உண்டுபண்ணினார் என்று காண்கிறாம்.

தேவன் அநேகம் பெண்களை உண்டாக்கி வைத்துக்கொண்டு ஆதாமிடம் உனக்கு விருப்பமான பெண்ணை தெரிந்துகொள் என்று கூறவில்லை. மாறாக ஆதாமுக்கென்று ஒரே ஒரு பெண்ணை உண்டாக்கி அவளை ஆதாமிடம் ஏற்ற துணையாகக் (மனைவியாக) கொடுத்தார். அதுபோலவே இந்த உலகில் உள்ள எல்லா மனிதனுக்கும் தனிப்பட்ட முறையில் அவனுக்கென்று ஒரு பெண்ணை தேவன் உண்டாக்கி வைத்துள்ளார் என்பதை நாம் அறிய வேண்டும்.

தனக்கென்று தேவன் உண்டாக்கி வைத்திருக்கும் அந்த ஒரு பெண் யார் என்று அறிந்து கொண்டு அந்த ஒரு பெண்ணையே வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு சமயம் தனக்கென்று தேவன் ஏற்படுத்தி வைத்திருக்கும் பெண்ணின் வீட்டாரினால் மாப்பிள்ளை வீட்டார் விரும்பும் அளவுக்கு வரதட்சணை கொடுக்க முடியாமலிருக்கலாம். ஒரு சமயம் மாப் பிள்ளை வீட்டார் வரதட்சணைக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்றால் அந்த வரதட்சணை பிரச்சினையால் தேவ சித்தப்படி திருமணத்தில் இணைய வேண்டிய மாப்பிள்ளையும் பெண்ணும் இணையமுடியாதபடி ஆகி, தேவ சித்தத்துக்கு மாறான ஒரு பெண்ணும் மாப்பிள்ளையும் திருமணத்தில் இணையும்படியான நிலை ஏற்படும். அப்படியென்றால் அவ்விதம் தேவ சித்தத்துக்கு மாறாக இணைகின்ற குடும்பம் பலவிதமான பிரச்சினைகளோடு உள்ள ஒரு குடும்பமாகவே இருக்கும் என்பதை நாம் அறியவேண்டும். ஆபிரகாம் தனது குமாரனாகிய ஈசாக்குக்கு எவ்விதம் பெண் பார்த்தார் என்பது குறித்து நாம் அறிந்து அவ்விதமாக செயல்படுவது நமக்கு நன்மையாக இருக்கும்.

a) ஆபிரகாம் சொந்த இனத்தில் பெண் பார்த்தது

"நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண் கொள்வேன்...." ஆதி.24:4.

சிலர் ஆபிரகாம் சொந்த இனத்தில் பெண் பார்த்தான். ஆகவே நாமும் நமது சொந்த இனத்தில் இருந்து தான் மாப்பிள்ளையையோ, பெண்ணோ பார்க்கவேண்டும் என்று கூறுவதுண்டு. ஆனால் தேவ ஜனங்களாகிய நாம் எல்லாரும் தேவனுக்கு சொந்த ஜனங்களாகவும் கிறிஸ்துவுக்குள் நாம்

எல்லோரும் ஒன்றாக இருக்கிறோம் என்றும் *உபா.26:18, தீத்து 2:14, I பேதுரு 2:9, கலா.3:28* முதலிய வசனங்களில் கூறப்பட்டுள்ளது.

அப்படியென்றால் நம்மில் ஜாதி வேறுபாடுகள் சிறிதளவும் காணப்படக் கூடாது என்பதை நாம் அறிய வேண்டும். இன்னொரு சமுதாயத்தை சேர்ந்த மணமகனோ, மணமகளோ விசுவாசிகளாயிருந்து அவர்களோடு நாம் திருமணத்தின்மூலம் ஐக்கியம் கொள்வது தேவசித்தம் என்றால் அவ்விதம் செய்துகொள்ள நாம் தயங்கக்கூடாது.

இதில் நாம் அறிந்துகொள்ள வேண்டிய மிக முக்கியமான காரியம் யாதெனில் பணத்துக்காகவோ அல்லது உறவுமுறை என்று சொல்லியோ திருமணத்தில் விசுவாசியுடன் அவிசுவாசியை இணைக்கக்கூடாது. இவ்விதக் காரியம் பின்னர் அவர்கள் வாழ்க்கையில் பல கசப்பான அனுபவங்களைக் கொணடுவரும் என்பதை நாம் அறிய வேண்டும்.

b) ஆபிரகாமின் நம்பிக்கை

"என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண்டு வரும்படி தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார்" ஆதி.24:7.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தேவன் என் குமாரனுக்கு ஒரு பெண்ணை என் சொந்த ஜனங்களிடமிருந்து கொண்டு வரும்படி தமது தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார் என்று கூறப்பட்டுள்ளது. இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தூதன் என்ற வார்த்தை நமது ஆண்டவராகிய இயேசுவைக் குறிக்கும் வார்த்தை என்பதை நாம் அறிய வேண்டும். பழைய ஏற்பாட்டில் பல பகுதிகளில் ஆண்டவராகிய இயேசுவிற்கு தூதன் என்ற பெயர் கொடுக்கப் பட்டிருப்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். அப்படியென்றால் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் தனது மகனுக்கு ஏற்ற துணையை தன் சொந்த ஜனங்களிடமிருந்து தெரிந்தெடுத்து இந்த இடம் வரை கொண்டுவரும்படியாக தேவன் தமது தூதனாகிய இயேசுவை அனுப்புவார் என்று உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தான். நமது நம்பிக்கை என்ன?

c) ஆபிரகாமின் வேலைக்காரனின் ஜெபம்

"என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவு செய்தருளும்" ஆதி.24:12.

ஆபிரகாமின் வேலைக்காரன் தன் எஜமானாகிய ஆபிரகாம் கூறியபடியே ஆபிரகாமின் இனஜன பந்துக்கள் தங்கியிருக்கும் ஊருக்கு வந்துவிட்டான். இப்பொழுது அந்தக் குறிப்பிட்ட ஊருக்கு வெளியேயுள்ள துரவண்டையில் நின்று கொண்டிருக்கிறான். இதற்குமேல் அவனால் ஒன்றும் செய்யமுடியாது. எங்கு செல்வது, யாரிடம் கேட்பது என்பது அவனுக்குத் தெரியாது. சுமார் அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இங்கு குடியிருந்த ஆபிரகாம் பற்றி அநேகருக்குத் தெரியாதிருக்கலாம். ஆகவே ஆபிரகாமின் வேலைக்காரன் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி, தேவனே என் காரியத்தை வாய்க்கச் செய்து என் எஜமானுக்குத் தயவு செய்யும் என்கிறான். இன்றைய நாட்களில் நாம் என்ன

செய்கிறோம். தேவ ஆலோசனையைக் கேட்பதற்குப் பதிலாக, நமது ஆலோசனையின்படி எல்லாவற்றையும் செய்துவிட்டு இறுதியில் இந்தக் காரியத்தை ஆசீர்வதியும் என்று சடங்காச்சாரமான ஜெபத்தை ஏறெடுக்கிறோம். அதினால் பயன் இல்லாமல் போய்விடுவதை நாம் உணர்வதில்லை.

d) ஆபிரகாமின் வேலைக்காரன் முயற்சித்த விதம்

"நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்கவேண்டும் என்று நான் சொல்லும் போது: குடி என்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எஜமானுக்கு அனுக்கிரகம் செய்தருளும் என்று...." ஆதி.24:14.

ஆபிரகாமின் வேலைக்காரன் தன் எஜமானின் மகனுக்கு சரியான மனைவியை தேவனே தெரிந்தெடுத்துக் கொடுக்க வேண்டும் என்று ஒரு பொருத்தனையாக தேவனிடம் ஜெபிக்கிறான். அந்தப் பொருத்தனையில் அவன் எதிர்பார்த்த காரியம் தன் எஜமானின் மகனுக்கு மனைவியாக வரும் பெண் ஒரு சேவை செய்யும் அல்லது உதவி செய்யும் மனப்பான்மையுடையவளாக இருக்கவேண்டும் என்று விரும்பினான்.

இன்று நாம் எதை விரும்புகிறோம்? பெண் அழகாக இருக்கவேண்டும். அதிகம் வரதட்சணை கொண்டு வரவேண்டும் என்றுதானே எதிர்பார்க்கிறோம். இவ்வித பெண்களிடம் சேவை செய்யும் அல்லது உதவி செய்யும் மனப்பான்மை இல்லாமல் போய்விடுகிறதே. தானும் தன் புருஷனும், பிள்ளைகளும் வாழவேண்டும். மற்றபடி தன் குடும்பத்தில் உள்ள மாமன், மாமியார் அனைவரும் நாசமாய்ப் போகவேண்டும் என்றல்லவா எண்ணுகின்றனர். இவ்வித பெண்களிடம் எப்படி சேவை செய்யும் அல்லது உதவி செய்யும் மனப்பான்மை இருக்கும். இவ்வித தவறான சுபாவமுடைய பெண்கள் நம்முடைய குடும்பங்களில் வருவதற்கு பெற்றோர்களிடம் தவறான எதிர்பார்ப்புகளோடு செயல்படுவதுதான் காரணம் என்று நாம் எப்போதாவது சிந்திக்கிறோமா?

e) வரதட்சணை கொடுப்பது

"அந்த மனிதன் அரைச்சேக்கல் எடையுள்ள பொற்காதணியையும், அவள் கைகளுக்குப் பத்துச்சேக்கல் எடைப்பொன்னுள்ள இரண்டு கடகங் களையும் எடுத்துக்கொடுத்து,....." ஆதி.24:22.

"பின்பு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடைமைகளையும், பொன்னு டைமைகளையும், வஸ்திரங்களையும் எடுத்து, ரெபேக்காளுக்குக் கொடுத் ததுமன்றி, அவளுடைய சகோதரனுக்கும் தாய்க்கும் சில உச்சிதங்களையும் கொடுத்தான்" ஆதி.24:53.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் ஆபிரகாமின் வேலைக்காரன் பெண் வீட்டாருக்குத்தான் நகைகளை பரிசாகக் கொடுத்தானேயொழிய அவர்களிடம் இருந்து அவன் ஒன்றும் வாங்கவில்லை என்பதை நாம் அறியவேண்டும். வரதட்சணைக்கு முக்கியத்துவம் கொடுப்பது மிகவும் ஆபத்தானது என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிய வேண்டும்.

f) தேவனுக்கு நன்றி சொல்வது

"ஆபிரகாமின் ஊழியக்காரன் அவர்கள் வார்த்தைகளைக் கேட்ட போது, தரைமட்டும் குனிந்து, கர்த்தரைப் பணிந்து கொண்டான்" ஆதி.24:52.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஆபிரகாமின் ஊழியக்காரன் கர்த்தரைப் பணிந்து கொண்டான் என்பது தேவனுக்கு நன்றி சொல்லும் வண்ணமாக தேவனை ஸ்தோத்தரித்தான் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். தேவன் தனது பிரயாணத்தை வாய்க்கச் செய்து, தன் எஜமானின் வீட்டாரிடத்துக்கு அழைத்துக்கொண்டு வந்து, அந்தக் குடும்பத்தில் இருந்தே தன் எஜமானின் மகனுக்கு பெண் எடுப்பதற்கான எல்லாக் காரியங்களையும் தேவனே நடத்திக் கொடுத்ததற்காக தேவனுக்கு நன்றி சொல்லும் வண்ணமாக தேவனைப் பணிந்து கொண்டான் என்று அறிகிறோம்.

இந்த நாட்களில் அநேகர் தங்களுக்கு நன்மை செய்யும்பொழுது, அவர் செய்த நன்மைகளை மறந்து விடுகின்றனர். நாம் ஒரு நாளும் தேவனை மறக்காதபடி எப்பொழுதும் அவருக்கு நன்றி சொல்லும் வண்ணமாக அவரை ஸ்தோத்தரிக்கக் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம் என்பதை மறக்கக்கூடாது.

6. புருஷன் மனைவி சண்டை

"மனைவியின் சண்டைகள் ஓயாத ஒழுக்கு" நீதி.19:13, நீதி.27:15.

"சண்டைக்காரியோடே ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைப் பார்க்கிலும், வீட்டின்மேல் ஒரு மூலையில் தங்கியிருப்பதே நலம்" நீதி.21:9 ;25:24.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து நாம் எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய காரியம் யாதெனில் புருஷன் மனைவி சண்டைக்கு பெரும்பாலும் ஸ்திரீகளே காரணம் என்று அறிந்து கொள்ளலாம். பெரும்பாலும் ஸ்திரீகள் தங்கள் புருஷரை அடக்கவும், தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தவும் முயற்சிப்பதாலேயே புருஷன் மனைவி சண்டை வருகிறது என்பதை நாம் உணர வேண்டும். எவ்விதம் ஒரு வீடு மழைக்காலத்தில் தொடர்ந்து ஒழுகும் என்றால், அந்த வீட்டில் இருப்பவர்களுக்கு எவ்விதம் கஷ்டமாக இருக்குமோ அதுபோலவே மனைவியின் சண்டையும் அதிகம் வேதனையைக் கொடுக்கும். அதுபோலவே புருஷன் மனைவியின் சண்டையானது பிள்ளைகளின் வாழ்க்கையை அதிகம் பாதிக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

புருஷன் குடும்பத்தின் எல்லாக் காரியங்களையும் ஞானமாகவும், பொறுப்புடனும் செயல்படுகிறவனாகவும் மனைவி தன் புருஷனுக்கு எல்லாக் காரியங்களிலும் கீழ்ப்படிந்து அடங்கி நடக்கிறவர்களாகவும் இருந்து, இருவரும் எல்லாக் கரியங்களிலும் இணைந்து ஒரு மனதோடு செயல்படுகிறவர்களாக இருந்தால் ஒரு நாளும் குடும்பச்சண்டை இருக்காது.

7. குடும்ப ஜெபம்

நமது குடும்பங்களில் குடும்ப ஜெபம் நடத்துவது மிகவும் முக்கியமான ஒரு காரியமாகும், குடும்ப ஜெபம் இல்லாத ஒரு வீடு கூரையில்லாத வீடு என்று

சொல்வார்கள். ஜெபம் செய்வதை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம். a) சபையாக அல்லது அநேகராக கூடி ஜெபிப்பது b) குடும்பமாக அல்லது ஒரு சிலராக கூடி ஜெபிப்பது c) தனித்து ஜெபம் செய்வது

நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் மேற்கூறப்பட்டுள்ள மூன்றுவித ஜெபங்களும் அவசியம் என்றாலும், தனிஜெபம் மிகவும் முக்கியமானது என்று எல்லாரும் அறியவேண்டும். நமது ஆண்டவராகிய இயேசுவும் தமது ஊழியகாலத்தில் தனித்து ஜெபித்தே வெற்றிகண்டார் என்பதை நாம் அறியவேண்டும். ஜெபத்தின் மூலம் நாம் தேவனோடுள்ள ஐக்கியத்தைப் புதுப்பித்துக்கொள்ள முடிகிறது. அதுபோலவே நாம் குடும்பமாக ஜெபிப்பதின்மூலம் நமது குடும்பம் தேவனோடுள்ள ஐக்கியத்தைக் காத்துக்கொள்ள முடியும் என்பதை நாம் அறியவேண்டும். குடும்ப ஜெபத்தில் உள்ள எல்லாரும் கூடி ஜெபிக்க வேண்டும்.

8. கர்த்தருக்குக் கொடுப்பது

கர்த்தருக்குக் கொடுக்க இன்று அநேகர் மனமற்றவர்களாக இருக்கிறார்கள். அதினால் தேவனின் ஆசீர்வாதங்களை பெறமுடியாதவர்களாயிருக்கிறார்கள் என்று நாம் அறிய வேண்டும். பெரும்பாலானக் குடும்பங்களில் கணவன் கர்த்தருக்குக் கொடுக்க மனமுடையவனாக இருந்தாலும் அவனுடைய மனைவி கர்த்தருக்குக் கொடுக்க மனமற்றவளாக இருப்பாள். கர்த்தருக்குக் கொடுக்கும் காரியங்களில் நாம் உற்சாகமாக குடும்பமாக கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

லூக்.21:1-3-ல் விதவையான ஸ்திரீ இரண்டு காசை காணிக்கைப் பெட்டியிலே போட்டதை ஆண்டவராகிய இயேசு மெச்சிக் கொண்டார் என்று காண்கிறோம். ஏனெனில் அந்த விதவை போட்ட காணிக்கை மிகவும் கொஞ்ச அளவாக இருந்தாலும் அந்த ஸ்திரீ தன்னை முழுவதுமாக தியாகம் செய்து கொடுத்ததினாலே ஆண்டவர் அவள் போட்ட காணிக்கையை மெச்சிக் கொண்டார். நாமும் கர்த்தருக்காக தியாகம் செய்து கொடுக்க முயற்சிக்க வேண்டும். இன்று ஊழியங்கள் பலவிதங்களில் நடக்கிறது. நாம் எந்த எந்த ஊழியங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று தேவனிடம் ஆலோசனை கேட்டு ஊழியங்களுக்கு, ஊழியர்களுக்கு உதவி செய்ய முயற்சிக்க வேண்டும்.

கர்த்தருக்குக் கொடுப்பது குறித்து சில முக்கியமான வேத வசனங்களை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த வசனங்களை வாசித்து, நாம் எவ்விதம் ஊழியங்களை, ஊழியர்களைத் தாங்க வேண்டும் என்று அறிந்து அதன்படி செயல்படுவோம் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

“அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்த படியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்” II கொரி.9:7.

“மேலும் திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிற வனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்.” கலா.6:6.

“ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையோடே வராமல், உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத்

தக்கதாக, அவனவன் தன் தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவரக்கடவன்" உபா. 16:17.

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களை யெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள் ; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல்.3:10.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து நாம் அறிவது யாதெனில் தேவன் நமக்குக் கொடுப்பது குறித்து யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. ஆகவே நாம் விசனத்தோடோ, கட்டாயத்துக்காகவோ என்று கொடுக்க வேண்டிய தில்லை. நாம் கர்த்தருடைய கரத்திலிருந்து பெற்ற நன்மைகளுக்குத் தக்கபடி உற்சாகமாய்க் கொடுக்க முயற்சி செய்ய வேண்டும். நாம் எந்த அளவிற்கு கர்த்தருக்குக் கொடுப்பதில் உற்சாகமுடையவர்களாய், உண்மையுடையவர் களாயிருக்கிறோமோ, அந்த அளவிற்குத்தான் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் என்பதை விசுவாசிகள் எல்லாரும் நன்கு அறிய வேண்டும். அதுபோலவே நமக்கு வேத வசனங்களை போதிக்கும் தேவ ஊழியர்கட்கு நமக்குரியதெல்லாவற்றிலும் பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

இன்று பெரும்பாலுமான விசுவாசிகள் தேவனுக்கென்று உற்சாகமாக கொடுக்க மனமற்றவர்களாயிருப்பதால் அவர்களால் தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாய் இருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு அறிய வேண்டும்.

9. கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்துவது

கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லாரும் நமது வாழ்க்கையானது நமது மரணத்தோடு முடிந்து விடுவதில்லை. நமது மரணத்திற்குப் பின்பும் நாம் நமது ஆண்டவராகிய இயேசுவோடு நித்திய நித்தியமாக மோட்சத்தில் இருப்போம் அல்லது பிசாசுக்கும் அவன் தூதர்களுக்கென்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நரகத்தில் நித்திய நித்திய மாக பிசாசோடு நாம் கொடிய நரக வேதனையை அநுபவிக்க வேண்டியிருக்கும் என்பதை எல்லா விசுவாசிகளும் நன்கு அறிவார்கள். நாம் நரகத்தின் நித்திய ஆக்கினைக்குத் தப்பி ஆண்டவராகிய இயேசுவோடு வாழ நாம் வேத வசனத்தின்படி நமது ஜீவியத்தை அமைத்துக் கொண்டு, நமது ஜீவியத்தைக் குறித்து மிகவும் விழிப்போடு இருக்க வேண்டும் என்பதையும் எல்லா விசுவாசிகளும் நன்கு அறிவார்கள். ஆனாலும் இன்றைய விசுவாசிகளில் பெரும்பாலுமானவர்கள் தங்கள் ஜீவியத்தைக் குறித்து கவனமற்றவர்களாக தங்கள் இஷ்டம்போல் வாழ்கிறவர்களாக இருந்து தங்கள் விசுவாச வாழ்க்கையை நஷ்டப்படுத்திக் கொள்கிறார்கள். ஆகவே நாம் நமது ஜீவியத்தைக் குறித்து மிகவும் கவனமாயிருப்பது எவ்வளவு அவசியம் என்று நாம் எல்லாரும் நன்கு உணரவேண்டும்.

ஆண்டவராகிய இயேசு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு இந்த உலகில் ஒரு மனிதக் குழந்தையாகப் பிறந்து சுமார் முப்பத்து மூன்றரை ஆண்டுகள் இந்த உலகில் ஜீவித்து, இந்த உலகத்தின் பாவத்தைப் போக்கும் பலி ஆடாக சிலுவையில் இரத்தம் சிந்தி, மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து இவ்விதம் மனுக்குலத்திற்கு மீட்பையும், இரட்சிப்பையும் உண்டுபண்ணி வைத்துவிட்டு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்றும், வெகு சீக்கிரத்தில் அவர் மீண்டும் இந்த உலகிற்கு வரப்போகிறார் என்றும் விசுவாசிகள் நன்கு அறிவார்கள்.

மனித அரசாட்சிக்கு என்று நியமிக்கப்பட்ட ஆறாயிரம் வருஷம் ஏறக்குறைய முடிந்து விட்டது. ஆண்டவராகிய இயேசுவின் ஆயிர வருஷ அரசாட்சி வெகு சீக்கிரம் ஆரம்பமாகப் போகிறது. ஆண்டவராகிய இயேசு சீக்கிரம் வரப்போகிறார் என்றால் அவர் ஏன் இந்த உலகிற்கு வருகிறார் என்றும் அவருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கும் நாம் அவருடைய வருகையில் காணப்பட நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டும். வருகையில் காணப்பட என்ன செய்ய வேண்டும் என்றும் அறிந்து அவர் வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வோம் என்றால் நாம் பாக்கியவான்களாயிருப்போம்.

a) இயேசு ஏன் இந்த உலகிற்கு வருகிறார்?

ஆண்டவராகிய இயேசு ஏன் இந்த உலகிற்கு இரண்டாந்தரமாக வரப்போகிறார் என்று வேத வசனங்களின் அடிப்படையில் அறிந்து கொள்ளப்பார்ப்போம்.

i) தேவனை அறியாதவர்களுக்கும் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் ஆக்கினைத் தீர்ப்புக் கொடுக்க இயேசு வருகிறார்

"தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு நமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து வருகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்." II தெச.1:7,8.

ii) இரட்சிப்பை அல்லது புதுவாழ்வு கொடுப்பதற்கு இயேசு வருகிறார்

"கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" எபி.9:28.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதல் வசனத்தில் தேவனை அறியாதவர்களுக்கும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படிக்கு ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திற்கு மீண்டும் வரப்போகிறார் என்றும், இரண்டாவது இரட்சிப்பைக் கொடுக்கவும் இயேசு இந்த உலகத்திற்கு வரப்போகிறார் என்றும் அறிகிறோம். இரண்டாவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் இரட்சிப்பு என்ற வார்த்தைக்கு புதுவாழ்வு என்று அர்த்தமாகும். அப்படியென்றால் புதுவாழ்வாகிய மோட்ச பாக்கியத்தை தமக்காக

காத்திருப்பவர்களுக்குக் கொடுக்க இயேசு வருகிறார் என்று அறியலாம்.

b) வருகையில் காணப்பட நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டும்

நாம் ஆண்டவராகிய இயேசுவின் வருகையில் காணப்பட நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டும் என்று கீழ்க்கண்ட வேத வசனத்தின் அடிப்படையில் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

i) பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும்

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக" Iதெச.3:13 ;5:23 ; கொலோ.1:21.

"பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள் ; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிப்பதில்லையே" எபி.12:14.

மேற்கூறப்பட்டுள்ள இரண்டு வசனங்களிலிருந்து நாம் அறிவது யாதெனில் ஆண்டவராகிய இயேசு மீண்டும் இந்த உலகிற்கு வரும்பொழுது நாம் அவருடைய வருகையில் காணப்பட நாம் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாய் காணப்படவேண்டியது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் அறிய வேண்டும். அதிலும் பிழையற்ற பரிசுத்தம் என்று கூறியதிலிருந்து நமது பரிசுத்தத்தைக் குறித்து பிசாசு குற்றம் சொல்லும்படியாக இருக்கக்கூடாது என்றும் நாம் அறிய வேண்டும்.

பரிசுத்தம் என்ற வார்த்தையின் பொருள் பிரத்தியேகப்பட்ட என்று கூறப்பட்டுள்ளது. அதிலிருந்து நாம் அறிவது யாதெனில் நாம் உலகத்தின் அசுத்தமான பாவமானக் காரியங்களிலிருந்து பிரத்தியேகப்பட்டவர்களாய் ஜீவிப்பது மிகவும் முக்கியமானது என்பதை நாம் அறிய வேண்டும்.

அதுமட்டுமல்லாது பிழையற்ற பரிசுத்தமுடையவர்களாய் காணப்பட தேவனே நமது இருதயத்தை ஸ்திரப்படுத்துவாராக என்பதிலிருந்து நாம் நமது பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள நமது இருதயம் ஒரு ஸ்திரமான நிலையில் காணப்படுவது மிகவும் அவசியம் என்றும், நமது இருதயத்தை தேவனே ஸ்திரப்படுத்த வேண்டும் என்று நாம் அறிய வேண்டும். இன்று அநேகர் ஸ்திரமான நிலையில் இல்லாததினால் எளிதில் பாவத்தில் விழுந்து விடுகிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டும்.

நாம் கர்த்தராகிய இயேசுவின் வருகையில் பிழையற்ற பரிசுத்தமுடையவர்களாய் காணப்பட தேவனே எங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்தும் என்று ஜெபிக்க வேண்டும்.

ii) செய்து முடித்தவர்களாய் நிற்பது

"சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்" எபே.6:13.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்பது என்பது நமது ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திற்கு மீண்டும் வரும்பொழுது நாம் நமக்குக் கொடுக்கப்பட்ட எல்லா கடமைகளையும் செய்து முடித்தவர்களாய் அவருடைய சமூகத்தில் நிற்க வேண்டும் என்பதாகும். அப்போஸ்தலனாகிய பவுலும் தன்னைப்பற்றி சொல்லும்பொழுது கீழ்க்கண்டவாறு கூறுகிறான்.

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" II தீமோ.4:7,8.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஓட்டத்தை முடித்தேன் என்பது தேவன் எனக்குக் கொடுத்த கடமையை செய்து முடித்தேன் என்பதாகும். அதுபோலவே நல்ல போராட்டத்தைப் போராடினேன் என்பதில் கிறிஸ்தவ வாழ்க்கையை போராட்டத்திற்கு ஒப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது. நமக்கு விரோதமாய் கிரியை செய்யும் அநேக சக்திகள் உண்டு. அவைகள் நாம் தேவ சித்தம் செய்ய முடியாதபடி பல தடைகளை உண்டுபண்ணும். இந்த எல்லா அந்தகார சக்திகளுக்கும் விரோதமாக நாம் போராடி தேவன் நமக்கு நியமித்திருக்கும் கடமைகளை செய்து முடித்தவர்களாய் நாம் அவர் சமூகத்தில் காணப்பட வேண்டும். நாம் விசுவாசிகளாயிருந்தாலும், ஊழியர்களாயிருந்தாலும் நம் ஒவ்வொருவருக்கும் தேவன் நியமித்த குறிப்பிட்ட வேலையுண்டு. அந்தக் குறிப்பிட்ட வேலையை நாம் செய்து முடித்தவர்களாய் அவர் சமூகத்தில் காணப்பட வேண்டும். இந்த நாட்களில் அநேகர் தேவன் தங்களுக்கென்று வைத்திருக்கும் வேலை இன்னது என்று அறிந்து கொள்ள முடியாதவர்களாய் இருக்கிறார்கள். நமது வாழ்க்கையைக் குறித்த தேவ சித்தத்தை நாம் சரியாக அறிந்துகொள்ள நமது மனம் புதிதாக வேண்டும் என்று *ரோமர்.12:2*-ல் கூறப்பட்டுள்ளது.

நமது மனது புதிதாகி நமது வாழ்க்கையில் தேவ சித்தம் இன்னது என்று அறிந்து, அதை முற்றுமாக செய்து முடித்தவர்களாய், ஆண்டவராகிய இயேசுவின் வருகையிலே அவர் சந்நிதியிலே காணப்பட நாம் முயற்சிக்க வேண்டும். தேவன் தாமே கிருபை செய்வாராக!

c) அவர் வருகையில் காணப்பட நாம் என்ன செய்ய வேண்டும்

ஆண்டவராகிய இயேசு இரண்டாம் தடவை இந்த உலகிற்கு வரும்பொழுது நாம் அவர் சந்நிதியில் காணப்பட நாம் என்ன என்ன காரியங்கள் செய்யவேண்டும் என்று இந்தப் பகுதியில் சிறிது அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1) அவரில் நிலைத்திருக்க வேண்டும்

"நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத் திருங்கள்" I யோவான் 2:28.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஆண்டவராகிய இயேசுவின் வருகையில் நாம்வெட்கப்படாமல் தைரியமாக காணப்பட வேண்டும் என்றால் நாம் அவரில் (இயேசுவில்) நிலைத்திருக்க வேண்டும். நிலைத்திருப்பது என்றால் என்ன என்பதை கீழ்க்கண்ட வசனம் தெளிவுபடுத்துகிறது.

"கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது" யோவான் 15:4.

எவ்விதம் செடியும் கொடியும் இயற்கையாகவே (Naturual - way) இணைந்து அல்லது நிலைத்து இருக்கிறதோ அதுபோலவே நாமும் தேவனோடு எப்பொழுதும் நிலைத்திருக்கிறவர்களாக காணப்படவேண்டும். அப்படி யென்றால் நாம் தேவனோடு கொண்டுள்ளதான ஐக்கியம் மிகவும் உறுதியானதாகவும், நாம் வேத வசனத்தின்படி நமது ஜீவியத்தை அமைத்துக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

ii) ஜெபம் பண்ணி விழித்திருக்க வேண்டும்

"மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப் படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்" லூக்.21:31.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நாம் ஆண்டவராகிய இயேசுவின் வருகையில் நிற்க நாம் எப்பொழுதும் ஜெபம் செய்து விழித்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதில் விழித்திருப்பது என்பது நமது ஜீவியத்தைக் குறித்து மிகவும் கவனமாக இருப்பது என்பதாகும். அப்படியென்றால் நாம் கர்த்தரின் வருகையில் காணப்பட நாம் எப்பொழுதும் ஜெபிக்கிறவர்களாகவும் நமது ஜீவியத்தைக் குறித்து மிகவும் கவனமாக இருக்கிறவர்களாகவும் இருப்பது மிகவும் அவசியமாகும்.

iii) காத்திருக்க வேண்டும்

"தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்" II பேதுரு 3:12.

"இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதை யாயிருங்கள்" II பேதுரு 3:14.

"தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுதும் வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள் " லூக்.12:36.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் முதலாவது வசனத்தில் நாம் கர்த்தருடைய வருகைக்காக அவர் வந்து கதவைத் தட்டும்பொழுது உடனடியாக அவருக்குக் கதவைத் திறக்கிறவர்களாக காத்திருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இது நாம் எப்பொழுதும் அவர் வருகைக்காக மிகவும் ஜாக்கிரதையுடையவர்களாக தகுந்த ஆயத்தத்தோடு காத்து இருக்கிறவர்களாக காணப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்பதை நாம் நன்கு உணர வேண்டும்.

அதுபோல இரண்டாவது வசனத்தில் கர்த்தரின் வருகைக்காக காத்து இருக்கிறவர்கள் கறையற்றவர்களாகவும் (Without spot) பிழையில்லாதவர் களாகவும் (Blameless), சமாதானத்தோடே அவர் சந்நிதியில் நாம் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்நாட்களில் கர்த்தரின் வருகையை எதிர்நோக்கியிருக்கிற தேவ ஜனங்கள் தங்கள் ஜீவியத்தைக் குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

iv) ஜீவியத்தைக் காத்துக்கொள்வது

"இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்." வெளி.16:15.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் நிர்வாணமாய் நடப்பது என்பது இழந்தவர்களாய் ஜீவிப்பது என்பதாகும். அதுபோல வஸ்திரம் என்பதும் நாம் பெற்ற ஆவிக்குரிய அனுபவங்களைக் குறிக்கும் (*ஏசா.61:3,10 பார்க்கவும்*). ஆகவே நாம் பெற்ற ஆவிக்குரிய அனுவபவங்களை இழந்தவர்களாய் நமது பழைய அசுத்தமான சுபாவங்களையும், பாவமான ஜீவிய முறைகளையும் வெளிப்படுத்துகிறவர்களாயிராதபடிக்கு நாம் நமது ஜீவியத்தைக் குறித்து விழிப்பாயிருந்து, நாம் பெற்ற ஆவிக்குரிய அனுபவங்களைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதாகும். ஏனெனில் நமது ஆண்டவராகிய இயேசு இதோ நான் திருடனைப்போல் யாரும் எதிர்பார்த்திராத வேளையில் வருகிறேன் என்று கூறியுள்ளார். ஆகவே இவ்விதம் தாங்கள் பெற்ற ஆவிக்குரிய அனுபவங்களைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். ஏனெனில் நமது ஆண்டவராகிய இயேசு இதோ நான் திருடனைப்போல் யாரும் எதிர்பார்த்திராத வேளையில் வருகிறேன் என்று கூறியுள்ளார். ஆகவே இவ்விதம் தாங்கள் பெற்ற ஆவிக்குரிய அனுபவங்களைக் காத்துக் கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள் என்பதாகும்.

நாமும் நாம் பெற்ற ஆவிக்குரிய அனுவபங்களைக் காத்துக் கொண்ட வர்களாய் நமது விசுவாச ஜீவியத்தைக் குறித்து மிகவும் விழிப்புடையவர்களா யிருந்து இவ்விதம் நமது கர்த்தராகிய இயேசுவின் வருகைக்கென்று நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வோம் என்றால் நாம் பாக்கியவான்களாயிருப்போம். இந்த நாட்களில் நாம் மிகவும் கவனமாயிருந்து நம்மையும், நமது குடும்பத்தையும் கர்த்தருடைய வருகைக்கென்று ஆயத்தப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

தேவ ஞானத்தைப் பெறுவதினால் நாம் பெறும் சிறப்பானக் காரியங்கள்

ஞானத்தைப் பெறுவதினால் நாம் பெறும் சிறப்பான காரியங்கள் என்ன என்ன என்று அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

★ ஞானத்தைக் கண்டடைகிற மனுஷன் பாக்கியவான் - நீதி.3:13.

★ ஞானத்தைப் பெறுவது ஆத்துமாவிற்கு இன்பமாயிருக்கும - நீதி.24:14.

★ கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னது என்று உணரவும், தேவனை அறியும் அறிவையும் கண்டடைய முடியும் - நீதி.2:5

★ நீதியையும் நிதானத்தையும் சுசல நல்வழிகளையும் அறிந்து கொள்ள முடியும் - நீதி.2:9.

★ நாம் பெறும் ஞானத்தினால் தவறான மனிதரிடமிருந்து காக்கப்படுகிறோம் - நீதி.2:12-15.

★ நாம் பெறும் ஞானம் நமக்குக் கேடகமாக பயன்படுகிறது - பிரசங்கி 7:12.

★ தவறான ஸ்திரீகளிடமிருந்து நாம் காக்கப்படுவோம் - நீதி.2:17.

★ ஆபத்தான சூழ்நிலையிலிருந்து இரட்சிக்கப்படுகிறோம் - நீதி.8:26.

★ ஞானவான்கள் கனத்தைச் சுதந்தரிப்பார்கள்- நீதி.3:35.

★ மனிதர் நமது செயல்பாடுகளைப் பார்த்து நமக்குப் பயப்படுவார்கள் - I இராஜா.3:28.

★ நாம் பெறும் ஞானம் நமது ஆத்துமாவுக்கு ஜீவனைத்தரும் - நீதி.3:22 ;8:25, பிரசங்கி 7:12.

★ நாம் பெறும் ஞானம் நமது கழுத்துக்கு அலங்கார மாயிருக்கும் - நீதி.3:22.

★ நாம் பெறும் ஞானம் நமது முகத்தைப் பிரகாசிக்கப் பண்ணும் - பிரசங்கி 8:1.

★ நாம் ஞானத்தைப் பெற்றவர்களாக செயல்படுவதினால் நாம் பயமில்லாமல் இருக்க முடியும்- நீதி.3:23,24.

★ நாம் ஞானத்தைப் பெற்றவர்களாக ஜீவிப்பதினால் நமது ஆயுசு நாட்கள் பெருகும்- நீதி.9:11.

மேற்கூறப்பட்டுள்ள காரியங்களிலிருந்து நாம் ஞானத்தைப் பெறுவது எவ்வளவு சிறப்பானது என்று அறிந்துகொள்ளலாம்.

தேவ ஞானத்திற்கு மாறானக் காரியங்கள்

இந்தப் புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில் ஞானத்தை தேவ ஞானம் என்றும் மனித ஞானம் என்றும் இருவகையாகப் பிரித்து எழுதியிருந்தேன். மனுஷ ஞானம் என்பது உலக ஞானம், சுய ஞானம், சாதுர்ய ஞானம், லௌகீக ஞானம், மாமிசத்துக்கேற்ற ஞானம் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது என்றும் எழுதியிருந்தேன். இந்த ஞானத்தைப் பெற்றவர்கள் செயல்படுவது பற்றியும், இவ்வித ஞானத்தைப் பெற்றவர்களுக்கு தேவன் என்ன செய்கிறார் என்பது பற்றியும், இவ்வித ஞானத்தினால் வரும் சாபம் பற்றியும் இந்தப் பகுதியில் தெளிவாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

A. உலக ஞானம் அல்லது மனித ஞானம் எத்தன்மையுடையது?

இந்தப் பகுதியில் மனித ஞானம் எத்தன்மையுடையது என்று சிறிது விவரமாக அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1. உலக ஞானத்தினால் நாம் தேவனை அறிந்து கொள்ளமுடியாது

"உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கிறது" I கொரி.1:21.

"ஞானிகள் வெட்கி, கலங்கிப் பிடிபடுவார்கள் ; இதோ கர்த்தருடைய சொல்லை வெறுத்துப் போட்டார்கள் அவர்களுக்கு ஞானமேது?" எரேமியா 8:9.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களின் மூலம் நாம் அறிவது யாதெனில் உலக ஜனங்கள் தங்கள் சுயஞானத்தினால் தேவனை அறிந்துகொள்ள முடியாது என்பதாகும். ஏனெனில் அவர்கள் தேவனுடைய சொல்லை வெறுப்பதினால் அவர்கள் தேவனுடைய ஞானத்தைப் பெற முடியாதவர்களாகி விடுகிறார்கள்.

2. உலக ஞானிகள் பைத்தியக்காரராகி (Fools) விக்கிரகங்களை உண்டுபண்ணி விட்டார்கள்

"அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக் காரராகி, (FOOLS) *அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவை களுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்" ரோமர் 1:22,23.*

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து நாம் அறிவது யாதெனில் உலக ஜனங்கள் தாங்கள் தான் சிறந்த ஞானிகளென்று சொல்லிக்கொண்டு உண்மையில் பைத்தியக்காரராகி (FOOLS – முட்டாள்கள்) உண்மையான தேவனை வணங்குவதற்குப் பதிலாக தாங்கள் காண்கிறதான மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள் போன்றவைகளுக்கு ஒப்பாக தெய்வங்களை உண்டுபண்ணி அவைகளை வணங்க ஆரம்பித்துவிட்டார்கள் என்று அறிகிறோம்.

இன்றும் இவ்விதம் செயல்படும் ஜனங்கள் தாங்கள் வணங்கும் விக்கிரக ஆராதனைதான் சரியானது என்று சொல்லி, தேவனை வணங்குகிறவர்களை கொலை செய்து, துன்புறுத்துகிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள்!

3. மனித ஞானத்தினால் தேவனின் செயல்பாடுகளை அறிந்து கொள்ள முடியாது

"தேவன் செய்யும் சகல கிரியைகளையும் நான் கவனித்துப் பார்த்து, சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கிரியையை மனுஷன் கண்டுபிடிக்கக் கூடாதென்று கண்டேன். அதை அறியும்படி மனுஷன் எண்ணினாலும் அவனும் அதை அறிந்து கொள்ள மாட்டான்." பிரசங்கி 8:17.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் மனிதர் தங்கள் ஞானத்தைக் கொண்டு தேவன் எவ்விதம் செயல்படுகிறார் அல்லது கிரியை செய்கிறார் என்று அறிந்து கொள்ள முடியாது என்று அறிகிறோம். ஆகவே நாம் அவரின் செயல்பாட்டிற்கு (தேவ சித்தத்திற்கு) முழுவதுமாக நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். அவர் செயல்பாட்டுக்கு மாறாக செயல்பட நாம் முயற்சிக்கக்கூடாது. தேவன் தாமே கிருபை செய்வாராக!

4. நம் ஞானம் கொண்டு நாம் எதையும் செய்யமுடியாது.நமக்கு சமயமும், தேவச்செயலும் நேரிட வேண்டும்.

"பிழைப்புக்கு ஞானமுள்ளவர்களின் ஞானமும் போதாது..... அவர்களெல்லாருக்கும் சமயமும் தேவச் செயலும் நேரிட வேண்டும்" பிரசங்கி 9:11.

மேற்கூறப்பட்ட வசனத்திலிருந்து நாம் அறிவது யாதெனில் , மனிதன் தன் ஞானத்தால், புத்தியால் என்றும், எல்லாவற்றுக்கும் சமயமும், தேவச் செயலும் நேரிட வேண்டும். அப்படியென்றால் கர்த்தர் நம் வாழ்க்கையில் அவரே எல்லாக் காரியங்களையும் வாய்க்கச் செய்ய வேண்டும். அப்படியென்றால் கர்த்தர் நம் காரியங்களை வாய்க்கச் செய்யும்படியாக நாம் அவரை நோக்கி ஜெபிக்க வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களிலிருந்து மனிதனின் ஞானத்தினால் தேவனை அறிந்துகொள்ள முடியாது என்றும், மனிதர்கள் தாங்கள் தான் சிறந்த ஞானிகளென்று சொன்னாலும் உண்மையில் பைத்தியக்காரர்களாக (Fools) இருந்து விக்கிரகங்களை உண்டுபண்ணி அவைகளை வணங்குகிற வர்களாகவும் இருக்கிறார்கள். அது மட்டுமல்லாது மனிதர் தங்கள் ஞானத்தினால் தேவனின் செயல்பாடுகளை அறிந்து கொள்ள முடியாது என்றும், மனிதர் தங்கள் ஞானத்தினால் எதையும் சாதிக்க முடியாது என்றும், தேவனே நமது காரியத்தை வாய்க்கச் செய்யவேண்டும் என்றும் இந்த உலகின் மனிதர் எல்லாரும் அறிய வேண்டும். இன்று அநேகர் தங்கள் சுயஞானத்தை, சுயபெலத்தை நம்பியவர்களாக நான் இதைச் செய்து விடுவேன். அதைச் செய்து விடுவேன் என்கின்றனர். ஆனால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாமல் வெட்கத்திற்கு உள்ளாகின்றனர். இதை இந்த உலகின் ஜனங்கள் எல்லாரும் உணர்ந்து கொண்டால் நலமாயிருக்கும்.

5. உலக ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாக இருக்கிறது

"இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாக (Foolishness) இருக்கிறது" I கொரி.3:19,20.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கூறப்பட்டுள்ளது போல் உலக ஞானமானது தேவனுக்கு முன்பாக பைத்தியமாக இருக்கிறது. ஏனெனில் உலக ஞானத்தினால் நாம் தேவனையோ, தேவனின் செயல்பாடுகளையோ அறிந்துகொள்ள முடியாது. அதுமட்டுமல்லாது உலக ஞானத்தினால் நாம் எதையும் சாதிக்க முடியாது. ஆகவே உலக ஞானமானது தேவன் முன்னிலையில் பைத்தியமாயிருக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும்.

B. உலக ஞானத்தைப் பெற்றவர்கள் செயல்படுவது

உலக ஞானத்தைப் பெற்றவர்கள் எவ்விதம் செயல்படுவார்கள் என்று கீழ்க்கண்ட வேத வசனம் நன்கு விளக்கும்.

"அப்பொழுது எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனுடனே (பவுலுடனே) வாக்குவாதம் பண்ணினார்கள்" அப்.17:18

அத்தேனே பட்டணம் விக்கிரகங்கள் நிறைந்த பட்டணமாயிருந்ததினாலே அப்போஸ்தலனாகிய பவுல் தனது ஆவியில் வைராக்கியங்கொண்டு தேவனைக் குறித்து பிரசங்கிக்க ஆரம்பித்தான். ஆனால் அங்குள்ள உலக ஞானிகளான மனிதர்களில் சிலர் அப்போஸ்தலனாகிய பவுலோடு வாக்குவாதம் செய்ய ஆரம்பித்தனர். இதற்கு முந்தியப் பகுதியில் எவ்விதம் இந்த உலகின் மனிதர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லிக்கொண்டு உண்மையில் அவர்கள் பைத்தியக்காரர்களாகி (Fools) தங்களை சிருஷ்டித்த தேவனை வணங்குவதற்குப் பதிலாக விக்கிரகங்களை உண்டுபண்ணி அவைகளை வணங்க ஆரம்பித்தனர் என்று அறிந்தோம்.

அதுபோலவே இன்றும் ஞானிகளென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். உண்மையில் பைத்தியக்காரர்களாகி (Fools- மூடர்கள்) தேவ ஊழியர்களிடம் தர்க்கம் பண்ணவும், அவர்களுக்கு எதிராக செயல்படவும் முற்படுவார்கள். இன்றும் இவ்வித ஞானிகளாகக் கருதப்படும் சிலர் மதத்தலைவர்கள் தாங்கள் உண்மையில் பைத்தியக்காரர்கள் என்று அறியாமல் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு விரோதமாக, கிறிஸ்தவ ஊழியர்களுக்கு விரோதமாக செயல்பட்டு, ஊழியர்களை கொலை செய்ய மதவெறியர்களைத் தூண்டிவிடுவதையும் நாம் கண்கூடாகக் காணலாம்.

C. உலக ஞானிகளாக உள்ளவர்களுக்கு தேவன் செய்வது

இந்த உலகின் ஞானிகளாக உள்ள மனிதர்கட்கு தேவன் என்ன செய்கிறார் என்று இந்தப் பகுதியில் அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1. உலக ஞானிகளாக உள்ளவர்கள் தேவக் காரியங்களை அறிய முடியாதபடி அவர்களுக்கு அதை மறைக்கிறார்

"பிதாவே வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப் படுத்தினபடியால்உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்" மத்.11:25, லூக்.10:21.

தேவன் தமது காரியங்களை உலகின் ஞானிகளாக உள்ள மனிதர்களுக்கு மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்துகிறார் என்று கூறப்பட்டுள்ளது. அதில் பாலகர் என்பது எவ்விதம் பாலகர் (Bables - சிறு பிள்ளைகள்) மற்றவர்கள் சொல்வதை அப்படியே நம்பி, ஏற்றுக்கொள்கிறார்களோ அதுபோலவே தேவன் சொல்லும் காரியங்களை அப்படியே ஏற்றுக்கொள்ளும் தன்மையுடைய பாலகர் போன்றவர்களுக்கு தேவன் தமது தேவ ஞானத்தை வெளிப்படுத்துகிறார் என்று அறிய வேண்டும்.

2. உலக ஞானிகளின் செயல்பாடுகளை தேவன் அபத்தமாக்குகிறார்

"பார்வோனுடைய ஞானமுள்ள ஆலோசனைக்காரரின் ஆலோசனை மதியீனமாயிற்று" ஏசா.19:11.

"அவர் ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறார்" யோபு 45:13, Iகொரி.3:19.

"தேவன் ஞானிகளை வெட்கப்படுத்துகிறவர்" ஏசா.44:25.

"அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டுப்போம்" ஏசா.44:25.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களின் மூலம் நாம் அறிவது யாதெனில் உலக ஞானிகள் தங்கள் ஞானத்தினால் பல காரியங்களை சாதிக்கிறவர் களாயிருந்தாலும் தேவன் முன்னிலையில் அவர்களால் எதையும் சாதிக்க முடியாது என்பதை நாம் அறிய வேண்டும். உதாரணமாக இந்த உலகின் ஞானிகள் தங்கள் ஞானத்தால் மிகவும் சிறப்பாக ஒரு அணையைக் கட்டுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். தேவன் அந்த இடத்தில் மழை பெய்யாதபடி தடுத்துவிட்டார் என்றால் எப்படியிருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். திடீரென்று ஒரு இடத்தில் பூகம்பம், பூமியதிர்ச்சி போன்றவைகள் ஏற்படுகிறது என்றால் இந்த உலகின் ஞானிகள் தங்கள் ஞானத்தால் இவைகளைத் தடுத்து நிறுத்த முடியுமா? தேவன் செயல்பட ஆரம்பித்தால் தேவனின் செயலுக்கு எதிராக இந்த உலகின் ஞானிகள் எதையும் செய்யமுடியாது. உலக ஞானிகளின் செயல்பாடுகளை தேவன் அபத்தமாக்குகிறார் என்பதை நாம் தெளிவாக அறியவேண்டும்.

3. ஞானிகளை வெட்கப்படுத்த தேவன் பைத்தியங்களைத் தெரிந்து கொண்டார்

"ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவை களைத் தெரிந்து கொண்டார்" I கொரி.1:27.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தேவன் உலக ஞானிகளை வெட்கப்படுத்தும்படியாக உலகின் பைத்தியமானவைகளை (Foolish) தேவன்

தெரிந்து கொண்டார் என்று கூறப்பட்டுள்ளது. உலக ஞானிகள் தேவனை, தேவக்காரியங்களை அறியாதவர்களாகவும், விக்கிரகங்களை உண்டாக்கி அவைகளை வணங்குகிறவர்களாகவும், தேவ காரியங்களுக்கு விரோதமாக, தேவ ஊழியர்களுக்கு விரோதமாக எதிர்த்துப் பேசுகிறவர்களாகவும், செயல்படுகிறவர் களாகவும் இருப்பதால் தேவன் இந்த உலகின் பைத்தியங்களாகத் தோன்றுகிற அதிகம் கல்வியறிவில்லாதவர்கள், கீழ்ஜாதி என்று எண்ணப்படுகிற தாழ்ந்த சமுதாயத்தினர், காட்டுவாசிகளான ஜனங்கள் ஆகிய இவர்களை தெரிந்து கொண்டு, அவர்களுக்கு தேவன் தமது ஞானத்தைக் கொடுத்து தமது காரியங்களைச் செய்யும்படியாக அவர்களை தேவன் பயன்படுத்தி வருகிறார்.

இந்தப் புத்தகத்தை எழுதுகிற நான் அதிகம் கல்லாதவன். எந்த ஒரு சபையையும் சேராதவன். எந்த ஒரு ஊழியரிடமிருந்தோ, எந்த ஒரு விளக்கப் புத்தகங்களைப் படித்தோ நான் தேவக்காரியங்களைக் கற்றுக் கொள்ளவில்லை. தேவனே எனக்குத் தமது காரியங்களைக் கற்றுக் கொடுக்கிறார். எந்த ஒரு சபையையும் சேராதவனாக இருந்தாலும் நான் எல்லா ஜனங்களுக்கும் சொந்தமானவன் என்று எண்ணும்படியாக தேவன் செய்கிறார். என் தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

மகாத்மா காந்தி, டாக்டர் ராதா கிருஷ்ணன் போன்ற இந்தியாவின் தலைசிறந்த தலைவர்கள் சிறந்த ஞானிகளாக இருந்து, வேத புத்தகத்தை நன்கு கற்றவர்களாக இருந்தும், தேவக்காரியங்களை அறியாதவர்களாக, என் தேவன் இலவசமாக ஏற்படுத்தி வைத்திருக்கும் இரட்சிப்புக்குள் வராதவர்களாகவே மடிந்து போனார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

D. மனித ஞானம் குறித்த எச்சரிப்புகள்

மனித ஞானம் குறித்து நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சில எச்சரிப்பான வார்த்தைகளை நாம் அறிந்து கொள்வது நல்லது.

1. மனித ஞானம் கொண்டு தேவனுக்கு விரோதமாக செயல்பட முடியாது

"கர்த்தருக்கு விரோதமான ஞானமில்லை" நீதி.21:30.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் கர்த்தருக்கு விரோதமான ஞானமில்லை என்று கூறியிருப்பது மனிதன் தன் சுய ஞானத்தினால் தேவனுக்கு விரோதமாக செயல்பட முடியாது என்பதாகும். இன்று இந்தியாவில் சில அரசியல் தலைவர்கள், மதத்தலைவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு விரோதமாக பேசவும், செயல்படவும் முற்படுகின்றனர். அது அவர்களுக்கு தோல்வியை மட்டுமல்லாது அழிவையும் கொண்டுவரும் என்பதை அவர்கள் அறியவேண்டும்.

2. நமது விசுவாசம் மனித ஞானத்தில் நிற்பது குறித்த எச்சரிப்பு

"உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் (Power- வல்லமை) நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது" I கொரி.2:4,5.

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்பொழுது கொரிந்து சபையாரின் விசுவாசம் மனித ஞானத்தில் (மனித உபதேசத்தில்) நிற்காதபடி பவுலின் பிரசங்கம் பரிசுத்த ஆவியினாலும் தேவ வல்லமையாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது என்று கூறுகிறார். இன்று பெரும்பாலுமான ஊழியர்கள் தங்கள் மனித ஞானத்தினாலே ஜனங்களுக்குப் போதித்து அவர்களைக் கவர்ந்து கொள்ளப்பார்க்கின்றனர். விசுவாசிகளும் இவ்வித ஊழியர்களின் கவர்ச்சிப் பேச்சுக்களைத் தான் கேட்க விரும்புகின்றனர்.

இந்த நாட்களில் தேவ ஊழியர்கள் தாங்கள் பிரசங்கிக்கும் முறையைக் குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும். வசனத்தைக் கேட்கிறவர்களின் விசுவாசம் மனித ஞானத்தில் நிற்பதாக அல்லாது தேவ வல்லமையில் (Power) நிற்கும் படியாக ஊழியர்கள் பிரசங்கிக்க வேண்டும்.

3. லௌகீக ஞானத்தினாலும், தந்திரமான வார்த்தைகளினாலும் மற்றவர்கள் நம்மைக் கெடுக்காதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்

"லௌகீக ஞானத்தினாலும், (Philosephy தத்துவ ஞான சாஸ்திரம்) மாயமான தந்திரத்தினாலும், (Vain deceit - வீணான தந்திரங்களினால்) ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு (Spoil- கெடுத்து விடுவது) எச்சரிக்கையாயிருங்கள்" கொலோ.2:8.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தின்மூலம் நாம் அறிவது யாதெனில் , லௌகீக ஞானத்தினாலும்(தத்துவ ஞானசாஸ்திரம்) மாயமான தந்திரங்களினாலும் நம்மை தவறான ஊழியர்கள் கெடுத்துவிடாதபடி நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதில் தத்துவ ஞான சாஸ்திரம் என்பது எது சத்தியம் என்று கண்டு கொள்ள முயற்சிக்கும் சாஸ்திரம் (*Science*) ஆகும். நாம் எது சத்தியம் என்று அறிய நாம் எற்தவித முயற்சியும் செய்யவேண்டிய அவசியமில்லை. யாரெல்லாம், எதுவெல்லாம் சத்தியம் என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது.

எந்த எந்தக் காரியங்கள் சத்தியம் என்று வேதம் தெளிவாக நமக்குப் போதிக்கிறது

பிதா சத்தியமானவர் – யோ.7:28,8:26

இயேசு சத்தியமானவர் – யோ.14:6

பரிசுத்த ஆவியானவர் சத்தியமானவர் – யோ.16:13, I யோவா.5:6

கர்த்தரின் வேத வசனம் சத்தியம் – யோ.17:17

ஆகவே எது சத்தியம் என்று கண்டுகொள்ள நாம் எந்தவித முயற்சியும் செய்யவேண்டிய அவசியமில்லை. வேத வசனத்தை அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் நாம் செய்ய வேண்டியதாகும். ஆகவே நாம் இவ்விதமான தத்துவ ஞான சாஸ்திரங்களும், மனிதரின் தந்திரமான வார்த்தைகளும் நமது ஆவிக்குரிய ஜீவியத்தை நஷ்டப்படுத்திவிடாதபடி நாம் நமது ஆவிக்குரிய வாழ்க்கையைக் குறித்து மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். செய்வோமா?

E. தேவ ஊழியர்களும் - உலக ஞானமும்

தேவ ஊழியர்கள் உலக ஞானத்தினால் செயல்படுவது குறித்து சிறிது அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1. உலக ஞானத்தைக் கொண்டு ஊழியம் செய்யக்கூடாது

“சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிற வனாக வரவில்லை” I கொரி.2:1.

“உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம்” I கொரி.2:7.

“அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரிய வைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்” I கொரி.2:13.

மேற்கூறப்பட்டுள்ள மூன்று வசனங்களின் மூலம் நாம் அறிவது யாதெனில் முதலாவது ஊழியர்கள் தேவனுடைய வார்த்தையை மனுஷ ஞானத்தினால் அறிவிக்கக்கூடாது. இரண்டாவதாக ஊழியர்கள் தேவ ஞானத்தைக் குறித்து மட்டும் பேச வேண்டும். மூன்றாவதாகதேவனுடைய வார்த்தையை பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளால் போதிக்க முயற்சிக்க வேண்டும். அப்படியென்றால் நாம் மனித ஞானத்தினால் கர்த்தருக்கு ஊழியம் செய்யாதபடி, தேவ ஞானத்தைக் குறித்துப் பேசுவதும், இதை பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளால் பேசி ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு மட்டும் சம்பந்தப்படுத்திக் காண்பிக்க வேண்டும்.

2. ஊழியர்கள் மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடு நடக்கக்கூடாது

"மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல்......" II கொரி.1:12.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தின் மூலம் நாம் அறிவது யாதெனில் ஊழியர்கள் மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடு நடக்கக்கூடாது என்பதாகும். இதில் நடப்பது என்பது நாம் அமைத்துக் கொள்கிற ஜீவிய முறையைக் குறிப்பதாகும். மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடு நடப்பது என்பது பிறரை வஞ்சிப்பது, கெடுப்பது, ஏமாற்றுவது, அபகரிப்பது, திருடுவது, பொய் சொல்வது, கபடாக செயல்படுவது போன்ற காரியங்களைச் செய்வதாகும். தேவ ஊழியர்களிடம் இவ்விதமானக் காரியங்கள் ஒரு நாளும் காணப்படக் கூடாது. எல்லாக் காரியங்களிலும் முழுவதுமாக உண்மைக் காணப்பட வேண்டும்.

3. ஊழியர்கள் தவறான உபதேசங்களை உண்டு பண்ணக்கூடாது

"நாங்கள் ஞானிகளென்றும், கர்த்தருடைய வேதம் எங்களிடத்திலிருக்கிறதென்றும் நீங்கள் சொல்லுகிறதெப்படி? மெய்யாகவே இதோ, வேதபாரகரின் கள்ள எழுத்தாணி அதை அபத்தமாக்குகிறது" எரேமியா 8:8.

இன்று தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற அநேகர் தாங்கள்தான் ஞானிகளென்று சொல்லிக் கொண்டாலும் அவர்கள் கள்ள ஊழியர்களின் தவறான உபதேசங்களைக் கேட்டு அதின் மூலம் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தை நஷ்டப்படுத்திக் கொள்ளுகிறவர்களாயிருக்கின்றனர். இந்த தவறான ஊழியர்கள் வேத சத்தியங்களை தவறாக மாற்றி எழுதுகிறவர்களாகவும், போதிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டும்.

இன்று அநேகக் கிறிஸ்தவர்கள் கள்ள உபதேசங்களைக் கொண்டு வருகிற ஊழியர்களைப் பின்பற்றுவது மட்டுமல்லாது, தாங்கள் கைக்கொள்ளுகிற தவறான உபதேசம்தான் சரியானது என்று சாதிக்கிறவர்களாயும் இருக்கிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள். இந்த நாட்களில் இவ்வித தவறான உபதேசங்கள் குறித்து நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். தவறான உபதேசங்களுக்கு நாம் தப்ப வேண்டும் என்றால் சரியான உபதேசம் எது என்று நாம் அறிய வேண்டும். சரியான உபதேசம் எது என்று நாம் அறிய நாம் வேதத்தை சரியாகக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் வேதத்தை சரியாகக் கற்றுக்கொள்ள தேவனே உம்முடைய வேத வசனங்களை நான் சரியாகக் கற்றுக்கொள்ள உமது ஆவியானவர் எனக்குப் போதிப்பதாக என்று அதிகம் ஜெபம் செய்ய வேண்டும். செய்வோமா!

F. உலக பிரபுக்கள் தேவ ஞானத்தை அறியவில்லை

"அதை (தேவ ஞானத்தை) இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை ; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே" I கொரி.2:8.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் இப்பிரபஞ்சத்துப் பிரபுக்கள் என்பது இந்த உலகின் தலைவர்களைக் குறிக்கும். அன்றைய உலகத்தலைவர்கள் தேவ ஞானத்தை அறியாததினால்தான் ஆண்டவராகிய இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். அன்றுபோலவே இன்றும் இந்த உலகின் தலைவர்கள் தேவ ஞானத்தை அறியாதவர்களாக வேத சத்தியங்களுக்கு விரோதமாகவும், தேவ ஜனங்களுக்கு விரோதமாகவும் செயல்படுகிறார்கள் என்பதை நாம் அறிய வேண்டும். ஆகவே இந்த உலகின் தலைவர்கள் தேவ ஞானத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாக நாம் அவர்களுக்காக அதிகம் ஜெபிக்க வேண்டும். செய்வோமா!

G. உலக ஞானிகளுக்கும், தேவ ஞானத்தை வெறுப்பவர்களுக்கும் வரும் சாபமான காரியங்கள்

இந்தப் பகுதியில் உலக ஞானிகளாக செயல்படுகிற மனிதருக்கும், தேவ ஞானத்தை வெறுப்பவர்களுக்கும் வரும் சாபமானக் காரியங்கள் என்ன என்று சிறிது அறிந்து கொள்ளப் பார்ப்போம்.

1. உலக ஞானிகள் வெட்கமடைந்து, கலங்கி பிடிபடுவார்கள்

"ஞானிகள் வெட்கி, கலங்கிப் பிடிபடுவார்கள் ; இதோ கர்த்தருடைய சொல்லை வெறுத்துப்போட்டார்கள் ; அவர்களுக்கு ஞானமேது?" எரே.8:9.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் உலக ஞானிகள் அவர்கள் ஞானவான்கள் என்று பேர்பெற்றிருந்தாலும் அவர்கள் கர்த்தரின் சொல்லை அல்லது வார்த்தையை வெறுத்தபடியினால் அவர்கள் ஞானமற்றவர்களாக தங்கள் செயல்பாடுகளில் வெட்கம் அடைந்து, கலங்கி பிடிபடுவார்கள் என்பதாகும். இன்றைய உலக ஞானிகள் தாங்கள் தான் சிறந்த ஞானிகள் என்றும், தங்களால் எதையும் சாதிக்க முடியும் என்றும் எண்ணி செயல்படுகின்றனர். ஆனால் இறுதியில் அவர்கள் ஞானமெல்லாம் செயலிழந்து, அவர்கள் வெட்கமடைந்து, கலங்கி தங்கள் செயல்பாடுகளில் பிடிபடுவார்கள் என்பதை நாம் நன்கு அறிய வேண்டும்.

1. ஞானத்துக்கும் மாறாக செயல்படுவது அழிவுக்கு நேராக செல்வதாகும்

"எனக்கு (ஞானத்துக்கு) விரோதமாகப் பாவஞ்செய்கிறவனோ, தன் ஆத்துமாவைச் சேதப்படுத்துகிறான் ; என்னை (ஞானத்தை) வெறுக்கிற வர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள் என்று சொல்கிறது" நீதி.8:36.

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஞானத்துக்கு விரோதமாகப் பாவம் செய்வது என்பது ஞானத்தை விரும்பாது ஞானத்துக்கு மாறாக செயல்படு வதைக் குறிப்பதாகும். அதுபோல ஆத்துமாவை சேதப்படுத்துகிறான் என்பது ஆத்துமாவை நஷ்டப்படுத்திக் கொள்கிறான் என்பதாகும். அது போலவே ஞானத்தை வெறுக்கிறவன் மரணத்தை விரும்புகிறான் என்பதுஞானத்தை வெறுத்து, ஞானமற்ற முறையில் செயல்படுவது மரணத்தை அல்லது அழிவை விரும்புவதாகும். அப்படியென்றால் ஞானத்தை விரும்பாது, ஞானத்துக்கு மாறாக செயல்படுவதும் நமது ஆத்துமாவை சேதப்படுத்தி அழிவுக்கு நேராக அல்லது நரகத்துக்கு நேராக செல்வதாகும். இந்நாட்களில் நாம் நித்திய அழிவுக்கு தப்பும்படியாக ஞானத்தைப் பெற்று ஞானமாக செயல்படுவது நமக்கு நன்மையாக இருக்கும். செயல்படுவோமா! தேவன் தாமே கிருபை செய்வாராக!

இந்த உலகில் மனிதராய்ப் பிறந்த எல்லாரும் செய்ய வேண்டிய பத்துக் காரியங்கள்

1. தங்கள் பாவங்களை விட்டு தேவனிடம் மனந்திரும்ப வேண்டும்.

2. தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்.

3. பரலோக ராஜ்யத்தை சுதந்தரிக்க பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. தினமும் வேதம் வாசித்து தியானம் செய்ய வேண்டும்.

5. எப்பொழுதும் ஜெபம் செய்ய வேண்டும்.

6. எல்லாக் காரியங்களுக்காகவும் ஸ்தோத்திரம் செய்ய வேண்டும்.

7. கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு ஜீவிக்க வேண்டும்.

8. பரிசுத்தமாக ஜீவிக்க வேண்டும்.

9. தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும்.

10. கர்த்தரின் வருகைக்கு ஆயத்தப்பட வேண்டும்.

செயல்படுவோமா! கர்த்தர் தாமே கிருபை செய்வாராக!

மனித வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக் கொள்ள எட்டு காரியங்கள்

1. கர்த்தருக்குப் பயப்படும் பயம் வேண்டும்.

2. கர்த்தர் காட்டும் வழியில் செல்ல வேண்டும்.

3. கர்த்தரின் ஞானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. கர்த்தரின் புத்தி வேண்டும்.

5. கர்த்தரின் அறிவு வேண்டும்.

6. கர்த்தரின் விவேகம் வேண்டும்.

7. கர்த்தரின் வினா வேண்டும்.

8. கர்த்தரின் உணர்வு வேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள காரியங்களை நாம் கர்த்தரிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஆக்கியோனை பற்றி சில வரிகள்.....

நான் இந்திய விமானப்படையில் வேலை செய்துவந்தேன். நான் எனது நல்ல வேலையை விட்டுவிடும்படியாக தேவன் என்னை உணர்த்தினதினாலே 1983ம் வருஷம் நான் எனது நல்ல வேலையை விட்டுவிட்டு கர்த்தருக்கு ஊழியம் செய்யும் வாஞ்சையோடு எனது சொந்த ஊராகிய மணற்காடு என்ற கிராமத்திற்கு வந்தேன். எங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள பாளையங்கோட்டை என்ற பட்டிணத்தில் உள்ள ஒரு சிறிய ஆவிக்குரிய சபையில் நான் ஏற்கனவே அங்கமாக இருந்ததினால் அந்த சபையின் ஊழியரோடும், விசுவாசிகளோடும் சேர்ந்து ஊழியம் செய்யவேண்டும் என்று எண்ணினேன். ஆனால் அந்த சபையில் திடீரென்று சில காரணங்களால் குழப்பம் ஏற்பட்டு அந்த சபையின் விசுவாசிகள் பிரிந்து, அவர்கள் விரும்பிய மற்ற சபைகளுக்கு சென்று விட்டனர். நான் ஒருவன் மாத்திரம் எந்த சபையிலும் சேராது தனித்து விடப்பட்டவனாக இருந்தேன். நான் என் தேவனுக்காக ஏதாவது செய்யவேண்டுமே என்ற வாஞ்சையில் என் சொந்த செலவில் துண்டு பிரதிகள் (Tracts) அச்சிட்டு திருநெல்வேலி, பாளையங்கோட்டை பட்டிணங்களிலும், இவைகளைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் சென்று துண்டுபிரதிகளை நான் தனியாகவே விநியோகித்து வந்தேன்.

பின்னர் இன்னும் கர்த்தருக்காக நான் ஏதாவது செய்யவேண்டும் என்று எண்ணியபொழுது, வேத சத்தியங்களை எல்லோரும் தெளிவாக அறிந்துகொள்ளும் வண்ணமாக புத்தகங்கள் எழுதி எல்லா சபைகளிலும் உள்ள தேவ ஜனங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று எண்ணி, கிறிஸ்தவ அடிப்படை உபதேசங்களடங்கிய நான்கு புத்தகங்களை எழுதி எனது சொந்த செலவில் அச்சிட்டுக் கொடுத்தேன். ஆனால் அச்சுக்கூலி, பேப்பர் விலை அதிகமாயிருந்ததினால் என்னால் தொடர்ந்து புத்தகங்கள் எழுதி அச்சிட முடியாமல் இருந்தேன். ஆனால் தற்சமயம் கர்த்தரின் வருகை வெகுசீக்கிரமாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதினால் ஜனங்கள் வேதத்தின் சத்தியங்களை தெளிவாக அறிந்துகொண்டு, அதற்கேற்றபடி தங்கள் ஜீவியத்தை அமைத்துக்கொண்டு, ஆண்டவராகிய இயேசுவின் வருகைக்கு தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையில் தொடர்ந்து இந்த புத்தகங்களை எழுதி அச்சிட முயற்சி செய்கிறேன்.

இந்த புத்தகங்களை வாசிக்கும் எனக்கு அருமையான தேவ ஜனங்கள் இந்த புத்தகங்களை ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பயனுள்ளதாக கண்டால், இந்த சிறிய முயற்சிக்காக ஜெபிக்கவும், தங்களால் இயன்ற பண உதவிகள் செய்யும்படியாகவும் தங்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேவன்தாமே தங்களையும், தங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதித்து, தம்முடைய வருகைக்கென்று தங்களை ஆயத்தப்படுத்துவாராக.